


## 1. புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் அறிமுகம்

## 2. சொல்வரிசை

## 3. கட்டுரைகள்

*உங்கள் மொபைலில் அட்டவணை க்ளிக் வேலை செய்யவில்லை என்றால், கீழே உள்ள செயலியை இன்ஸ்டால் செய்து பயன்படுத்துங்கள்:*

*https://play.google.com/store/apps/details?id=org.readera*

*If index based click is not working in your mobile, install and use ReadEra App.*

# நடைமுறை வாழ்வு
# புதிய ஏற்பாட்டு
# விளக்கவுரை

1. *புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் அறிமுகம்*
2. *சொல்வரிசை*
3. *கட்டுரைகள்*


## தாமஸ் ஹேல்

*கட்டுரைகள் எழுதியவர்:*
*ஸ்டீபன் தார்ஸன்*

*தமிழாக்கம்:*
*ஜமிலா பால்*

# புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் அறிமுகம்


1. மத்தேயு ........................................ 1
2. மாற்கு ........................................ 5
3. லூக்கா ........................................ 8
4. யோவான் ........................................ 12
5. அப்போஸ்தலர் ........................................ 16
6. ரோமர் ........................................ 20
7. 1 கொரிந்தியர் ........................................ 25
8. 2 கொரிந்தியர் ........................................ 29
9. கலாத்தியர் ........................................ 32
10. எபேசியர் ........................................ 35
11. பிலிப்பியர் ........................................ 38
12. கொலோசெயர் ........................................ 41
13. 1 தெசலோனிக்கேயர் ........................................ 43
14. 2 தெசலோனிக்கேயர் ........................................ 45
15. 1 தீமோத்தேயு ........................................ 47
16. 2 தீமோத்தேயு ........................................ 49
17. தீத்து ........................................ 51
18. பிலேமோன் ........................................ 53
19. எபிரெயர் ........................................ 56
20. யாக்கோபு ........................................ 60
21. 1 பேதுரு ........................................ 62
22. 2 பேதுரு ........................................ 64
23. 1 யோவான் ........................................ 66
24. 2 யோவான் ........................................ 69
25. 3 யோவான் ........................................ 70
26. யூதா ........................................ 71
27. வெளிப்படுத்தல் ........................................ 72

## சொல்வரிசை


1. *Abraham* - ஆபிரகாம்.................................. 77
2. *Adoption* - புத்திர சுவிகாரம்.................... 78
3. *Angel* - தூதன்.......................................... 79
4. *Apostle* -அப்போஸ்தலன்.......................... 80
5. *Atonement* - பாவ நிவிர்த்தி..................... 81
6. *Baptism* - ஞானஸ்நானம்.......................... 83
7. *Church* - திருச்சபை................................ 85
8. *Circumcision* - விருத்தசேதனம்................ 87
9. *Covenant* - உடன்படிக்கை....................... 88
10. *Cross* - சிலுவை.................................... 90
11. *David* - தாவீது...................................... 91
12. *Demon* - பிசாசு..................................... 91
13. *Discipline* - சிட்சை................................ 92
14. *Egypt* - எகிப்து...................................... 93
15. *Eternal Life* - நித்திய ஜீவன்.................... 93
16. *Evil Spirit* - அசுத்த ஆவி........................ 94
17. *Faith* - விசுவாசம்.................................. 95
18. *Flesh* - மாம்சம்..................................... 97
19. *Gentile* - புறஜாதி.................................. 98
20. *Gospel* - சுவிசேஷம்............................... 98
21. *Grace*-கிருபை........................................ 99
22. *Holy Spirit* - பரிசுத்த ஆவியானவர்....... 100
23. *In Christ* - கிறிஸ்துவுக்குள்......................101
24. *Israel* - இஸ்ரவேலர்............................. 102
25. *Jew* - யூதன்........................................... 102
26. *Judgement* - நியாயத்தீர்ப்பு.................... 104
27. *Kingdom of God* - தேவனுடைய இராஜ்யம் 106
28. *Kingdom of Heaven*-பரலோக இராஜ்யம்107
29. *Law*-நியாயப் பிரமாணம்..........................107

30. *Lord's Supper*-கர்த்தருடைய பந்தி ..........109
31. *Moses* - மோசே....................................... 111
32. *Peace* - சமாதானம்................................ 111
33. *Passover* - பஸ்கா...................................112
34. *Pentecost* - பெந்தெகொஸ்தே.................113
35. *Pharisee* - பரிசேயன்..............................114
36. *Prophecy* - தீர்க்கதரிசனம்.......................115
37. *Prophet* - தீர்க்கதரிசி ..............................116
38. *Propitiation* - பாவ நிவாரண பலி.......... 117
39. *Redemption* - மீட்பு................................ 117
40. *Repentance* - மனந்திரும்புதல்.................118
41. *Righteous* - நீதிமான்...............................120
42. *Righteousness* - நீதி................................121
43. *Rome* - ரோமாபுரி.....................................122
44. *Roman Empire* - ரோமப் பேரரசு ..........122
45. *Sadducee* - சதுசேயன்............................ 124
46. *Saint* - பரிசுத்தவான்.............................. 124
47. *Salvation* - இரட்சிப்பு ............................125
48. *Sanhedrin* - சனகெரிப்............................126
49. *Satan* - சாத்தான் ....................................126
50. *Temptation* - சோதனை ..........................128

## கட்டுரைகள்

1. பொதுவான தலைப்புகளுக்கு ஒரு முன்னுரை 133
2. இயேசு கிறிஸ்து.........................................138
3. இரட்சிப்பின் வழி ....................................148
4. இரட்சிப்பு - தேவனின் தெரிந்தெடுப்பா, மனிதனின் தெரிந்தெடுப்பா?..........................................160
5. நாம் நமது இரட்சிப்பை இழந்து போக முடியுமா? 170

6. பரிசுத்த ஆவியானவர்.............................. 180
7. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்... 194
8. தண்ணீர் ஞானஸ்நானம்........................... 207
9. கர்த்தருடைய பந்தி................................. 222
10. திருச்சபை ஆட்சிமுறை............................ 232
11. திருச்சபையில் பெண்கள்.......................... 246
12. சிறு பிள்ளைகளும் தேவனுடைய இராஜ்யமும் 253
13. கிறிஸ்தவத் திருமணம்.............................. 260
14. சரீர சுகமும் விடுதலையும் ....................... 274
15. தீமைக்கு எதிர்த்து நிற்பது - நாம் செய்ய வேண்டியது எவ்வளவு?................................................. 288
16. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை 302
17. திருச்சபையின் நோக்கம்........................... 320
18. எழுப்புதல்................................................. 329
19. பழைய ஏற்பாட்டின் சுருக்கம்.................. 339
20. நமது வேதாகமம் வந்தது எப்படி?........... 360

# புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் அறிமுகம்

# *1.* மத்தேயு

**முன்னுரை:**

*பொதுவாக இந்தப் புத்தகம் மத்தேயு எழுதின சுவிசேஷம் என்று அழைக்கப்படுவதுண்டு. சுவிசேஷம் என்றால் நற்செய்தி. இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்து பாவமுள்ள மானிடரை இரட்சிக்கத் தமது சொந்த ஜீவனையே தந்தார் என்பதும் அவரில் விசுவாசம் வைப்போர் யாவரும் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்பதுமே அந்த நற்செய்தி. யோவான் **3:16** சுவிசேஷத்தைத் தொகுத்துக் கூறுகிறது: தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். இந்தச் சுவிசேஷத்தை எழுதிய மத்தேயு முன்பு ஒரு வரி வசூலிப்பவனாக, ஆயக்காரனாக இருந்தவர். இயேசுவின் முதல் பன்னிரு சீஷர்களுள் ஒருவனாகும்படி அவரால் அழைக்கப்பட்டவர் (மத்தேயு 10:3; மாற்கு 3:18).*

*புதிய ஏற்பாட்டில் மத்தேயு சுவிசேஷம் முதல் புத்தகமாக அமைந்திருந்தாலும் முதலாவது எழுதி முடிக்கப்பட்டது மாற்கு சுவிசேஷமே என பெரும்பாலான வேத அறிஞர்கள் கருதுகின்றனர் (மாற்கு: முன்னுரை பார்க்க). இருப்பினும், மாற்கு சுவிசேஷம் எழுதப்படுவதற்கு முன் மத்தேயு, இயேசுவின் வாழ்க்கை பற்றிய ஒரு மாதிரி விவரணையை அரமேய' மொழியில் எழுதினார் என்று அறிஞர்கள் எண்ணுகின்றனர். பிறகு கி.பி. **55-65**ல் மாற்கு சுவிசேஷம் வெளியிடப்பட்டபின், மத்தேயு தனது சுவிசேஷ*

நூலைத் திருத்தி மாற்கு சுவிசேஷத்தில் இருந்து பெரும் பகுதிகளையும் அதில் சேர்த்து எழுதினார்.

உண்மையில் மாற்கு சுவிசேஷத்தில் ஐம்பத்தைந்து வசனங்களைத் தவிர மற்ற அத்தனை வசனங்களும் மத்தேயு சுவிசேஷத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த அறிஞர்களின் கருத்துப்படி, மத்தேயு சுவிசேஷத்தின் திருத்திய பதிப்பு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. இதை மத்தேயுவோ அல்லது அவருக்கு நெருக்கமான யாரோ செய்திருக்க வேண்டும். மத்தேயுவில் காணப்படும் ஏறத்தாழ 1050 வசனங்களுள் 500 மாற்குவிலும் உள்ளன. இன்னொரு 250 வசனங்கள் லூக்கா சுவிசேஷத்தில் காணப்படுகின்றன. மாற்கு சுவிசேஷத்தைத் தவிர, கிறிஸ்துவின் போதனைகள் அடங்கிய வேறு ஏதோ ஒரு எழுத்துப் பூர்வமான தொகுப்பும் இருந்திருக்க வேண்டும், மத்தேயுவும் லூக்காவும் அதை அறிந்திருக்க வேண்டும், தங்கள் சுவிசேஷங்களுடன் அந்தத் தொகுப்பையும் சேர்த்து எழுதியிருக்க வேண்டும் என வேத அறிஞர்கள் நம்புகின்றனர்.

பல பண்டிதர்களின் கருத்துப் படி, மத்தேயு சுவிசேஷத்தின் இறுதிப் பதிப்பு, கி.பி. 70க்கும் 80க்கும் இடைப்பட்ட ஏதோ ஒரு சமயத்தில் வடக்கு சிரியாவில் உள்ள அந்தியோகியா' என்ற பட்டணத்தில் எழுதப்பட்டதாகும். இது முக்கியமாக யூத வாசகர்களுக்காகவே எழுதப்பட்டது.

இந்தச் சுவிசேஷத்தில் மத்தேயு, யூதர்களின் வேதமான பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் இயேசுவின் பிறப்பு மற்றும் ஜீவியத்தில் எப்படி நிறைவேறின என்பதைத் திரும்பத் திரும்ப எடுத்துக் காட்டுகிறார். மாற்கு

*சுவிசேஷத்திலும் காணப்படும் மத்தேயு சுவிசேஷத்தின் பகுதிகள் பற்றிய குறிப்புரைகளுக்கு மாற்கு சுவிசேஷத்தைப் பார்க்கவும்.*

**சிறு தலைப்புகள்:**

**அ. இயேசு கிறிஸ்துவின் பிறப்பும் குழந்தைப் பருவமும் (1:1-2:23)**

1. *இயேசுவின் வம்ச வரலாறு (1:1-17).*
2. *இயேசுவின் பிறப்பு (1:18-25).*
3. *சாஸ்திரிகளின் வருகை (2:1-12).*

**ஆ. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் ஆரம்பம் (3:1-4:11)**

1. *யோவான்ஸ்நானன் வழியை ஆயத்தம் பண்ணுகிறான் (3:1-12).*
2. *இயேசுவின் ஞானஸ்நானம் (3:13-17).*
3. *இயேசுவின் சோதனை (4:1-11).*

**இ. இயேசு கிறிஸ்துவின் ஊழியம் (4:12-25:46)**

1. *இயேசு பிரசங்கிக்கத் தொடங்குகிறார் (4:12-17).*
2. *முதல் சீஷர்களின் அழைப்பு (4:18-25).*
3. *மலைப்பிரசங்கம் (5:1-7:29).*
4. *பத்து அற்புதங்கள் (8:1-9:38).*
5. *இயேசு பன்னிருவரை அனுப்புகிறார் (10:1-42).*
6. *யோவான்ஸ்நானனுக்கு இயேசுவின் பதிலும், அதோடு தொடர்புடைய போதனைகளும் (11:1-30).*
7. *பரிசேயரிடமிருந்து எதிர்ப்பு (12:1-50).*
8. *இராஜ்யத்தின் உவமைகள் (13:1-58).*
9. *யோவானின் சிரச்சேதத்துக்குப் பிறகு இயேசு தனித்திருத்தல் (14:1-36).*

10. பரிசேயருடன் போராட்டம் (15:1-20).
11. மேலும் சில அற்புதங்கள் (15:21-39).
12. மேலும் சில போதனைகள் (16:1-28).
13. மறுரூபப்படுதல் (17:1-23).
14. கப்பர்நகூமில் (17:24-18:35).
15. பெரேயாவில் (19:1-20:16).
16. யூதேயாவில் (20:17-34).
17. எருசலேமில் (21:1-22:46).
18. பரிசேயருக்கு இயேசுவின் பகிரங்கக் கண்டனம் (23:1-39).
19. யுகத்தின் முடிவு பற்றிய போதனைகள் (24:1-25:46).

## ஈ. இயேசு கிறிஸ்துவின் பாடுகள் (26:1-27:66).

1. இயேசுவுக்கு எதிரான சதி (26:1-16).
2. கர்த்தருடைய பந்தி (26:17-30).
3. கெத்செமனே தோட்டத்தில் (26:31-56).
4. இயேசுவின் கைது மற்றும் விசாரணை (26:57-27:31)
5. இயேசுவின் மரணம் (27:32-56).
6. இயேசுவின் அடக்கம் (27:57-66).

## உ. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (28:1-20).

1. காலியான கல்லறை கண்டுபிடிக்கப்படுவது (28:1-8)
2. இயேசு காட்சியளிக்கிறார் (28:9-10).
3. காவலர்களின் அறிக்கை (28:11-15).
4. பிரதான கட்டளை (28:16-20).

# 2. மாற்கு

**முன்னுரை:**

*மாற்கு, இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களுள் தலைமையான அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கு மிக நெருங்கிய நண்பர். 1 பேதுரு 5:13 இல் பேதுரு மாற்குவை "என் குமாரனாகிய மாற்கு" என்று குறிப்பிடுகிறார். மாற்கு பர்னபாவின் உறவினன், அப்போஸ்தலனாகிய பவுலின் உடன் ஊழியன் (அப்போஸ்தலர் 12:25; கொலோசெயர் 4:10; 2 தீமோத்தேயு 4:11).*

*மாற்கு முதல் பன்னிரு சீஷர்களில் ஒருவராக இல்லாவிடினும், இயேசுவின் வாழ்க்கை பற்றிய அநேகக் காரியங்களை பேதுருவிடமிருந்து நேரடியாகக் கேட்டறிந்தார். தனது சுவிசேஷத்தை, பெருமளவிற்கு பேதுரு கொடுத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டே எழுதினார். மாற்கு தனது சுவிசேஷத்தை ரோமப் பேரரசின் தலைநகராகிய ரோமாபுரியில் வைத்தே எழுதியதாக பெரும்பாலான வேத பண்டிதர்கள் கருதுகின்றனர். மத்தேயு தனது சுவிசேஷ நூலை குறிப்பாக யூத மக்களுக்கென்றே எழுதியது போல, மாற்கு தனது சுவிசேஷ நூலை முக்கியமாக ரோம மக்களுக்கென்றே எழுதினார். நான்கு சுவிசேஷ நூல்களிலும் முதன் முதலாக எழுதப்பட்டது மாற்கு சுவிசேஷமே. அது கி.பி. 55 மற்றும் 65க்கு இடைப்பட்ட காலத்தில், அதாவது இயேசுவின் மரணத்துக்கு சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்டது. மத்தேயுவும் லூக்காவும் தங்கள் சுவிசேஷ நூல்களில் மாற்கு எழுதிய சில காரியங்களைச் சேர்த்துள்ளனர். சொல்லப்போனால், மாற்கு சுவிசேஷம் முழுவதுமே மத்தேயு சுவிசேஷத்தில் அடங்கியுள்ளது எனலாம்.*

***சிறு தலைப்புகள்:***

### ***அ. கிறிஸ்துவின் ஊழியத்திற்கான ஆயத்தம் (1:1-13)***

*1. யோவான்ஸ்நானன் (1:1-8).*
*2. இயேசுவின் ஞானஸ்நானமும் சோதனையும் (1:9-13).*

### ***ஆ. கலிலேயாவில் கிறிஸ்துவின் ஊழியம் (1:14-10:52)***

*1. முதல் சீஷர்களை அழைத்தல் (1:14-20).*
*2. கப்பர்நகூமில் ஆரம்பகால ஊழியம் (1:21-45).*
*3. எதிர்ப்புகள் கிளம்புதல் (2:1-3:12).*
*4. பன்னிரு சீஷர்களின் நியமனம் (3:13-19).*
*5. இயேசுவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் (3:20-35).*
*6. உவமைகள் (4:1-34).*
*7. வல்லமையான கிரியைகள் (4:35-5:43).*
*8. கலிலேயாவிலும் அதற்கு அப்பாலும் மேலும் பல அற்புதங்களும் போதனைகளும் (6:1-8:26).*
*9. மேசியாவின் பாடுகள் மற்றும் தொடர்புடைய உரையாடல்கள் (8:27-9:50).*
*10. எருசலேமுக்குப் போகும் வழியில் சில போதனைகள் (10:1-52)*

### ***இ. எருசலேமில் கிறிஸ்துவின் ஊழியம் (11:1-13:37).***

*1. வெற்றிப்பவனி (11:1-26).*
*2. யூத மதத் தலைவர்களுடன் கடைசி மோதல்கள் (11:27-12:44).*
*3. தீர்க்கதரிசன உரை (13:1-37).*

### ***ஈ. கிறிஸ்துவின் பாடு மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் (14:1-16:20).***

1. இயேசுவுக்குப் பரிமளதைலம் பூசப்பட்டு, காட்டிக் கொடுக்கப்படுதல் *(14:1-11).*
2. கர்த்தருடைய பந்தி *(14:12-31).*
3. இயேசு கைது செய்யப்படுவதும் விசாரணையும் *(14:32-15:20)*
4. இயேசுவின் மரணம் *(15:21-47).*
5. இயேசுவின் உயிர்த்தெழுதல் *(16:1-20).*

# 3. லூக்கா

***முன்னுரை:***

*லூக்கா ஒரு மருத்துவரும் (கொலோசெயர் 4:14), அப்போஸ்தலனாகிய பவுலின் நெருக்கமான நண்பரும் ஆவார். லூக்கா இந்தச் சுவிசேஷ நூலைத் தவிர, அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலையும் எழுதினார் (லூக்கா 1:1-4; அப்போஸ்தலர் 1:1-2 பார்க்க). பவுல் கிரீஸ் மற்றும் துருக்கி நாடுகளுக்கு மேற்கொண்ட அவரது இரண்டாம் மற்றும் மூன்றாம் மிஷனெரிப் பயணங்களின் போது சில வேளைகளிலும் (அப்போஸ்தலர் 16:10; 20:6, பவுல் இறுதி முறையாக ரோமாபுரி சென்ற கடற்பயணத்திலும் (அப்போஸ்தலர் 27:1-2) லூக்கா அவருடன் சென்றார். பவுல் ரோமாபுரியில் சிறை வைக்கப்பட்டிருந்த போதும் லூக்கா அவருடன் இருந்தார் (2 தீமோத்தேயு 4:11). ஆக, லூக்கா கிறிஸ்தவ மார்க்கத்தின் ஆரம்பங்களைப் பற்றி எழுதியதோடு மட்டும்*

*நில்லாமல், அதில் பங்கும் பெற்றார். மத்தேயு ஒரு யூதன், முக்கியமாக யூதர்களை மனதில் கொண்டே தனது சுவிசேஷ நூலை எழுதினார். அது போல, லூக்கா ஒரு கிரேக்கன்', அதாவது ஒரு புறஜாதியான்." எனவே புற ஜாதி மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும்வகையில் தனது சுவிசேஷ நூலை எழுதியுள்ளார்.*

*லூக்கா தனது சுவிசேஷ நூலை எழுதும் போது, மாற்கு சுவிசேஷத்தின் ஒரு பிரதியைக்கூடவே வைத்திருந்தார். எனவே, மாற்கு எழுதின பல வசனங்களை லூக்கா திரும்ப எழுதியுள்ளார். (இந்த விளக்கவுரையில், அப்படிப்பட்ட வசனங்கள் பேரிலான குறிப்புரைகளுக்கு மாற்கு சுவிசேஷத்தைப் புரட்டிப் பார்க்கும்படி*

*கூறப்பட்டுள்ளது). இயேசுவின் வாழ்க்கை வரலாறு பற்றி எழுதுவதற்கு லூக்கா வேறு பல ஆதாரங்களையும் பயன்படுத்தியிருக்கிறார். அதில் சிலவற்றை மத்தேயு சுவிசேஷத்திலும் காணலாம். வேறு சில லூக்கா சுவிசேஷத்தில் மட்டுமே காணப்படும்.*

*எல்லாவற்றுக்கும் மேலாக, லூக்கா ஒரு வரலாற்றாளர். தனது சுவிசேஷத்திலும் சரி, அப்போஸ்தலர் நடபடிகளிலும் சரி துல்லியமான வரலாற்று விபரங்களைத் தருவதில் மிகுந்த கவனம் காட்டுகிறார். அக்காலத்தைச் சேர்ந்த பிற வரலாற்று நூல்களும், கணக்கற்ற தொல்பொருள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளும் லூக்காவின் நூல் துல்லியமானது என்பதற்குச் சான்று பகருகின்றன. புதிய ஏற்பாட்டில் வழங்கப்படும் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு, ஏதோ மனிதர்களின் கற்பனையில் உருவான ஒன்றல்ல; அது முழுக்க முழுக்க உண்மையானது, வரலாற்று ரீதியானது.*

*லூக்கா தனது சுவிசேஷ நூலை எப்பொழுது எழுதினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. அவர் கி.பி. 65க்கும் 70க்கும் இடைப்பட்ட காலத்தில் இதை எழுதியிருக்க வேண்டும் என பல வேத பண்டிதர்கள் கருதுகின்றனர். வேறு சிலர் அதற்குச் சில ஆண்டுகள் கழித்து எழுதப்பட்டிருக்கலாம் என்கின்றனர்.*

**சிறு தலைப்புகள்:**

***அ. இரட்சகர் பற்றிய அறிவிப்பு (1:1-2:52)***

1. *சகரியாவுக்கு அறிவிப்பு (1:1-25).*
2. *மரியாளுக்கு அறிவிப்பு (1:26-56).*
3. *யோவானின் பிறப்பு (1:57-80).*

4. இயேசுவின் பிறப்பு (2:1-20).
5. தேவாலயத்திற்கு எடுத்துச் செல்தல் (2:21-38).
6. இயேசுவின் பிள்ளைப்பருவம் (2:39-52).

## ஆ. இயேசு கிறிஸ்துவின் தோற்றம் (3:1-4:13).

1. யோவான்ஸ்நானனும் இயேசுவின் ஞானஸ்நானமும் (3:1-22).
2. இயேசுவின் வம்ச வரலாறு (3:23-38).
3. இயேசுவின் சோதனை (4:1-13).

## இ. இயேசு கிறிஸ்துவின் ஊழியம் (4:14-9:62).

1. இயேசுவின் ஊழியத்தின் வரைமுறை (4:14-44).
2. இயேசுவின் வல்லமைக்குச் சான்றுகள் (5:1-6:11).
3. அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுத்தல் (6:12-19).
4. முக்கியப் போதனைகள் (6:20-49).
5. மேலும் பல அற்புதங்களும் போதனைகளும் (7:1-9:17).
6. இயேசுவின் ஊழியத்தின் உச்ச கட்டம் (9:18-62)

## ஈ. சிலுவைப் பாதை (10:1-18:30).

1. எழுபது பேரின் ஊழியம் (10:1-24).
2. பிரபலமான போதனைகள் (10:25-13:21).
3. பகிரங்கமான விவாதங்களின் ஆரம்பம் (13:22-16:31).
4. சீஷர்களுக்கு அறிவுரைகள் (17:1-18:30).

## உ. இயேசு கிறிஸ்துவின் பாடுகள் (18:31-23:56),

1. எருசலேமுக்குப் போகும் வழி (18:31-19:27).
2. எருசலேமுக்குள் பவனியாக நுழைதல் (19:28-44).
3. எருசலேமில் போதனைகள் (19:45-21:4).

4. உலக முடிவு பற்றிய போதனைகள் (21:5-38).
5. கர்த்தருடைய பந்தி (22:1-38).
6. இயேசுவின் கைது மற்றும் விசாரணை (22:39-23:25).
7. இயேசுவின் மரணம் (23:26-49).
8. இயேசு அடக்கம் பண்ணப்படுதல் (23:50-56)

**ஊ. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (24:1-53).**

1. காலியான கல்லறை (24:1-12).
2. எம்மாவூருக்கு வழிநடத்தல் (24:13-35).
3. இயேசு சீஷர்களுக்குக் காட்சியளித்தல் (24:36-43).
4. இறுதிக் கட்டளை (24:44-49).
5. இயேசுவின் பரமேறுதல் (24:50-53).

# 4. யோவான்

**முன்னுரை:**

யோவான் சுவிசேஷம் செபெதேயுவின் குமாரனாகிய யோவான் அப்போஸ்தலனால் எழுதப்பட்டது (மாற்கு 1:19). இது கி.பி. 70க்கும் 90க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் எழுதப்பட்டது என்பது பெரும்பாலான வேத பண்டிதர்களின் கருத்து, எனினும் சரியான ஆண்டு எதுவெனத் திட்டவட்டமாகத் தெரியவில்லை (யோவான் 5:2 மற்றும் குறிப்புரை பார்க்க). யோவான், இயேசுவுக்கு "அன்பாயிருந்த சீஷன்" என அறியப்பட்டவர் (யோவான் 13:23; 21:20).

இயேசுவின் முதல் பன்னிரு சீஷர்களில், ஆவிக்குரிய ஐக்கியத்தில் அவருக்கு மிகவும் நெருக்கமாய் இருந்தவர் யோவானே. வேறு யாரையும் விட இயேசுவின் உள்ளத்தை மிக நன்றாக அறிந்தவர் அவரே. எனவே இந்தச் சுவிசேஷத்தில், இயேசுவின் ஆழமான கருத்துக்கள் மற்றும் போதனைகளில் சிலவற்றை அவர் நமக்காக எழுதியுள்ளார். யோவான் முதிர்வயது வரை வாழ்ந்தவர். பல ஆண்டுக்காலம் எபேசு பட்டணத்தில் வாழ்ந்தார். அங்கே வைத்துத் தான் இந்தச் சுவிசேஷம் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் காணப்படும் யோவானின் மூன்று நிருபங்களை எழுதியவரும் செபெதேயுவின் குமாரனாகிய இந்த யோவானே. தமது வாழ்நாட்காலத்தின் இறுதியில் யோவான் மத்திய தரைக்கடலில் அமைந்துள்ள பத்மு என்ற தீவுக்கு நாடு கடத்தப்பட்டார், அங்கே கிறிஸ்துவைப் பற்றிய ஒரு வெளிப்பாட்டையும் பெற்றார்.

இந்த வெளிப்பாட்டை, வெளிப்படுத்தின விசேஷம் என்ற தனது புத்தகத்தில் அழகாக விவரிக்கிறார், நமது புதிய ஏற்பாட்டின் இறுதிப் புத்தகமாக அமைவது இந்த வெளிப்படுத்திகள் விசேஷ நூல் தான்.

யோவான் சுவிசேஷ நூலானது மத்தேயு, மாற்கு, லூக்கா இவர்களின் சுவிசேஷ நூல்களிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளது. யோவான் சுவிசேஷத்தில் கிறிஸ்துவின் சிந்தையையும் ஆவியையும் ஓர் ஆழமான விதத்தில் காண முடிகிறது. கிறிஸ்துவின் தன்மையை யோவான் மிக விபரமாக எடுத்துரைக்கின்றார். இயேசு தம்மைப் பற்றி அருளிய போதனைகளை யோவான் தருகின்றார்: ஜீவ அப்பம் நானே (யோவான் 6:35); நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன் (யோவான் 8:12); நானே நல்ல மேய்ப்பன் (யோவான் 10:11); நானே வாசல் (யோவான் 10:9), நான் மெய்யான திராட்சைச் செடி (யோவான் 15:1), நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன் (யோவான் 14:6).

இயேசு தமது சீஷர்களுடன் செய்த ஆழமான உரையாடல்களை, குறிப்பாக கடைசி இராப்போஜனத்தின் போது நடந்த நீண்ட உரையாடலை யோவான் வடித்துத் தருகின்றார். அதை யோவான் 14-17 அதிகாரங்களில் காணலாம்.

யோவான் சுவிசேஷத்திலிருந்து பரிசுத்த ஆவியானவரைப் பற்றியும் இன்னும் முழுமையாக அறிய முடிகிறது. கிறிஸ்துவின் ஆவியானவர் நமக்குள் வாசம் செய்யாதபடி நாம் ஒன்றுமே செய்ய முடியாது என்று கற்றுக் கொள்கிறோம் (யோவான் 15:5). கிறிஸ்துவின் கிரியையானது, விசுவாசிகளின் வாழ்வில் இடைபட்டு அவர்களைப் பெலப்படுத்தும் பரிசுத்த ஆவியானவரால்

மட்டுமே தொடரப்பட முடியும் என்பதை யோவான் எடுத்துக் காட்டுகிறார்.

ஆக, முதல் மூன்று சுவிசேஷங்களையும் யோவான் சுவிசேஷத்துடன் இணைத்துப் பார்க்கும் போது, இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியம் பற்றியதொரு முழுமையான சித்திரம் கிடைக்கிறது. ஆனால், எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தச் சுவிசேஷத்தைப் படிக்கையில், யோவான் இதை எழுதிய நோக்கத்தை நினைவில் கொள்வோமாக: அதாவது, இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:31).

**சிறு தலைப்புகள்:**

**அ. முகவுரை (1:1-18).**

1. வார்த்தை (1:1-5).
2. யோவான்ஸ்நானனின் சாட்சி (1:6-18).

**ஆ. உலகில் இயேசு கிறிஸ்துவின் ஊழியம் (1:19-12:50).**

1. யோவான்ஸ்நானனின் சாட்சி (1:19-34).
2. ஆதிசீஷர்களின் அழைப்பு (1:35-51).
3. கானாவூர்க் கலியாணம் (2:1-11).
4. எருசலேம், யூதேயாவுக்கு முதல் முறையாக வருகை (2:12-3:36).
5. சமாரியாவில் அருட்பணி (4:1-42).
6. அற்புதங்களும் போதனைகளும் (4:43-6:71).
7. கூடாரப் பண்டிகையில் இயேசு (7:1-53).
8. இயேசு தம்மைத் தாமே வெளிப்படுத்துதல் (8:1-59).

9. பிறவிக் குருடன் பார்வையடைதல் (9:1-41).
10. நல்ல மேய்ப்பன் இயேசு (10:1-42).
11. லாசருவை உயிரோடு எழுப்புதல் (11:1-57).
12. பெத்தானியா, எருசலேமில் இயேசு (12:1-50).

**இ. தமது சீஷர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் ஊழியம் (13:1-17:26).**

1. கால்களைக் கழுவுதல் (13:1-17).
2. காட்டிக் கொடுக்கப்படுவது பற்றிய அறிவிப்பு (13:18-30).
3. மேலறையில் உரையாடல் (13:31-16:33).
4. பெரிய ஜெபம் (17:1-26).

**ஈ. இயேசு கிறிஸ்துவின் பாடு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் (18:1-21:25).**

1. இயேசு காட்டிக் கொடுக்கப்படுதல் (18:1-14).
2. யூதர்கள் முன் விசாரணைக்கு இயேசு (18:15-27).
3. பிலாத்துவின் முன் விசாரணைக்கு இயேசு (18:28-19:16).
4. இயேசுவின் மரணம் (19:17-42).
5. காலியான கல்லறையைக் காணுதல் (20:1-10).
6. உயிர்த்தெழுந்த இயேசுவின் தரிசனங்கள் (20:11-21:25).

# 5. அப்போஸ்தலர்

**முன்னுரை:**

*அப்போஸ்தலருடைய நடபடிகளின் நூல்', லூக்கா எழுதிய வரலாற்றின் இரண்டாம் பாகம் ஆகும்; முதலாம் பாகம் லூக்கா எழுதிய சுவிசேஷமாகும். தனது சுவிசேஷ நூலில் லூக்கா பெருமளவிற்கு இயேசு கிறிஸ்துவின் பணி பற்றியே எழுதினார். அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலிலோ இயேசுவின் சீஷர்கள் எழுதுகின்றார். (அப்போஸ்தலர்கள்) மற்றும் அப்போஸ்தலனாகிய பவுலின் பணி பற்றி அநேக வேத அப்போஸ்தலர் நடபடிகள் கி.பி. 60க்கும் 65க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதென அறிஞர்கள் நம்புகின்றனர்.*

*அந்தச் சமயத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியில் தமது வழக்கு விசாரணைக்கு வருவதற்காக, ஒரு வீட்டிலே சிறை வைக்கப்பட்டிருந்தார். பவுல் பிரசங்கித்து வந்த இந்தப் புதிய கிறிஸ்தவ மதம் எப்படிப்பட்டதோ என ரோமாபுரியின் பெரிய மனிதர்கள் பலர் யோசித்துக் கொண்டிருந்தனர். எனவே, லூக்கா இந்தக் கிறிஸ்தவ மதம் தோன்றியது எப்படி, இயேசு கிறிஸ்து யார், இந்தப் புதிய மதம் எருசலேமில் ஆரம்பித்து, ரோமப் பேரரசின் மாட்சி மிகு தலைநகரான ரோமாபுரி வரை பரவியது எப்படி என்பதை எல்லாம் விளக்கி, இரண்டு பாகங்கள் கொண்ட ஒரு வரலாற்று நூலைப் படைக்கத் தீர்மானித்தார். லூக்கா இந்த வரலாற்றை எழுதி முடித்த பிறகு, நூலின் இரு பாகங்களையும் (லூக்கா மற்றும் அப்போஸ்தலர்), "மகா கனம் பொருந்திய தேயோப்பிலு" என்று அவர் அழைக்கின்ற ஒரு ரோம அதிகாரிக்கு அனுப்பி வைத்தார் (லூக்கா 1:1- 4; அப்போஸ்தலர் 1:1). இந்தத் தேயோப்பிலு பற்றி வேறெதுவும் தெரியவில்லை.*

**தாமஸ் ஹேல்**

அப்போஸ்தலனாகிய பவுல் லூக்காவை, “பிரியமான வைத்தியனாகிய லூக்கா" என்று அழைக்கிறார் (கொலோசெயர் 4:14). லூக்கா, மத்திய கிழக்கு நாடாகிய சிரியாவின் முக்கிய நகர்களுள் ஒன்றான அந்தியோகியாவைச் சேர்ந்தவர். பவுல் அந்தியோகியாவில் வாழ்ந்த போது லூக்கா பவுலைச் சந்தித்திருக்கக் கூடும். பவுலின் இரண்டாவது மிஷனெரிப் பயணத்தின் போதும், பவுல் இறுதியாக ரோமாபுரிக்குக் கடற்பயணம் மேற்கொண்ட போதும் லூக்கா உடன் சென்றார் (அப்போஸ்தலர் 27:1; 28:16). லூக்கா பவுலை நன்கு அறிந்திருந்தார்; எனவே, பவுலின் வாழ்க்கை பற்றி எழுத எல்லாத் தகுதியும் அவருக்கு இருந்தது.

அப்போஸ்தலர் நூல் “அப்போஸ்தலருடைய நடபடிகள்” என்று அழைக்கப்பட்டிருந்தாலும், இதைப் “பரிசுத்த ஆவியானவருடைய நடபடிகள்" என்றும் அழைக்கலாம்; காரணம், அப்போஸ்தலர்கள் செய்தது அனைத்தையும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாலும் வழி நடத்துதலினாலுமே செய்தனர். எனவே, அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல், மனிதரின் நடபடிகளைப் பற்றி மட்டுமல்ல, அந்த மனிதர்களுக்குள் வாசம் செய்த தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் நடபடிகளைப் பற்றியும் எழுதப்பட்டதாகும்.

**சிறு தலைப்புகள்:**

**அ. திருச்சபையின் ஆரம்பம் (1:1-2:47)**

1. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் ஊழியமும் பரமேறுதலும் (1:1-11).
2. மத்தியாவின் தெரிந்தெடுப்பு (1:12-26).

3. பரிசுத்த ஆவியானவர் வந்திறங்குதல் (2:1-41).
4. ஆதித் திருச்சபையில் வாழ்க்கை (2:42-47).

**ஆ. எருசலேமில் திருச்சபை (3:1-5:42).**

1. ஓர் அற்புதமும் ஒரு பிரசங்கமும் (3:1-26).
2. யூதத் தலைவர்களிடமிருந்து முதல் எதிர்ப்பு (4:1-37),
3. அனனியா, சப்பீராளின் மரணம் (5:1-16)
4. யூதத் தலைவர்களிடமிருந்து இரண்டாவது எதிர்ப்பு (5:17-42).

**இ. திருச்சபை இஸ்ரவேல் நாடெங்கும் பரவுதல் (6:1-12:25).**

1. ஏழு பேரை ஏற்படுத்துதல் (6:1-7).
2. ஸ்தேவானின் ஊழியமும் மரணமும் (6:8-7:60).
3. சமாரியாவில் சுவிசேஷம் (8:1-25).
4. எத்தியோப்பிய மந்திரியின் மனந்திரும்புதல் (8:26-40). 5. சவுலின் மனமாற்றம் (9:1-31).
5. இஸ்ரவேலில் பேதுருவின் ஊழியமும், முதல் புற ஜாதி மனமாற்றங்களும் (9:32-11:18).
6. அந்தியோகியாவில் புறஜாதித் திருச்சபை நிறுவப்படுதல் (11:19-30).
7. ஏரோதுவினால் வந்த உபத்திரவங்கள் (12:1-25).

**ஈ. திருச்சபை துருக்கி மற்றும் கிரேக்க நாடுகளுக்குப் பரவுதல் (13:1-21:16).**

1. பவுலின் முதல் மிஷனெரிப் பயணம் (13:1-14:28
2. எருசலேம் மாநாடு (15:1-35).
3. பவுலின் இரண்டாம் மிஷனெரிப் பயணம் (15:36-18:23).

4. *பவுலின் மூன்றாம் மிஷனெரிப் பயணம் (18:24-21:16).*

**உ. திருச்சபை ரோமாபுரிக்குப் பரவுதல் (21:17-28:31).**

1. *எருசலேமில் சுவிசேஷம் மறுக்கப்படுதல் (21:17-26:32).*
2. *ரோமாபுரியில் சுவிசேஷம் ஏற்கப்படுதல் (27:1-28:31).*

# 6. ரோமர்

**முன்னுரை:**

*ரோமருக்கு இந்த நிருபத்தை எழுதியவர் அப்போஸ்தலனாகிய பவுல் ஆவார். பவுல் (தனது மனந்திரும்புதலுக்கு முன் சவுல் என்று அழைக்கப்பட்டவர்) இயேசுவின் முதல் பன்னிரு சீஷர்களுள் ஒருவர் அல்லர். இயேசு உலகத்தில் இருந்த பொழுது பவுல் ஒருவேளை அவரைச் சந்தித்திருக்கவே மாட்டார். பவுல் ஒரு ஆசாரம் மிக்க யூதன் (பிலிப்பியர் 3:4-6). கிறிஸ்துவின் சுவிசேஷம் பரவ ஆரம்பித்த போது பவுல் விசுவாசிகளைக் கடுமையாக உபத்திரவப்படுத்த ஆரம்பித்தார் (அப்போஸ்தலர் 8:3; 9:1-2; 22:3-5; 26:9-11). பின்பு ஒரு நாள் பவுல் தமஸ்குவுக்குப்' போகும் வழியில், உயிர்த்தெழுந்து ஜீவிக்கின்ற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைச் சந்தித்து, விசுவாசியாக மாறினார் (அப்போஸ்தலர் 9:3-9; 22:6-11; 26:12-18). அப்பொழுது தான் இயேசு பவுலை அப்போஸ்தலனாக நியமித்தார். இயேசு பவுலை முக்கியமாக புறஜாதிகளுக்கு, அதாவது யூதர்கள் அல்லாதோருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே ஏற்படுத்தினார். பவுலின் வாழ்க்கை மற்றும் ஊழியம் பற்றிய முழுமையான விவரணையை அப்போஸ்தலர் 9 மற்றும் 13-28 அதிகாரங்களில் காணலாம்.*

*பவுல் மூன்று மிஷனெரிப் பயணங்களை மேற்கொண்டார். அந்தச் சமயத்தில் எபேசு, பிலிப்பி, தெசலோனிக்கே, கொரிந்து மற்றும் தற்கால கிரீஸ், துருக்கி நாடுகளின் முக்கிய நகரங்களில் திருச்சபைகளை நிறுவினார். பவுல் பயணம் செய்தவாறே தாம் நாட்டிய புதிய திருச்சபைகளுக்கு ஊக்கமூட்டியும் புத்தி சொல்லியும் கடிதங்களை எழுதினார். ரோமாபுரி மற்றும் கொலோசே போன்ற தாம் நிறுவாத சில சபைகளுக்கும் பவுல்*

நிருபங்களை எழுதினார். அத்துடன் தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் போன்றவர்களுக்கும் தனிப்பட்ட கடிதங்கள் எழுதினார். இந்தக் கடிதங்கள் அனைத்தும் புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ளன. கிறிஸ்துவின் போதனைகளை விளங்கிக்கொள்ள உதவுவதிலும் கிறிஸ்தவர்களாக வாழ்வது எப்படி என்று நமக்குக் காட்டுவதிலும் இவை முக்கியப் பங்காற்றுகின்றன. பவுலின் கடிதங்களில் பெரும்பாலானவை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு சுவிசேஷங்களுக்கும் முன்னரே எழுதப்பட்டவை. ஆகவே புதிய ஏற்பாட்டில் முதன்முதலாக எழுதப்பட்டவை பவுலின் கடிதங்களே.

பவுல் இந்த நிருபத்தை ரோமாபுரிக் கிறிஸ்தவர்களுக்கு கி. பி. சுமார் 55 ஆம் ஆண்டில் தாம் கொரிந்து என்ற கிரேக்கப் பட்டணத்தில் தங்கியிருந்த போது எழுதினார். அந்த நாட்களில், மத்திய தரைக்கடலைச் சுற்றியுள்ள சகல நாடுகளும் ரோமாபுரியைத் தலைநகராகக் கொண்ட ரோமப் பேரரசின் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருந்தன. (இன்றைக்கும் ரோம் ஒரு முக்கியம் வாய்ந்த நகராகும்; இது ஐரோப்பாவின் முக்கிய நாடுகளுள் ஒன்றான இத்தாலியின் தலைநகராகத் திகழ்கிறது.) ரோமாபுரியில் உள்ள திருச்சபையை (திருச்சபைகளை) முதன்முதலில் நிறுவியது யார் என்பது தெரியவில்லை. எனினும், பவுல் இந்த நிருபத்தை எழுதுவதற்குள் ரோமாபுரியில் அநேகக் கிறிஸ்தவர்கள் இருந்தனர், அவர்களில் சிலர் யூத விசுவாசிகள், மற்றவர்கள் புறஜாதி விசுவாசிகள்.

பவுல் ரோமாபுரிக்கும், பின்பு அங்கிருந்து ஸ்பானியா தேசத்துக்குமாக நான்காவது மிஷனெரிப்பயணத்தையும் மேற்கொள்ள விரும்பினார் (ரோமர் 15:23-24). ஆனால் பவுலின் இந்தத் திட்டம் நிறைவேறவில்லை, காரணம் அவர் எருசலேமில் (இஸ்ரேல் நாட்டின் யூதேயா மாநிலத்

தலைநகர்) கைது செய்யப்பட்டு, இஸ்ரேல் நாட்டிலேயே இரண்டு வருடங்கள் சிறை வைக்கப்பட்டார். இறுதியில் ஒருவழியாக அவர் ரோமாபுரிக்குச் சென்றபோது ஒரு சுதந்தரமான மனிதனாக அல்ல, ஒரு கைதியாகவே சென்றார். பவுல் ரோமாபுரியில் மேலும் இரண்டு வருடங்களுக்கு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார் (அப்போஸ்தலர் 28:30-31). அதற்குப்பிறகு பவுலுக்கு என்ன நேர்ந்தது என்பதற்கான திட்டவட்டமான குறிப்புகள் ஏதுமில்லை. அவர் ரோமப்பேரரசனான நீரோ என்பவனால் கி.பி. சுமார் 67இல் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது.

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபமே புதிய ஏற்பாட்டில் காணப்படும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பற்றிய மிக முழுமையான வாக்குமூலம் எனலாம். இக்கடிதத்தின் முக்கியக் கருப்பொருள் எல்லா மனிதரும் பாவிகளே, ஆனால் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதன் மூலமாக மனிதன் தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்பட்டு, இரட்சிப்பையும் நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதே.

வேதபுத்தகத்தை எழுதிய மற்றெல்லா ஆக்கியோன்களையும் போலவே, பவுலும் தமது புதிய ஏற்பாட்டு நிருபங்களை பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் எழுதினார். வேதாகமத்திலுள்ள எல்லாப் புத்தகங்களுக்கும் ஆக்கியோன் பரிசுத்த ஆவியானவரே எனலாம்; மானிட எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியானவரின் கரத்தில் வெறும் கருவிகள் மட்டுமே'. எனவே, நாம் பவுலின் நிருபங்களைப் படிக்கையில் அவை (மற்றும் வேதத்தின் அனைத்துப் புத்தகங்களும்) தேவனே நமக்காக எழுதி அனுப்பி வைத்துள்ளவை என்பதை நினைவில் கொள்வோமாக. பவுல் ரோமருக்கு எழுதிய இந்த நிருபம் ரோமருக்காக மட்டுமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டதே.

**தாமஸ் ஹேல்**

**சிறுதலைப்புகள்:**

***அ. முகவுரை (1:1-17),***

1. *வாழ்த்துதல்கள் (1-7).*
2. *துதி தோத்திரம் மற்றும் ஜெபம் (1:8-15).*
3. *சுவிசேஷத்தின் வல்லமை (1:16-17).*

***ஆ. சுவிசேஷத்தின் அடிப்படைக் கொள்கைகள் (1:18-5:21)***

1. *புறஜாதிகளின் நீதி (1:18-32).*
2. *யூதர்களின் நீதி (2:1-3:20).*
3. *தேவ நீதி (3:21-31).*
4. *ஆபிரகாமின் நீதி (4:1-25).*
5. *விசுவாசியின் நீதி (5:1-21).*

***இ. சுவிசேஷத்தால் எழுகின்ற நீதிநெறிப் பிரச்சனைகள் (6:1-23).***

1. *பாவம் செய்ய அனுமதி என்ற குற்றச்சாட்டு (6:1-14).*
2. *நியாயப்பிரமாணம் இல்லை என்ற குற்றச்சாட்டு (6:15-23).*

***ஈ. கிறிஸ்தவனும் நியாயப்பிரமாணமும் (7:1- 8:39),***

1. *நியாயப்பிரமாணம் இம்மையில் மட்டுமே செல்லுபடியாகும் (7:1-6).*
2. *நியாயப்பிரமாணமும் பாவமும் (7:7-25).*
3. *பாவம் மரணம் என்ற பிரமாணத்திலிருந்து ஆவியானவரால் விடுதலை (8:1-39).*

***உ. யூதர்களின் உரிமைகளும் சிலாக்கியங்களும் என்ன என்ற கேள்வி (9:1- 11:36).***

1. தேவனின் சர்வ இராஜரீகம் (9:1-29).
2. வரலாற்றில் யூதர்களின் பொறுப்பு (9:30- 10:21)
3. தேவனுடைய இரக்கமுள்ள நோக்கம் (11:1-36).

**ஊ. நடைமுறையில் கிறிஸ்தவம் (12:1-15:13).**

1. தனிவாழ்வில் நீதிநெறிகள் (12:1-21).
2. அரசியலில் நீதிநெறிகள் (13:1-7).
3. மேலும் சில தனிப்பட்ட நீதிநெறிகள் (13:8-14).
4. பலமுள்ளவனும் பலவீனமுள்ளவனும் (14:1-15:13).

**எ. முடிவுரை (15:14-16:27),**

1. பவுல் எழுதக் காரணம் (15:14-21).
2. எதிர்காலப் பயணத்திட்டங்கள் (15:22-33).
3. ரோமாபுரியிலுள்ள நண்பர்களுக்கு வாழ்த்துதல்கள் (16:1-16).
4. இறுதி புத்திமதியும் வாழ்த்துதலும் (16:17-27).

# 7. 1 கொரிந்தியர்

**முன்னுரை:**

*பவுலின் நாட்களில், கொரிந்து பட்டணமே தெற்கு கிரீஸின்' மிகவும் புகழ் வாய்ந்ததும், முக்கியம் நிறைந்ததுமான நகரமாகத் திகழ்ந்தது. எபேசுவைப் போல், கொரிந்துவும் ஒரு வர்த்தக மற்றும் கலாச்சார மையமாக விளங்கியது. இந்தக் கொரிந்துவே தெற்கு கிரீஸின் பெரும்பாகத்தை உள்ளடக்கிய அகாயா என்னும் கிரேக்க மாநிலத்தின் தலைநகரமாகவும் இருந்தது. ஆக, கொரிந்துவின் இருப்பிடம் மற்றும் முக்கியத்துவத்தின் நிமித்தமாக, அது சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு முக்கியமான இடமாகத் திகழ்ந்தது.*

*பவுல் தமது இரண்டாவது மிஷனெரிப் பயணத்தின் முடிவில், கி.பி.சுமார் 50 ஆம் ஆண்டில் கொரிந்துவிற்குச் சென்று அங்கே ஏறத்தாழ பதினெட்டு மாதங்கள் தங்கியிருந்தார். முதலில் அவர் பெரும்பாலும் அங்கிருந்த யூதர்களுக்கே பிரசங்கித்து வந்தார்; ஆனால் அவர்களில் அநேகர் அவரது பிரசங்கத்தைக் கேட்க மறுத்த போது, அவர் யூதர்களின் ஜெபாலயத்தை விட்டு, புறஜாதிகளுக்குப் பிரசங்கிக்கத் தொடங்கினார் (அப்போஸ்தலர் 18:1,4-7,9-11 பார்க்க). கொரிந்துவில் திருச்சபையை நிலைநாட்டிய பின்னர், பவுல் கி.பி.சுமார் 52 இல் இந்நகரை விட்டு வெளியேறி, எபேசுவுக்குச் சென்று அங்கே இரண்டாண்டுக் காலம் தங்கினார்.*

*எபேசு பட்டணம் ஏஜியன் கடலுக்கு மறுபுறத்தில், கொரிந்துவிலிருந்து 300 மைல் (480 கி.மீ) கிழக்காக, இன்றைய துருக்கி நாட்டில் அமைந்திருந்தது. இரண்டு நகரங்களுமே முக்கியம் வாய்ந்தவையாக இருந்ததால்,*

ஏராளமான மக்கள் இரு நகர்களுக்கும் இடையே படகுகள் மூலம் பயணித்து வந்தனர். பவுல் எபேசுவில் இருந்தபொழுது, கொரிந்திய விசுவாசிகளின் தகாத நடத்தை பற்றிக் கேள்விப்பட்டார். அதோடு கூட, கிறிஸ்தவ வாழ்க்கை பற்றிய சில நடைமுறைக் கேள்விகளைக் கேட்டு, கொரிந்தியத் திருச்சபையிடமிருந்து அவருக்குக் கடிதம் ஒன்றும் வந்திருந்தது. இந்த இரண்டு காரணங்களையும் முன்னிட்டு, கி.பி. சுமார் 54 இல், பவுல் கொரிந்தியருக்குத் தனது இந்த முதலாவது நிருபத்தை எழுதினார். கடிதத்தின் முற்பகுதியில், பவுல் அவர்களது தகாத நடத்தை பற்றிய சில எச்சரிப்புகளையும் புத்திமதிகளையும் கூறுகிறார். பிற்பகுதியில், அவர்களது கேள்விகளுக்கு விடையளிக்கிறார்.

இந்த முதல் நிருபத்தில் பவுல் கொடுத்த மிகவும் கண்டிப்பான எச்சரிப்புகள் மற்றும் கடிந்து கொள்ளுதல்கள் நிமித்தமாக கொரிந்தியர்கள் இதை அவ்வளவு மகிழ்ச்சியுடன் வரவேற்கவில்லை. அநேகர் பவுலுக்கு எதிராகப் பேசவும் ஆரம்பித்தனர். ஆகவே, பவுல் எபேசுவிலிருந்து இன்னொரு கடிதமும் அனுப்பினார் (2கொரிந்தியர் 2:3-4). ஆயினும், இந்த இரண்டாவது கடிதம் தொலைந்து போய் விட்டது, அதன் பிரதிகள் எதுவும் இப்பொழுது இல்லை. (ஒருவேளை, தங்களுக்கு அந்தக் கடிதம் பிடிக்கவில்லை என்பதைக் காட்டும் வண்ணமாக, கொரிந்தியரே அதை அழித்து விட்டிருக்கலாம்.) இந்தத் தொலைந்து போன கடிதம் என்னவாகியிருந்தாலும் சரி, கொரிந்தியர் அதைப் பெற்றுக் கொண்டதும், சபையின் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட ஆரம்பித்தது. இந்த நற்செய்தியைக் கேள்விப் பட்டதும், பவுல் கொரிந்தியருக்கு மூன்றாவதாக ஒரு கடிதத்தை எழுதினார். அதுவே, புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ள 2 கொரிந்தியர் நிருபமாகும். பவுலின் வாழ்க்கை பற்றி மேலும் அறிய, ரோமர்: முன்னுரை பார்க்க.

**தாமஸ் ஹேல்**

**சிறு தலைப்புகள்:**

**அ. அறிமுகம் (1:1-9).**

1. வாழ்த்துதல்கள் (1:1-3),
2. ஸ்தோத்திரம் செய்தல் (1:4-9).

**ஆ. கொரிந்தியத் திருச்சபையில் பிரிவினைகள் (1:10-4:21).**

1. பிரிவினைகள் இருப்பது உண்மை (1:10-17).
2. செய்தி குறித்த பிரிவினைகள் (1:18-2:16).
3. ஊழியம் குறித்த பிரிவினைகள் (3:1-23).
4. பிரிவினைகளுக்கு முடிவுகட்ட ஒரு வேண்டுகோள் (4:1-21)

**இ. கொரிந்தியத் திருச்சபையில் ஒழுக்கக் கேடுகள் (5:16:20).**

1. ஒழுக்கமின்மை (5:1-13).
2. அவிசுவாசிகளான நீதிபதிகள் முன் வழக்குகள் (6:1-11).
3. திருச்சபையில் ஒழுக்கக்கேடு (6:12-20).

**ஈ. கொரிந்தியர்களின் கேள்விகளுக்குப் பவுலின் பதில்கள் (7:1-15:58),**

1. திருமணம் குறித்து (7:1-40).
2. விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாமிசம் குறித்து (8:1-13).
3. ஒரு அப்போஸ்தலனின் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து(9:1-27).
4. கேள்விக்குரிய பழக்கவழக்கங்கள் குறித்து (10:1-33),

5. பொது ஆராதனைகளில் பெண்கள் குறித்து (11:1-16).
6. கர்த்தருடைய பந்தி குறித்து (11:17-34).
7. ஆவியின் வரங்கள் குறித்து (12:1-14:40).
8. உயிர்த்தெழுதல் குறித்து (15:1-58).

**உ. முடிவாக சில அறிவுரைகள் (16:1-24).**

1. தர்மப்பணம் (16:1-4).
2. பவுலின் விஜயம் (16:5-12).
3. இறுதி வாழ்த்துதல்களும் ஜெபமும் (16:13-24).

# 8. 2 கொரிந்தியர்

*முன்னுரை:*

*பவுல் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாவது நிருபம், வடக்கு கிரீஸில் உள்ள மக்கெதோனியாவிலிருந்து (மாசிடோனியா) எழுதப்பட்டது. இது அவருடைய முதலாம் நிருபம் எழுதப்பட்டு ஓரிரண்டு ஆண்டுகள் கழித்து, கி.பி. சுமார் 56 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது.*

*பவுல் கொரிந்தியருக்குத் தனது முதலாம் நிருபத்தை எழுதிய சில காலத்திற்குப் பின், அங்குள்ள திருச்சபையின் நிலை மேலும் சீர்கேடடைந்திருப்பதாகக் கேள்வியுற்றார். ஆகவே, அச்சமயம் எபேசுவிலிருந்த பவுல், கொரிந்தியருக்கு ஒரு கடுமையான கடிதத்தை எழுதி, அதைத் தனது உடன் ஊழியனான தீத்துவிடம் கொடுத்தனுப்பினார் (2 கொரிந்தியர் 2:3-4). இந்த இரண்டாவது நிருபம் எங்கோ தொலைந்து போய்விட்டது; இதன் ஒரு பிரதி கூடக் கிடைக்கவில்லை.' தீத்து உடனடியாக கொரிந்துவிலிருந்து திரும்பி வராததால் கவலையுற்ற பவுல், அவனைத் தேடிக் கொண்டு மக்கெதோனியா வந்தார் (2 கொரிந்தியர் 2:12-14). அங்கே எப்படியோ ஒரு வழியாக தீத்துவைக் கண்டு பிடித்தார், கொரிந்தியர்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து, அவற்றுக்காக மனஸ்தாபப் படுகிறார்கள் என்று அவன் மூலம் கேள்விப்பட்டார். இந்த நல்ல செய்தியைக் கேட்ட பிறகு, பவுல் கொரிந்தியருக்கு மூன்றாவதாக ஒரு நிருபத்தையும் எழுதினார், அதைத் தான் நாம் இப்பொழுது "2 கொரிந்தியர்" என்று அழைக்கிறோம்.*

*பவுல் எழுதிய புதிய ஏற்பாட்டு நிருபங்கள் அனைத்திலும் மிகவும் தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டது இந்த 2 கொரிந்தியர் நிருபம் தான். இங்கே*

*பவுல் கொரிந்தியருக்கும் - நமக்கும் தான் - தனது உள்ளத்தையே திறந்து காட்டுகிறார். பவுல் உள்ளான விதத்தில் எப்படிப்பட்ட மனிதர் என்பதை இந்த நிருபத்திலிருந்து பெருமளவிற்கு அறிய முடிகிறது. பவுலின் வாழ்க்கை பற்றி மேலும் அறிய, ரோமர்: முன்னுரை பார்க்கவும்.*

***சிறு தலைப்புகள்:***

***அ. பவுலின் சமீப காலச் சோதனைகளும், பயணங்களும்***

1. *பவுலின் சோதனைகளும் ஆறுதலும் (1:1-11).*
2. *பவுலின் பயணத் திட்டங்களில் மாற்றம் (1:12-2:4).*
3. *முன்பு பாவம் செய்தவனைப் பற்றி அறிவுரை (2:5-11).*

***ஆ. கிறிஸ்தவ ஊழியத்தின் தன்மை (2:12- 7:16).***

1. *சுவிசேஷத்தின் மகத்துவம் (2:12- 4:6).*
2. *ஊழியத்தின் பாடுகளும் மகிமையும் (4:7-5:10).*
3. *ஊழியப்பணி (5:11-6:13).*
4. *ஊழியத்தின் சந்தோஷம் (6:14- 7:16).*

***இ. தரித்திரருக்கான காணிக்கை சேகரித்தல் (8:1- 9:15),***

1. *உதார குணத்தின் அவசியம் (8:1-15).*
2. *காணிக்கை சேகரிப்பதற்கான ஆயத்தங்கள் (8:16-9:5).*
3. *கிறிஸ்தவ ஈகையின் விதிமுறைகள் (9:6-15).*

***ஈ. ஒரு அப்போஸ்தலனாக பவுலின் அதிகாரம் (10:1-13:14).***

1. *ஒரு அப்போஸ்தலனின் உரிமைகள் (10:1-11:15).*

2. பவுல் தனது அப்போஸ்தலத்துவத்துக்காக வாதிடுதல் *(11:16-12:10).*
3. பவுலின் அன்பும் கரிசனையும் *(12:11-13:14).*

# 9. கலாத்தியர்

**முன்னுரை:**

*கலாத்தியா என்பது அன்றைய ரோமப் பேரரசின் மையப்பகுதியில் அதாவது இன்றைய துருக்கியில் அமைந்திருந்த ஒரு மாநிலமாகும். பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபம் ஒரு சபைக்கென்று எழுதப்பட்டதல்ல, பல சபைகளுக்கு எழுதப்பட்டது. அவை அனைத்தும் சில ஆண்டுகளுக்கு முன் பவுலினால் நிறுவப்பட்டவையே. பவுல் குறிப்பாக எந்தச் சபைகளுக்கு எழுதினார் என்பது சரியாகத் தெரியவில்லை, காரணம் சபைகளின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. எந்த ஆண்டில் எழுதப்பட்டது என்றும் தெளிவாகத் தெரியவில்லை: சிலர் கி.பி. 54-56 என்கின்றனர், சிலர் கி.பி. 48-49 என்கின்றனர்.*

*பவுல் இதை எழுதுவதற்கான காரணம், இந்த நிருபத்திலிருந்தே தெளிவாகிறது. பவுல் இந்தப் புறஜாதித் திருச்சபைகளை நாட்டியது தான் தாமதம், அங்கே சில யூதக்கிறிஸ்தவர்கள் வந்து, பவுலின் போதனைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பித்தனர். மனிதன் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு மாத்திரமே இரட்சிக்கப் படுகிறான் (எபேசியர் 2:8) என்று பவுல் போதித்தார். ஆனால் இந்த யூதக்கிறிஸ்தவர்களோ இரட்சிக்கப் படுவதற்கு யூதர்களின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதும் அவசியம் என்று போதித்தனர். இந்த யூதக்கிறிஸ்தவர்களின் போதனை மேலோங்குமானால், பவுல் பிரசங்கித்த கிருபையின் சுவிசேஷத்துக்கு வேலையே இல்லாமல் போய்விடும். எனவே தான், யூதக்கிறிஸ்தவர்களின் தவறான போதனையை எதிர்த்துத் தாக்கவும், கலாத்தியத் திருச்சபையின் இளம் விசுவாசிகள் வழிதவறி விடாதபடி பாதுகாக்கவும் இந்த நிருபத்தை எழுதும் படியாக பவுல்*

*ஏவப்பட்டார். கலாத்தியர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே இரட்சிப்பை அடைய நாடுவார்கள் என்றால், அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட கிருபையை இழந்து போக நேரிடும்.*

*கிறிஸ்தவத் திருச்சபையின் வரலாற்றிலே, பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபம் மிகமிக முக்கியம் வாய்ந்தது. இந்த நிருபத்தைப் படித்த பின்னர்தான், மார்ட்டின் லூத்தர் பதினாறாம் நூற்றாண்டிலே, ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் கள்ளப்போதனையை அடையாளம் கண்டு, புராட்டடஸ்டன்ட் (சீர்திருத்த இயக்கம்) இயக்கத்தை ஆரம்பித்தார். இந்த நிருபத்தைப் படித்துத் தான், லூத்தர் கிறிஸ்தவ சுவிசேஷத்தின் நடுமையமான சத்தியத்தை: அதாவது, மனிதன் ஒரு திருச்சபையையோ அல்லது ஒரு மதச்சட்டத்தையோ பின்பற்றுவதன் மூலம் இரட்சிக்கப் படுவதில்லை, விசுவாசத்தினாலே பெற்றுக் கொள்ளுகின்ற தேவனுடைய கிருபையினால் மாத்திரமே இரட்சிக்கப் படுகிறான் என்பதைக் கண்டறிந்தார்.*

*உலக மனிதர்கள் தங்கள் சொந்தக் கிரியையினாலும் முயற்சியினாலும் இரட்சிப்பு அடையப் பிரயாசப் படுகின்றனர். அவர்கள் பல்வேறு மதச்சட்டங்களையும் சடங்குகளையும் கைக்கொள்வதன் மூலம் தேவனைப் பிரியப்படுத்த முயல்கின்றனர். தங்களது சுயசக்தியினாலே பரிசுத்தமாகப் பார்க்கின்றனர். ஆனால் அவர்களது முயற்சிகள் எல்லாம் வீணே. மனிதன் கிருபையினால் மாத்திரமே தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படத் தக்கவன் ஆகிறான். தேவன் தமது மிகுந்த அன்பினாலும் இரக்கத்தினாலும், பாவ மாந்தருக்குப் பரலோகம் செல்வதற்கான ஒரு வாசலைத் திறந்துள்ளார். கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதன் மூலம் நாம் இந்த வாசலுக்குள்*

பிரவேசிக்க முடியும். இந்தக் கலாத்தியர் நிருபத்தின் முக்கியப் போதனை இதுவே, பவுலின் வாழ்க்கை பற்றிய மேலும் விபரங்களுக்கு, ரோமர் - முன்னுரை பார்க்க,

**சிறு தலைப்புகள்:**

***அ. அறிமுகம் (1:1-10).***

*1. வாழ்த்துதல்கள் (1:1-5).*
*2. கடிதம் எழுதுவதற்கான காரணம் (1:6-10).*

# 10. எபேசியர்

**முன்னுரை:**

*பவுல் கி.பி. 60-61 இல், தாம் ரோமாபுரிச் சிறைச்சாலையில் இருந்த போது, இந்தக் கடிதத்தை எபேசியருக்கு எழுதினார். இந்தச் சிறையிலிருந்து தான், பவுல் பிலிப்பியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன் நிருபங்களை எழுதினார்.*

*புதிய ஏற்பாட்டுக் காலங்களில், எபேசு பட்டணம் மத்திய கிழக்கின் முக்கிய நகராகத் திகழ்ந்தது. அது, ரோமர்களின் ஆட்சிக்குட்பட்ட ஆசியா மாநிலத்தின் (இன்றைய துருக்கி நாட்டின் மேற்குப்பகுதி) பிரதான நகருமாகும். எபேசு நகரம் ஒரு முக்கிய வணிகத்தலமாகவும் விளங்கியதால், மத்திய கிழக்கின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த மக்கள் வியாபாரத்துக்காக அங்கே வந்தனர் (அப்போஸ்தலர் 18:19 பார்க்க).*

*பவுலும் கூட கி.பி. 53 முதல் 55 வரை எபேசுவில் தங்கியிருந்தார். அந்த நாட்களில் அங்கிருந்த சொற்பொழிவு மண்டபம் ஒன்றில் அனுதினமும் உரையாற்றி வந்தார், அவர் பேசுவதைக் கேட்க அநேகர் கூடி வந்தனர். சிலர் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தனர், விரைவிலேயே எபேசுவில் ஒரு திருச்சபை நிறுவப்பட்டது. அது மட்டுமல்ல, பல்வேறு இடங்களிலிருந்து வியாபாரத்தின் நிமித்தமாக எபேசுவுக்கு வந்த அநேகரும் பவுலின் பிரசங்கங்களைக் கேட்டு விசுவாசிகளாயினர், தங்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் சென்றனர். இப்படியாக, கிறிஸ்துவின் சுவிசேஷம் எபேசுவைச் சுற்றிலும் ஒரு பரந்த பகுதியில் விரைந்து பரவியது (அப்போஸ்தலர் 19:8-10).*

பவுல் எபேசியருக்கு எழுதின நிருபம், எபேசியக் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, அவர் எபேசுவில் இரண்டு வருடங்களாகப் போதித்து வந்ததன் விளைவாக, சுற்றிலுமிருந்த நகரங்களில் உருவாகியிருந்த வேறுபல சபைகளுக்கும் சேர்த்தே எழுதப்பட்டது என்பது வேத பண்டிதர்கள் பலரின் கருத்து. பவுலின் மற்ற புதிய ஏற்பாட்டு நிருபங்களில் பெரும்பாலானவை, தனிப்பட்ட திருச்சபைகளுக்கு ஒரு தனிப்பட்ட விதத்தில் எழுதப்பட்டவை; ஆனால் இந்தக் கடிதமோ அவற்றிலிருந்து வேறுபட்டது. இந்த நிருபத்தில் பவுல், எபேசியர்களைத் தனிப்பட்ட முறையில் குறிப்பிடாமலே, அநேகப் பொதுவான விஷயங்கள் பற்றி எழுதுகின்றார்.' இந்தக் கடிதம் ஒரு சுற்றறிக்கையாக ஒவ்வொரு திருச்சபையிலும் வாசிக்கப் படும்படி எழுதப்பட்டது என வேத அறிஞர்கள் கருதுகின்றனர். பவுலின் வாழ்க்கை பற்றி மேலும் அறிவதற்கு, ரோமர்: முன்னுரை பார்க்க.

**சிறு தலைப்புகள்:**

**அ. கிறிஸ்துவுக்குள் விசுவாசியின் நிலை (1:1-3:21).**

1. கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் (1:1-14).
2. ஒரு மன்றாட்டு ஜெபம் (1:15-23).
3. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு (2:1-10),
4. யூதர்களும் புறஜாதிகளும் கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாக்கப்படுதல் (2:11-22).
5. இரகசியம் வெளியாக்கப்படுதல் (3:1-13).
6. பவுலின் இரண்டாவது ஜெபம் (3:14-21).

### ஆ. உலகத்தில் விசுவாசியின் நடத்தை (4:1-6:24).

1. திருச்சபையின் ஒற்றுமை (4:1-15).
2. மாற்றம் பெற்ற வாழ்க்கை (4:17-32).
3. ஒளியின் பிள்ளைகளாக வாழ்தல் (5:1-21).
4. கிறிஸ்தவ இல்லறம் (5:22-33).
5. கிறிஸ்தவப் பெற்றோர் (6:1-4).
6. கிறிஸ்தவப் பணியாளர்கள் (6:5-9).
7. கிறிஸ்தவப் போரிடுதல் (6:10-24).

# 11. பிலிப்பியர்

**முன்னுரை:**

*பிலிப்பி பட்டணம், கிரீஸ்' நாட்டின் வட மாநிலமாகிய மாசிடோனியாவின் (மக்கெதோனியா) முக்கிய நகரமாகும். அநேக ரோமக் குடிமக்களும், ரோமப் போர்வீரர்களும் அங்கே குடியேறியிருந்த படியால், அது ஒரு ரோமக் குடியேற்றப் பகுதியாக பார்க்க). மாறியிருந்தது (அப்போஸ்தலர் 16:12 மற்றும் குறிப்புரை).*

*பவுல் தனது இரண்டாவது மிஷனெரிப் பயணத்தின் போது தான் முதன்முறையாக பிலிப்பி பட்டணத்திற்கு வந்தார். அதுவே கிறிஸ்துவின் சுவிசேஷம் ஐரோப்பாக் கண்டத்தில் முதல் முறையாகப் பிரசங்கிக்கப் பட்ட வேளையாகும். ஆக, இந்த பிலிப்பி நகரத்திலிருந்து தான், சுவிசேஷம் ஆசியாவிலிருந்து ஐரோப்பாவிற்கு முதன்முதலாகப் பரவியது. மறந்து விடாதீர்கள்: கிறிஸ்தவம் ஐரோப்பிய மதமோ, மேலை நாட்டு மதமோ அல்ல, அது ஆசியாவில் பிறந்த மதம்.*

*பவுல் தான் கண்ட ஒரு தரிசனத்தின் விளைவாகவே பிலிப்பி பட்டணத்திற்குச் சென்றார். அந்தத் தரிசனத்தில் மக்கெதோனியா நாட்டவன் ஒருவன் தன்னிடம், "நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டதாகக் கண்டார் (அப்போஸ்தலர் 16:9-10).*

*பிலிப்பி பட்டணத்திற்குப் பவுலின் முதல் வருகை, அப்போஸ்தலர் 16:11-40 இல் விவரிக்கப் பட்டுள்ளது. பிற்பாடு, பவுல் தனது மூன்றாவது விஜயம் செய்தார் (அப்போஸ்தலர் 20:1,6), மிஷனெரிப் பயணத்தின் போதும்,*

பிலிப்பிக்கு மீண்டும் பவுல், தாம் ரோமாபுரிச் சிறைச்சாலையில் இருந்த போது, கி.பி. சுமார் **60-61** இல், பிலிப்பியருக்கு இந்தக் கடிதத்தை எழுதியதாகப் பெரும்பாலான வேதபண்டிதர்கள் நம்புகின்றனர். அந்தச் சிறையிலிருந்த அதே காலகட்டத்தில் தான், அவர் எபேசியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன் நிருபங்களை எழுதினார் என்பது இவர்களது கருத்து. பவுலின் வாழ்க்கை பற்றி மேலும் அறிய, ரோமர்: முன்னுரை பார்க்க.

**சிறு தலைப்புகள்:**

**அ. அறிமுகம் (1:1-26).**

1. ஸ்தோத்திரமும் ஜெபமும் (1:1-11).
2. ரோமாபுரியில் பவுலின் நிலைமை (1:12-26).

**ஆ. புத்திமதிகள் (1:27-2:18).**

1. உறுதியாக, ஒற்றுமையாக இருக்கப் புத்தி சொல்லுதல் (1:27-2:4).
2. கிறிஸ்துவின் முன்மாதிரி (2:5-2:11).
3. இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படப் புத்தி சொல்லுதல் (2:12-2:18).

**இ. திட்டங்களும் எச்சரிப்புகளும் (2:19-3:21).**

1. இனிவரும் பயணங்களுக்கான திட்டங்கள் (2:19-30).
2. கள்ளப் போதகர்களுக்கு எதிரான எச்சரிப்புகள் (3:1-21).

**ஈ. முடிவாகச் சில குறிப்புகள் (4:1-23),**

1. இறுதி புத்திமதிகள் (4:1-9).
2. பவுலுக்கு பிலிப்பியரின் அன்புக் காணிக்கைகள் (4:10-23).

# 12. கொலோசெயர்

**முன்னுரை:**

*கொலோசே, ரோமப் பேரரசுக்கு உட்பட்ட ஒரு சிறு நகரமாகும், அது தற்போதைய துருக்கியில் அமைந்துள்ளது. அது எபேசுவிலிருந்து சுமார் 100 மைல் (160 கி.மீ) தொலைவில் இருந்தது. பவுல் எபேசுவில் தங்கியிருந்த போது, கொலோசேயிலிருந்து வந்த சிலர் அவரது பிரசங்கத்தைக் கேட்டனர் (எபேசியர் - முன்னுரை பார்க்க). இப்படி வந்த கொலோசெயர்களுள் ஒருவனான எப்பாப்பிரா (கொலோசெயர் 1:7-8), பவுலின் சுவிசேஷத்தில் விசுவாசம் வைத்து, கொலோசேக்குத் திரும்பி, அங்கு ஒரு புதிய திருச்சபையை நாட்டினான்.*

*இந்தப் புதிய கொலோசே திருச்சபையில் ஏதோ ஒரு கள்ளப் போதகம் நுழைந்து விட்டது தெளிவாகப் புலப்படுகிறது. எனவே, இந்தக் கள்ளப் போதனையை எதிர்த்தும், கிறிஸ்துவின் மெய் சுவிசேஷத்தைத் தெளிவாக வலியுறுத்தியும் திருச்சபைக்கு ஒரு கடிதம் எழுதுமாறு எப்பாப்பிரா பவுலைக்கேட்டுக் கொண்டான். மத்திய கிழக்கிலுள்ள அத்தனைக் கிறிஸ்தவர்களும் பவுலைக் குறித்துக் கேள்விப் பட்டிருந்ததால், அவ்வளவு முக்கியம் வாய்ந்த ஒரு தலைவரின் அறிவுரைகளுக்கு கொலோசே சபையார் செவி கொடுப்பார்கள் என்று எப்பாப்பிரா நம்பினான். ஆகவே, கொலோசெயருக்கு எழுதின இந்த நிருபத்தில், முதல் இரண்டு அதிகாரங்களில் பவுல் சுவிசேஷத்தின் அடிப்படைப் போதனைகளைக் கொடுத்து விட்டு, கொலோசேயில் எழும்பியிருந்த கள்ளப் போதனை தவறானது என்பதையும் நிரூபித்துக் காட்டுகிறார். பிறகு, கடைசி இரண்டு அதிகாரங்களிலும் கிறிஸ்தவ வாழ்க்கை நடத்துவதற்கான நடைமுறை அறிவுரைகளை வழங்குகிறார்.*

பவுல் கி.பி. **60-61** ஆம் ஆண்டுகளில், தாம் ரோமாபுரிச் சிறையில் இருந்த பொழுது இந்த நிருபத்தை எழுதியதாக பெரும்பாலான வேத பண்டிதர்கள் கருதுகின்றனர். பவுலின் ஓர் உடன் ஊழியனான தீகிக்கு இந்தக் கடிதத்தை கொலோசேக்கு எடுத்துச் சென்றான்; கூடவே, பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தையும் கொண்டு சென்றான். பவுலின் வாழ்க்கை பற்றிய மேலும் விபரங்களுக்கு, ரோமர்: முன்னுரை பார்க்க.

**சிறு தலைப்புகள்:**

**அ. ஸ்தோத்திரமும் ஜெபமும் (1:1-14).**

1. கொலோசேயரின் விசுவாசத்திற்காக ஸ்தோத்திரம் (1:1-8).
2. கொலோசேயரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபம் (1:9-14).

**ஆ. கிறிஸ்துவே எல்லாருக்கும் உன்னதர் (1:15-2:23).**

1. கிறிஸ்து படைப்பின் கர்த்தா (1:15-23).
2. கிறிஸ்துவுக்காக பவுலின் ஊழியம் (1:24-2:5).
3. கிறிஸ்துவில் ஜீவனின் பரிபூரணம் (2:6-23).

**இ. பரிசுத்த வாழ்விற்கான விதிமுறைகள் (3:1-4:18).**

1. பழைய வாழ்க்கையின் பாவங்களை விட்டு விடுதல் (3:1-11).
2. புதிய ஜீவனைத் தரித்துக் கொள்ளுதல் (3:12-17).
3. கிறிஸ்தவ இல்லறங்களுக்கான விதிகள் (3:18-25).
4. மேலும் சில புத்திமதிகள் (4:1-6).
5. இறுதி வாழ்த்துதல்கள் (4:7-18).

# 13. 1 தெசலோனிக்கேயர்

**முன்னுரை:**

*தெசலோனிக்கே பட்டணம், கிரீஸ் நாட்டின் வடபுற மாநிலமாகிய மக்கெதோனியாவின் தலைநகராகும். பவுல் தனது இரண்டாவது மிஷனெரிப் பயணத்தின் போது தான் முதல் முறையாக தெசலோனிக்கே நகருக்குச் சென்றார். இது அப்போஸ்தலர் 17:1-9 இல் விவரிக்கப் படுகிறது.*

*இந்த நிருபம், பவுல் தெசலோனிக்கே பட்டணத்திலிருந்து திரும்பிய சில நாட்களுக்குப் பின், கி.பி. சுமார் 50 ஆம் ஆண்டில், கொரிந்துவிலிருந்து எழுதப்பட்டது. தெசலோனிக்கேயில் சந்திக்க நேரிட்ட எதிர்ப்புகளின் நிமித்தமாக, பவுல் அங்கே சில வாரங்கள் மட்டுமே செலவிட முடிந்தது; அவர் வெகு விரைவாக நகரை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர் வெளியேறியதும், அங்கிருந்த புதிய கிறிஸ்தவர்கள் அதிக உபத்திரவங்களையும், பாடுகளையும் சந்திக்க நேர்ந்தது. அவர்களை ஊக்குவிப்பதற்காகவும், மேலும் பல காரியங்களைக் குறித்து போதனைகளை வழங்குவதற்காகவுமே அவர் இந்த நிருபத்தை எழுதினார். அதோடு கூட, பவுலுக்கு தெசலோனிக்கே பட்டணத்தில் யூதர்களும், புறஜாதிகளுமாகிய அநேக விரோதிகளும் இருந்தனர்.*

*கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு அவகீர்த்தி உண்டாக்க வேண்டுமென்பதற்காக, இந்த விரோதிகள் பவுலை அவதூறாகப் பேசி, அவருக்கு எதிராகப் பொய்யான குற்றச்சாட்டுகளைக் கூறினர். இந்தப் பொய்க் குற்றச்சாட்டுகளால் தனது பெயர் கெட்டுப் போனால், தெசலோனிக்கேயில் உள்ள புதிய விசுவாசிகளின் விசுவாசம்*

*தளர்ந்து விடும் என பவுல் அஞ்சினார். ஆகவே, இந்தக் கடிதத்தில் அவர் தனது பகைவர்களின் பொய்க் குற்றச்சாட்டுகளை மறுக்கின்றார். இந்த நிருபம், 2 தெசலோனிக்கேயர் மற்றும் கலாத்தியர் நிருபங்களே பவுல் ஆரம்பத்தில் எழுதியவை. முதன்முதல் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டு நூல்கள் இவை தாம். பவுலின் வாழ்க்கை பற்றி மேலும் அறிய, ரோமர்: முன்னுரை பார்க்க.*

***சிறு தலைப்புகள்:***

***அ. தனிப்பட்ட சிந்தனைகள் (1:1- 3:13),***

1. *தெசலோனிக்கேயருக்காக நன்றி செலுத்துதல் (1:1-10).*
2. *பவுல் தெசலோனிக்கே திருச்சபையைத் தோற்றுவித்தல் (2:1-20).*
3. *தீமோத்தேயு திருச்சபையைத் திடப்படுத்துதல் (3:1-13).*

***ஆ. நடைமுறை புத்திமதிகள் (4:1-5:28),***

1. *பரிசுத்த வாழ்வு பற்றிய அறிவுரைகள் (4:1-12).*
2. *கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய அறிவுரைகள் (4:13- 5:11).*
3. *இறுதி அறிவுரைகள் (5:12-28).*

# 14. 2 தெசலோனிக்கேயர்

**முன்னுரை:**

*பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய இரண்டாவது நிருபம், அவர் முதல் நிருபத்தை எழுதிய சில காலத்துக்குப் பின்னர், கொரிந்துவிலிருந்து எழுதப்பட்டது.*

*பவுலின் முதல் நிருபத்தைப் படித்த தெசலோனிக்கேய கிறிஸ்தவர்களில் சிலர், இயேசு வெகு சீக்கிரமே திரும்ப வரப்போகிறார் என்று நினைத்துக் கொண்டனர். முடிவு சடுதியாய் வருமென்று பவுல் எழுதியிருந்தார் (1 தெசலோனிக்கேயர் 5:3); ஆனால், இதை, இயேசு உடனடியாக வரப்போகிறார் என்று தெசலோனிக்கேயர்கள் விளங்கிக் கொண்டனர். இதன் காரணமாக, பல தெசலோனிக்கேயர்கள் வேலை செய்வதையே நிறுத்தி விட்டனர், கர்த்தருடைய வருகைக்காகக் காத்திருப்பதாகச் சொல்லிக்கொண்டு சும்மாவே உட்கார்ந்திருந்தனர் எனவே, தெசலோனிக்கேயர்களின் இந்தத் தவறான கருத்தையும், நடத்தையையும் சரி செய்வதற்காக பவுல் இந்த இரண்டாம் நிருபத்தை எழுதினார். பவுல் எழுதியதன் சாரம் இது தான்: "எழுந்திருங்கள்; வேலைக்குப் போங்கள்; சோம்பலாய் இராதீர்கள்!"*

**சிறு தலைப்புகள்:**

### *அ. ஸ்தோத்திரமும் ஜெபமும் (1:1-12).*

1. *உபத்திரவங்களில் பொறுமையாய் இருந்ததற்காக ஸ்தோத்திரம் (1:1-10).*
2. *தெசலோனிக்கேயர்களுக்காக ஜெபம் (1:11-12).*

**ஆ. கட்டளைகளும் புத்திமதிகளும் (2:1-3:18).**

*1. கர்த்தருடைய வருகை பற்றி சில கட்டளைகள் (2:1-17).*

*2. ஜெபிக்கவும், உழைக்கவும் புத்திமதிகள் (3:1-18).*

# 15. 1 தீமோத்தேயு

**முன்னுரை:**

*தீமோத்தேயு, லீஸ்திரா படடணத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன். இது இன்றைய துருக்கியின் தென்பகுதியில் உள்ளது. தீமோத்தேயு, பவுலுக்கு மிக அன்பான கூட்டாளியும், பிரியமான உடன் ஊழியனுமாவான் (அப்போஸ்தலர் 16:1-4). தீமோத்தேயு, பவுலின் மிக நெருக்கமான சீஷன்; பவுல் அவனை விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயு என்று அழைத்தார் (1 தீமோத்தேயு 1:2).*

*அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் விவரிக்கப் பட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் நடந்து முடிந்த பிறகு, பவுல் தீமோத்தேயுவுக்கு இந்த இரண்டு நிருபங்களையும் எழுதியதாக பெரும்பாலான வேத பண்டிதர்கள் கருதுகின்றனர். இரண்டு ஆண்டுகள் வீட்டிலேயே சிறை வைக்கப் பட்டிருந்த பவுல் (அப்போஸ்தலர் 28:16, 30), பின்னர் விடுவிக்கப் பட்டதாகவும், திரும்பவும் ஓரிரண்டு ஆண்டுகளைப் பயணம் செய்வதிலும், பிரசங்கிப்பதிலும் செலவிட்டதாகவும் இந்த அறிஞர்களில் சிலர் நம்புகின்றனர். அந்தக் காலகட்டத்தில், அவர் இந்தக் கடிதங்களைத் தீமோத்தேயுவுக்கு எழுதியிருக்கக் கூடும்.*

*பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய போது, முதிர்வயதடைந்து விட்டிருந்தார். அவர் தமது அப்போஸ்தல ஊழியத்தை, தீமோத்தேயு மற்றும் தீத்து போன்ற இளம் தலைவர்களுக்குக் கடத்தி விட்டுச் செல்ல வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். இந்தக் கடிதத்தை எழுதுமுன்னரே, அவர் தீமோத்தேயுவை எபேசு திருச்சபைக்குத் தலைவராக நியமித்து விட்டார் (1*

*தீமோத்தேயு 1:3). தீமோத்தேயுவை ஊக்குவிப்பதற்காகவும், அவன் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைக் குறித்து அறிவுரைகள் வழங்குவதற்காகவும் பவுல் இந்தக் கடிதத்தை எழுதினார். ஆகவே தான், தீமோத்தேயுவின் காலம் முதல் இன்று வரை, இந்த நிருபமானது, திருச்சபைத் தலைவர்களுக்கு மிக முக்கியமானதாகவும், அதிகப் பயனுள்ளதாகவும் இருந்து வருகிறது - சபைத் தலைவர்களுக்கு மட்டுமல்ல - அவர்களின் தலைமையின் கீழ் உள்ளவர்களுக்கும் தான். பவுலின் வாழ்க்கை குறித்து மேலும் அறிய, ரோமர்: முன்னுரை பார்க்க.*

***சிறு தலைப்புகள்:***

***அ. எபேசுவில் தீமோத்தேயுவின் பணி (1:1-20).***

1. *கள்ளப் போதகர்களுக்கு எதிராக எச்சரிக்கை (1:1-11).*
2. *பவுல் தேவனுக்கு நன்றி செலுத்துதல் (1:12-20).*

***ஆ. அறிவுறுத்தல்களும், அறிவுரைகளும் (2:1-5:25).***

1. *திருச்சபைக்கு அறிவுறுத்தல்கள் (2:1-3:16).*
2. *தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தல்கள் (4:1-16).*
3. *தனித்தனி பிரிவினர் பற்றி அறிவுரைகள் (5:1-25).*

***இ. இறுதி புத்திமதிகள் (6:1-21).***

1. *பல்வேறு போதனைகள் (6:1-10).*
2. *தீமோத்தேயுவுக்குப் பவுலின் கட்டளை (6:11-21).*

# 16. 2 தீமோத்தேயு

**முன்னுரை:**

*பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தை ரோமாபுரியில் தமது இரண்டாம் மற்றும் இறுதி சிறைவாசத்தின் போது எழுதியதாக அநேக வேத அறிஞர்கள் நம்புகின்றனர். அந்தச் சமயத்தில், தீமோத்தேயு எபேசு திருச்சபையின் மூத்த தலைவனாக இருந்தான் (1 தீமோத்தேயு: முன்னுரை பார்க்க).*

*பவுல் ரோமாபுரியில் தமது முதல் சிறைவாசத்திற்குப் பிறகு விடுதலை பெற்றதாக இந்த அறிஞர்கள் நம்புகின்றனர் (அப்போஸ்தலர் 28:16, 30). ஆனால், சில காலத்திற்குப் பிறகு அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டு, நாளடைவில் ரோமர்களால் கொல்லப்பட்டார்." இந்த நிருபத்தை எழுதிய போது, பவுல் தமது மரணம் சமீபித்து விட்டதை அறிந்திருந்தார் (2 தீமோத்தேயு 4:6). பவுலின் புதிய ஏற்பாட்டுக் கடிதங்களில் கடைசியானது இதுவே.*

**சிறு தலைப்புகள்:**

### அ. முன்னுரை (1:1-18)

1. *வாழ்த்துதல்களும், ஸ்தோத்திரங்களும் (1:1-7).*
2. *உண்மையுள்ளவனாய் இருக்க ஊக்குவித்தல் (1:8-18).*

### ஆ. கிறிஸ்தவத் தலைவன் (2:1-3:17)

1. *கிறிஸ்துவின் போர்ச்சேவகன் (2:1-13).*
2. *தேவனுடைய உத்தம ஊழியக்காரன் (2:14-26).*
3. *சுவிசேஷத்தின் பாதுகாவலன் (3:1-17).*

## இ. முடிவுரை (4:1-22)

1. தீமோத்தேயுவுக்குப் பவுலின் கடைசிக் கட்டளை (4:1-8).
2. தனிப்பட்ட குறிப்புகள் (4:9-22).

# 17. தீத்து

**முன்னுரை:**

*தீமோத்தேயுவைப் போலவே தீத்துவும் பவுலின் இளம் உடன் ஊழியன் ஆவான், இவனையும் பவுல் ஆவிக்குரிய விதத்தில், உத்தம குமாரன் (தீத்து 1:4) என்றே அழைத்தார். அவர் தீத்துவை எனக்குக் கூட்டாளியும், என் உடன் வேலையாளுமானவன் (2 கொரிந்தியர் 8:23) என்றும் அழைத்தார். கொரிந்தியர்கள், எருசலேமில் உள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்காகச் செய்த காணிக்கை சேகரிக்கும் பணியை முடித்து, அதை எடுத்து வருவதற்காகப் பவுல் தீத்துவை கொரிந்து பட்டணத்துக்கு அனுப்பியிருந்தார் (2 கொரிந்தியர் 8:16-17; 9:5; 12:18). அதன்பிறகு, கிரேத்தா தீவில் பல்வேறு ஊழிய காரியங்களைப் பார்க்கவும், அங்கே தாங்கள் சமீபத்தில் தான் நிறுவியிருந்த திருச்சபைக்கு மூப்பர்களை ஏற்படுத்தவும் சொல்லி, பவுல் தீத்துவை அங்கே விட்டு வந்திருந்தார் (தீத்து 1:5).*

*இந்தக் கடிதமானது, தீத்து இன்னும் கிரேத்தா தீவில் இருந்த பொழுது அவனுக்கு எழுதப்பட்டதாகும். 2 தீமோத்தேயு 4:10 இன்படி, தீத்து கிரேத்தா தீவில் பணியை நிறைவேற்றி முடித்ததும், பவுல் அவனை தல்மாத்தியா நாட்டுக்கு (இன்றைய யூகோஸ்லேவியா) அனுப்பினார். புதிய ஏற்பாட்டில், தல்மாத்தியா நாடு இல்லிரிக்கம் என்றும் அழைக்கப் படுகின்றது (ரோமர் 15:19).*

**சிறு தலைப்புகள்:**

***அ. மூப்பர்கள் மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகளைக் குறித்து (1:1-16).***

1. மூப்பர்களை ஏற்படுத்துதல் (1:1-9).
2. கள்ளப் போதகர்களின் வாயை அடக்குதல் (1:10-16).

### ஆ. மூப்பர்களின் பணி (2:1-3:15).

1. ஆரோக்கியமான உபதேசத்தைப் பேசுதல் (2:1-15).
2. ஆரோக்கியமான உபதேசத்தை வாழ்ந்து காட்டுதல் (3:1-15).

# 18. பிலேமோன்

**முன்னுரை:**

பவுல், ரோமாபுரியில் ஒரு கைதியாக இருந்த போது, கி. பி. சுமார் 60-61 ஆம் ஆண்டில், பிலேமோனுக்கு இந்த நிருபத்தை எழுதினார். கொலோசெயருக்குத் தாம் எழுதிய கடிதத்தை அனுப்பிய அதே வேளையில் தான் இந்தக் கடிதத்தையும் அனுப்பி வைத்தார் (கொலோசெயர்: முன்னுரை பார்க்க).

பிலேமோன், கொலோசே நகரில் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவன். அவனுடைய வீட்டில் ஒரு "வீட்டு சபை" (இலலத் திருச்சபை) கூடி வருவது வழக்கம் (வசனம் 2). சில காலத்திற்கு முன், பிலேமோனின் அடிமையான ஒநேசிமு, தனது எஜமானின் வீட்டிலிருந்து சில பொருட்களைத் திருடிக் கொண்டு, ஓடிப் போய் விட்டான். அவன் நாளாவட்டத்தில் ரோமாபுரிக்கு வந்து சேர்ந்தான், அங்கே பவுலைச் சந்தித்தான்; அதன் விளைவாக, ஒநேசிமு விசுவாசியானான்.

ஒநேசிமுவை அவனது எஜமானாகிய பிலேமோனிடம் தாம் ஒப்படைத்தாக வேண்டும் என்பது பவுலுக்குத் தெரியும். பவுலின் நாட்களில், அடிமை முறை ரோமப் பேரரசு நெடுகிலும் பரவியிருந்தது. ரோமர்களின் சட்டப்படி, அடிமையானவன் தனது எஜமானின் சொத்து அல்லது உடைமையாவான். ஆனால் ஒநேசிமுவை அவனது எஜமானிடம் ஒப்படைப்பது பவுலுக்கு ஒரு பெரிய பிரச்சனையை உண்டாக்கும். காரணம், சட்டப்படி, தங்கள் எஜமான்களை விட்டு ஓடிப்போன அடிமைகளுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். அப்படி ஓடிப்போன சில அடிமைகளுக்கு மரண தண்டனை கூட

விதிக்கப்பட்டது. எனவே, ஒநேசிமுவின் மேல் கருணை கூர்ந்து, அவனை மன்னிக்க வேண்டி பவுல் இந்தக் கடிதத்தை பிலேமோனுக்கு எழுதினார். ஒரு புறம், ஒநேசிமு மனந்திரும்பவும், தான் களவாடின பொருட்களை எஜமானிடம் திருப்பிக் கொடுக்கவும் வேண்டியது அவசியம். மறு புறம், பிலேமோன் ஒநேசிமுவைத் தனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து முழுமையாக மன்னிக்க வேண்டியது அவசியம். இப்பொழுது அவர்கள் இருவரும் கிறிஸ்தவ சகோதரர்கள். ரோமர்களின் சட்டப்படி, அவர்கள் இன்னும் எஜமானும் அடிமையுமாக இருந்தாலும், உண்மையில், கிறிஸ்துவுக்குள் அவர்கள் இருவரும் சமமாகி விட்டார்கள்.

அடிமை முறை என்பது உண்மையில் ஒரு தீமையான, அநீதியான முறை. இந்தக் கடிதத்தில் பவுல் அதை எப்படி மேற்கொள்கிறார் என்பதைப் பார்க்கப் போகிறோம்: ஒரு எஜமான் மற்றும் அடிமையின் நடுவே அன்பு, மனந்திரும்புதல் மற்றும் மன்னிப்பு.

பவுல் ஒநேசிமுவைத் தம்முடனே கூட ரோமாபுரியிலேயே வைத்திருந்திருக்கலாம். மற்ற அடிமைகளும் தங்கள் எஜமான்களிடமிருந்து தப்பியோடி விட அவர்களுக்கு ஆலோசனையும், ஊக்கமும் வழங்கியிருக்கலாம். ரோமர்களின் சட்டத்தை வெளிப்படையாக மீறுவதன் மூலம் அடிமை முறைக்கு எதிர்த்து நின்றிருக்கலாம். ஆனால் அது அவர் வழிமுறையல்ல. அவருடைய வழி அன்பின் வழி. சட்டங்களில் உயர்ந்தது மனிதனின் சட்டமல்ல, தேவனின் சட்டம் - கிறிஸ்துவின் சட்டம் - அதிலும் குறிப்பாக, அன்பின் சட்டம் (மாற்கு 12:30-31). உலகின் விதிகளில் எல்லாம் வலிமை மிக்கது அன்பின் விதியே. கிறிஸ்துவின்

*அன்பில் எஜமானும் அடிமையும் சமமாகிறார்கள்; அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள் (கலாத்தியர் 3:28).*

**சிறு தலைப்புகள்:**

**அ. முன்னுரை (1-7).**

1. *வாழ்த்துதல்கள் (1-3).*
2. *ஸ்தோத்திரமும் ஜெபமும் (4-7)*

**ஆ. கடிதத்தின் முக்கியப் பகுதி (8-25).**

1. *ஒநேசிமுவுக்காகப் பவுல் கெஞ்சிக் கேட்டல் (8-22).*
2. *இறுதி வாழ்த்துதல்கள் (23-25).*

# 19. எபிரெயர்

**முன்னுரை:**

*இந்த எபிரெயர் நிருபத்தை எழுதியவர் யாரென்பது தெரியவில்லை. பவுல் தாம் எழுதிய நிருபங்களின் ஆரம்பத்திலேயே தமது பெயரைத் தந்து விடுவது வழக்கம். அப்படியின்றி, இந்த எபிரெயர் நிருப ஆக்கியோன், இந்த நிருபத்தின் எந்தப் பகுதியிலும் தனது பெயரைத் தருவதில்லை. எபிரெயர் **2:3** இன் படி, இந்த நிருபத்தின் ஆக்கியோன், பின்பு அவரிடத்தில் (கிறிஸ்துவிடத்தில்) கேட்டவர்களாலே - அதாவது, அப்போஸ்தலர்களாலே தனக்கு அறிவிக்கப்பட்ட சுவிசேஷம் பற்றி எழுதுகின்றார். பவுல் இந்த நிருபத்தின் ஆக்கியோனாக இருக்க வாய்ப்பில்லை, காரணம் பவுல் இப்படிப்பட்ட ஒரு வசனத்தை எழுதியிருக்கவே மாட்டார்; அவர் சுவிசேஷ செய்தியை நேரடியாகக் கிறிஸ்துவிடமிருந்தே பெற்றிருந்தார் (அப்போஸ்தலர் **9:4-6**).*

*இந்தக் கடிதமானது கி. பி. சுமார் **60-70**க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் எழுதப் பட்டிருக்க வேண்டும். இந்தக் கடிதத்தைப் பெறுகின்றவர்களாகக் குறிப்பிடப் பட்டிருக்கும் "எபிரெயர்கள்' யார் என்பதும் தெரியவில்லை. இவர்கள் அரமேய மொழி பேசிய யூதக் கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும் என்பது பெரும்பாலான வேத பண்டிதர்களின் கருத்து. ஆனால் இவர்கள் எந்தப் பட்டணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை.*

*ஆனால் இந்தக் கடிதத்தின் ஆக்கியோன் யார், இது யாருக்கு எழுதப்பட்டது என்பதெல்லாம் தெரியவில்லை என்பதற்காக நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நமக்குத்*

தெரிந்தது ஒன்று இருக்கிறது: அதுவே எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமானது - இந்த நிருபத்தின் உண்மையான ஆக்கியோன் தேவனே, இது எழுதப்பட்டது நமக்காகவே.

ஆக்கியோன் இந்த நிருபத்தை இந்த எபிரெயர்களுக்கு யூதக் கிறிஸ்தவர்களுக்கு எழுதியதன் காரணம் என்ன? இந்தக் கிறிஸ்தவர்கள் - அவர்கள் யாராயிருந்தாலும் சரியே- சமீப காலமாக பலவித சோதனைகளுக்குள் விழ ஆரம்பித்திருந்தனர், இவ்விதமான சோதனைகளில் விழுந்து போகக்கூடாது என்று அவர்களுக்குப் புத்தி சொல்வதற்காகவே இந்த ஆக்கியோன் இந்த நிருபத்தை அவர்களுக்கு எழுதுகின்றார். என்ன சோதனைகள்? இந்த எபிரெயர்கள் அசதியாய் இருந்தனர்(எபிரெயர் 6:11). அவர்கள் இளைப்புள்ளவர்களாய், தங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போக ஆரம்பித்திருந்தனர் (எபிரெயர் 12:3) அவர்களுடைய ஆதி அன்பும், உற்சாகமும் தணிய ஆரம்பித்திருந்தன (எபிரெயர் 3:14; 10:23, 35). அவர்கள் விசுவாசத்தில் முதிர்ச்சி அடையவில்லை (எபிரெயர் 5:12-14). அவர்களில் சிலர் சபை கூடி வருவதைக் கூட நிறுத்தி விட்டிருந்தனர் (எபிரெயர் 10:25). அவர்கள் தங்கள் சொந்தக் கிறிஸ்தவத் தலைவர்களுக்கு எதிராக எழும்பத் தொடங்கியிருந்தனர் (எபிரெயர் 13:17). அவர்களில் சிலர் விசுவாசத்தை விட்டே முற்றிலுமாக வழுவிப் போகின்ற நிலையிலிருந்தனர் (எபிரெயர் 3:12; 10:26).

நாம் இந்த எபிரெயர்களின் ஆவிக்குரிய நிலைமையை எண்ணிப் பார்க்கின்ற அதே வேளையில், நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போமாக. நாமும் எந்த விதத்திலாவது அவர்களைப் போலிருக்கிறோமா? ஆம் எனில், இந்தக் கடிதம் நமக்குத் தான் எழுதப்பட்டுள்ளது ! சுருங்கக் கூறின், இந்த எபிரெயக் கிறிஸ்தவர்கள் ஒரு மிகப்

பயங்கரமான சோதனைக்குள் விழ இருந்தனர். அவர்கள் தாங்கள் புதிதாகக் கண்டுகொண்ட கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு விட்டு, மீண்டும் தங்கள் யூத மதத்திற்கே திரும்ப இருந்தனர்.

ஆக, இந்த நிருபத்தின் ஆக்கியோன் இந்த நிருபத்தை எழுதுவதில் நான்கு நோக்கங்கள் உண்டு, முதலாவது, கிறிஸ்துவினால் மட்டுமே வரக்கூடிய இரட்சிப்பு மற்றும் நித்திய ஜீவனை இந்தக் கிறிஸ்தவர்களுக்கு நினைவூட்டுவதற்காக எழுதுகின்றார். இரண்டாவது, கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதன் மூலமாகக் கிட்டக்கூடிய அளவற்ற ஆசீர்வாதங்களை அவர்களுக்கு நினைவூட்டுவதற்காக எழுதுகின்றார். மூன்றாவது, பரலோகராஜ்யத்துக்குச் செல்வதற்கு, கிறிஸ்து பாடுபட்டது போலவே, விசுவாசிகளும் பாடுகளை அனுபவிக்க எதிர்பார்க்க வேண்டும் என்பதை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக எழுதினார். நானகாவதாக, இந்த எபிரெயக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் தாங்கள் வைத்துள்ள விசுவாசத்தை விட்டு வழுவிப் போவார்களானால், தேவனுடைய பயங்கரமான நியாயத்தீர்ப்பு அவர்கள் மேல் வரும் என்று அவர்களை எச்சரிப்பதற்காக, இந்த ஆக்கியோன் இந்நிருபத்தை எழுதினார்.

**சிறு தலைப்புகள்:**

### அ. கிறிஸ்துவின் மேன்மை (1:1-7:28),

1. முகவுரை (1:1-4).
2. கிறிஸ்து தேவ தூதர்களிலும் விசேஷித்தவர் (1:5-14).
3. ஜாக்கிரதையாய்க் கவனிக்க ஒரு எச்சரிப்பு (2:1-4).
4. கிறிஸ்து பூரண மனிதர் (2:5-18).
5. கிறிஸ்து மோசேயை விடப் பெரியவர் (3:1-6).

6. கிறிஸ்து வாக்களிக்கும் இளைப்பாறுதல் (3:7-4:11).
7. கிறிஸ்து - மகா பிரதான ஆசாரியர் (4:12-5:10).
8. விசுவாசத் துரோகத்துக்கு எதிரான எச்சரிப்பு (5:11-6:20).
9. கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மெல்கிசெதேக்கின் ஆசாரியத்துவத்தை விட மேன்மையானது (7:1-28).

## ஆ. ஒரு புதிய மேலான உடன்படிக்கை (8:1-10:18)

1. புது உடன்படிக்கை (8:1-130.
2. புது பரிசுத்த ஸ்தலமும், கிறிஸ்துவின் இரத்தமும் (9:1-28).
3. ஒரே தரம் செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் பலி (10:1-18).

## இ. விசுவாச வாழ்க்கை (10:19-13:25).

1. விசுவாச வாழ்க்கையின் வருணனை (10:19-25).
2. வழுவிப் போவோரின் கதி (10:26-39).
3. விசுவாச மனிதர்கள் (11:1-40).
4. கிறிஸ்து - நமது முன்மாதிரி (12:1-3).
5. சிட்சை (12:4-13).
6. புது உடன்படிக்கையின் கீழ் கிறிஸ்தவ வாழ்வு (12:14-29).
7. அனுதின கிறிஸ்தவ ஜீவியம் (13:1-17).
8. முடிவுரை (13:18-25).

# 20. யாக்கோபு

**முன்னுரை:**

*இந்த நிருபம் இயேசுவின் இளைய சகோதரனாகிய யாக்கோபினால் எழுதப்பட்டது என்பது பெரும்பாலான வேத பண்டிதர்களின் கருத்து (கலாத்தியர் 1:19). யாக்கோபு எருசலேம் திருச்சபையின் தலைவராய் இருந்தார் (கலாத்தியர் 2:9). இந்த நிருபம் கி. பி 50க்கு முன்னர் எழுதப்பட்டதாக அறிஞர்கள் கருதுகின்றனர். அது உண்மை எனில், புதிய ஏற்பாட்டு நிருபங்களிலேயே முதலாவது எழுதப்பட்ட சில நிருபங்களில் இதுவும் ஒன்றாக இருக்க வேண்டும். இது கி. பி 62 க்குப் பின்னர் எழுதப் பட்டிருக்க முடியாது, காரணம் அந்த ஆண்டில் யாக்கோபு கொல்லப்பட்டார். யாக்கோபு இந்த நிருபத்தை, இயேசு கிறிஸ்துவின் சீஷனாக இருப்பதன் கடமைகளைக் கிறிஸ்தவர்களுக்குப் போதிப்பதற்காக எழுதினார்.*

*யாக்கோபின் நாட்களில், அநேக கிறிஸ்தவர்கள் நற்கிரியைகளைச் செய்வதையே நிறுத்தி விட்டிருந்தனர். "நாம் நற்கிரியைகளினால் இரட்சிக்கப் படுவதில்லையே, விசுவாசத்தினால் தானே இரட்சிக்கப் படுகிறோம்; பிறகு எதற்காக நற்கிரியைகள் செய்ய வேண்டும்?" என்றனர்.*

*விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிக்கப் படுகிறோம் என்று இந்த விசுவாசிகள் சொன்னது முழுக்க முழுக்க சரியே. ஆனால் அதற்காக இனி நற்கிரியைகள் செய்ய அவசியமேயில்லை என்று கூறுவது மிகவும் தவறு. இந்தத் தவறான கருத்தைக் களைவதற்காகவே யாக்கோபு இந்த நிருபத்தை எழுதினார்.*

**சிறு தலைப்புகள்:**

**அ. பரீட்சைகளும் சோதனைகளும் (1:1-18).**

1. விசுவாசத்தின் பரீட்சை (1:1-11).
2. சோதனையின் இருப்பிடம் (1:12-18).

**ஆ.பொதுவான போதனைகள் (1:19-3:18).**

1. வசனத்தைக் கடைபிடித்தல் (1:19-3:18).
2. பாரபட்சம் காண்பித்தல் குற்றம் (2:1-13).
3. விசுவாசமும் கிரியைகளும் (2:14-26).
4. நாவைக் கட்டுப்படுத்துதல் (3:1-12).
5. இரு வகையான ஞானங்கள் (3:13-18).

**இ. பல்வேறு புத்திமதிகள் (4:1-5:20).**

1. உலக மனப்பான்மை (4:1-17).
2. துன்மார்க்கரான ஐசுவரியவான்கள் (5:1-6).
3. பொறுமை (5:7-12).
4. விசுவாசமுள்ள ஜெபம் (5:13-20).

# 21. 1 பேதுரு

**முன்னுரை:**

*இந்த நிருபமானது, அப்போஸ்தலனாகிய பேதுருவினால் கி.பி. சுமார் 64 இல் எழுதப்பட்டது. இதை எழுதியபோது பேதுரு ரோமாபுரியில் இருந்ததாக பெரும்பாலான வேத பண்டிதர்கள் நம்புகின்றனர். இந்தக் கடிதம், அன்றைய ரோமப் பேரரசின் மாநிலங்களாகத் திகழ்ந்த, இன்றைய துருக்கியாக விளங்கும் நிலப்பரப்பில் அமைந்திருந்த திருச்சபைகளுக்கு எழுதப்பட்டதாகும்; இது அங்கிருந்த விசுவாசிகள் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவும், சோதனை வேளைகளில் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக நிலைநிற்கவும் அவர்களை ஊக்குவிப்பதற்காக எழுதப்பட்டது.*

*இயேசுவின் பன்னிரண்டு ஆதி சீஷர்களில் பிரதானமானவர் இந்தப் பேதுரு தான். அவருடைய வாழ்க்கை நான்கு சுவிசேஷ நூல்களிலும், அப்போஸ்தலர் நடபடிகளிலும் விவரமாக வருணிக்கப் பட்டுள்ளது.*

**சிறு தலைப்புகள்:**

**அ. இரட்சிப்பின் சிலாக்கியங்களும், பொறுப்புகளும் (1:1-2:10).**

1. தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் (1:1-12).
2. இரட்சிப்பின் வாழ்க்கை முறை (1:13-25).
3. இரட்சிப்பில் வளர்ச்சி (2:1-10).

**ஆ. கிறிஸ்தவக் கீழ்ப்படிதலும், தேவனுடைய கனமும் (2:11-2:25).**

1. கிறிஸ்தவக் கீழ்ப்படிதல் என்ற கடமை (2:11-2:25).
2. கணவர்களும், மனைவிகளும் (3:1-7).

## இ. கிறிஸ்தவர்கள் துன்பப் படுத்தப்படுதல் (3:8-5:14).

1. நீதியின் நிமித்தமாகப் பாடுபடுவதன் ஆசீர்வாதம் (3:8-22).
2. தேவனுக்காக வாழுதல் (4:1-11).
3. பாடுகளில் ஆறுதல் (4:12-19).
4. மூப்பருக்கும், இளைஞருக்கும் புத்திமதிகள் (5:1-14).

# 22. 2 பேதுரு

**முன்னுரை:**

*இயேசுவின் பன்னிரண்டு ஆதி சீஷர்களுள் ஒருவராகிய அப்போஸ்தலனாகிய பேதுரு, இந்த நிருபத்தை தனது வாழ்வின் முடிவு சமீபித்திருந்த போது, கி.பி. சுமார் 65 இல் எழுதினார். மத்திய கிழக்கு முழுவதும் கிறிஸ்தவர்கள் மத்தியில் பரவி வந்த ஒரு கள்ளப்போதனையை மறுத்துரைப்பதற்காக இதை அவர் எழுதினார். இரட்சிக்கப் படுவதற்கு கிறிஸ்துவிடமிருந்து ஒரு விசேஷித்த அறிவைப் பெற வேண்டியது அவசியம், ஆனால் அவருக்குக் கீழ்ப்படிவதோ, ஒரு பரிசுத்த வாழ்க்கை நடத்துவதோ அவசியமில்லை என்று போதித்து வந்த கள்ளப் போதகர்கள் அநேகர் இருந்தனர். இந்தக் கடிதத்தில் பேதுருவின் முக்கியப் போதனை தெய்வபயமுள்ள நடத்தை இல்லாத பட்சத்தில் கிறிஸ்துவைப் பற்றிய விசேஷித்த "அறிவு" உண்மையான அறிவேயல்ல என்பதாகும்.*

**சிறு தலைப்புகள்:**

**அ. கிறிஸ்தவ நற்குணங்கள் (1:1-21).**

1. *கிருபையில் முன்செல்ல ஒரு அறைகூவல் (1:1-15).*
2. *கிறிஸ்துவின் மகிமை (1:16-21).*

**ஆ. கள்ளப் போதகர்கள் (2:1-22).**

1. *கள்ளப்போதகர்களுக்கு எதிரான நியாயத்தீர்ப்பு (2:1-9).*
2. *கள்ளப்போதகர்களின் குணலட்சணங்கள் (2:10-22).*

## இ. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (3:1-18).

1. கிறிஸ்துவின் வருகை நிச்சயம் (3:1-10).
2. கிறிஸ்துவின் வருகை கோருகின்ற ஒழுக்கமான வாழ்க்கை (3:11-18).

# 23. 1 யோவான்

**முன்னுரை:**

இந்த நிருபம் செபெதேயுவின் மகனாகிய அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப்பட்டது. யோவான், இயேசுவின் முதல் பன்னிரு சீஷர்களுள் ஒருவர் (மாற்கு 1:19-20). யோவான் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் என்று அழைக்கப்பட்டார் (யோவான் 13:23; 21:20). காரணம், இயேசு மற்றச் சீஷர்களைக் காட்டிலும் அவரிடத்தில் அதிக அன்பாயிருந்தார். யோவான் சுவிசேஷம், புதிய ஏற்பாட்டிலுள்ள யோவானின் மூன்று நிருபங்கள், வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய அனைத்தும் இந்த அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப் பட்டவையே. யோவான், இயேசுவின் மரணத்துக்குப் பின்பும் நெடுநாள் வாழ்ந்தார். அவர் தமது இந்த முதலாம் நிருபத்தை கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியில் எழுதினார்.

ஆகவே, யோவான் மிகுந்த அதிகாரத்தோடு இந்தக் கடிதத்தை எழுதினார். அனைத்துக் கிறிஸ்தவர்களும் யோவானை அறிந்திருந்தனர். உண்மையில், அவர் இந்தக் கடிதத்தில் தன்னைத் தானே அறிமுகம் செய்யக்கூட வேண்டியிராத அளவிற்கு, அவ்வளவு நன்றாக அறியப் பட்டிருந்தார். தனது வாசகர்கள், தங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று அறிந்து கொள்ளும் படியாக, யோவான் இந்த நிருபத்தை எழுதினார் (1 யோவான் 5:13). அவர்களுடைய விசுவாசத்தை அவர் பலப்படுத்த விரும்பினார். இந்த நிருபத்தை எழுதிய போது யோவான் எங்கிருந்தார், இதை எந்தச் சபைக்கு அனுப்பினார் என்பதெல்லாம் தெரியவில்லை. ஒருவேளை இந்தக் கடிதத்தைப் பல திருச்சபைகளுக்கு அனுப்ப நினைத்திருக்கலாம். அவர் யாருக்கு இந்தக் கடிதத்தை எழுதினாரோ, அந்த விசுவாசிகள்

மத்தியில் பரவி வந்த ஒரு கள்ளப் போதனைக்கு முற்றுப்புள்ளி வைக்கவே இதை எழுதினார். இயேசு உண்மையில் ஒரு மானிட சரீரத்தில் உலகத்திற்கு வரவேயில்லை என்று சில கள்ளப் போதகர்கள் போதித்து வந்தனர். இயேசு ஒரு ஆவி மட்டுமே, அல்லது ஒருவேளை ஒரு தரிசனத்தில் தோன்றியவர் என்று இவர்கள் கூறினர். ஆனால் இயேசு முழுக்க முழுக்க ஒரு மனிதனாகவும், முழுக்க முழுக்க ஒரு தேவனாகவும் இருந்தார் என்பதை யோவான் இங்கே மிகத் திட்டவட்டமாக எடுத்துரைக்கிறார். இயேசு முழுமையான மனிதனாக இராதிருந்தால், அவருடைய மரணத்தில் அர்த்தம் இருந்திருக்காது. நமது பாவங்களுக்காக அவர் தம்மைத் தாமே பலியாக ஈந்திருக்கவும் முடியாது.

**சிறு தலைப்புகள்:**

### அ. ஒளியாயிருக்கும் தேவனோடு ஐக்கியம் (1:1-2:29).

1. ஜீவ வார்த்தை (1:1-4).
2. ஒளியில் நடத்தல் (1:5-10).
3. தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிதல் (2:1-6),
4. ஒரு புதிய கற்பனை (2:7-17).
5. அந்திக்கிறிஸ்துக்களுக்கு எதிரான எச்சரிப்பு (2:18-29)

### ஆ. நீதியாயிருக்கும் தேவனோடு ஐக்கியம் (3:1-4:6).

1. நீதியானதைச் செய்தல் (3:1-10).
2. ஒருவரிலொருவர் அன்பாயிருத்தல் ( 3:11-24).
3. பொய்யின் ஆவிகளுக்கு எதிரான எச்சரிப்பு (4:1-6).

**இ. அன்பாயிருக்கும் தேவனோடு ஐக்கியம் (4:7- 5:21).**

1. *அன்பு பற்றிய போதனைகள் (4:7-21).*
2. *குமாரனில் விசுவாசம் (5:1-12).*
3. *முடிவாகச் சில குறிப்புகள் (5: 13-21),*

# 24. 2 யோவான்

**முன்னுரை:**

*இந்தக் கடிதத்தை எழுதியவர் மூப்பர். பெரும்பாலான வேத பண்டிதர்கள் அப்போஸ்தலனாகிய யோவானே இந்த நிருபத்தை எழுதியதாக நம்புகிறார்கள். இந்த நிருபம் யோவானின் முதலாம் நிருபம் எழுதப்பட்ட அதே காலகட்டத்தில், கி.பி. முதலாம் நூற்றாண்டின் முடிவில் எழுதப்பட்டதாகும்.*

*இந்த நிருபம் தெரிந்து கொள்ளப் பட்டவளாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் எழுதப்பட்டது (வசனம் 1). இந்தப் பெண்மணி யாரென்பது தெரியவில்லை. இங்கே அம்மாள் என்பது திருச்சபையையும், அவளுடைய பிள்ளைகள் என்பது திருச்சபையிலுள்ள விசுவாசிகளையுமே குறிக்கும் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் யோவான் எழுதியதன் அர்த்தம் அது தானா என்பது சரியாகத் தெரியவில்லை.*

**சிறு தலைப்புகள்:**

***அ. முன்னுரை (1-3),***

***ஆ. அறிவுரைகள் (4-11).***

1. *ஒரு புத்திமதி (4-6).*
2. *ஒரு எச்சரிப்பு (7-11),*

***இ. முடிவுரை (12-13),***

# 25. 3 யோவான்

**முன்னுரை:**

*இந்த நிருபம், யோவானின் மற்ற இரண்டு நிருபங்களும் எழுதப்பட்ட அதே காலகட்டத்தில், அதாவது, முதலாம் நூற்றாண்டின் முடிவில் எழுதப்பட்டது. இந்த மூன்றாவது கடிதம், காயு என்ற மனிதனுக்கு எழுதப்பட்ட ஒரு தனிப்பட்ட கடிதமாகும். காயு என்பவன் யார் என்பது தெரியவில்லை.*

**சிறு தலைப்புகள்:**

***அ. தனிப்பட்ட வாழ்த்துதல்கள் (1-4).***
***ஆ. கடிதத்தின் முக்கியப் பகுதி (5-15).***

*1. உபசரிப்பது பற்றி (5-8).*
*2. பிற குறிப்புகள் (9-15).*

# 26. யூதா

**முன்னுரை:**

யூதா, இயேசுவுக்கும், யாக்கோபுக்கும் சகோதரன். இவர் மத்தேயு 13:55 மற்றும் மாற்கு 6:3 இல் குறிப்பிடப் படுகிறார். இயேசுவின் மரணத்துக்கு முன்பு வரை, அவர் தேவனுடைய குமாரன் என்பதை அவருடைய சகோதரர்கள் விசுவாசித்திருக்கவில்லை. உண்மையில் அவருக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாகத் தான் அவர்கள் நினைத்தனர் (மாற்கு 3:20-21; யோவான் 7:5). இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு தான் அவர்கள் அவரை விசுவாசிக்க ஆரம்பித்தனர்.

இந்த நிருபம் கிறிஸ்தவர்களுக்கென்று எழுதப்பட்டது, ஆனால் எந்த இடத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது என்பது தெரியவில்லை. திருச்சபையில் நுழைந்திருந்த சில கள்ளப் போதனைகளை மறுத்துரைப்பதற்காகவே, யூதா இந்த நிருபத்தை எழுதினார்.

**சிறு தலைப்புகள்:**

**அ. கள்ளப்போதகர்களுக்கு எதிரான எச்சரிப்பு (1-16).**

1. முன்னுரை (1-4).
2. கள்ளப்போதகர்கள் பற்றிய விவரங்கள் (5-13).
3. வரப்போகும் நியாயத்தீர்ப்பு (14-16).

**ஆ. விசுவாசத்தை விட்டு விடாதிருக்க அழைப்பு (17-25).**

# 27. வெளிப்படுத்தல்

**முன்னுரை:**

*இந்த வெளிப்படுத்தல் நூல், எல்லாரும் அறிந்த, செல்வாக்கு மிக்க யோவான் என்ற மூப்பரால் எழுதப்பட்டது. இந்த யோவான், இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷனாகிய யோவான் தான் என்பது பெரும்பாலான வேத அறிஞர்களின் கருத்து (யோவான் 13:23), யோவான் சுவிசேஷம் மற்றும் யோவானின் மூன்று புதிய ஏற்பாட்டு நிருபங்களையும் எழுதியதும் இவர் தான். வெளிப்படுத்தல் நூல், கி.பி. முதலாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டது.*

*இந்த நூல் முழுவதும், யோவான் தேவனிடமிருந்து பெற்ற ஒரு வெளிப்பாடு அல்லது தரிசனத்தின் துல்லியமான வருணனையே. இந்த வெளிப்படுத்தல், முக்கியமாக உலகத்தின் முடிவுக்கு முன்பான கடைசி நாட்களையும்,' கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடைபெறும் இறுதிப் போராட்டத்தையும் பற்றியது.*

*ஒரு விதத்தில் பார்த்தால், "கடைசி நாட்கள்" யோவானின் காலத்திலேயே ஆரம்பித்து விட்டன. ரோமப் பேரரசின் ஆட்சியாளர்கள், கிறிஸ்தவர்களை எப்பக்கத்திலும் இருந்து கொடூரமாக உபத்திரவப் படுத்த ஆரம்பித்தனர். இந்த உபத்திரவத்தின் மத்தியில் நிலைத்திருக்கும் படியாக, விசுவாசிகளை ஊக்குவிக்கவே இந்த வெளிப்பாடு யோவானுக்கு அருளப்பட்டது. மட்டுமல்ல, ஒவ்வொரு தலைமுறையிலும் உள்ள விசுவாசிகள் பாடுகள் மற்றும் உபத்திரவங்கள் மத்தியில் உறுதியாய் நிலைத்திருக்கத் தைரியம் பெறத்தக்கதாக, அவர்களுக்காகவும் இந்த வெளிப்பாடு அருளப்பட்டது. நமது தலைமுறையில் நாமும்*

கூட, இந்த வெளிப்படுத்தலை ஆராய்ந்து படிப்பதன் மூலம் ஊக்கம் பெறலாம்.

எனினும், யோவானின் வெளிப்படுத்தல், அவருடைய காலத்தில் நடந்த சம்பவங்களை ஆங்காங்கே குறிப்பிட்டாலும், முக்கியமாக, உலக முடிவில் இடம்பெறப்பொகும் சம்பவங்களையே பற்றிக் கூறுகிறது. யோவானின் காலத்தில் எப்படி திருச்சபை மகா உபத்திரவங்களை எதிர்கொண்டதோ, அப்படியே உலக முடிவில் நிகழப்போகும் இறுதிப் போராட்டத்திலும் திருச்சபை அதை விடக் கடுமையான மகா உபத்திரவ காலத்தை எதிர்கொள்ளும். வெளிப்படுத்தல் நூல் பல் வேறு விதங்களில் அர்த்தம் கொள்ளப்படலாம். இந்த விளக்கவுரை, வசனம் என்ன கூறுகிறதோ அதன் அடிப்படையில் மட்டும் விளக்கங்களைக் கூற முற்படுகிறது. சர்ச்சைக்குரிய வாதங்களையும், எதிர்காலம் பற்றி முன்னுரைப்பதையும் தவிர்க்க முயலுகிறது,

**சிறு தலைப்புகள்:**

**அ. மனுஷ குமாரனின் தரிசனம் (1:1-3:22).**

1. முன்னுரை (1:1-8).
2. குத்துவிளக்குகள் மத்தியில் மனுஷகுமாரன் (1:9-20)
3. ஏழு திருச்சபைகளுக்குக் கடிதங்கள் (2:1-3:22).

**ஆ. புஸ்தகம், எக்காளங்கள், அடையாளங்கள் மற்றும் கலசங்கள் பற்றிய தரிசனம் (4:1-19:10).**

1. ஏழு முத்திரைகள் இட்ட புஸ்தகம் (4:1-7:17).
2. ஏழு எக்காளங்கள் (8:1-11:19).
3. ஏழு அடையாளங்கள் (12:1-14:20).

4. ஏழு கலசங்கள் (15:1-19:10).

**இ. கிறிஸ்துவின் வருகை பற்றிய தரிசனம் (19:11-20:15).**

1. குதிரையின் மேல் ஏறியிருக்கிறவரும் மிருகமும் (19:11-21)
2. சாத்தான் கட்டப்படுவதும் ஆயிரம் வருஷமும் (20:1-6).
3. சாத்தான் விடுவிக்கப் படுவதும், அவனது இறுதி முடிவும் (20:7-10).
4. உயிர்த்தெழுதலும் கடைசி நியாயத்தீர்ப்பும் (20:11-15).

**ஈ. புதிய வானம் மற்றும் புதிய பூமி பற்றிய தரிசனம் (21:1-22:21).**

1. புதிய எருசலேம் (21:1-27).
2. ஜீவநதி (22:1-6).
3. முடிவுரை (22: 7-21).

# புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் அறிமுகம்

# 1. Abraham - ஆபிரகாம்

ஆபிரகாம் முதல் யூதன் (சொல்வரிசை:யூதன் பார்க்க). கிறிஸ்துவுக்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன், தற்கால ஈராக்கில் உள்ள ஊர் என்ற இடத்தில் பிறந்தவன். தேவன் ஆபிரகாமை வேறொரு நாட்டிற்குப் போகச் சொன்னார் (ஆதியாகமம் 12:1), அந்த நாட்டை ஆபிரகாமின் சந்ததிக்குச் சொந்தமாகக் கொடுக்க வாக்களித்தார் (ஆதியாகமம் 12:7). அதுதான் இஸ்ரேல் நாடு. தேவன் ஆபிரகாமின் சந்ததியை ஒரு பெரிய ஜாதியாக்கப் போவதாகவும், அதன் மூலம் உலகம் அனைத்தையும் ஆசீர்வதிக்கப் போவதாகவும் சொன்னார் (ஆதியாகமம் 12:2-3). அந்த நாடு தான் யூத நாடு. அந்த நாட்டிலிருந்து வந்த பெரிய ஆசீர்வாதம் உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவே, இவர் ஆபிரகாமின் வம்சத்தில் உதித்தவர் (மத்தேயு 1:1).

ஆபிரகாம் விசுவாசத்தில் வல்லவன் (கலாத்தியர் 3:6; எபிரெயர் 11:8-12 மற்றும் குறிப்புரைகள் பார்க்க). சரீரத்தின்படி ஆபிரகாமின் வழி வந்தவர்கள் என்பதில் யூதர்கள் மிகுந்த பெருமை கொண்டனர். எனினும் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் அனைவருமே விசுவாசத்தின் மூலமாக ஆபிரகாமின் 3:7-9 மற்றும் குறிப்புரை பார்க்க). மெய்யான ஆவிக்குரிய சந்ததியார் ஆவர் (கலாத்தியர்

ஆபிரகாமின் வாழ்க்கைச் சரிதையை ஆதியாகமம் 11-25 அதிகாரங்களில் காணலாம்.

## 2. Adoption - புத்திர சுவிகாரம்

கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமாக நாம் தேவனுடைய தத்துப்பிள்ளை ஆகின்றோம். இது கிறிஸ்துவில் இரட்சிப்பின் ஒரு அம்சம் (சொல் வரிசை : இரட்சிப்பு பார்க்க).

முதலில் நாம் எல்லாருமே பாவத்துக்கும் சாத்தானுக்கும் (சொல் வரிசை : சாத்தான் பார்க்க) அடிமைகளாய் இருந்தோம். நாம் தேவனுடைய குடும்பத்தினராய் இருக்கவில்லை. சகல மனிதர்களையும் படைத்தவர் தேவனே, ஆனால் சகல மனிதர்களுக்கும் தகப்பன் தேவன் அல்லர். இயேசுவில் விசுவாசம் வைப்போருக்கு மட்டுமே அவர் தகப்பன். நாம் விசுவாசத்தினாலே கிறிஸ்துவின் நீதியை ஏற்றுக் கொள்ளும் போது மாத்திரமே தேவன் நம்மைத் தமது குடும்பத்தில் சேர்த்துக் கொள்கிறார்.

எந்தத் தத்துப்பிள்ளையும், தன்னைத் தத்தெடுத்துக் கொண்டவருடைய சகல சொத்து சுகங்களுக்கும் வாரிசுரிமை பெறுவான். அவன் ஒருவேளை மாம்சத்தின் படி, இயற்கையாக அவருக்குப் பிறந்த மகனாயிரா விட்டாலும், சட்டப்படி அவன் மகனாகவே கருதப்படுவான், ஒரு மகனுக்குரிய அனைத்து சிலாக்கியங்களையும் உரிமைகளையும் அடைவான். அது போலவே, ஒரு காலத்தில் சுபாவத்தின்படி பாவிகளாய் இருந்த நாம் இப்பொழுது கிறிஸ்துவின் மூலமாக தேவனுக்கு மெய்யான ஆவிக்குரிய குமாரரும் குமாரத்திகளும் ஆகிறோம். பரலோகத்திலே நமக்குரிய வாரிசுரிமையைப் பூரணமாய் பெற்று அனுபவிப்போம். (ரோமர் 8:15- 17; கலாத்தியர் 4:3-7; எபேசியர் 1:4-5 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).

*தேவனுடைய தத்துப்பிள்ளையாவது, நமது இரட்சிப்பின் அரும்பெரும் பாக்கியங்களில் ஒன்று. இதன் பொருள் தேவனுடைய சுபாவம் பரிசுத்த ஆவியானவர் மூலமாக நமக்குள்ளே வருகிறது என்பதாகும். அதாவது, ஒரு பிள்ளை தனது பூலோகத் தகப்பனுடன் இருக்கும் அளவிற்கு நாம் தேவனுடன் அந்நியோந்நியமாக இருக்கிறோம். அதோடு, நாம் தேவனுடைய பிள்ளைகளாக நடந்து கொள்ள வேண்டும் என்பதுமாகும். தேவனுடைய பிள்ளையாய் இருப்பது என்பது கூட மகத்தான சிலாக்கியமும் இன்பமும் ஆகும்; அது ஒரு மாபெரும் பொறுப்பும்*

## 3. *Angel* - தூதன்

*ஒரு தூதன் என்பவன் பரலோக அல்லது ஆவி தூதுவன். தூதர்கள் என்பவர்கள் தேவனால் படைக்கப் பட்ட ஆவிகள் (சங்கீதம் 148:2-5; கொலோசெயர் 1:16; எபிரெயர் 1:14). அவர்கள் மனிதர்களை விட மேலானவர்கள் (எபிரெயர் 2:6-7) மனிதர்களுக்கு முன்னரே படைக்கப்பட்டவர்கள் (யோபு 38:7). தூதர்களுக்கு மனிதர்களுக்கு இருப்பதைப் போன்ற சரீரங்கள் கிடையாது, எனினும் மனிதக் கண்களுக்குப் புலப்படும் வண்ணமாக மானிட உருவில் காட்சியளிக்கக் கூடியவர்கள் (லூக்கா 1:11, 26-27; அப்போஸ்தலர் 12:6-7). தூதர்கள் மணம் புரிவதோ, மரணம் அடைவதோ இல்லை.*

*எல்லாத் தூதர்களும் பரிசுத்தர்களாகவே படைக்கப்பட்டனர். ஆனால் சிலர் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணி, தங்கள் பரிசுத்த நிலைமையிலிருந்து விழுந்தனர். இந்த விழுந்து போன தூதர்கள் பிசாசுகள்*

*அல்லது அசுத்த ஆவிகளாக மாறினர் (சொல் வரிசை: பிசாசு பார்க்க). பிசாசுகளின் தலைவன் சாத்தான் (சொல் வரிசை: சாத்தான் பார்க்க). தேவன் தூதர்கள் நிறைவேற்றும் படியாக பல்வேறு வகையான பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறார். சில தூதர்கள் தேவனுடைய சமூகத்தில் நின்று அவரை வணங்குகின்றனர் (எபிரெயர் 1:6 வெளிப்படுத்தல் 5:11). மற்ற தூதர்கள் தேவ மக்களுக்கு உதவி செய்து, அவர்களைப் பாதுகாக்கின்றனர் (ஆதியாகமம் 19:11; சங்கீதம் 91:11; தானியேல் 3:28; 6:22; அப்போஸ்தலர் 5:19; 12:6-7). கிறிஸ்து வனாந்தரத்திலே சோதிக்கப் பட்ட பின்பு தூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தனர் (மத்தேயு 4:11). கெத்செமனே தோட்டத்தில் ஒரு தூதன் வந்து அவரை பலப்படுத்தினான் (லூக்கா 22:43). ஒரு தூதன் அவரது கல்லறையை அடைத்திருந்த கல்லைப் புரட்டித் தள்ளினான் (மத்தேயு 28:2-7).*

*ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசிக்கும் ஒரு சிறப்பான தேவ தூதன் உண்டு என்றும் அவன் தேவ சமூகத்தில் நின்று அந்த விசுவாசியின் மேல் தன் கண்ணைப் பதித்துப் பாதுகாக்கிறான் என்றும் அநேகக் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர் (மத்தேயு 18:10).*

## 4. *Apostle* -அப்போஸ்தலன்

*ஓர் அப்போஸ்தலன் என்பவன் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், கிறிஸ்துவின் திருச்சபையை நாட்டவும் தக்கதாக பரிசுத்த ஆவியானவரால் நியமிக்கப்பட்ட, அனுப்பப்பட்ட, ஏவியெழுப்பப்பட்ட ஒரு நபர்.*

*ஆரம்பத்தில் இயேசுவின் பன்னிரு சீஷர்கள் மட்டுமே அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்டனர். பின்னர் பவுல் மற்றும் யாக்கோபு ( 1 கொரிந்தியர் 15:7),*

பர்னபா (அப்போஸ்தலர் 14:3-4), சீலா மற்றும் தீமோத்தேயு (1 தெசலோனிக்கேயர் 2:6-7) மற்றும் அன்றோனீக்கு, யூனியா (ரோமர் 16:7) ஆகியோரும் அப்போஸ்தலர் எனப் பெயர் பெற்றனர். அப்போஸ்தலர்களின் முக்கியப் பணி கிறிஸ்துவின் போதனைகளை மற்றவர்களுக்கு உபதேசித்து ஒப்புவிப்பதும், அவருடைய சபையை நிலை நாட்டுவதுமே. எபேசியர் 2:20 இல், அப்போஸ்தலர்கள் சபையின் அஸ்திபாரம் என்று கூறப்படுகின்றனர்.

## 5. *Atonement* - பாவ நிவிர்த்தி

பாவ நிவிர்த்தி என்பது பாவத்துக்கு எதிரான தேவ கோபாக்கினைக்குத் தப்பிக் கொள்வதற்காகவோ அல்லது பாவத்திற்கான தண்டனையைத் தவிர்ப்பதற்காகவோ செய்யப்படும் ஒரு சிறப்பான செயலாகும். வேதத்தில் பொதுவாக இது பாவ நிவாரணபலி என்று அழைக்கப்படும் ஏதாவது ஒரு இரத்த பலி செலுத்துவதாய் அமையும். எல்லா மனிதரும் பாவம் செய்தவர்கள், தேவனுடைய நியாயத் தீர்ப்புக்கும் தண்டனைக்கும் தகுதியானவர்கள் (எண்ணாகமம் 14:18; சங்கீதம் 7:11; ரோமர் 1:18; 3:10 மற்றும் குறிப்புரைகள் பார்க்க). ஆனால் தேவன் தமது இரக்கத்திலே மனிதர்கள் அந்தத் தண்டனைக்குத் தப்பும் படியான வழிவகையையும் ஏற்படுத்தி வைத்திருக்கிறார். பழைய ஏற்பாட்டில், தேவ கோபாக்கினைக்குத் தப்பிப் பிழைக்கும்படியாக யூதர்கள் மிருகங்களைப் பலியிட்டனர்.

மனிதனுக்குப் பதிலாக அந்த மிருகம் தேவ கோபத்துக்குப் பலியானது (லேவியராகமம் 4:27-31; 16:20-22). இந்த விதமான பலிகளோடு கூட, தேவன் ஒவ்வோராண்டும் ஒரு நாளைக் குறித்து, அதைப்

*"பாவநிவிர்த்தி நாளாக" ஏற்படுத்தி வைத்தார். அன்றைய தினத்தில் யூத பிரதான ஆசாரியன் மக்கள் எல்லாருடைய பாவங்களுக்காவும் பாவ நிவாரணம் செய்ய ஒரு விசேஷித்த பலியைச் செலுத்துவான் (லேவியராகமம் 16:1-34).*

*ஆனால், இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்குள் வந்த பிறகு, பாவத்துக்காகச் செலுத்தப்பட்ட இந்த பழைய ஏற்பாட்டுப் பலிகள் எல்லாம் அவசியமற்றவையாகி விட்டன. ஏனெனில் தேவனுடைய சொந்தக் குமாரனாகிய இயேசு தாமே நமது பாவங்களுக்காகப் பலியிடப் பட்டு விட்டார். அவரே நமது கிருபாதார பலி, அதாவது பாவ நிவாரண பலி ஆவார் (ரோமர் 3:23- 25; 1 யோவான் 2:2; 4:10 மற்றும் குறிப்புரைகள் பார்க்க). அவரது பலி ஒரேயொரு தரம், என்றென்றைக்குமாகச் செலுத்தப்பட்டது. நாம் இயேசுவிலும் அவரது பலியிலும் (அவரது சிலுவை மரணம்), நமது விசுவாசத்தை வைக்கும்பொழுது பாவத்துக்காக வேறெந்தப் பலியும் செலுத்த அவசியமில்லை (எபிரெயர் 9:26,28; 10:10,14 மற்றும் குறிப்புரைகள்). கிறிஸ்து நமது தண்டனையை ஏற்றுக் கொண்டதால், நமது பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டாயிற்று.*

*நமக்கு எதிரான தேவ கோபாக்கினையை நீக்கிப் போடும் நமது பாவ நிவாரண பலி அவரே. தேவ கோபாக்கினையை நீக்கவும் பாவ மன்னிப்பை அடையவும் ஒரு ஜீவனுள்ள பலி அவசியம். இரத்தம் சிந்தப்பட வேண்டும்..... இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது (எபிரெயர் 9:22). அந்த ஜீவபலி கிறிஸ்துவே. அவர் சிலுவையின் மீது தம் இரத்தத்தைச் சிந்தினார் (சொல் வரிசை: சிலுவை பார்க்க). அவரது கைகளிலும் கால்களிலும் ஆணிகள் கடாவப் பட்டன. அவரது விலாவில் ஈட்டியால் குத்தப்பட்டது, அதிலிருந்து குருதி புரண்டோடிற்று (யோவான் 19:34; 20:24-27).*

**தாமஸ் ஹேல்**

நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம் என்று பவுல் எழுதுகிறார் (ரோமர் 5:9) அதாவது, நாம் இயேசுவின் மரணத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டுள்ளோம் (ரோமர் 5:10). நம்மை இரட்சிப்பது இயேசுவின் இரத்தம் மட்டுமல்ல; அவரின் மரணமும் தான். பாவத்தின் தண்டனை மரணம் (ரோமர் 6:23). நாம் பிழைப்பதற்காக இயேசு மரிக்க வேண்டியதாயிற்று.

## 6. Baptism - ஞானஸ்நானம்

பழைய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் என்பது கழுவுதல் அல்லது தோய்த்தல் என்று பொருள்படும் (யாத்திராகமம் 30:17-21; லேவியராகமம் 11:25). யோவான் ஸ்நானன், மக்கள் இயேசுவைச் சந்திக்க ஆயத்தப்படும்படியாக மனந்திரும்புதலின் ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தான் (மாற்கு 1:4 மற்றும் குறிப்புரை பார்க்க). இயேசு விசுவாசிகளுக்குப் பரிசுத்த ஆவியானவராலும் அக்கினியாலும் ஞானஸ்நானம் கொடுத்தார் (மத்தேயு 3:11; மாற்கு 1:8 மற்றும் குறிப்புரை பார்க்க).

புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் என்பது பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் தண்ணீரால் (தெளித்தோ, ஊற்றியோ, மூழ்கச்செய்தோ) கொடுக்கப் படுவதாகும். ஞானஸ்நானமானது ஒரு விசுவாசியின் மனந்திரும்புதலுக்கும் அவனது பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்கும், அவன் பாவத்துக்கு நீங்கலாகச் சுத்திகரிக்கப் பட்டதற்கும் ஓர் அடையாளமாகும் (அப்போஸ்தலர் 2:38). ஞானஸ்நானம், ஒரு விசுவாசி

கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டதற்கும் அடையாளம் (கலாத்தியர் 3:26-27). ஒரு விசுவாசி ஞானஸ்நானம் பெறும் போது கிறிஸ்துவின் மரணத்தில் பங்கடைகிறான். அவன் பாவத்துக்கும் தனது பழைய பாவ சுபாவத்துக்கும் மரிக்கிறான். அதே வேளையில், விசுவாசி கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிலும் பங்கடைகிறான்.

விசுவாசத்தினாலே புதிதான ஆவிக்குரிய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறான் (ரோமர் 6:3-8 மற்றும் குறிப்புரை பார்க்க). இறுதியாக, ஞானஸ்நானமானது நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்களானோம் என்பதன் அடையாளமும் ஆகும் ( 1 கொரிந்தியர் 12:13 மற்றும் குறிப்புரை பார்க்க). சுருங்கச் சொன்னால், ஞானஸ்நானம் நாம் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டதற்கு அடையாளம் (சொல் வரிசை : இரட்சிப்பு பார்க்க). ஞானஸ்நானத்தின் இந்த ஆசீர்வாதங்களை எல்லாம் நாம் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினாலே பெற்றுக் கொள்கிறோம்.

எனினும், அநேகக் கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானமானது இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை எல்லாம் பெற்றுக் கொண்டதற்கு வெறும் அடையாளம் மட்டுமல்ல, விசுவாசிகள் இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகையும் அதுவே தான் என்பதாக நம்புகின்றனர். ஞானஸ்நானம் என்பது தேவன் நமது பழைய பாவ சுபாவத்தைச் சாகடித்து, புதிய ஆவிக்குரிய ஜீவனை எழுப்பித் தருவதற்கான வழிவகை என்பது அவர்களது கருத்து. என்றாலும், ஞானஸ்நானம் என்ற சடங்கில் எதுவுமேயில்லை; ஞானஸ்நானத்தினால் வரும் ஆசீவாதங்களைப் பெற்றுக் கொள்வதற்குக் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது அவசியம் என்பதை எல்லாக் கிறிஸ்தவர்களுமே ஒத்துக் கொள்கின்றனர். இந்த

விஷயத்தைப் பற்றி மேலும் அறிய பொதுவான தலைப்பு: தண்ணீர் ஞானஸ்நானம் - பார்க்க.

இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டிய அவசியமில்லை (லூக்கா23:39- 43). இரட்சிப்பு விசுவாசத்தினாலே மாத்திரம் வருவது. ஆனால் ஒருவன் ஞானஸ்நானம் பெற மறுப்பான் என்றால் அது அவனது விசுவாசம் உண்மையானது அல்ல என்பதையே காட்டுகிறது. புதிய ஏற்பாடு, விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கட்டளையிடுகிறது. மறுப்போமானால், நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாதவர்கள் ஆகிறோம். தெரிந்தே, வேண்டுமென்றே கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பவர்கள் மெய்யான விசுவாசம் இல்லாதவர்கள். ஆகவே, எல்லாக் கிறிஸ்தவர்களும் தங்களுக்குக் கிடைக்கும், பொருத்தமான ஏற்றதொரு சந்தர்ப்பத்திலேயே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்ற இன்னுமொரு விசேஷித்த விதமான ஞானஸ்நானம் உண்டு. அதைப் பற்றி மேலும் அறிய பொதுவான தலைப்பு : பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் - பார்க்க.

## 7. Church - திருச்சபை

எளிய வார்த்தைகளில் சொன்னால் திருச்சபை என்பது கிறிஸ்துவில், ஒன்றாகக் கூட்டி இணைக்கப்பட்டுள்ள விசுவாசிகள்.

திருச்சபை என்றதும் இரண்டு விதங்களில் யோசிக்கலாம்: ஒன்று, உள்ளூர்த் திருச்சபை - அதாவது ஒரு

குறிப்பிட்ட இடத்தில் உள்ள விசுவாசிகளின் கூட்டம்; இரண்டாவது உலகளாவிய திருச்சபை - அதாவது, உலகம் எங்கிலும் உள்ள விசுவாசிகளின் ஆவிக்குரிய ஐக்கியம். புதிய ஏற்பாட்டில், சபை என்ற பதம் இந்த இரண்டு அர்த்தங்களிலுமே பயன்படுத்தப் பட்டுள்ளது; அந்தந்த வசனத்தின் பின்னணிக்கேற்ப பொருள் கொள்ள வேண்டும்.

உள்ளூர்த் திருச்சபை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில், உலகளாவிய சபையின் கண்ணுக்குப் புலனாகும் அவதாரம் எனலாம். உள்ளூர்த் திருச்சபையே அச்சபையின் அங்கங்களாய் இருக்கும் விசுவாசிகள் மேல் முடிவான அதிகாரம் படைத்தது என்பது சில கிறிஸ்தவர்களின் கருத்து. இக்கருத்துப் படி, உள்ளூர்ச் சபை முற்றிலும் சுயேச்சையானது, தன்னாட்சி புரிவது. எனினும் மற்றக் கிறிஸ்தவர்கள் உள்ளூர்ச் சபைகள் அன்றி பேராயர்களே முடிவான அதிகாரம் படைத்தவர்கள் என்று கருதுகின்றனர். இந்தச் சபை ஆட்சியமைப்பு முறைப்படி, ஒரு பேராயர் பல உள்ளூர்த் திருச்சபைகள் மீது அதிகாரம் உள்ளவர் (பொதுவான

தலைப்பு: திருச்சபை ஆட்சிமுறை - பார்க்க). திருச்சபையானது (உள்ளூர்ச் சபை, உலகளாவிய சபை இரண்டுமே) கிறிஸ்துவின் சரீரமாகும் (1கொரிந்தியர் 12:27-28; எபேசியர் 4:11-12). எனவே சபையின் அங்கங்கள் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்கள் ஆகின்றனர் (எபேசியர் 5:30). சபையின் தலைவர் கிறிஸ்துவே (எபேசியர் 5:23; கொலோசெயர் 1:18).

சபையானது தேவனுடைய வீட்டார் அல்லது குடும்பம் என்றும் அழைக்கப் படலாம் (எபேசியர் 2:19). அது ஒரு "ஜீவனுள்ள மாளிகை" போன்றது, விசுவாசிகள் எல்லாரும் ஒன்றாகக் கூட்டிக் கட்டப்படுகின்றனர், அதற்கு

இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாய் இருக்கிறார் (எபேசியர் 2:20-22 மற்றும் குறிப்புரை பார்க்க). பேதுரு திருச்சபையை ஜீவனுள்ள கற்களாகிய விசுவாசிகளால் கட்டப்பட்டுள்ள ஆவிக்கேற்ற மாளிகை என வருணிக்கிறார் (1 பேதுரு 2:5).

திருச்சபையின் முக்கிய நோக்கம் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக, உலகிற்கு வெளிச்சமாக இருப்பதே. கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி ஆராதிப்பதற்கும், அவர்களுக்குப் போஷிக்கவும் போதிக்கவும் சபை அவசியம்; ஆனால் அதன் முக்கிய நோக்கம் உலகைத் தொட்டு, மனிதர்களை இயேசு கிறிஸ்துவின் பக்கமாக இழுப்பதாகும். அப்படியென்றால், இதுவே திருச்சபையின் குறிக்கோள் ஆகும் (பொதுவான தலைப்பு: திருச்சபையின் நோக்கம் - பார்க்க).

கிறிஸ்துவின் திருச்சபையே உலகில் உள்ள மிக முக்கியமான காரியம், ஏனெனில் தேவன் உலகில் தமது நித்திய நோக்கங்களை நிறைவேற்றும் படியாக வாழ்கின்ற, கிரியை செய்கின்ற இடம் சபையே (எபேசியர் 3:10-12 மற்றும் குறிப்புரை பார்க்க).

## 8. Circumcision - விருத்தசேதனம்

விருத்தசேதனம் என்பது ஆண்குறியின் நுனியிலுள்ள உபரியான தோலை வெட்டியெடுப்பது. தேவன் ஆபிரகாமும் அவன் சந்ததியார் யாவரும் விருத்தசேதனம் பண்ணப் படும்படி கட்டளையிட்டார். இது, தேவன் யூத மக்களோடு செய்த உடன்படிக்கையின் அடையாளமாகும் (ஆதியாகமம் 17:9-14). யூத ஆண்கள் அனைவரும் பிறந்த எட்டாம் நாளிலே விருத்தசேதனம் செய்யப் பட வேண்டும்.

*விருத்தசேதனமானது, ஒருவன் யூதன் என்பதற்கான வெளிப்பிரகாரமான அடையாளம்.*

*எனினும், இரட்சிப்பு பெறுவதற்கும் விருத்தசேதனத்திற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது (கலாத்தியர் **5:6** மற்றும் குறிப்புரை பார்க்க). உண்மையில், வெளியாக சரீரத்தில் செய்யப்படும் விருத்தசேதனம் இருப்பதாலேயே ஒருவன் உண்மையான யூதன் என்றாகி விடாது (ரோமர் **2:28-29** மற்றும் குறிப்புரை பார்க்க). எனவே, புறஜாதிக் கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டிய அவசியமில்லை (அப்போஸ்தலர் **15:5-11**).*

## *9. Covenant* - உடன்படிக்கை

*ஒரு உடன்படிக்கை என்பது இரு தனிநபர்களுக்கோ அல்லது இரு சாராருக்கோ இடையிலான ஓர் ஒப்பந்தம் ஆகும். பழைய ஏற்பாட்டிலே தேவன் யூதர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்தார். அவர்களை ஆசீர்வதிப்பதாக வாக்களித்தார் (ஆதியாகமம் **15:18**; யாத்திராகமம் **19:5-6**; **2** சாமுவேல் **23:5**). ஆனால் யூதர்கள் தங்கள் பங்குக்கு, தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும் (சொல் வரிசை: நியாயப் பிரமாணம் பார்க்க).*

*பழைய ஏற்பாட்டில், யூதர்கள் தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்கு முழுமையாகக் கீழ்ப்படியவில்லை. அவர்கள் உடன்படிக்கையில் தங்கள் பாகத்தை நிறைவேற்றத் தவறினர். ஆகவே, தேவன் அவர்களுக்குக் கொடுத்த வாக்கை நிறுத்தி வைத்தார். மனிதர்களோடு புதிய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தினார். தமது குமாரனாகிய இயேசுவில் விசுவாசம் வைக்கும் எவருக்கும் இரட்சிப்பைத்*

தருவதாக வாக்குப் பண்ணினார். இந்தப் புதிய உடன் படிக்கை எரேமியா 31:31-34 மற்றும் எபிரெயர் 8:6-13 இல் விவரிக்கப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டில், உடன்படிக்கையை உறுதிப் படுத்தும் விதமாக இரத்தம் சிந்தப்பட்டது. ஒரு மிருகம் பலி செலுத்தப் படும், உடன்படிக்கை செய்து கொள்ளும் இரு சாராரும் அந்த மிருகத்தின் துண்டிக்கப்பட்ட உடல் பாகங்களினூடே நடந்து செல்வார்கள். அதன் அர்த்தம், "இந்த உடன்படிக்கையை மீறுபவனுக்கு, இந்த மிருகத்துக்கு நேரிட்ட இதே கதி நேரிடட்டும்' என்று சொல்வதாகும் (ஆதியாகமம் 15:17-18; எரேமியா 34:18-20). மிருகத்தின் சிந்தப்பட்ட இரத்தம் உடன்படிக்கையின் இரத்தம் என்றும் அழைக்கப்பட்டது (யாத்திராகமம் 24:5-8).

அதைப் போலவே, இயேசு சிந்திய இரத்தம் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான புது உடன்படிக்கையின் இரத்தமாயிற்று (மாற்கு 14:24; 1 கொரிந்தியர் 11:25; பொதுவான தலைப்பு: கர்த்தருடைய பந்தி - பார்க்க). நமது பாவங்களுக்கான தண்டனையைத் தமது குமாரனாகிய இயேசுவின் மேல் சுமத்த தேவன் ஒப்புக் கொண்டார். தமது குமாரனைத் தியாக பலியாக ஒப்புக் கொடுப்பதே உடன்படிக்கையில் தேவனின் பங்கு. நமது பங்கு இயேசுவில் விசுவாசம் வைத்து அவருக்குக் கீழ்ப்படிவது. நமக்கும் தேவனுக்கும் இடையிலான இந்த உடன்படிக்கை இயேசுவின் இரத்தத்தால் உறுதி பண்ணப்படுகிறது.

# 10. Cross - சிலுவை

புதிய ஏற்பாட்டில் சிலுவை என்பது ஒரு உயரமான மரக்கட்டையும், அதன் குறுக்கே ஒரு குறுக்குக் கட்டையும் உள்ள ஓர் அமைப்பைக் குறிக்கிறது. ரோமப் பேரரசின் காலத்தில், ரோமர்கள் குற்றவாளிகளைக் கொல்வதற்கு சிலுவையைப் பயன்படுத்தினர். குற்றவாளி கயிறுகளினால் கட்டடப்பட்டோ அல்லது கை கால்களில் ஆணிகளால் கடாவப் பட்டோ சிலுவையில் தொங்க விடப் படுவான். பொதுவாக ஒரு குற்றவாளி இம்முறையில் சாவதற்கு இரண்டு மூன்று நாட்கள் கூட ஆகும். அவனை விரைவாகச் சாகடிப்பதற்காக அவனது கால் எழும்புகள் முறிக்கப் படுவது வழக்கம்.

இயேசுவுக்கு ரோமர்கள் மரண தண்டனை வழங்கினர், அவரைச் சிலுவையில் அறைந்து தொங்க விட்டனர், எனவே சிலுவை என்பது எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் இயேசுவின் மரணத்தையும், மனிதனின் பாவத்துக்காகச் செலுத்தப்பட்ட தியாக பலியையும் காட்டும் அடையாளமானது. சிலுவை மீது மரித்ததனாலே, கிறிஸ்து நமது இடத்திலே நமக்குப் பதிலாக நமது பாவத்திற்கான தண்டனையைச் சுமந்தார் (மாற்கு 10:45 மற்றும் குறிப்புரை பார்க்க).

சிலுவையானது கிறிஸ்துவின் நிமித்தமாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் சகிப்பதற்கு ஆயத்தமாய் இருக்க வேண்டிய பாடுகளுக்கும் அடையாளமாகும் (மாற்கு 8:34 மற்றும் குறிப்புரை பார்க்க). அது நமது பழைய பாவ சுபாவம் மரித்து விட்டதற்கும் ஓர் அடையாளம் (ரோமர் 6:6; கலாத்தியர் 2:20; 5:24; 6:14 மற்றும் குறிப்புரைகள் பார்க்க). சிலுவை கிறிஸ்தவனின் மகிமைக்கும் அடையாளம், ஏனெனில் நாம் கிறிஸ்துவோடே கூடப்

*பாடுபடுவோமானால் அவரோடே கூட மகிமையும் அடைவோம் (ரோமர் 8:17).*

## 11. *David* - தாவீது

*யூதர்களின் தலைசிறந்த மன்னன் தாவீது. அவன் கி.மு 1040 இல் பிறந்தான், அவனது ஆட்சிக்காலம் கி.மு 1010 முதல் கி.மு 970 வரை (40 ஆண்டுகள்).*

*தாவீது எருசலேமை யூதர்களின் தலைநகரமாக ஏற்படுத்தினான். அவனது ஆட்சிக் காலத்தில் யூதர்களின் நாடான இஸ்ரேல் மிகுந்த வலிமை பெற்று விளங்கிற்று. பழைய ஏற்பாட்டில் 73 சங்கீதங்களையும் தாவீது எழுதி வைத்தான். இயேசுவே கூட தாவீதின் வம்சத்தில் தோன்றியவர் தாம்' (மத்தேயு 1:1,20; லூக்கா 1:26-27, 32-33 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).*

*தாவீதின் வாழ்க்கைச் சரிதையை 1 சாமுவேல் 16ஆம் அதிகாரம் முதல் 1 இராஜாக்கள் 2ஆம் அதிகாரம் வரை காணலாம்.*

## 12. *Demon* - பிசாசு

*வேதாகமத்திலே பிசாசுகள் என்பவை அசுத்த ஆவிகள் என்றும் அழைக்கப் படுகின்றன. இந்த ஆவிகள் மரித்தவர்களின் ஆவிகளல்ல. இவை தேவனால் படைக்கப் பட்டு, பின்னர் அவருக்கு எதிராகக் கலகம் செய்த ஆவிகள். பிசாசுகளின் தலைவன் சாத்தான் (சொல் வரிசை: சாத்தான் பார்க்க). இந்தப் பிசாசுகள் அல்லது அசுத்த ஆவிகளுக்கென சொந்தமாக சரீரம் கிடையாது. ஆகவே, அவை வேறு*

யாருடைய உடலிலாவது புகுந்து கொண்டு வாழ ஆசைப் படுகின்றன. பிசாசுகள் புத்திக் கூர்மையும் வலிமையும் படைத்தவை. அவை மனிதர்களை ஆட்டிப் படைக்கவும், அவர்களுக்குக் குருட்டுத் தனம் (மத்தேயு 12:22), செவிட்டுத் தனம் (மத்தேயு 9:32) மற்றும் பைத்தியக் காரத்தனம் (மாற்கு 5:1-5; 9:20-22) இவற்றை உண்டாக்கவும் கூடியவை.

உலகத்திலே பிசாசுகளுக்குப் பெருத்த வல்லமை உண்டு (எபேசியர் 6:11-12). ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அதைவிடப் பெரியது (1 யோவான் 4:4). கிறிஸ்தவர்கள் பிசாசுகளோடு சம்பந்தப்பட்ட எதையும், குறிப்பாக விக்கிரக ஆராதனையை விட்டு விலகியிருக்க வேண்டும். ஒரு விக்கிரகம் என்பது தன்னில் தானே ஒன்றுமில்லாதது தான், ஆனால் மக்கள் அதை வழிபடும் போது உண்மையில் ஒரு பிசாசையே வழிபடுகின்றனர் (1 கொரிந்தியர் 10:19-21 மற்றும் குறிப்புரை பார்க்க). பிசாசுகள் பற்றி மேலும் அறிய பொதுவான தலைப்பு: சரீர சுகமும் விடுதலையும் - பார்க்க.

## 13. *Discipline* - சிட்சை

சிட்சை என்பது பிற்காலத்தில் நமது முன்னேற்றத்துக்கோ மேம்பாட்டுக்கோ வழிவகுக்கக் கூடிய எந்த விதமான துன்பம் அல்லது வேதனையைக் குறிக்கும். பெற்றோர் தங்கள் பிள்ளைகள் நல்வாழ்க்கை செய்யத் தக்கதாக அவர்களைப் பயிற்றுவிக்கவும் அவர்களுக்குக் கற்பிக்கவும் சிட்சிக்கின்றனர். அதைப் போலவே, தேவனும் கிறிஸ்துவில் விசுவாசிகளானவர்களைப் பயிற்றுவித்து, சிட்சிக்கிறார். நாம் எல்லாருமே சுபாவங்களில் பெலவீனம் உள்ளவர்கள், குணத்தில் குறைவு பட்டவர்கள். இந்தப்

பெலவீனங்களையும், குறைகளையும் நீக்கி நம்மைப் பூரண சற்குணர்களாக்க தேவன் விரும்புகிறார். எனவே, நம்மைப் பரீட்சித்து அறியவும், நமது விசுவாசத்தைப் பலப்படுத்தவும்,

நமது தவறுகளைத் திருத்தவும் அவர் நமக்கு துன்பங்களை வர விடுகிறார்.

தேவன் தாமே சோதனையையோ தீமையையோ அனுப்ப மாட்டார். ஆனால் சாத்தான், பிசாசானவன் நம்மைச் சோதிக்க அனுமதிக்கிறார். கூடவே, நமது பாவங்களும் நமக்குத் துன்பங்களைக் கொண்டு வருகின்றன.

தேவனால் சிட்சிக்கப் படும் போது நாம் களிகூர வேண்டும். காரணம், அந்தச் சிட்சை நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதற்கு அத்தாட்சியாய் இருக்கிறது (எபிரெயர் 12:5-12; யாக்கோபு 1:2-4; 1 பேதுரு 1:6-7 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).

## 14. Egypt - எகிப்து

வேத புத்தகத்தில் எகிப்து என்று குறிப்பிடப் படுவது வடகிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள தற்கால எகிப்து நாட்டையே குறிக்கும். யூதர்கள் எகிப்தில் பல தலைமுறைகளாக அடிமைப்பட்டு வாழ்ந்தனர், சுமார் கி.மு. 1400 இல் மோசேயினால் விடுவிக்கப் பட்டனர்.

## 15. Eternal Life - நித்திய ஜீவன்

நித்திய ஜீவன் என்பது முடிவே இல்லாத ஆவிக்குரிய வாழ்வு. ஒருவன் இயேசுவில் விசுவாசம் வைத்து மறுபடியும்

*பிறக்கின்ற அந்த நொடியில் தானே நித்திய ஜீவன் ஆரம்பிக்கின்றது (யோவான் 3:3-5 மற்றும் குறிப்புரை பார்க்க). நித்திய வாழ்வு என்பது தேவனோடு நித்தியமாய்க் கொள்ளும் ஐக்கியம். இந்த ஐக்கியம் நாம் இங்கே பூமியில், விசுவாசத்தை கிறிஸ்துவில் வைக்கையில் ஆரம்பித்து, நமது சரீரங்கள் மரித்த பின்னரும் பரலோகில் தொடருகின்றது. ஆகவே, இயேசுவில் விசுவாசம் வைத்தோர் மரணபயம் கொள்ள அவசியமில்லை, ஏனெனில் அவர்கள் உண்மையில் மரிப்பதில்லை. அவர்களது ஆவிகள் என்றென்றுமாய் வாழும் (யோவான் 11:25-26). அது மட்டுமல்ல, விசுவாசிகள் பரலோகத்தில் ஒரு புது சரீரத்தையும் பெறுவார்கள் (சொல் வரிசை: உயிர்த்தெழுதல் பார்க்க).*

*நமது இரட்சிப்பின் முக்கிய பாகம் இந்த நித்திய ஜீவனே (சொல் வரிசை: இரட்சிப்பு பார்க்க). இரட்சிப்பின் எல்லாக் கட்டங்களும் - பாவ மன்னிப்பு, நீதிமானாக்கப் படுதல், புத்திர சுவிகாரம் ஆகிய அனைத்துமே - கிறிஸ்துவில் ஒவ்வொரு உண்மையான விசுவாசிக்கும் ஆனந்தமான, மாட்சிமையான நித்திய வாழ்விலேயே நிறைவுறும். நித்திய ஜீவன் என்பது முடிவின்றி வாழ்வது மட்டுமல்ல; அது மன மகிழ்வுடன் தேவ சமூகத்தில் என்றென்றுமாய் வாழ்வதும் கூட. இப் பூவுலக வாழ்வு பரலோகின் நித்திய வாழ்வுடன் ஒப்பிடத் தக்கதே அல்ல (ரோமர் 8:18; 2 கொரிந்தியர் 4:17).*

## *16. Evil Spirit* - அசுத்த ஆவி

*(சொல்வரிசை: Demon - பிசாசு பார்க்க).*

# 17. *Faith* - விசுவாசம்

புதிய ஏற்பாட்டில் வரும் விசுவாசம் என்ற சொல் தேவனில் வைக்கும் விசுவாசத்தை, கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தைக் குறிக்கும். விசுவாசம் என்பது, கிறிஸ்துவின் போதனைகள் சத்தியமானவை, அவரது மரணத்தால் நாம் இரட்சிக்கப் படுகிறோம் என்ற மாறாத நம்பிக்கையும் ஆகும். விசுவாசம் என்பது ஏதோ ஒரு வலுவான எண்ணம் மட்டுமல்ல, அது கிறிஸ்துவில் முழுமையான நம்பிக்கை வைப்பதும் ஆகும். அது நம்மை அவர் சார்பில் வைத்து விடுவது. உதாரணமாக, நாம் ஒரு பாலத்தண்டை வந்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அது பலமானது தான் என்று நமக்குத் தெரிந்திருக்கலாம். இருப்பினும், பாலத்தின் மீது நடந்து சென்று கடக்க அஞ்சுவோம் என்றால் நமக்கிருப்பது விசுவாசமே அல்ல. விசுவாசம் என்பது பாலத்தின் மீது சென்று அதைக் கடப்பது.

புதிய ஏற்பாட்டில் "விசுவாசம்" என்ற பதம் இயேசுவில் வைக்கப்பட்ட நம்பிக்கையின் பல்வேறு அளவுகளை, நிலைகளைக் குறிப்பதாய் உள்ளது. சிலர் இயேசுவின் குணமாக்கும் வல்லமையை விசுவாசித்தனர் (மத்தேயு 8:10). சிலர் அவர் ஒரு தீர்க்கதரிசி என்று விசுவாசித்தனர் (மாற்கு 8:27-28; யோவான் 9:17). ஆனால் மெய்யான விசுவாசம், இரட்சிப்பின் விசுவாசம் இயேசு தேவ குமாரன் என்றும் அவரே இரட்சகர் என்றும் நம்புவதாகும் (மாற்கு 8:29; யோவான் 9:35-38). புதிய ஏற்பாட்டில் இச்சொல் இக்கருத்தில் தான் பொதுவாக வருகிறது.

நாம் விசுவாசத்தினாலே இரட்சிக்கப் படுகிறோம் (எபேசியர் 2:8 மற்றும் குறிப்புரை பார்க்க). நாம்

*விசுவாசத்தினாலே அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்கிறோம்.... விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம் (எபிரெயர் 11:6).... விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே (ரோமர் 14:23).*

*விசுவாசம் என்பது நாம் செய்கின்ற ஏதோ ஒரு "கிரியை" அல்ல. மாறாக, கிறிஸ்து நமக்காகச் சிலுவை மீது செய்து முடித்த கிரியையை ஏற்றுக் கொள்வதே விசுவாசம். விசுவாசம் தேவனுடைய ஈவு (ரோமர் 12:3).*

*எனினும், நாம் விசுவாசிகளான பிறகு, நமது வாழ்க்கைகளில், நமது நடத்தையில் ஒரு மாற்றம் நிச்சயமாய்க் காணப்படும். நாம் விசுவாசிகளாகும் போது, பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்வினுள் வருகின்றார்.*

*நாம் நற்கிரியைகளைச் செய்யத் தொடங்குகிறோம் (எபேசியர் 2:10). நாம் இந்தக் கிரியைகளினாலே இரட்சிக்கப் படுவதில்லை; விசுவாசத்தினாலேயே இரட்சிக்கப் படுகிறோம். எனினும், நமது விசுவாசம் உண்மையானது என்பதற்குச் சான்று நற்கிரியைகளே. நமது விசுவாசம் தேவனை நேசிக்கவும் அவருக்குக் கீழ்ப்படியவும், அன்பின் கிரியைகளைச் செய்யவும் நம்மை நடத்தவில்லை என்றால் அப்பொழுது நமது விசுவாசம் பொய்யானது, போலியானது, செத்தது. அப்படிப்பட்ட "விசுவாசம்" நம்மை இரட்சிக்காது (மத்தேயு 7:12; கலாத்தியர் 5:6; யாக்கோபு 2:14-17 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).*

# 18. *Flesh* - மாம்சம்

*புதிய ஏற்பாட்டில் மாம்சம் என்ற சொல் இரண்டு அர்த்தங்களில் வருகிறது. ஒரு வசனத்தில் அதற்கு என்ன அர்த்தம் என்பதை அவ்வசனத்தின் பின்னணியைக் கொண்டே நிர்ணயிக்க வேண்டும். முதலாவது, மாம்சம் என்பது சரீரத்தை, உடலைக் குறிக்கும். பொதுவாக தமிழ் வேதாகமத்தில் இது சரீரம் என்றே மொழி பெயர்க்கப் பட்டுள்ளது - உதாரணமாக, ரோமர் 8:10-11; 12:1,4. இரண்டாவது, மாம்சம் என்பது பாவ சுபாவத்தைக் குறிக்கும். நமது சரீரங்களே பாவம் என்பதல்ல, எனினும் பவுல் பல சமயங்களில் நமது பாவ சுபாவத்தை ''மாம்சம்' என்றே அழைக்கிறார். உதாரணமாக, ரோமர் 7:5, 18, 25; 8:3-9, 12; 1 கொரிந்தியர் 5:5; கலாத்தியர் 5:13, 16-17, 19, 24; 6:8.*

*மாம்சம் என்ற பதத்தின் இந்த இரண்டு அர்த்தங்களுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. மாம்சம் என்பது சரீரத்தைக் குறிப்பதாக வரும் இடங்களில் அது தீமையைக் குறிப்பதில்லை. நமது சரீரங்களில் தீமையோ, பாவமோ கிடையாது. நாம் தேவனுடைய சாயலில் படைக்கப் பட்டவர்கள் (ஆதியாகமம் 1:27).*

*ஆனால் நமது பாவசுபாவமே, பாவ இச்சைகளே தீமையாகும். இந்த இச்சைகள் தான் நம்மைப் பாவம் செய்யத் தூண்டுகின்றன (யாக்கோபு 1:14-15). எனவே மாம்சம் என்ற பதம் நமது பாவ சுபாவத்தைக் குறிக்கையில் அது சரீரம் என்ற பொருளிலிருந்து வெகுவாக வேறுபடுகின்றது. நமது பாவ சுபாவம் தீமையானது; நமது சரீரங்களோ தீமையானவை அல்ல. பரிசுத்த ஆவியானவர் நமது சரீரத்தை ஆளுகையில், நாம் சரியான படி நடப்போம்.*

நமது பாவ சுபாவம் நமது சரீரத்தை ஆளும்போதோ நாம் பாவத்தில் நடப்போம் (ரோமர் 6:12-13 பார்க்க).

## 19. Gentile - புறஜாதி

வேதத்தில், யூதர்கள் அல்லாத அனைவரும் புற ஜாதிகள் என்றே அழைக்கப் படுகின்றனர். யூதர்கள் புறஜாதிகளை அற்பமாய் எண்ணினர், ஏனெனில் வேதாகமக் காலங்களில் பெரும்பாலான புறஜாதியினர் ஒன்றான மெய்த் தேவனை அறிந்திருக்கவில்லை. அவர்கள் போலிக் கடவுள்களை நம்பினர், வழிபட்டனர். யூதர்கள் புறஜாதிகளைத் தீட்டானவர்கள் எனக் கருதினர்.

இயேசு கிறிஸ்து யூதர்களை மட்டுமல்ல, புறஜாதிகளையும் கூட - முழு உலகத்தையுமே இரட்சிப்பதற்காக வந்தார். அப்போஸ்தலனாகிய பேதுரு புறஜாதியினனான கொர்நேலியுவுக்கும் அவனது குடும்பத்தினருக்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றார். கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து இரட்சிப்பைக் கண்டடைந்த முதல் புறஜாதி மக்கள் அவர்களே (அப்போஸ்தலர் 10:44-48). அப்போஸ்தலனாகிய பவுல் புறஜாதிகளுக்குச் சுவிசேஷத்தை எடுத்து செல்வதற்காக புறஜாதிகளின் அப்போஸ்தலன் என்று சிறப்பாக (அப்போஸ்தலர் 9:15; 22:21; காலத்தியர் 2:9). நியமிக்கப் பட்டார்

## 20. Gospel - சுவிசேஷம்

புதிய ஏற்பாட்டில் சுவிசேஷம் என்ற சொல் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை - அவரது வாழ்க்கை,

மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் நற்செய்தியைக் குறிக்கும். சுவிசேஷம் என்பது இயேசுவே உலக இரட்சகர், பாவிகளை இரட்சிக்கவே அவர் உலகிற்கு வந்தார் என்ற நற்செய்தியாகும். சுவிசேஷம் என்பது தேவனுடைய இராஜ்யமானது இயேசு கிறிஸ்துவில் நமக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்ற நற்செய்தி (மாற்கு 1:14-15 பார்க்க). சுவிசேஷம் என்பது, இரட்சிக்கப் படுவதற்கு ஒரு நபர் செய்ய வேண்டியதெல்லாம் இயேசுவில் விசுவாசம் வைப்பது மட்டுமே என்னும் நற்செய்தியாகும்.

## 21. *Grace*-கிருபை

கிருபை என்பது தேவன் மனிதனிடம் காட்டும் அன்பு மற்றும் இரக்கம் ஆகும். தேவன் மனிதர்களுக்கு இலவசமாகக் கிருபையை வழங்குகின்றார். மனிதர்கள் தேவனுடைய அன்பையும் இரக்கத்தையும் பெறச் சற்றும் தகுதியற்றவர்கள், காரணம் அவர்கள் பாவமுள்ளவர்கள். ஆனால் மனிதன் தேவனுடைய அன்புக்குப் பாத்திரவானாய் இல்லாவிடினும் தேவன் இன்னும் மனிதனை நேசிக்கின்றார். நாம் பாவிகளாக, தேவனுக்குச் சத்துருக்களாக இருந்த போதே, நம்மை மீட்பதற்காக அவர் தமது சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பினார் (ரோமர் 5:8).

தேவனுடைய கிருபையினாலே நாம் இரட்சிப்பை அடைகிறோம் (எபேசியர் 2:8; தீத்து 2:11). தேவனுடைய கிருபையினாலே நாம் கிறிஸ்தவ ஜீவியம் செய்கிறோம். மனிதன் பெற்றுக் கொண்ட எந்த ஆசீர்வாதமும், அது உலகப் பிரகாரமானதோ, ஆவிக்குரியதோ எதுவாயினும் தேவனுடைய கிருபையினாலே கிடைத்ததுவே. தமது கிருபையினாலே தேவன் நம்மை இரட்சிக்கும்படி தமது குமாரன் இயேசுவை அனுப்பினார். தமது கிருபையினாலே

*தேவன் நம்மைப் பரிசுத்தமாக்கத் தமது பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். கிருபையினாலே, கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளானவர்கள் தேவனோடு என்றென்றுமாய் வாழ்வார்கள்.*

## *22. Holy Spirit* - பரிசுத்த ஆவியானவர்

*பரிசுத்த ஆவியானவர் என்பவர் தேவனே. தேவன் ஆவியாய் இருக்கிறார் (யோவான் 4:24). பரிசுத்த ஆவியானவர் என்பவர் தேவனுடைய மூன்று வடிவங்களில் ஒருவர். தேவன் பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியானவராகவும் இருக்கிறார்: மூவரில் ஒன்றான தேவன்.*

*பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்குள் வாழ்கின்றார் (யோவான் 14:17; 1 கொரிந்தியர் 3:16; 6:19; எபேசியர் 2:22 மற்றும் குறிப்புரைகள் பார்க்க). பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்குப் போதிக்கின்றார் (யோவான் 14:26). அவர் கிறிஸ்துவுக்குச் சாட்சி பகருகின்றார் (யோவான் 15:26). வேத புத்தகத்தின் ஆக்கியோன்களை ஏவியெழுப்பி, வழி நடத்தினவர் அவரே (அப்போஸ்தலர் 1:16; 2 பேதுரு 1:21). பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருப்பது என்பது உண்மையில் கிறிஸ்துவைப் பெற்றிருப்பதேயாகும், ஏனெனில் நாம் இயேசுவை ஏற்றுக் கொள்கையில், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்கிறோம் (ரோமர் 8:9-12). இயேசுவும் தேவனும் ஒன்றே என்பதால் (யோவான் 10:30), பரிசுத்த ஆவியானவர் என்பவர் இயேசுவின் ஆவியானவரும் ஆவார்.*

*பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு மிகுந்த வல்லமை தருகின்றார் (அப்போஸ்தலர் 1:8; 2:1-4 மற்றும் குறிப்புரைகள்). பரிசுத்த ஆவியானவர் ஊழியத்திற்கென்று*

*சிறப்பான வரங்களும் அளிக்கிறார் ( 1 கொரிந்தியர் 12:7-11 பரிசுத்த ஆவியானவர் நாம் பரிசுத்த மற்றும் குறிப்புரை). எல்லாவற்றுக்கும் மேலாக, வாழ்க்கை நடத்த நமக்கு உதவுகின்றார், நம்மில் ஆவியின் கனிகளை உருவாக்குகின்றார் (கலாத்தியர் 5:22-23 மற்றும் குறிப்புரை பார்க்க). பரிசுத்த ஆவியானவரின் துணையின்றி நாம் ஒரு நிமிடமாகிலும் கிறிஸ்தவ வாழ்க்கை செய்ய முடியாது. பரிசுத்த ஆவியானவர் பற்றி மேலும் அறிய பொதுவான தலைப்புகள்: பரிசுத்த*

*ஆவியானவர், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் - பார்க்க.*

## 23. *In Christ* - கிறிஸ்துவுக்குள்

*"கிறிஸ்துவுக்குள்" இருப்பது என்ற தொடரை அப்போஸ்தலனாகிய பவுல் அடிக்கடி பயன் படுத்துகின்றார். "கிறிஸ்துவுக்குள்" இருப்பது என்றால் முதலாவது நாம் அவரில் விசுவாசமாய் இருப்பதாகும். பிறகு கிறிஸ்துவில் மெய்யான விசுவாசம் கொண்டிருப்பதால் நாம் அவரோடு ஒன்றாகிறோம்; அதாவது, நாம் அவருடன் ஐக்கியம் கொள்கிறோம், அவரை அறிகிறோம், அவருக்குக் கீழ்ப்படிகிறோம், அவரால் ஆசீர்வதிக்கப் படுகிறோம். நமது ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்தும் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றன (எபேசியர் 1:3 மற்றும் குறிப்புரை பார்க்க). நாம் "கிறிஸ்துவுக்குள்" இருந்தால் புதுச் சிருஷ்டியாகிறோம்; புது ஜீவன் பெறுகிறோம் (2 கொரிந்தியர் 5:17 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).*

## 24. Israel - இஸ்ரவேலர்

புதிய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் என்பது பொதுவாக யூத நாட்டைக் குறிக்கும்; அதாவது ஆபிரகாமின் சந்ததியார். ஆனால் சில சமயங்களில் பவுல், விசுவாசத்தின் மூலமாக ஆபிரகாமின் ஆவிக்குரிய பிள்ளைகளான மக்களைக் குறிப்பதற்கும் இதே "இஸ்ரவேலர்' என்ற பதத்தைப் பயன் படுத்துகிறார் (கலாத்தியர் 6:16).

பழைய ஏற்பாட்டிலே, ஆபிரகாமின் பேரன் யாக்கோபுக்கு, தேவன் இஸ்ரவேல் என்று பெயரிடுகின்றார் (ஆதியாகமம் 35:10). யாக்கோபுக்கு 12 குமாரர்கள், அவர்களிலிருந்து இஸ்ரவேலரின் 12 கோத்திரங்கள் தோன்றின (ஆதியாகமம் 35:23-26).

இன்றைக்கு இஸ்ரேல் என்பது மத்திய தரைக் கடலின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள மத்திய கிழக்கு நாடுகளுள் ஒன்றன் பெயராகும். இந்த நவீன கால நாடு 1947 இல் யூதர்களுக்கென்று தோற்றுவிக்கப்பட்டது. தேவன் ஆபிரகாமின் சந்ததியாரான யூதருக்குக் கொடுப்பதாக முதலில் வாக்களித்த இடமும் இதுவே (ஆதியாகமம் 12:4-7). இதன் முக்கிய நகரம் இன்னும் எருசலேம் தான், இதுதான் புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் யூத நாட்டின் தலைநகராக விளங்கியது.

## 25. Jew - யூதன்

ஒரு யூதன் (அல்லது இஸ்ரவேலன்) என்பவன் ஆபிரகாமின் வழிவந்தவன் - ஆபிரகாம் யூதரின் தகப்பன் (சொல் வரிசை:ஆபிரகாம் பார்க்க).

*தேவன் ஆபிரகாமுக்கு, "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன் " என்று ஒரு வாக்குக் கொடுத்தார் (ஆதியாகமம் 12:2). தேவன் ஆபிரகாமோடும் அவன் சந்ததியோடும் ஓர் உடன்படிக்கை செய்தார் (சொல் வரிசை: உடன்படிக்கை பார்க்க). தேவன் ஆபிரகாமை நோக்கி: "உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாய் இருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்' என்றார் (ஆதியாகமம் 17:7-8).*

*இப்படியாக தேவன் யூதரைத் தமது விசேஷித்த ஜனமாகத் தெரிந்து கொண்டார் (யாத்திராகமம் 19:5-6). ஆனால் தேவன் யூதர்கள் தமக்குக் கீழ்ப்படியவும், தம் ஒருவரை மாத்திரமே தொழுது கொள்ளவும் கட்டளையிட்டார்; அதுவே உடன்படிக்கையில் அவர்கள் செய்ய வேண்டிய பங்கு. பழைய ஏற்பாட்டுக் காலங்களில் ஒன்றான மெய்த் தேவனை வணங்கிய ஒரே இனம் யூத இனம் தான். ஆனால் அவர்கள் பலமுறை தவறினர், தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போயினர், அவர்கள் தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பும் படியாக, அவற்றுக்காக மனஸ்தாபப் படும் படியாகக் கூற தேவன் தீர்க்கதரிசிகளை அனுப்பினார்.*

*தேவன் யூதர்களை, உலகின் எல்லா ஜாதி ஜனங்களுக்கும் ஓர் ஆசீர்வாதமாய் வைக்கும் ப தெரிந்து கொண்டார் (ஆதியாகமம் 12:3). படியாக யூதர்களிடமிருந்து வந்த ஆசீர்வாதங்களில் தலைசிறந்தது இயேசு கிறிஸ்துவே, அவரே உலக இரட்சகர். அவர் ஆபிரகாமின் வழி வந்த ஒரு யூதர் (மத்தேயு 1:1). இயேசு*

*கிறிஸ்துவின் மூலமாக, தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்திருந்த வாக்குத்தத்தம் நிறைவேறியது.*

*புறஜாதிகள் (சொல் வரிசை : புறஜாதி பார்க்க) விருத்த சேதனம் (சொல் வரிசை : விருத்தசேதனம் பார்க்க) செய்து கொள்வதன் மூலமும் யூதர்களின் நியாயப் பிரமாணத்தைக் (சொல் வரிசை: நியாயப் பிரமாணம் பார்க்க) கைக்கொள்வதன் மூலமும் யூதர்களாக மாறலாம். இவ்விதமாக யூத மதத்திற்கு மாறிய புறஜாதிகள் யூதமார்க்கத்தில் அமைந்தவர்கள் என்று அழைக்கப் பட்டனர்.*

## 26. *Judgement* - நியாயத்தீர்ப்பு

*புதிய ஏற்பாட்டில் நியாயத் தீர்ப்பு என்ற பதம் மூன்று வெவ்வேறு அர்த்தங்களில் பயன் படுத்தப் பட்டுள்ளது.*

*முதலாவது அர்த்தம், மனிதர் மனிதருக்கு எதிராகச் சொல்லும் தீர்ப்பு. நாம் ஒருவரையொருவர் குற்றவாளிகள் என்று தீர்க்கக் கூடாது என்று இயேசு சொன்னார் (மத்தேயு 7:1 மற்றும் குறிப்புரை பார்க்க). மனிதனுடைய தீர்ப்புகள் 100% உண்மையாய் இருக்க முடியாது, காரணம் எந்த மனிதனும் அடுத்த மனிதனைப் பற்றிய முழு உண்மையையும் அறிய முடியாது. தேவன் ஒருவர் மட்டுமே ஒவ்வொருவனையும் பற்றிய அனைத்தையும் அறிந்தவர். ஆகவே தேவன் ஒருவர் மட்டுமே நியாயமான தீர்ப்பு செய்யக் கூடியவர்.*

*புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப் படும் இரண்டாவது வகையான நியாயத் தீர்ப்பு தேவன் துன்மார்க்கருக்குக்*

கொடுக்கும் தண்டனையைக் குறிப்பது. இது விசுவாசிகள் மேலும் அவிசுவாசிகள் மேலும் வரக்கூடியது (1 கொரிந்தியர் 11:29-34 மற்றும் குறிப்புரை பார்க்க). இவ்வித நியாயத் தீர்ப்பின் நோக்கம் பாவிகளை தேவனண்டை திரும்பச் செய்வதும், மனிதர்களின் வாழ்க்கைகளைத் திருத்திச் சுத்திகரிப்பதுமே.

புதிய ஏற்பாட்டில் பேசப்படும் மூன்றாவது வகையான நியாயத் தீர்ப்பு தேவனுடைய கடைசி நியாயத் தீர்ப்பு ஆகும் இது உலகத்தின் முடிவில் நடைபெறப் போவது. மனுக்குலத்தை நியாயம் தீர்க்கும் முடிவான அதிகாரத்தை தேவன் இயேசு கிறிஸ்துவினிடமே வழங்கியுள்ளார் (யோவான் 5:22). ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் நின்றேயாக வேண்டும் ( 2 கொரிந்தியர் 5:10 மற்றும் குறிப்புரை பார்க்க). கிறிஸ்துவின் நியாயத் தீர்ப்பு பாரபட்சமற்றது. அவரது நியாயத் தீர்ப்பு இன்று மனிதர்கள் உலகில் வழங்குகிறார்களே, அந்தத் தீர்ப்பைப் போலிராது; அது முழுக்க முழுக்க உண்மையானதாக, நியாயமானதாக இருக்கும். இந்த உலகில் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து வாழ்ந்தோர் இரட்சிக்கப் பட்டு பரலோகம் செல்வார்கள். இவ்வுலகில் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்காதவர்கள் நியாயத் தீர்ப்பில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டு, நரகம் போவார்கள் (யோவான் 3:18,36). கடைசி நியாயத் தீர்ப்புக்குப் பிறகு எங்கும் போய் அப்பீல் செய்ய வாய்ப்பே கிடையாது. எனவே இரட்சிப்படைய வேண்டுமானால், ஒருவன் இந்த உலக வாழ்க்கையிலேயே இயேசுவில் விசுவாசம் வைத்தாக வேண்டும்; வேறு எந்த வழியும் கிடையவே கிடையாது (அப்போஸ்தலர் 4:12).

# 27. Kingdom of God - தேவனுடைய இராஜ்யம்

தேவனுடைய இராஜ்யம் என்பது எந்தவொரு குறிப்பிட்ட இடமுமல்ல; அது பூலோக இராஜ்யங்களைப் போன்றதல்ல. தேவனுடைய இராஜ்யம் என்பது தேவன் முழு அதிகாரத்தோடு ஆளுகை செய்கின்ற ஆவிக்குரிய இராஜ்யமாகும். ஒரு விதத்தில் பார்த்தால், தேவனுடைய இராஜ்யம் எங்குமுள்ளது. ஆனால் புதிய ஏற்பாட்டில் தேவனுடைய இராஜ்யம் என்பது மனிதர்களும் தேவதூதர்களும் தேவன் ஒருவரையே ஆராதித்து, அவருக்கே கீழ்ப்படிகின்ற ஓர் “ஆவிக்குரிய” இராஜ்யத்தைக் குறிக்கும். ஆகவே, இந்த அர்த்தத்தில் பார்த்தால் பூமியில் இன்னும் தேவனுடைய இராஜ்யம் வரவில்லை. இந்த உலகத்தின் அதிபதி சாத்தானே (யோவான் 12:31; 16:11 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).

எனினும், வேறொரு அர்த்தத்தில் பார்த்தால் இயேசு தேவனுடைய இராஜ்யத்தைப் பூமிக்குக் கொண்டு வந்து விட்டார். இயேசுவில் விசுவாசம் வைப்போர் யாவரும், உடனடியாகவே சாத்தானுடைய இராஜ்யமான இருளின் இராஜ்யத்திலிருந்து விடுவிக்கப் பட்டு, தேவனுடைய இராஜ்யத்திற்குள் கொண்டு வரப் படுகின்றனர். கிறிஸ்தவர்கள் இப்பூமியில் வாழும் போதே கூட தேவனுடைய இராஜ்யத்திலேயே இருக்கின்றனர். நாம் தேவ இராஜ்யத்தின் குடி மக்கள்; தேவனே நமது அதிபதி. அவர் தமது பரிசுத்த ஆவியானவரின் மூலமாக நாம் சாத்தானை மேற்கொள்ள உதவுகிறார். நமது சரீரங்கள் மரணமடைந்த பின், நாம் பரலோகத்தில் தேவனுடைய இராஜ்யத்திலே தொடர்ந்து வாழுவோம். ஆகவே, நாம் விசுவாசத்தினாலே கிறிஸ்துவுக்குள் இருக்கையில் தேவனுடைய

இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம். ஒரு விதத்தில் பார்த்தால் இராஜ்யம் நமக்குள்ளே வருகிறது. தேவனுடைய ஆளுகை நமக்குள்ளே வருகிறது (லூக்கா 17:20-21 மற்றும் குறிப்புரை பார்க்க). இயேசு பிரசங்கித்த முக்கியச் செய்தி இதுவே: "தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு 1:14-15 மற்றும் குறிப்புரை பார்க்க).

## 28. *Kingdom of Heaven*-பரலோக இராஜ்யம்

(சொல் வரிசை: தேவனுடைய இராஜ்யம் - பார்க்க)

## 29. *Law*-நியாயப் பிரமாணம்

வேதத்திலே நியாயப்பிரமாணம் என்று வரும்போதெல்லாம் பொதுவாக அது யூதர்களின் நியாயப் பிரமாணத்தையே குறிக்கும். யூதர்களின் நியாயப்பிரமாணத்தின் முக்கியப் பகுதி பத்துக் கட்டளைகள் ஆகும், இதை தேவனே இரண்டு கற்பலகைகளில் எழுதி, யூதர்களிடம் கொடுக்கச் சொல்லி மோசேயிடம் கொடுத்தார் (யாத்திராகமம் 20:3-17; 31:18). இந்தப் பத்து கற்பனைகளோடு கூட தேவன் மோசேயிடம் யூத மக்களுக்காக வேறு பல சட்டங்களையும் கொடுத்தார், அவை யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம் என்னும் நூல்களில் காணப்படுகின்றன. யூதர்கள் கீழ்ப்படிய வேண்டிய சுமார் 600 வேறு பல சட்டங்கள் இவற்றில் உள்ளன. இவை அனைத்தும் சேர்ந்ததே நியாயப் பிரமாணம். சில சமயங்களில் வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களும் நியாயப் பிரமாணம் என்றோ

அல்லது மோசேயின் நியாயப் பிரமாணம் என்றோ அழைக்கப் படுவதும் உண்டு.

யூதர்கள் தாங்கள் இந்தக் கட்டளைகளையும், கற்பனைகளையும் அப்படியே கைக்கொண்டால் இரட்சிப்பு பெறுவோம் என்று நம்பினார்கள். எனினும் எல்லா நேரங்களிலும் எல்லாக் கற்பனைகளுக்கும் முழுமையாகக் கீழ்ப்படிவது முடியாத காரியம் என்பதைப் புதிய ஏற்பாடு கற்பிக்கிறது, மானிட சுபாவமும் அனுபவமும் அதை உறுதிப் படுத்துகிறது (கலாத்தியர் 3:10; யாக்கோபு 2:10 மற்றும் குறிப்புரைகள் பார்க்க). ஆக, யாருமே நியாயப் பிரமாணத்தினால் இரட்சிக்கப் படுவதோ நீதிமானாக்கப்படுவதோ முடியாத காரியம் (கலாத்தியர் 2:15-16 மற்றும் குறிப்புரை பார்க்க). நியாயப் பிரமாணம் மனிதர்களை இரட்சிப்பதில்லை; அது அவர்களைக் குற்றவாளிகள் எனத் தீர்க்கவே செய்யும். நியாயப் பிரமாணத்தின் அடிமைத் தளையிலிருந்து மக்களை விடுவிக்கவும், தாமே மெய்யான இரட்சிப்பின் வழி என்று அவர்களுக்குக் காட்டவுமே கிறிஸ்து வந்தார் (ரோமர் 8:1-4 மற்றும் குறிப்புரை பார்க்க).

நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றவே கிறிஸ்து வந்தார் (மத்தேயு 5:17 மற்றும் குறிப்புரை பார்க்க). அவர் தாமே நியாயப் பிரமாணத்தை முழுமையாகக் கைக் கொண்டார். கிறிஸ்து நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்ததன் மூலமாக மட்டும் அதை நிறைவேற்றவில்லை; அதை வேறொரு வகையிலும் செய்தார். பாவத்துக்கு மரண தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்று நியாயப் பிரமாணம் கோருகின்றது; எல்லா மனிதர்களும் பாவிகள் ஆதலால் எல்லா மனிதருக்கும் மரண தண்டனை என்று தீர்ப்பிடுகிறது (ரோமர் 3:10- 12). எனவே, நமது இடத்தில் நமக்குப்

*பதிலாக மரிப்பதற்காகவே கிறிஸ்து வந்தார். இவ்விதமாக, மரண தண்டனை வழங்கப் பட வேண்டுமென்ற நியாயப் பிரமாணத்தின் கோரிக்கையை அவர் நிறைவேற்றினார். கிறிஸ்து மரித்ததனாலே, அவரில் தங்கள் விசுவாசத்தை வைப்பவர்களை நியாயப் பிரமாணமானது இனி குற்றவாளிகள் எனத் தீர்க்க முடியாது. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக நாம் நியாயப் பிரமாணத்தின் தண்டனைக்கு (நித்திய மரணம்) விலக்கி இரட்சிக்கப் படுகிறோம்.*

## 30. *Lord's Supper*-கர்த்தருடைய பந்தி

*இயேசுவும் அவரது சீஷர்களும் முதலாவது கர்த்தருடைய பந்தியை இயேசு மரிப்பதற்கு முந்தின நாள் கொண்டாடினர் (மாற்கு 14:22-24 மற்றும் குறிப்புரை பார்க்க). தமது மரணத்தை நினைவு கூரும் வண்ணமாகக் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியைக் கைக்கொள்ள வேண்டுமென இயேசு தாமே கட்டளையிட்டார் (1கொரிந்தியர் 11:23-26 மற்றும் குறிப்புரை பார்க்க).*

*கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கும் போது, கிறிஸ்தவர்கள் அப்பத்தைப் புசித்து, திராட்சை ரசத்தையோ அல்லது அது போன்றதொரு பானத்தையோ பருகுகின்றனர். கர்த்தரின் மரணத்தை நினைவு கூருவதற்காக விசுவாசிகள் கூடி வருகையில், அப்பம் என்பது கிறிஸ்துவின் அடிக்கப்பட்ட சரீரத்தையும், ரசம் என்பது கிறிஸ்துவின் சிந்தப் பட்ட இரத்தத்தையும் குறிக்கும் அடையாளங்களாகின்றன. அப்பத்தைக் குறித்து இயேசு சொன்னார்: "இது என்னுடைய சரீரமாய் இருக்கிறது " (மாற்கு 14:22). திராட்சைரசத்தைக் குறித்து, "இது அநேகருக்காகச் சிந்தப் படுகிற புது உடன்படிக்கைக்குரிய*

என்னுடைய இரத்தமாய் இருக்கிறது" என்றார் (மாற்கு 14:24). இயேசுவின் இரத்தத்தினாலே மனிதனுக்கும் தேவனுக்கும் இடையிலான உடன்படிக்கை உறுதிபண்ணப்பட்டிருக்கிறது (சொல் வரிசை : உடன்படிக்கை - பார்க்க).

நாம் கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கையில், ஒரு விதத்தில் அவருடைய மரணத்திலும், உயிர்த்தெழுதலின் ஜீவனிலும் பங்கு பெறுகிறோம். நாம் அப்பத்தைப் புசித்து, திராட்சை ரசத்தைப் பானம் பண்ணுகையில், விசுவாசத்தினாலே ஏதோ ஒரு சிறப்பான விதத்தில் கிறிஸ்துவுடன் ஐக்கியப் படுகிறோம். ஒவ்வொரு முறையும் நாம் அப்பத்தையும், இரசத்தையும் உட்கொள்கையில், கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினாலே நமக்குக் கிடைத்ததான பாவ மன்னிப்பு, கத்திகரிப்பு, புது ஜீவன் ஆகிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலே மீண்டும் புதிதாகப் பெற்றுக் கொள்கிறோம் என்று அநேகக் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.

விசுவாசிகள் மட்டுமே கர்த்தரின் பந்தியில் பங்கு பெற வேண்டும். அப்பத்தைப் புசித்து, திராட்சை ரசத்தைப் பானம் பண்ணுவதற்கு முன் ஒரு விசுவாசி தான் அறிந்த வரை எல்லாப் பாவங்களையும் மனம் வருந்தி அறிக்கையிட்டிருக்கவும், இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து நடந்திருக்கவும் வேண்டும். அப்பத்தையும் இரசத்தையும் உட்கொள்வதற்கு முன் ஒவ்வொரு விசுவாசியும் தன்னைத் தானே பரிசோதித்து அறிய வேண்டும் (1கொரிந்தியர் 11:27-29 மற்றும்

குறிப்புரை பார்க்க). கர்த்தருடைய பந்தி பற்றி மேலும் அறிய, பொதுவான தலைப்பு: கர்த்தருடைய பந்தி - பார்க்க.

**தாமஸ் ஹேல்**

## 31. *Moses* - மோசே

*யூதர்களின் தலைசிறந்த தலைவன் மோசே. அவன் கி.மு. 1500 இல் பிறந்தான். எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து யூத ஜனங்களை மீட்டு வெளியே கொண்டு வந்தான். தேவனிடமிருந்து பத்துக் கட்டளைகளைப் பெற்று, யூதர்கள் தேவனுடைய வழியில் நடக்கும் படியாக அவர்களிடம் அந்தப் பிரமாணங்களை ஒப்படைத்தான். சீனாய் வனாந்தரத்தில் 40 ஆண்டுகளாக அவர்களை வழி நடத்தினான். பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களையும் எழுதியவன் இவனே. மோசேயின் வாழ்க்கைச் சரிதையை யாத்திராகமம் மற்றும் எண்ணாகம நூல்களில் படிக்கலாம்.*

## 32. *Peace* - சமாதானம்

*வேதத்திலே "சமாதானம்" என்ற சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உண்டு. பழைய ஏற்பாட்டில் "சமாதானம்" என்பது பொதுவாக ஒரு வாழ்த்துச் சொல்லாகப் பயன் படுத்தப் படுகிறது. சமாதானம் என்பது போர்களின்றி அமைதியாய் இருப்பதையும் குறிக்கும். அது உள்ளான மன சமாதானத்தையும் குறிக்கலாம்.*

*புதிய ஏற்பாட்டில் "சமாதானம்" என்ற பதம் பொதுவாக உடல், உள்ளம், ஆவி ஆகிய மூன்றிலும் முழுமையாக ஆரோக்கியம் பெற்றிருப்பதைக் குறிக்கும். அதையும் விட முக்கியமாக, அது தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருப்பதைக் குறிக்கும். நாம் மனம் திரும்பாத பாவிகளாய் இருந்தபோது, தேவனுக்குச் சத்துருக்களாய் இருந்தோம். இப்பொழுதோ, கிறிஸ்துவில்*

விசுவாசம் வைப்பதன் மூலம் தேவனோடு சமாதானமாகலாம். இனி நாம் அவரது சத்துருக்கள் அல்லர்; அவரது பிள்ளைகள் (ரோமர் 5:1 மற்றும் குறிப்புரை பார்க்க).

## 33. *Passover* - பஸ்கா

பஸ்கா பண்டிகையானது ஒவ்வோராண்டும், யூதர்கள் எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப் பட்டதை நினைவு கூரும் வண்ணமாகக் கொண்டாடப்பட்டது. அந்தப் பண்டிகை ஒரு வாரத்துக்கு நீடிக்கும், அந்த நாட்களில் எல்லாம் யூதர்கள் புளிப்பில்லா அப்பம் மட்டுமே சாப்பிட வேண்டும். எனவே, பஸ்கா பண்டிகையானது புளிப்பில்லா அப்பப் பண்டிகை என்றும் பெயர் பெற்றது. பண்டிகையின் முதல் நாளன்று பஸ்கா விருந்து புசிக்கப் படும், பஸ்கா ஆட்டுக்குட்டி பலியிடப் படும் (லேவியராகமம் 23:4-8; உபாகமம் 16:1-8).

"பஸ்கா" என்றால் கடந்து செல்வது என்று பொருள். யூதர்கள் எகிப்திலிருந்த அந்தக் கடைசி நாள் இரவன்று, தேவன் எகிப்தியரின் தலையீற்றுகள் அனைத்தையும் கொல்லத் தீர்மானித்தார். காரணம், எகிப்தின் இராஜாவான பார்வோன் யூதர்களை விடுதலை செய்யச் சம்மதிக்கவில்லை. அதற்கு முன், தேவன் யூதர்களை ஓர் ஆட்டுக் குட்டியை அடித்து, அதன் இரத்தத்தை அவர்களது வீடுகளின் நிலைக் கால்களில் பூசச் சொன்னார். சங்காரத் தூதன் வந்து, அந்த நிலைக் கால்களில் பூசப் பட்டிருக்கும் இரத்தத்தைக் காணும் போது, அந்த வீடுகளில் உள்ள தலையீற்றுகளை அழிக்கக் கூடாது என்பதை அறிந்து கொள்வான் (யாத்திராகமம் 12:1-14, 21-30; எபிரெயர் 11:28).

அதுபோலவே, கிறிஸ்துவும் ஒரு பஸ்கா ஆட்டுக் குட்டியாய் இருக்கிறார் (1கொரிந்தியர் 5:7 பார்க்க). கிறிஸ்துவின் இரத்தத்தினாலே (அவரது சிலுவை மரணத்தினாலே) நாம் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத் தனக் கட்டிலிருந்து விடுவிக்கப் படுகிறோம். எனவே, கிறிஸ்து பஸ்கா பண்டிகையின் நாளில் மரித்தது மிகவும் பொருத்தமே (மாற்கு 14:1, 12 மற்றும் குறிப்புரை பார்க்க).

ஆகவே, கிறிஸ்தவர்கள் யூதர்களின் பஸ்கா பண்டிகையை, அதாவது, புளிப்பில்லா அப்பப் பண்டிகையை ஆசரிப்பதில்லை. அதற்குப் பதிலாக, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை ஆசரிக்கின்றனர். அவருடைய மரணம் பெரிய வெள்ளி என்ற பெயரிலும், அவருடைய உயிர்தெழுதல் ஈஸ்டர் என்ற பெயரிலும் ஆசரிக்கப் படுகின்றன.

## 34. *Pentecost* - பெந்தெகொஸ்தே

"பெந்தெகொஸ்தே" என்பது ஒரு கிரேக்கச் சொல் - "ஐம்பதாம் நாள்" என்பது அதன் பொருள். யூதர்கள் பஸ்கா பண்டிகைக்கு ஐம்பது நாட்கள் கழித்து பெந்தெகொஸ்தே நாளைக் கொண்டாடினர். இந்த நாள் வாரங்களின் பண்டிகை (யாத்திராகமம் 34:22; உபாகமம் 16:9-11) என்றும் அழைக்கப் பட்டது. அது "முதற் கனிகளைச் செலுத்தும் பண்டிகை" என்றும் பெயர் பெற்றது (எண்ணாகமம் 28:26), காரணம் அந்நாளிலே யூதர்கள் தேவனுக்குத் தங்கள் அறுவடையின் முதற் பலன்களைப் படைத்தனர். பெந்தெகொஸ்தே நாள் கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமான நாள். இயேசு மரித்ததற்குப் பின் வந்த முதலாவது பெந்தெகொஸ்தே நாளன்று தான் பரிசுத்த

*ஆவியானவர் இயேசுவின் சீஷர்கள் மீது பலமாய் வந்திறங்கினார். அந்த வேளையில் சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப் பட்டனர், அல்லது ஞானஸ்நானம் பெற்றனர் (அப்போஸ்தலர் 2:1-4 மற்றும் குறிப்புரை; பொதுவான தலைப்பு: பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் - பார்க்க).*

## 35. *Pharisee* - பரிசேயன்

*பரிசேயர்கள் என்பவர்கள் ஒரு யூத மதப் பிரிவினர். "பரிசேயன்" என்றால் "பிரித்தெடுக்கப்பட்டவன்'' என்று பொருள். கிறிஸ்துவின் நாட்களில் யூதர்களிடையே பரிசேயர்களுக்குப் பெரும் செல்வாக்கு இருந்தது. இவர்கள் கட்டுப்பாடு மிக்கவர்கள், யூதர்களின் நியாயப் பிரமாணத்தின் (சொல் வரிசை : நியாயப் பிரமாணம் பார்க்க) ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கடைபிடிக்க முயன்றவர்கள். இவர்கள் தங்களை நீதிமான்கள் என்று கருதியவர்கள்; உண்மையில், கிறிஸ்துவின் நாட்களில் இவர்கள் புறம்பாக மட்டுமே நீதிமான்கள் போல் தோன்றினர். உள்ளேயோ தீமையினால் நிறைந்திருந்தனர்; மாய்மாலக் காரர்களாய் இருந்தனர் (மத்தேயு 23:13-32 பார்க்க).*

*எனினும், எல்லாப் பரிசேயர்களுமே மாய்மாலக் காரர்கள் என்று சொல்லி விட முடியாது. நிக்கொதேமுவும் கமாலியேலும் பரிசேயர்கள் தான் என்றாலும் நேர்மையான, நீதியுள்ள மனிதர்கள் (யோவான் 3:1; அப்போஸ்தலர் 5:34). அப்போஸ்தலனாகிய பவுலும் கூட ஒரு பரிசேயனே (அப்போஸ்தலர் 26:5; பிலிப்பியர் 3:5).*

# 36. Prophecy - தீர்க்கதரிசனம்

*வேத வசனத்தில் பொதுவாக தீர்க்கதரிசனம் என்று வரும் வார்த்தை, தேவனிடமிருந்து நேரடியாக வருகின்ற, மனிதரால் பேசப்படுகின்ற வார்த்தை என்றே பொருள்படும். இவ்விதமாக தேவனுடைய வார்த்தையைப் பேசும் மனிதர்கள் தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப் படுகின்றனர் (சொல் வரிசை: தீர்க்கதரிசி பார்க்க). அதாவது, தேவனுடைய*

*தீர்க்கதரிசனம் என்பது தீர்க்கதரிசன வரத்தையும் குறிக்கும் வார்த்தைகளைப் பேசும் வரம் (1கொரிந்தியர் 12:10).*

*தீர்க்கதரிசனம் என்பது பல விதங்களில் வரக் கூடும். அவை எதிர்காலத்தில் வரப் போவதை முன்னறிவிக்கலாம். அவை தேவன் அருளும் எச்சரிப்புகளாகவும் இருக்கலாம். தேவன் நமக்குப் போதிக்க விரும்பும் முக்கியமான போதனைகளாகவும் இருக்கலாம். ஆனால் அது எப்படியிருப்பினும் மனிதனிடமிருந்து வருவதல்ல; உண்மையான தீர்க்கதரிசனம் தேவனிடமிருந்தே வருவது.*

*தேவனிடமிருந்து வராத கள்ளத் தீர்க்கதரிசனங்களும் இருக்கவே செய்கின்றன. இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்களைக் கூறுபவர்கள் கள்ளத் தீர்க்கதரிசிகள் எனப்படுவர். நாம் அவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்கும் படி கட்டளை பெறுகிறோம் (மத்தேயு 7:15; 1 யோவான் 4:1).*

*பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் யூதர்களை அவர்களது கீழ்ப்படியாமைக்காகக் கடிந்து கொள்ளவும் தேவ சித்தத்தை அவர்களுக்கு நினைப்பூட்டவும் தேவனால்*

அனுப்பப் பட்டனர். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் வருகை பற்றியும் அநேக தீர்க்கதரிசனங்கள் உரைத்தனர்.

புதிய ஏற்பாட்டிலும் தீர்க்கதரிசிகள் உண்டு. தீர்க்கதரிசன வரம் புதிய ஏற்பாட்டுத் திருச்சபையில் மிக முக்கியம் வாய்ந்ததாய் இருந்தது (1கொரிந்தியர் 12:28; 14:1; எபேசியர் 4:11). புதிய ஏற்பாட்டில் உள்ள வெளிப்படுத்தல் நூல் முழுவதும் உலக முடிவைப் பற்றிய தீர்க்கதரிசனம் எனலாம்.

## 37. Prophet - தீர்க்கதரிசி

தீர்க்கதரிசனம் சொல்பவன் தீர்க்கதரிசி (சொல் வரிசை: தீர்க்கதரிசனம் பார்க்க). வேதத்தில் உள்ள மெய்யான தீர்க்கதரிசிகள் தேவனிடமிருந்து வார்த்தையைப் பெற்று அதை மக்களுக்கு அறிவித்தனர். அவர்கள் தேவனுடைய பிரதிநிதிகள். எதிர்காலத்தைப் பற்றிய வெறும் அறிவிப்பாளர்கள் அல்லர்.

வேதாகமத்தில் குறிப்பிடப் படும் ஏராளமான தீர்க்கதரிசிகள் பழைய ஏற்பாட்டின் யூதத் தீர்க்கதரிசிகளே. இவர்கள் இரண்டு சிறப்பான பணிகளை ஆற்றினர். முதலாவது, யூதர்கள் தொடர்ந்து தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்படியாமல் வாழ்ந்ததை இடித்துரைத்தனர். இரண்டாவது இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்தனர்.

## 38. *Propitiation* - பாவ நிவாரண பலி

*(சொல் வரிசை: பாவ நிவிர்த்தி Atonement பார்க்க).*

## 39. *Redemption* - மீட்பு

*மீட்பு என்றால் ஒரு விலை கொடுத்து ஒன்றை மீண்டும் சொந்தமாக்கிக் கொள்வது ஆகும். அது விற்றுப் போட்ட ஏதோ ஒன்றை மீண்டும் விலை கொடுத்து வாங்குவதாகலாம். அல்லது, அடிமை ஒருவனை விலை கொடுத்து வாங்கி, அவன் இழந்து போன சுதந்தரத்தை மீட்டுக் கொடுப்பதாகவும் இருக்கலாம். ஆனால் புதிய ஏற்பாட்டில் மீட்பு என்பது ஒரு விலைக் கிரயம் செலுத்தியோ அல்லது ஒரு பலி செலுத்தியோ பாவத்தின் தண்டனையிலிருந்து நமது விடுதலையை "வாங்குவது" என்று பொருள்படும். கிறிஸ்து தம்மைத் தாமே நம்மை மீட்பதற்கான பணயத் தொகையாக, பலியாக ஒப்புக் கொடுத்தார். (மாற்கு 10:45 மற்றும் குறிப்புரை பார்க்க). நமது விடுதலைக்காக கிறிஸ்து செலுத்திய விலைக்கிரயம் தமது சொந்த இரத்தமே. பவுல் எழுதுகிறார்: இவருடைய (கிறிஸ்துவின்) இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் (எபேசியர் 1:7). நமக்கு உண்டாயிருக்கிறது*

*மீட்பு என்பது நமது இரட்சிப்பின் அம்சங்களுள் ஒன்று. சில புதிய ஏற்பாட்டு வேத வசனங்களில் "மீட்பு" என்ற சொல்லும் "இரட்சிப்பு" என்ற சொல்லும் இடம் மாற்றிப் பயன் படுத்தப்படக் கூடும் (சொல் வரிசை: இரட்சிப்பு பார்க்க).*

## 40. *Repentance* - மனந்திரும்புதல்

*மனந்திரும்புவது என்றால் ஒருவன் தன் பாவங்களுக்காக மனம் வருந்தி வெட்கப் படுவது மட்டுமல்ல, அவற்றை விட்டு மனந் திரும்புவதுமாகும். நமது பாவத்தை அறிக்கை செய்வது மட்டும் போதாது; நாம் பாவம் செய்வதை நிறுத்தி விடவும் வேண்டும். ஒருவன் உண்மையாகவே மனந்திரும்பும் போது அவனது செயல்கள், எண்ணங்கள், ஆசைகள் ஆகிய அனைத்துமே மாற்றம் பெறும். ஒரு மனிதன் "நான் மனந் திரும்பி விட்டேன்'' என்று சொல்லியும் அவன் வாழ்க்கையில் மாற்றமில்லை எனில் அவனது "மனந்திரும்புதல் உண்மையானதல்ல.*

*மனந்திரும்புவது, இரட்சிப்பைப் பெறுவதில் ஒரு இன்றியமையாத படியாகும்.*

*மனந்திரும்புதல் இன்றி இரட்சிக்கப் படவே முடியாது (மத்தேயு 5:3-4; மாற்கு 1:4,15; அப்போஸ்தலர் 2:37-38; 20:21; 2 பேதுரு 3:9 மற்றும் குறிப்புரைகள் பார்க்க). Resurrection-உயிர்த்தெழுதல் உயிர்த்தெழுதல் என்றால் மரணமடைந்த பின் மீண்டும் உயிர் பெறுவது. இயேசுவுக்கு மரித்தோரை உயிருடன் எழுப்பும் வல்லமை உண்டு (யோவான் 5:24- 25). அவர் நாயீனூர் விதவையின் மகனை உயிரோடு எழுப்பினார் (லூக்கா 7:11-17); மரித்து நான்கு நாட்களாகி விட்டிருந்த லாசருவை உயிரோடு எழுப்பினார் (யோவான் 11:38-44). அவர் தாமேயும் மரணத்தை வென்று உயிருடன் எழுந்தார்; எனவே, அவர் வல்லமையினாலே மற்றவர்களும் மரணத்தை வெற்றிகொள்வர் (1 கொரிந்தியர் 15:20-23 மற்றும் குறிப்புரை பார்க்க). பூமியில் உள்ளவர்களிலே, கிறிஸ்து உலகத்தின் முடிவில் திரும்ப வரும்போது முதலாவது எழுப்பப் படப் போகிறவர்கள் கிறிஸ்துவுக்குள் மரித்த*

*விசுவாசிகளே (1 தெசலோனிக்கேயர் 4:16-17). முடிவிலே எல்லா மனிதர்களும், கெட்டவர்கள் நல்லவர்கள் அனைவரும் எழுப்பப் படுவார்கள். விசுவாசிகளின் உயிர்த்தெழுதல் மோட்சத்தில் நடைபெறும்; விசுவாசியாதவர்களின் உயிர்த்தெழுதலோ நரகத்தில் இருக்கும் (யோவான் 5:28-29; அப்போஸ்தலர் 24:15; வெளிப்படுத்தல் 20:4-15 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).*

*நமது சரீரம் மரணம் அடைகையில், நமது ஆவியோ தொடர்ந்து வாழும், ஆனால் உடனடியாக நாம் புது சரீரத்தைப் பெறுவதில்லை. உலக முடிவில் இயேசு திரும்ப வரும் போது தான் நமது புதிய சரீரத்தைப் பெறுவோம். பவுல் இதை நமது சரீர மீட்பு (ரோமர் 8:23) என்று அழைக்கிறார். கிறிஸ்துவுக்குள் விசுவாசிகள் தங்களது புதிய சரீரங்களை மோட்சத்தில் பெறுவார்கள். இந்தப் புதிய சரீரங்களுக்கு மரணம் கிடையாது. அவை மகிமைப்பட்ட சரீரங்கள். அவை கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரம் போலிருக்கும் (லூக்கா 24:36-43; பிலிப்பியர் 3:21; 1 யோவான் 3:2 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).*

*உலக வரலாற்றிலே மிக மிக முக்கியமான சம்பவம் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே (மாற்கு 16:8 மற்றும் குறிப்புரை பார்க்க). மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலமாக இயேசு தாம் உண்மையாகவே தேவ குமாரன் தான் என்றும், உலக இரட்சகர் தான் என்றும் மனிதர்களுக்கு நிரூபித்துக் காட்டினார் (ரோமர் 1:4). அவரது உயிர்த்தெழுதலின் காரணமாக, நாமும் நித்திய ஜீவனின் நம்பிக்கையைப் பெறுகிறோம் (யோவான் 11:25-26). இயேசு சொன்னார் : "நான் பிழைக்கிற படியினால் நீங்களும் பிழைப்பீர்கள்" (யோவான் 14:19).*

# 41. Righteous - நீதிமான்

*நீதிமான் என்று தீர்க்கப்படுவது நமது இரட்சிப்பின் ஒரு முக்கிய அம்சமாகும். (சொல் வரிசை: இரட்சிப்பு பார்க்க). அநீதியுள்ள யாரும் தேவ சமூகத்தில் வர முடியாது.. பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (எபிரெயர் 12:14).*

*அப்படியானால், ஒருவன் தேவனுடைய பார்வையில் "நீதிமான்" ஆவது எப்படி? ஒருவன் தன் சுய முயற்சியினால், தனது நற்கிரியைகளினால் நீதிமானாக முடியாது. தன் பாவங்களுக்காக மனம் வருந்தி, விசுவாசத்தினாலே கிறிஸ்துவண்டை திரும்புவதன் மூலம் மட்டுமே நீதிமானாக முடியும். நாம் கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது அவர் நமது குற்றத்தை, நமது தண்டனையை அகற்றிப் போடுகிறார்.*

*நமது குற்றம், ஒரு பாவமுமறியாத குற்றமற்ற இயேசு கிறிஸ்துவின் மேல் சுமத்தப் படுகிறது, கிறிஸ்துவின் நிமித்தமாக நாம் நீதிமான்களாகிறோம். விசுவாசத்தினாலே கிறிஸ்துவின் நீதியைப் பெற்றுக் கொள்கிறோம். கிறிஸ்து நம்மை தேவனுக்கு முன்பாகக் கொண்டு வந்து, அவரிடம் "இவனுடைய பாவங்களுக்காக நான் மரித்திருக்கிறேன். இனி இவனைத் தண்டிக்க வேண்டியதில்லை. இவன் பாவமற்றவனாகக் கருதப் படலாம்" என்று சொல்கிறார். அப்பொழுது தேவன் நம்மைத் தமது பார்வையில் நீதிமான்கள் என்று தீர்த்து நம்மைத் தமது குடும்பத்தில் ஏற்றுக் கொள்கிறார் (மாற்கு 10:45; ரோமர் 3:24-26; கலாத்தியர் 2:15-16 மற்றும் குறிப்புரைகள் பார்க்க). ஆகவே, தேவன் நம்மை நீதிமான்களாக்கும் போது பாவத்தின் தண்டனையிலிருந்து நம்மை விடுவித்து விடுகிறார். நமது*

பாவத்தை முற்றிலுமாக மன்னித்துப் போடுகிறார். நாம் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 5:1 மற்றும் குறிப்புரை பார்க்க). நாம் இனி ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவதில்லை (ரோமர் 8:1 மற்றும் குறிப்புரை பார்க்க).

## 42. Righteousness - நீதி

வேதத்தில் நீதி என்பது தேவ நீதியையே குறிக்கும். தேவனுடைய நியாயப் பிரமாணத்தை, குறிப்பாக பத்துக் கட்டளைகளையும் (யாத்திராகமம் 20:3-17), தேவனிலும், பிறனிலும் அன்பு கூர வேண்டும் என்ற இரு பிரதான கற்பனைகளையும் (மாற்கு 12:30-31) படிப்பதன் மூலம் தேவ நீதியை அறிந்து கொள்ளலாம். நியாயப் பிரமாணமும், கட்டளைகளும் எல்லா மனிதர்களின் நடத்தைக்குமான தேவனுடைய நெறிமுறைகளாகும். யாரும் தன்னில் தானே நீதியுள்ளவர்கள் அல்லர் (ரோமர் 3:10). தேவனுடைய பார்வையில் "நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல் இருக்கிறோம்; எங்களுடைய நீதிகள் எல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது" (ஏசாயா 64:6). கிறிஸ்து ஒருவர் மட்டுமே பூரண நீதிபரர். நாம் அவரை விசுவாசிக்கும் போது அவருடைய நீதியில் பங்கடைகிறோம். தேவனுடைய பார்வையில் ஏற்கப் படத் தக்கவர்கள் ஆகிறோம்.

நீதியை அடைவதில் இரண்டு படிகள் உள்ளன. முதலாவது, விசுவாசத்தினாலே கிறிஸ்துவின் நீதியைப் பெற்று, தேவனாலே நீதிமான்கள் என்று தீர்க்கப்படுகிறோம் (சொல் வரிசை: நீதிமான் பார்க்க). இரண்டாவது, பரிசுத்த ஆவியானவரின் (சொல் வரிசை: பரிசுத்த ஆவியானவர் பார்க்க) கிரியையினாலே நமது நடத்தையிலும் செய்கைகளிலும் கிறிஸ்துவின் நீதி இன்னும்

அதிகமதிகமாகப் புலப்பட ஆரம்பிக்கிறது. நமது அன்றாட வாழ்வுகளில் இன்னும் அதிகப் பரிசுத்தமும் நீதியும் உள்ளவர்களாகிறோம்.

## 43. *Rome* - ரோமாபுரி

இன்று ரோம் நகரம் ஐரோப்பிய நாடான இத்தாலியின் தலைநகராக விளங்குகிறது. இயேசுவின் காலத்தில் ரோமாபுரி ரோமப் பேரரசின் தலைநகராக இருந்தது (சொல் வரிசை: ரோமப் பேரரசு பார்க்க).

## 44. *Roman Empire* - ரோமப் பேரரசு

ரோமப் பேரரசு கி.மு. 31இல் நிறுவப் பட்டது, நானூறு ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்திருந்தது. கிறிஸ்துவின் நாட்களில் ரோமர்கள் மத்திய தரைக் கடலைச் சூழ்ந்திருந்த எகிப்து, இஸ்ரேல், சிரியா, துருக்கி மற்றும் கிரீஸ் போன்ற பெரும்பாலான நாடுகளை ஆட்சி புரிந்தனர். வடக்கே இங்கிலாந்து வரையில் பெரும்பான்மை ஐரோப்பியப் பகுதிகளும் அவர்கள் வசமே இருந்தன.

புதிய ஏற்பாட்டுக் காலங்களில் ரோமப் பேரரசிற்கு உட்பட்ட நாடுகள் மாகாணங்களாகப் (காற்பகுதி தேசங்களாகப்) பிரிக்கப்பட்டு, ரோம அதிபதிகளின் ஆளுகையின் கீழ் ஒப்படைக்கப் பட்டிருந்தன. ரோமர்கள் ஒவ்வொரு மாகாணத்தின் உள்ளூர் மக்களுக்கும் உள்ளூர் விஷயங்களில் ஓரளவிற்கு அதிகாரம் அளித்திருந்தனர். ஆரம்பத்தில் அந்தந்த மாகாணத்து மக்கள் தங்கள் தங்கள் கலாச்சாரங்களைப் பின்பற்றவும் தங்கள் தங்கள் மதவழிபாடுகளைக் கடைபிடிக்கவும் அனுமதித்தனர்.

*ஆனால் பவுலின் நாட்களில், ரோமப் பேரரசர்கள் பேரரசுக்குட்பட்ட எல்லா மக்களும் பேரரசரையே கடவுளாக வணங்க வேண்டும் என்று கட்டளையிட்டனர். யூதர்களும் கிறிஸ்தவர்களும் இதற்கு உடன்படவில்லை. எனவே ரோமர்கள் அவர்களைச் சித்திரவதை செய்யத் தொடங்கினர். அப்போஸ்தலனாகிய பவுல் தனது வாழ்வின் இறுதிக் காலத்தை ரோமப் பேரரசின் தலைநகரான ரோமாபுரியில் சிறையிலேயே கழித்தார் (அப்போஸ்தலர் 28:16,20). கி.பி 70இல் ரோமப் படை யூதர்களின் தலைநகரான எருசலேமைச் சூறையாடி, அங்கிருந்த அத்தனை யூதர்களையும் கொன்று போட்டது.*

*எனினும் உபத்திரவத்தின் மத்தியிலும் கிறிஸ்தவத் திருச்சபை வளர்ந்து பெருகியது. ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் ரோமர்களால் கொல்லப்பட்டனர். ரோமர்கள் கிறிஸ்தவர்களை சிங்கங்களுக்கு இரையாக்கியதுடன், சிங்கங்கள் அவர்களைக் கடித்துச் சாப்பிடுவதைப் பார்ப்பதைத் தங்களுக்கு ஒரு பொழுதுபோக்காகவும் கொண்டனர். அப்படி உடனடியாகக் கொல்லப் படாத கிறிஸ்தவர்களை ரோமர்கள் அடிமைகளாக்கிக் கொண்டனர். இருந்த போதிலும், கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருகவே செய்தது. இறுதியாக கி.பி. சுமார் 310 இல், ரோமப் பேரரசனான கான்ஸ்டன்டைன் தானே கிறிஸ்தவனாக மாறினான். அதன்பிறகு கிறிஸ்தவ மதமே ரோமப் பேரரசின் அதிகாரப் பூர்வ மதமாயிற்று. அதன் விளைவாக மத்திய கிழக்கு நாடுகளிலும் ஐரோப்பா முழுவதிலும் பரவிற்று.*

## 45. *Sadducee* - சதுசேயன்

*சதுசேயர்கள் என்போர் கிறிஸ்துவின் நாட்களில் வாழ்ந்த ஒரு முக்கியமான யூத மதப் பிரிவினர். பெரும்பாலான யூதப் பிரதான ஆசாரியர்கள் சதுசேயர்களே. சதுசேயர்கள் சரீர உயிர்த்தெழுதலையோ நித்திய ஜீவனையோ நம்பாதவர்கள். பரிசேயரைப் போலவே இவர்களும் கிறிஸ்துவையும் அவரது சீஷர்களையும் எதிர்த்தனர்.*

## 46. *Saint* - பரிசுத்தவான்

*புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகள் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப் படுகின்றனர்.. ‘‘பரிசுத்தவான்’’ என்றால் ‘‘பரிசுத்தமான அல்லது பிரித்தெடுக்கப்பட்ட ஒருவன்’’. வேதத்திலே பரிசுத்தமாயிருப்பது என்றாலே "நீதிமானாகவும்' தேவனுக்காகப் "பிரித்தெடுக்கப் பட்டவனாகவும் இருப்பது என்றுதான் பொருள்படும்.*

*இவ்விதமாக, கிறிஸ்தவர்கள் எனப்படுவோர் விசுவாசத்தினாலே கிறிஸ்துவின் நீதியைப் பெற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியானவராலே பரிசுத்த வாழ்க்கை வாழத் தொடங்கியுள்ள மக்கள் ஆவர். இப்படிப்பட்ட மக்கள் உண்மையாகவே தேவனுக்காகப் "பிரித்தெடுக்கப் பட்டவர்கள்." இவர்கள் பாவத்திலிருந்தும் சாத்தானின் வல்லமையிலிருந்தும் வேறு பிரிக்கப்பட்டவர்கள்.*

# 47. Salvation - இரட்சிப்பு

புதிய ஏற்பாட்டிலே, இரட்சிப்பு என்பதற்குப் பரந்த அர்த்தம் உண்டு. சுருங்கச் சொன்னால், அது தேவனுடைய நியாயத் தீர்ப்புக்குத் தப்புவிக்கப் படுவதும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதுமாகும் (சொல் வரிசை : மீட்பு பார்க்க).

இரட்சிப்பு என்ற வார்த்தையில் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் அடங்கியுள்ளன. முதலாவது, இரட்சிப்பு என்றால் பாவத்திலிருந்து, அதாவது பாவத்தின் வல்லமை மற்றும் நித்திய மரணம் என்ற பாவத்தின் தண்டனை ஆகிய இரண்டிலிருந்தும் விடுதலையாவது (ரோமர் 6:23). ஒருவன் இரட்சிக்கப் படும்போது பாவ மன்னிப்பை அடைந்து, தன் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கவும் படுகிறான். இப்படியாக அவன் தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப் படுகிறான் (சொல் வரிசை: நீதிமான் பார்க்க). தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாகிறான் (சொல் வரிசை: புத்திர சுவிகாரம் பார்க்க). அவன் பரிசுத்தமாக்கப்பட்டு மகிமையும் அடைகிறான் (ரோமர் 8:30 மற்றும் குறிப்புரை பார்க்க). ஆனால் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களில் எல்லாம் மிக மேன்மையானது மோட்சத்தில் தேவனோடும் கிறிஸ்துவோடும் வாழும் நித்திய வாழ்க்கையே (சொல் வரிசை : நித்திய ஜீவன் பார்க்க). நாம் இரட்சிக்கப் படும்பொழுது கிறிஸ்துவுக்குள் இந்த ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்கிறோம் (எபேசியர் 1:3).

இரட்சிப்பை அடைய ஒரேயொரு வழி தான் உண்டு; அது இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதே; இதைத் தவிர வேறெந்த வழியும் கிடையாது (பொதுவான தலைப்பு: இரட்சிப்பின் வழி - பார்க்க).

## 48. Sanhedrin - சனகெரிப்

சனகெரிப் சங்கம் என்பது யூத நாட்டின் மிக உயர்ந்த அதிகாரம் படைத்த ஆளும் கவுன்சில் ஆகும். இந்தச் சங்கத்தின் தலைவன் பிரதான ஆசாரியன் ஆவான். புதிய ஏற்பாட்டுக் காலங்களில் சனகெரிப் சங்கம் யூதர்களின் உள்ளூர் மற்றும் சமய விஷயங்கள் அனைத்தின் பேரிலும் அதிகாரம் செலுத்தியது. என்றாலும், சனகெரிப் சங்கம் ரோமர்களுக்கு எதிராக எதையும் செய்ய அனுமதிக்கப்படவில்லை. எந்தக் குற்றவாளிக்கும் மரண தண்டனை விதிக்கும் அதிகாரமும் யூதத் தலைவர்களுக்கு அளிக்கப் படவில்லை. ஆகவேதான் இயேசு ரோம கவர்னரான பொந்தியு பிலாத்துவின் ஆணையின் பேரில் கொல்லப் பட்டார்.

சனகெரிப் சங்கம் பிரதான ஆசாரியனைத் தவிர, எழுபது உறுப்பினர்களைக் கொண்டது. இந்த உறுப்பினர்கள் யூத நாட்டின் தலைவர்கள் மற்றும் மூப்பர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

## 49. Satan - சாத்தான்

சாத்தான் என்பவன் சகல அசுத்த ஆவிகளுக்கும் அதாவது சகல பிசாசுகளுக்கும் தலைவன் (சொல் வரிசை: பிசாசு பார்க்க). தேவனுக்கும் மனிதர்களுக்கும் தலையாய எதிரி இவனே. சாத்தான் ஒரு விழுந்து போன தூதன்; அவனது பெரிய பாவம் பெருமையே. அவன் தன்னைத் தேவனுக்கு ஒப்பாக்க முயன்றான், தேவனோ அவனை மோட்சத்திலிருந்து துரத்தி விட்டார் (ஏசாயா 14:11-15; 1 தீமோத்தேயு 3:6). சாத்தானுடைய முக்கிய வேலை மனிதர்களைப் பாவம் செய்ய வைப்பதே, அதாவது

தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கத் தூண்டுவது. இதை அவன் மனிதர்களை வஞ்சிப்பதன் மூலமும், அவர்களுடைய தீய ஆசைகளைக் கிளறி விடுவதன் மூலமும், அவர்களது விசுவாசத்தைத் தளரச் செய்வதன் மூலமும் சாதிக்கிறான்.

சாத்தானுக்குப் புதிய ஏற்பாட்டில் பல பெயர்கள் உண்டு. அவன் பிசாசு (வெளிப்படுத்துதல் 12:9) என்றும், சகோதரரர் மேல் குற்றம் சாட்டுகிறவன் (வெளிப்படுத்தல் அழைக்கப் படுகிறான்; அவன் எதிராளி என்றும் கெர்ச்சிக்கிற சிங்கம் என்றும் 12:10) என்றும் பெயர் பெறுகிறான் (மாற்கு 5:8); பெயல் செபூல் என்றும் (மாற்கு 3:22), சோதனைக் காரன் என்றும் (மத்தேயு 4:3), பொய்க்குப் பிதா என்றும் (யோவான் 8:44) இந்த உலகத்தின் அதிபதி என்றும் (யோவான் 12:31) அழைக்கப் படுகிறான்.

சாத்தானுக்கு ஏராளமான வல்லமை இருந்த போதிலும், அவன் தேவனுடைய அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டவனே. தேவன் அனுமதிக்கின்ற அளவுக்கு மட்டுமே அவனால் எதையும் செய்ய முடியும் (யோபு 1:12; 2:6; லூக்கா 22:31). பரிசுத்த ஆவியானவரின் உதவியால் நாம் சாத்தானை மேற்கொள்ள முடியும். நாம் அவனுக்கு எதிர்த்து நிற்போமானால் அவன் ஓடிப் போவான் (யாக்கோபு 4:7 மற்றும் குறிப்புரை பார்க்க). அவன் ஏற்கனவே சிலுவையில் இயேசுவிடம் தோற்றுப் போனவன் (எபிரெயர் 2:14- 15), எனினும் இவ்வுலகத்தில் ஓரளவு வல்லமை அவனுக்கு உண்டு. உலகத்தின் முடிவிலோ, கிறிஸ்து மீண்டும் வரும்போது சாத்தான் முறியடிக்கப் பட்டு அக்கினிக் கடலிலே தள்ளப் படுவான் (வெளிப்படுத்தல் 20:7-10).

# 50. Temptation - சோதனை

வேதத்திலே சோதனை என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. சோதனை என்ற சொல் வரும் வசனங்களில் எல்லாம், இரண்டு அர்த்தங்களில் அது எதைக் குறிக்கிறது என்பதை அவ்வசனங்களின் பின்னணியைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும்.

சோதனை என்பதன் முதலாவது அர்த்தம் பரீட்சை என்பது. தமது மக்களை மேம்படுத்தும், பெலப்படுத்தும், சீர்ப்படுத்தும் பொருட்டு தேவன் அவர்களைப் பரிசோதித்து, பரீட்சித்து அறிகிறார். அவர்களுக்குப் பல்வேறு இடர்பாடுகள் நேரிட அனுமதிப்பதன் மூலம், அவர்களைப் பல்வேறு கடினமான சூழ்நிலைகளில் வைப்பதன் மூலம் இதைச் செய்கின்றார்.

பழைய ஏற்பாட்டிலே, தேவன் ஆபிரகாமிடம் அவனது ஒரே குமாரனான ஈசாக்கைத் தமக்குப் பலியிடச் சொன்னதன் மூலம் அவனைச் சோதித்தார் (ஆதியாகமம் 22:1-19). தேவன் யோபுவை எப்படிச் சோதித்தார் என்பதை யோபுவின் புத்தகத்தில் விவரமாகக் காணலாம். யோபு தேவனைப் பற்றி, "அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்' (யோபு 23:10) என்று கூறினான். இவ்விதமாகவே தேவன் எல்லாக் கிறிஸ்தவர்களையும் சோதித்தறிந்து, அவர்களைச் சிட்சிக்கிறார் (1 கொரிந்தியர் 11:32; எபிரெயர் 12:4-11; யாக்கோபு 1:2,12; 1 பேதுரு 1:6-7 மற்றும் குறிப்புரைகள் பார்க்க). இந்த எல்லா உதாரணங்களிலுமே, நாம் இன்னும் அதிகப் பரிசுத்தமாக வேண்டும் என்பதற்காக, நமது ஆவிக்குரிய நன்மைக்காக தேவன் நம்மைச் சோதித்தறிகிறார். நம்மைச் சோதிக்கும் போது தேவன் தாமே தமது பிள்ளைகள் மேல் தீமையை

அனுப்பாமல், சாத்தான் அவர்கள் மேல் தீமையை அனுப்ப அவனுக்கு இடம் கொடுக்க மட்டுமே செய்கிறார்.

வேதத்தில் காணப்படும் சோதனை என்ற பதத்தின் மற்றொரு அர்த்தம் தீமை செய்ய வேண்டும் அல்லது பாவம் செய்ய வேண்டும் என்ற ஆசையாகும். இந்தத் தீய ஆசைகள் மனிதனின் பாவ சுபாவத்திலிருந்து அல்லது இருதயத்திலிருந்து எழுபவை (யாக்கோபு 1:13- 15 மற்றும் குறிப்புரை பார்க்க). நம்மைப் பாவம் செய்ய வைத்து, தேவனை விட்டுத் திருப்ப வேண்டும் என்பதற்காக சாத்தான் ஓயாமல் நமது இருதயங்களில் இவ்விதத் தீய ஆசைகளைக் கிண்டி விட்டுக் கொண்டே இருக்கிறான். சாத்தான் சோதனைக்காரன் என்றே அழைக்கப்படுகிறான் (மத்தேயு 4:3; 1 தெசலோனிக்கேயர் 3:5).

சாத்தான் ஏவாளைச் சோதித்தான் (ஆதியாகமம் 3:1-6). அவன் கிறிஸ்துவையும் சோதித்தான் (மத்தேயு 4:1-11), ஆனால் அவனால் அவரைப் பாவம் செய்ய வைக்க முடியவில்லை (எபிரெயர் 2:18; 4:15 பார்க்க). இந்த இரண்டாவது விதமான சோதனை (பாவம் செய்யத் தூண்டும் சோதனை), ஒருபோதும் தேவனிடமிருந்து வருவதில்லை, அது ஒரு நாளும் நமக்கு நன்மையும் செய்யாது. தீமை செய்ய வேண்டும் என்ற சோதனை எப்பொழுதும் சாத்தானிடமிருந்தே வருகிறது. இவ்வித சோதனைகளிலிருந்து தப்புவிக்கப் பட நாம் ஜெபிக்க வேண்டியது அவசியம்: ஆண்டவரே, எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும் (மத்தேயு 6:13).

முதல் விதமான சோதனையை அதாவது, பரீட்சையை நாம் பொறுமையோடே சகிக்க வேண்டும். இரண்டாவது விதமான சோதனையை, அதாவது பாவம்

செய்யும் ஆசையை எதிர்த்து நின்று மேற்கொள்ள வேண்டும்.

**தாமஸ் ஹேல்**

# பொதுவான தலைப்புகளுக்கு ஒரு முன்னுரை

# 1. பொதுவான தலைப்புகளுக்கு ஒரு முன்னுரை

ஒவ்வொரு கிறிஸ்தவனும் விசுவாசித்தேயாக வேண்டிய சில காரியங்கள் உண்டு. இவை “அடிப்படை சத்தியங்கள்" *(Cardinal doctrines)* என்று அழைக்கப்படுகின்றன, அதாவது மெய்க் கிறிஸ்தவனாக இருக்க விரும்பும் ஒவ்வொருவரும் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான, மையமான கொள்கைகள் இவை. இவற்றைப் பல்வேறு விசுவாசப் பிரமாணங்களில் காணலாம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் கீழ்க்கண்டவற்றை விசுவாசிக்கின்றான்:

1. தேவன் ஒருவரே - பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று நபர்களும் - ஒரே தேவனே.
2. வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள ஒரே பிதா உண்டு.
3. பிதாவின் ஒரே பேறான குமாரன் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே. இவர் நித்தியமாகப் பிதாவோடே கூட இருந்தவர், நமது இரட்சிப்புக்காக மாம்சத்தில் வெளிப்பட்டார், முழுமையான தேவனாக இருந்தவாறே முழுமையான மனிதனாகவும் இருந்தார்.
4. இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவராலே உற்பவித்து, கன்னி மரியாளிடம் பிறந்து, நமது பாவங்களுக்காகத் தமது இரத்தத்தைச் சிந்தி சிலுவையிலே மரித்தார்.
5. இயேசு தமது சரீரத்திலே மீண்டும் உயிரோடு எழுந்து, பரத்திற்கு ஏறிச் சென்றார்.

*உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயம் தீர்ப்பதற்காகத் திரும்பவும் வரப் போகிறார்.*

6. *பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் நம்மோடு கூட இருக்கிறார், உலகத்துக்குப் பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறார். பூமியின் மீதுள்ள கிறிஸ்துவின் சரீரமாம் உலகளாவிய திருச்சபையைப் பலப்படுத்துகிறார்.*
7. *எல்லா மனிதர்களும் சுபாவத்தின் படி பாவம் உள்ளவர்கள், இயேசு கிறிஸ்து செய்த பாவ நிவிர்த்தியின் மூலமாகப் பாவ மன்னிப்பும், பரிசுத்த ஆவியானவரால் புதுப் பிறப்பும் அடைய வேண்டிய நிலையில் இருப்பவர்கள். இதெல்லாம் தேவ கிருபையினாலே விசுவாசத்தின் மூலமாக இலவசமாய் வழங்கப் படுகின்றது.*
8. *வேத புத்தகம் தேவ ஆவியானவரால் ஏவியருளப்பட்டது, நமது இரட்சிப்புக்கு அவசியமான அனைத்தையும் உள்ளடக்கியது, நமது விசுவாசத்துக்கு அறுதியான நெறிமுறை அதுவே.*
9. *எல்லா விசுவாசிகளின் சரீரங்களும் தேவனோடு என்றென்றுமாய் வாழ்கின்ற நித்திய வாழ்வுக்காக மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்படும்.*

எனினும், இந்த ஒன்பது தலையாய கொள்கைகளுக்கும் மேலாக, மெய்க்கிறிஸ்தவர்கள் கருத்து உடன்படாத வேறு சில இரண்டாம் நிலைக் கொள்கைகளும் உண்டு. இந்த இரண்டாம் நிலை சத்தியங்கள் நமது அடிப்படை சத்தியமான சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை என்பதைக் கொஞ்சமும் மாற்றுவதில்லை (1கொரிந்தியர் 2:2). இந்த இரண்டாம் நிலைக் கொள்கைகள் திருச்சபையின் சில சடங்குகள், பழக்க வழக்கங்கள், சில வேத பகுதிகளின் கருத்துக்கள் இவற்றுக்கு அடுத்தவை.

மெய்க் கிறிஸ்தவர்கள் இந்த இரண்டாம் நிலைக் கொள்கைகள் எல்லாவற்றிலும் உடன்படுவதில்லை.

“நாம் வேதத்தை மட்டும் பார்த்தால் போதாதா? வேதம் என்ன கூறுகின்றதோ அதை எழுத வேண்டியது தானே?” என்று சிலர் கேட்கலாம். ஆனால் அது தானே பிரச்சனையே! வேதம் என்ன கூறுகின்றது? ஒரே வசனத்தை வெவ்வேறு கிறிஸ்தவர்கள் வெவ்வேறு விதமாக அர்த்தம் கொள்கின்றனர். அதோடு, நாம் கேட்கின்ற எல்லாக் கேள்விகளுக்குமே வேதாகமம் பதிலளித்து விடுவதுமில்லை. இவற்றில் அநேக விஷயங்களில் யார் கூறுவது சரியான கருத்து என்று உறுதிபட அறிவதே இயலாததாய் இருக்கிறது. இந்த இரண்டாம் நிலை விஷயங்களில் வேதம் தெள்ளத் தெளிவாக இருக்குமானால், கிறிஸ்தவர்களிடையே இத்தனை அபிப்ராய பேதங்கள் நிலவவே வாய்ப்பில்லை. அநேக மெய்க் கிறிஸ்தவர்கள் சரியானது என்று உணரும் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறாமல் விடுவது வேதத்தை உண்மையாகவே கற்றறிய விரும்பும் ஒருவனுக்கு நாம் அநீதி இழைப்பதாகி விடும். இந்த விளக்கவுரையானது ஒரு வேத தியானத் துணைவன் மட்டுமே அன்றி, எந்தவொரு சபை அல்லது சபைப் பிரிவின் உபதேசச் சட்டமோ, விசுவாச அறிக்கையோ ஆகாது.

தொடர்ந்து வருகின்ற பொதுவான தலைப்புகளில் பெரும்பாலானவை, மெய்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்ற இந்த இரண்டாம் நிலைக் கொள்கைகள் பற்றியவையே. இந்தக் கட்டுரைகளில் ஒரு வேதபாட மாணவன் எல்லாவற்றுக்கும் மேலான இடத்தை வேத வசனத்துக்கே கொடுக்க வேண்டும். ஆகவே, சர்ச்சைக்குரிய கட்டுரைகளில் அந்த விஷயம் பற்றிய வேத வசனங்கள் முதலில் கொடுக்கப் பட்டுள்ளன. பிறகு அந்த

*விஷயம் பற்றிய ஒரு விளக்கமும், பல்வேறு கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள வெவ்வேறு கண்ணோட்டங்களும் தரப் படுகின்றன. வேதத்தைக் கற்றறிய விரும்பும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சபையின் நம்பிக்கைகளையும், பாரம்பரியங்களையும் பற்றி மேலும் அறியத் தங்கள் போதகரிடம் செல்ல வேண்டும். இந்தக் கேள்விகளைப் பற்றிய பேச்செடுத்தாலே பிரிவினை வந்து விடும் எனச் சிலர் அஞ்சலாம். மாறாக, இவ்விஷயங்களைப் பற்றிய அறியாமையே பிரிவினைக்கு வித்திடும். மற்றக் கிறிஸ்தவர்களின் கருத்துக்கள் பற்றி அறியாதிருப்பது, கருத்து வேறுபாடுகளுக்கும், மனத் தாங்கல்களுக்கும் எளிதில் வழிவகுக்கும், அது பிரிவினைக்கு நடத்தி விடும். திருச்சபை வரலாற்றைக்*

*கவனித்தால், பிறரது கருத்துக்கள் பற்றிய அறியாமை அல்லது சகிப்புத் தன்மையின்மையே சபைகள்*

*உடையக் காரணம் என்பது தெளிவாகும். இந்தக் கட்டுரைகளின் ஒரு முக்கியக் கருத்து, இந்த இரண்டாம் நிலைக் கொள்கைகளில் கருத்து வேறுபட்ட போதிலும் ஒருவர் மெய்யான ஆவிக்குரிய கிறிஸ்தவராக இருக்க முடியும் என்பதே. இதை நாம் ஏற்றுக் கொள்வோமானால், மனக் கசப்புகளும் குற்றச்சாட்டுகளும் மங்கி மறைந்து விடும். முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவர்கள் இவ்வகை விஷயங்களில் அபிப்ராய பேதங்களை ஏற்றுக் கொள்ளப் படித்திருக்கின்றனர். அநேக சபைகளிலும், கிறிஸ்தவ நிறுவனங்களிலும் வெகுவாக வேறுபட்ட நம்பிக்கைகள் உடைய மெய்க் கிறிஸ்தவர்கள் ஐக்கியம் கொள்ளவும், தேவ நாம மகிமைக்கென்று ஒன்று கூடி ஆராதிக்கவும், ஜெபிக்கவும், உழைக்கவும் கற்றுக் கொண்டிருக்கின்றனர்.*

*நம்மில் யாருமே எண்ணத்திலும், செயலிலும் பூரணப் பட்டவர்கள் அல்லர், ஆனால் யாவருமே இலக்கை நோக்கி முன்னேற வேண்டும். ஆகையால் நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாய் இருக்கக் கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாய் இருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு, ஒரே சிந்தையாய் இருப்போமாக (பிலிப்பியர் **3:15-16**).*

# 2. இயேசு கிறிஸ்து

## இயேசு கிறிஸ்து அவர் யார்?

இயேசுவுக்கு அநேகப் பெயர்களும் பட்டப் பெயர்களும் உண்டு. "இயேசு'' என்றால் ''இரட்சிப்பவர்'' என்று பொருள். பொதுவாக ''கிறிஸ்து'' என்ற பெயரையும் சேர்த்தே வழங்குகிறோம். "கிறிஸ்து'' என்பது ஒரு கிரேக்கச் சொல், "மேசியா'' என்ற எபிரேயப் பதத்திற்கு இணையானது. "கிறிஸ்து'', ''மேசியா" என்னும் இரண்டு பெயர்களுமே ''அபிஷேகிக்கப் பட்டவர்'' அல்லது "ஒரு குறிப்பிட்ட பணிக்காகத் தேவனால் அபிஷேகிக்கப் பட்ட ஒருவர்'' என்று பொருள் படும். இயேசு இவ்வுலகத்திற்கு வருவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பாகவே யூதர்கள் "மேசியாவின்" வருகைக்காகக் காத்திருந்தனர். ஏசாயா தீர்க்கதரிசி தமது மக்களின் பாவங்களையும் துக்கங்களையும் சுமந்து தீர்க்கப் போகின்றவர் என்று வாக்களிக்கப் பட்ட மேசியாவைப் பற்றி எழுதியிருந்தார் (ஏசாயா 53:1-12).

இந்த மேசியா வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்றெல்லாம் அழைக்கப் படுவார் (ஏசாயா 9:6) என்றும் கூட அவர் சொன்னார், ஆயினும் யூதர்களோ ரோமாபுரியின் அடிமைத் தனத்திலிருந்து தங்களை விடுவிக்கக் கூடிய ஒரு இராஜாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்; மேசியா, தேவனே மனிதனாக பூமிக்கு வருபவராக இருப்பார் என்றோ, அல்லது சிலுவை மீது மரிப்பார் என்றோ அவர்கள் நம்பவில்லை. "தேவ குமாரன்" மற்றும் "மனுஷ குமாரன்'' என்னும் பதங்கள் இயேசுவைக் குறிக்கும் வேறு சில பெயர்கள் (மாற்கு 2:10; யோவான் 1:14,18,34; 5:25-27 மற்றும் குறிப்புரைகள் பார்க்க). "தேவ குமாரன்" என்பது பொதுவாக இயேசுவின் தெய்வீகத்தை

வலியுறுத்துவது. "மனுஷகுமாரன்" என்பது பொதுவாக அவர் மேசியா என்பதைக் குறிப்பது. பழைய ஏற்பாட்டிலே மேசியா "மனுஷ குமாரன்" என்றே அழைக்கப் பட்டார் (தானியேல் 7:13-14). மேசியாவான இந்த "மனுஷ குமாரன் பரத்திலிருந்து வந்திருந்த போதும், தம்மை தேவனாக ஆராதித்ததை ஏற்றுக் கொண்ட போதும், தமது மனுஷத் தன்மையை வலியுறுத்த எண்ணிய போதெல்லாம் "மனுஷ குமாரன்" என்ற பதத்தையே பயன் படுத்தினார் (மத்தேயு 8:20; 11:19; 17:22-23). இந்தப் பதங்கள் மத்தேயு 26:63-65 இல் இடம் மாற்றியும் பயன்படுத்தப் படுகின்றன.

இயேசு கிறிஸ்துவைப் பற்றி இரு காரியங்களை நாம் மனதில் கொள்ள வேண்டும் : முதலாவது, இயேசு முழுக்க முழுக்க மனிதர்; இரண்டாவது, இயேசு முழுக்க முழுக்க தேவனும் ஆவார். இயேசு மனிதனும் தேவனுமானவர் (ரோமர் 1:3-4).

## இயேசு தேவனே

இயேசுவிடம் தெய்வீகப் பண்புகள் உள்ளன. அவர் நித்தியமானவர், என்றென்றுமாய் தேவனோடு இருந்தவர் (யோவான் 1:1-2; 17:1-5). இயேசு சிருஷ்டிப்பில் பங்கு கொண்டார் (யோவான் 1:3; கொலோசெயர் 1:16-17; எபிரெயர் 1:2). தேவன் இயேசுவில் இருந்தார், இயேசு தேவனில் இருந்தார் (யோவான் 14:10; 17:21,23). இயேசு தேவனுடைய ஒரே பேறான குமாரன் என்றும் முதற்பேறானவர் என்றும் அழைக்கப் படுகின்றார் (யோவான் 3:16,18; கொலோசெயர் 1:15,18; எபிரெயர் 1:6).

இன்னும் குறிப்பாக, இயேசு பிதாவை வெளிப்படுத்தினார் (யோவான் 1:18; 14:9) என்றும், அவர் "அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமானவர்"

(கொலோசெயர் 1:15) என்றும், ‘‘அவருடைய தன்மையின் சொரூபமானவர்" (எபிரெயர் 1:3) என்றும் வேதம் கூறுகிறது. இயேசுவும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறார்கள் என்றும் (யோவான் 10:30; 17:11,12) அதாவது அவர் தேவனுக்குச் சமமானவர் என்றும் (பிலிப்பியர் 2:6) வேதம் தெரிவிக்கிறது. இயேசுவே தேவன் என்று உரைக்கப் பட்டுள்ளது (யோவான் 1:1; ரோமர் 9:5; எபிரெயர் 1:8). இயேசு ஓரளவுக்கு தேவன் என்பதல்ல, அவர் தேவத்துவத்தின் பரிபூரணம் (கொலோசெயர் 1:19; 2:9), முழுமையானவர். இயேசு முழுக்க முழுக்க தேவனே.

**இயேசு மனிதனே**

ஆனால் இயேசு முழுமையான மனிதரும் கூட. அவர் பரிசுத்த ஆவியானவராலே உற்பவித்திருந்த போதிலும் அவருக்கு உலகப் பிரகாரமான தாய் இருந்தாள், இவ்வுலகிலே அவர் ஒரு குழந்தையாகவே வந்து பிறந்தார் (மத்தேயு 1:20; லூக்கா 1:34-35). இயேசு தேவனாய் இருந்த போதிலும் அவர் ‘‘மனுஷ சாயலானார்" (பிலிப்பியர் 2:7). அவர் மனிதரால் காணப் பட்டார், மனிதரால் தொடப் பட்டார் (யோவான் 1:1-2), மற்ற மனிதர்களைப் போலவே அவரும் பசியும் தாகமும் அடைந்தார். களைப்புற்றார்; மனிதர்களைப் போலவே அழுதார். எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப் பட்டார் (எபிரெயர் 4:15). நம்மைப் போலவே, தேவன் தமக்கு எதையும் வெளிப்படுத்தாத பட்சத்தில் இயேசுவும் எதிர்காலத்தைக் குறித்து அறியாதவராகவே இருந்தார் (மாற்கு 13:32).

இயேசு முழுமையான மனிதனானார் என்று நம்ப வேண்டியது மிக அவசியம். உண்மையாகவே தேவ ஆவிதானா என்பதைப் பரீட்சித்து அறியும் சோதனையே இதுதான் என்கிறார் யோவான். மாம்சத்தில் வந்த இயேசு

*கிறிஸ்துவை அறிக்கை பண்ணாதவர்கள் வஞ்சக ஆவி உடையவர்கள், கள்ளத் தீர்க்கதரிசிகள் (1யோவான் 4:1-2).*

*இயேசுவைப் பற்றிய வேதப் புரட்டுக்கள் ஆதியிலிருந்தே இயேசுவைப் பற்றிக் கள்ளப் போதனைகளைக் கற்பித்த மக்களால் திருச்சபை மிகுந்த பிரச்சனைகளை எதிர்கொண்டு வந்துள்ளது. இன்றும் கூட இயேசுவைக் குறித்த தவறான போதனைகளால் வழி தப்பிப் போகிறவர்கள் இருக்கவே செய்கின்றனர். இந்தக் கள்ளப் போதனைகளை மூன்று பெரும் கருத்துகளாகப் பிரிக்கலாம்.*

***முதலாவது தவறான கருத்து, இயேசு தேவனே அல்லர், வெறும் மனிதனே என்பதாகும்.*** *இந்தக் கருத்துடையவர்கள் இயேசு ஒரு தலைசிறந்த அறநெறிப் போதகர் என்றும், அவர் தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டவர் என்றும் மட்டுமே ஏற்றுக் கொள்கின்றனர், இயேசு தேவன் என்பதை ஏற்க மறுக்கின்றனர்.*

***இரண்டாவது தவறான கருத்து இதற்கு நேர் எதிரிடையானது;*** *அதாவது, இயேசு தேவனே இருப்பது போன்ற - மனிதரே அல்லர் என்பது. சிலர் இயேசு ஓர் ஆவி மட்டுமே, மற்ற மக்களுக்கு சரீரம் எதுவும் அவருக்குக் கிடையாது என்கின்றனர். சிலர் இயேசுவின் ஆவி மானிட ஆவியல்ல, அது மானிட உருவில் காணப்பட்ட தேவனுடைய சொந்த ஆவியே என்று கூறுகின்றனர். ஆனால் இதுவும் உண்மையல்ல, ஏனெனில் இயேசு மானிட சரீரத்தில் மானிட ஆவி கொண்டு வாழ்ந்த ஒரு முழுமையான மனிதரே (எபிரெயர் 2:17-18).*

***மூன்றாவது தவறான கருத்து, இயேசு தெய்வம் தான், ஆனால் பிதாவாகிய தேவனை விடச் சற்று குறைவு பட்டவர் என்பது.*** *இக்கருத்து படைத்தவர்கள் சரீரம்*

அசுத்தமானது, பாவமுள்ளது, மெய்யான தேவன் மானிட சரீரத்தில் வாசம் பண்ணவே முடியாது என்று கூறுகின்றனர். எனவே இயேசு பிதாவினால் அனுப்பப் பட்ட ஒரு குட்டிக் கடவுள், அவரே தேவன் என்பது சரியல்ல என்கின்றனர். இவ்வகை மக்கள் (இவர்கள் மெய்க் கிறிஸ்தவர்கள் அல்லர்) பிதா என்னிலும் பெரியவராய் இருக்கிறார் (யோவான் 14:28) என்று இயேசு சொன்ன வசனங்களைத் தங்கள் கருத்துக்கு ஆதரவாகச் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால் அங்கே இயேசு தாம் குமாரனாக இப்பூவில் அவதரித்ததைப் பற்றிப் பேசிய பொழுது மட்டுமே பிதா தம்மிலும் பெரியவர் என்று குறிப்பிட்டார். வேறொரு இடத்தில் “நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம்" என்றார் (யோவான் 10:30). “என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றும் சொன்னார் (யோவான் 14:9). இயேசு ஆதியிலே தேவனோடிருந்தார் என்றும் அவர் தேவனாயிருந்தார் என்றும் யோவான் திட்டவட்டமாக உரைக்கிறார் (யோவான் 1:1). ஆகவே நாம் மேலே கண்ட வண்ணமாக, இயேசு முழுமையான தேவனாகவும், முழுமையான மனிதனாகவும் இருக்கின்றார்.

## இயேசு கிறிஸ்துவின் கிரியை

இயேசு உலகத்தைப் படைத்தவரும் பாதுகாப்பவரும் ஆவார் (யோவான் 1:3,10; கொலோசெயர் 1:16,17; எபிரெயர் 1:2-3). இயேசு பரலோகத்திலே தங்கியிராமல், தமக்கிருந்த மகிமையை விட்டு விட்டு (யோவான் 17:1-5) மனிதனாக வந்தார். இயேசு மனிதனாக அவதரித்ததற்கு இரண்டு முக்கியக் காரணங்கள் உண்டு.

முதல் காரணம், இயேசுவைப் பார்ப்பதில் நாம் தேவன் எப்படிப் பட்டவர் என்பதைப் பார்க்க முடியும் என்பதே. பிதாவாகிய தேவனை ஒருவனும் ஒருக்காலும்

கண்டதில்லை (யோவான் 6:46). ஆனால் இயேசு பிதாவை நமக்கு வெளிப் படுத்தினார் (யோவான் 12:45; 14:7-9). உதாரணமாக, இயேசுவைப் பார்ப்பதன் மூலம், பிதாவானவர் நல்லவர், அன்பு மிக்கவர், நமது பாவங்களை மன்னிப்பவர் என்பதோடு கூட அவர் நமது தேவைகளையும் பிரச்சனைகளையும் குறித்து அக்கறையுள்ளவர் என்பதையும் அறிந்து கொள்கிறோம்.

இயேசு மனிதனாக அவதரிக்க இரண்டாவது காரணம், நமது இரட்சிப்புக்காக அவரது மரணமும் உயிர்த்தெழுதலுமாகும். இயேசு நமது "மீட்பர்" என்று வேதம் கூறுகிறது, அதாவது நமது பாவம் மற்றும் நியாயப் பிரமாணத்தின் சாபத்தினின்று நம்மை மீட்டுக் கொள்பவர் (மாற்கு 10:45; கலாத்தியர் 3:13 மற்றும் குறிப்புரைகள் பார்க்க). இயேசு நமது விடுதலைக்கான விலைக் கிரயத்தைப் பொன்னினாலோ, வெள்ளியினாலோ செலுத்தவில்லை. விலையேறப் பெற்ற தமது சொந்த இரத்தத்தினாலே செலுத்தினார் (1பேதுரு 1:18-19). இந்தக் கிரயம் இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்திற்று (கொலோசெயர் 1:13-14).

பரிசுத்தமான தேவன் பாவத்தை நிராகரிக்கவும் தண்டிக்கவும் வேண்டும். ஆனால் இயேசு தமது சிலுவை மரணத்தினாலே நமது பாவத்தையும் அதற்கான தண்டனையையும் தாமே ஏற்றுக் கொண்டார். ஆகவே, இயேசு நமது பாவ நிவாரணபலி என்று அழைக்கப் படுகிறார், அதாவது பரிசுத்தமான தேவனின் நியாயமான கோரிக்கைகளை இயேசு திருப்திப்படுத்திவிட்டார் (ரோமர் 3:25; 1 யோவான் 2;2). இயேசுவின் பாவ நிவாரண பலி அல்லது கிருபாதார பலி, தேவன் பாவிகளை மன்னிக்கவும் அதே வேளையில் பரிசுத்தராய் இருக்கவும் வகை செய்கிறது.

*ஏனெனில் அவர் பாவத்தைக் கண்டும் காணாதவர் போலிராமல் அதைத் தண்டித்து விட்டார். நமது பாவத்தின் நிமித்தமாக நாம் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டோம், ஆனால் தேவனோ இயேசு கிறிஸ்துவைக் கொண்டும் (2கொரிந்தியர் 5:18) அவரது இரத்தத்தைக் கொண்டும் (ரோமர் 5:1,9-11; கொலோசெயர் 1:20-22) நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கிக் கொண்டார்.*

*இயேசுவின் சிலுவை மரணத்தினாலும், அவர் சிந்திய இரத்தத்தினாலும் நாம் பாவமன்னிப்பை அடைகிறோம், அதாவது, தேவன் நம் பாவங்களைக் கண்டும் காணாதது போல் விடுவதில்லை, அவற்றை அகற்றிப் போடுகிறார் (கொலோசெயர் 2:13-14; எபிரெயர் 10:17), நம்மைச் சுத்திகரிக்கிறார் (எபிரெயர் 9:14,22; 1 யோவான் 1:7-9). இயேசு தமது சிலுவை மரணத்தின் மூலமாகப் பிசாசைத் துரத்தியடித்துப் போட்டார் (யோவான் 12:31; எபிரெயர் 2:14-15). இயேசு சிலுவையிலே நமது வியாதிகளையும் சுமந்து தீர்த்தார், அதன் மூலமாக நாம் சரீர சுகத்தையும், பிசாசுகளின் பிடியிலிருந்து அற்புதமான விடுதலையையும் பெற்றுக் கொள்கிறோம் என அநேகக் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர் (ஏசாயா 53:4-5; மத்தேயு 8:16-17; மாற்கு 1:27; பொதுவான தலைப்பு : சரீர சுகமும் விடுதலையும் - பார்க்க)..தமது உயிர்த்தெழுதலின் மூலமாக இயேசு நமக்கும் சரீர உயிர்த்தெழுதலையும் நித்திய ஜீவனையும் அருளுகின்றார் (யோவான் 6:54-58; 11:25-26; 1 கொரிந்தியர் 15:20-22).*

*மேற்கண்ட அனைத்து ஆசீர்வாதங்களையும் இயேசு தமது சிலுவை மரணத்தினாலே நமக்குப் பெற்றுத் தந்தார். இயேசு இன்றும் செய்து கொண்டேயிருக்கும் கிரியை ஒன்றும் உண்டு. பெந்தெகொஸ்தே நாளன்று திருச்சபையைப் பெலனால் தரிப்பிக்கும் படி பரிசுத்த*

ஆவியானவரை உன்னதத்திலிருந்து அனுப்பினார் (யோவான் 14:16-17; 15:26-27; அப்போஸ்தலர் 2:1-4), இன்றும் தமது பரிசுத்த ஆவியானவரை அனுப்பிக் கொண்டேயிருக்கிறார் (மாற்கு 1:7-8; பொதுவான தலைப்பு: பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் - பார்க்க). பரிசுத்த ஆவியானவர் மூலமாகத் தாம் என்றென்றுமாய் நம்மோடு இருப்போம் என்று வாக்கும் கொடுத்திருக்கிறார் (மத்தேயு 18:20; 28; 20; யோவான் 14 : 16-18). இயேசு பரத்திலேயிருந்து நமக்காக ஜெபிக்கிறார், அவர் நமக்காகப் பரிந்து மன்றாடுபவர், நமக்கு ஒத்தாசை செய்பவர் (ரோமர் 8:34; 1 யோவான் 2:1). திருச்சபைக்குத் "தலை"யும் (எபேசியர் 5:23; கொலோசெயர் 1:18), எல்லாவற்றையும் ஆளுகை செய்பவரும் இயேசுவே (மத்தேயு 28:18; எபேசியர் 1:20-22; பிலிப்பியர் 2:9-11).

### கிறிஸ்துவின் ஒப்பற்ற தன்மை

இயேசு மற்ற மதத் தலைவர்களையோ, பிற மதங்களைத் தோற்றுவித்தவர்களையோ போன்றவர் அல்லர். பெரும்பாலான பிற மதத் தலைவர்கள் ஒன்று மனிதராகவோ, அல்லது தெய்வங்களாகவோ கருதப் பட்டுள்ளனர், ஆனால் இவை இரண்டும் ஒருங்கே அமைந்தவர்களாகக் கருதப்பட்டதில்லை. மனிதர்களாகக் கருதப்பட்ட இப்படிப்பட்ட தலைவர்கள் மரித்து மண்ணாகி விட்டனர், அவர்கள் மீண்டும் உயிரோடு வந்ததாக எங்கும் கூறப்படவில்லை.

இயேசு தேவனின் மெய்யான அவதாரம் ஆவார். சிலர் இயேசு ஏதோ பல அவதாரங்களில் ஒரு அவதாரம் என்று எண்ணுகின்றனர். ஆனால் அது உண்மையல்ல. மெய்யான ஜீவனுள்ள தேவனுக்கு ஒரேயொரு அவதாரம் மட்டுமே உண்டு, இது இயேசு கிறிஸ்துவே. ஒரு மெய்யான

அவதாரம், முழுமையான மனித வாழ்க்கை வாழவும், அதே வேளையில் தனது வாழ்க்கையினாலே தான் முழுமையான கடவுள் என்பதை வெளிப்படுத்திக் காட்டவும் வேண்டும் (ரோமர் 1:3-4). மெய்யான அவதாரம் பாவமே அற்றதொரு வாழ்க்கை செய்ய வேண்டும். இயேசு ஒருவரே முழுமையான மனித வாழ்க்கை செய்தார், எனினும் பாவமற்றவராய் இருந்தார்(எபிரெயர் 4:15; 1 பேதுரு 2:22). மற்றபடி அவதாரங்கள் என்று அழைக்கப் படுகிறவர்களோ, முழுமையான மனிதனாகவோ முழுமையான கடவுளாகவோ இராதபடி இது கொஞ்சம், அது கொஞ்சமாகக் கலந்து காணப் பட்டவர்களாவர்.

தேவனுக்கும் மனிதனுக்கும் இடையேயான மெய்யான மத்தியஸ்தர் இயேசுவே, ஏனெனில் அவர் தேவனும் மனிதனுமானவர் (எபிரெயர் 9:15). மனிதருக்காகப் பாவ நிவிர்த்தி செய்யும் படியாக இயேசு மெய்யான மனிதனாக இருக்க வேண்டியது அவசியம் (எபிரெயர் 4:14-15), பாவ நிவாரண பலியை தேவன் அங்கீகரிக்கும் படியாக, அவர் ஒரு பாவமற்ற பரிபூரண வாழ்க்கை செய்வதற்கு மெய்யான தேவனாக இருக்க வேண்டியதும் அவசியம் (எபிரெயர் 9:14). மனிதர்களுக்காக சாத்தானை முறியடிப்பதற்கும் (எபிரெயர் 2:14-17), சாத்தானையும் அவனது தீய ஆவிகளையும் மேற்கொள்ளும் வல்லமை படைத்தவராய் இருப்பதற்கும் (கொலோசெயர் 2:5; வெளிப்படுத்தல் 19:11-21) இயேசு உண்மையாகவே தேவனாக இருந்தாக வேண்டும். இயேசு இரட்சிப்பின் வழியைக் காட்டும் வழிகாட்டி மட்டுமல்ல, அவரே அந்த இரட்சிப்பின் வழியுமானவர்(யோவான் 14:6). நம்மைச் சரியானபடி வாழச் சொல்லிப் போதிக்கும் ஒரு பிரசங்கியார் மட்டுமல்ல; இயேசு நம்மைச் சரியானபடி வாழ வைக்கும் வல்லமையும் தருபவர். நாம் நீதியுள்ளவர்களாய் இருக்க வல்லமை தருகின்றார். பரிசுத்த ஆவியானவரின்

வல்லமையினாலே, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நமக்கு விடுதலை அருளுகின்றார். இயேசு நமக்கு நல்ல போதனைகளை மட்டுமல்ல, சகல விசுவாசிகளுக்கும் நித்திய ஜீவனையும் தருகின்றார்.

தேவனிடம் செல்ல ஒரே மெய்யான வழி இயேசு மட்டுமே. இயேசு சொன்னார்: "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்; என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6). அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகின்றார் : "அவராலே அன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப் படும் படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை" (அப்போஸ்தலர் 4:12).

# 3. இரட்சிப்பின் வழி

**மனிதனின் நிலைமை**

*மனிதர்கள் அனைவரும் சுபாவத்தின் படி பாவிகளே (ரோமர் 3:10-12). முதல் மனுஷனும் முதல் மனுஷியும் பாவம் செய்தனர் (ஆதியாகமம் 3:1-6), அன்றிலிருந்து ஒவ்வொரு மனுஷனும், மனுஷியும், குழந்தையும் பாவம் செய்து வருகின்றனர் (ரோமர் 3:23). அதன் விளைவு ஒவ்வொருவருக்கும் சரீர மரணம் (ரோமர் 5:12) மற்றும் ஆவிக்குரிய மரணம் (ரோமர் 7:11; எபேசியர் 2:1). இரட்சிக்கப் படாத மக்கள் பாவத்துக்கு அடிமைகள், தீமைக்கு அடிபணிய வேண்டிய கட்டாயத்தில் வாழ்பவர்கள் (ரோமர் 6:17-21), தேவனுக்குச் சத்துருக்கள் (ரோமர் 8:7). அநேகர் நற்கிரியைகள் செய்வதன் மூலம் நீதிமான்களாகப் பார்க்கின்றனர். ஆனால் நமது நீதிகள் எல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது (ஏசாயா 64:6), நமது இரட்சிப்புக்கு அவற்றால் பயனில்லை என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறுகின்றார். வேறு சிலர் பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள தேவனுடைய நியாயப் பிரமாணத்தின் சட்டதிட்டங்களைக் கைக் கொள்வதன் மூலம் நீதிமான்களாக முயல்கின்றனர், ஆனால் இதுவும் பிரயோஜனப் படாது (கலாத்தியர் 2:15-16; 3:11 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).*

*மனிதர்கள் தங்கள் சொந்த விருப்பங்களாலோ அல்லது கிரியைகளாலோ இரட்சிக்கப் பட முடியாது (ரோமர் 9:16); அவர்கள் தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் மட்டுமே இரட்சிக்கப் பட முடியும் (எபேசியர் 2:8-9; தீத்து 3:4-7 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).*

**தேவனின் கிரியை**

நமது இரட்சிப்புக்கு அவசியமான அனைத்தையும் தேவன் செய்து விட்டார். ரோமர் 8:29- 30இல், அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிப்பில் தேவன் நமக்காகச் செய்து முடித்தவற்றை வரிசைக் கிரமமாகப் பட்டியலிடுகின்றார். உலகம் படைக்கப்படுமுன்னரே, தேவன் தமது முன்னறிவினாலே நாம் தமது குமாரனுக்கு ஒப்பானவர்களாகும் படி முன் குறித்து விட்டார் (ரோமர் 8:29; 1 பேதுரு 1:2). அவர் நம்மை அழைத்தும் இருக்கிறார், நீதிமான்களாக்கியும் இருக்கிறார், மகிமைப்படுத்தியும் இருக்கிறார் (ரோமர் 8:30). தேவன் செய்த இத்தனையும், இன்னும் எத்தனை எத்தனையோ நன்மைகளும் "இரட்சிப்பு என்ற ஒரே பதத்தில் அடங்கி விடுகின்றன.

தேவன் நம்மை "அழைத்திருக்கிறார்." பிதாவானவர் ஒருவனை இழுத்துக் கொள்ளாவிடில் அவன் இயேசுவிடம் வரவே முடியாது என்று வேதம் கூறுகின்றது (யோவான் 6:44). குமாரன் பிதாவை நமக்கு வெளிப்படுத்தாத பட்சத்தில் நாம் பிதாவை அறிந்து கொள்வது சாத்தியமல்ல (மத்தேயு 11:27). பாவ நிலைமையில் உள்ள ஒரு மனிதனால், தேவ ஆவியானவரிடமிருந்து வரும் காரியங்களைப் புரிந்து கொள்ளக்கூட இயலாது (1கொரிந்தியர் 2:14). தேவனுடைய அழைப்பு மிக அவசியம், அது இல்லாமல் யாரும் அவரண்டை திரும்பவே முடியாது (பொதுவான தலைப்பு : இரட்சிப்பு - தேவனின் தெரிந்தெடுப்பா, மனிதனின் தெரிந்தெடுப்பா? - பார்க்க).

தேவன் நம்மை "நீதிமான்களாக்கியும்" இருக்கிறார். இதன் பொருள், தேவன் நம்மையே நீதிமான்களாக்கி விடுகிறார் என்பதல்ல, நம்மை "நீதிமான்கள்" என்று

தீர்க்கிறார் என்பதே. இது தேவனுடைய சட்டப் பூர்வமான செயல், இதிலே அவர் இயேசு கிறிஸ்து சிலுவையிலே சம்பாதித்த மீட்பின் அடிப்படையில் நமது பாவங்களைத் தமது கிருபையினாலே இலவசமாக மன்னிக்கின்றார் (ரோமர் 3:24). தேவன் பாவத்தைக் கண்டும் காணாமல் விட, அசட்டை செய்ய முடியாது. அவர் பாவத்தைத் தண்டித்தேயாக வேண்டும். கிறிஸ்துவிலே தேவன் தாமே மனிதனின் பாவத்துக்குப் பாவநிவிர்த்தி செய்தார். இதன் மூலமாக அவர் நம்மை மன்னிக்கவும், நாம் "நீதிமான்கள் என்று தீர்க்கவும்'' முடிகிறது (ரோமர் 3:25-26 மற்றும் குறிப்புரை; பொதுவான தலைப்பு இயேசு கிறிஸ்து - பார்க்க).

தேவன் நம்மை நீதிமான்களாகத் தீர்ப்பதோடு மட்டுமின்றி, நீதியாய் நடக்கக் கூடிய ஒரு புதிய சுபாவத்தையும் தருகிறார். இதைப் "புதுப் பிறப்பு" அல்லது மறு பிறப்பு என்ற பதத்தில் பார்க்கிறோம். நாம் பாவத்தில் மரித்துக் கிடக்கிறோம், ஆனால் இயேசு கிறிஸ்துவில் "உயிர்ப்பிக்கப்'' படுகிறோம் (ரோமர் 8:10-11; எபேசியர் 2:1,5). நாம் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று இயேசு சொன்னார் (யோவான் 3:3,5-7 மற்றும் குறிப்புரை பார்க்க). நாம் என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனத்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறோம் (1 பேதுரு 1:23). நாம் இரட்சிக்கப் படுகையில் நமது பழைய சுபாவம் ஏதோ சீர்திருத்தப்படுகிறது என்பதல்ல; தேவனுக்குக் கீழ்ப்படியக் கூடிய ஒரு புது ஆவிக்குரிய சுபாவத்தையே பெற்றுக் கொள்கிறோம் (எபேசியர் 4:22-24). "புதுப் படைப்பாக'', புதிய சிருஷ்டியாக மாறுகிறோம் (2கொரிந்தியர் 5:17). சில கிறிஸ்தவர்கள் இப் "புதிய பிறப்பு'' தண்ணீர் ஞானஸ்நானத்தோடு சம்பந்தப் பட்டது

என்று நம்புகின்றனர் (தீத்து 3:5; பொதுவான தலைப்பு: தண்ணீர் ஞானஸ்நானம் - பார்க்க).

ஆனால், தேவன் நம்மை நீதிமான்கள் என்று தீர்த்து, நீதியாய் நடக்கக் கூடிய ஒரு புது சுபாவத்தைத் தருவதோடு நில்லாமல், நாம் உண்மையாகவே நீதிமான்கள் ஆகவும் உதவுகிறார். அவர் நம்மைப் "பரிசுத்தப் படுத்துகிறார்; அதாவது, அவர் தமது பரிசுத்தத்தை நமக்கு அருளுகிறார். இயேசு மனிதனை அவனது பாவத்துக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான தண்டனைக்கு விலக்கி மீட்டுக் கொள்வதோடு மட்டுமின்றி, தமது மக்களை அவர்களது பாவங்களிலிருந்து சுத்திகரிக்கவும் செய்கின்றார் (மத்தேயு 1:21; ரோமர் 6:22). ஒரு விதத்தில் பார்த்தால், இயேசு கிறிஸ்து ஒரேயொரு தரமாக சிலுவையில் செலுத்தி முடித்த பலியின் நிமித்தமாக நாம் ஏற்கனவே பரிசுத்தமாக்கப்பட்டுவிட்டோம் (எபிரெயர் 10:10); நாம் ஏற்கனவே "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கப் படுகிறோம் (எபேசியர் 1:1; பிலிப்பியர் 1:1). ஆனால் வேறொரு விதத்தில் பார்ப்போமானால், நமது அன்றாட வாழ்வில் அடிக்கடி பரிசுத்தத்தை இழந்துபோகிறோம். ஆகவே தான் நம்மைப் பரிசுத்தமாக்குகின்ற, தொடர்ந்தேச்சையான பரிசுத்த ஆவியானவரின் கிரியை பற்றி வேதம் கூறுகின்றது (ரோமர் 7:24-25; 8:10-11; கலாத்தியர் 3:3; பொதுவான தலைப்பு: பரிசுத்த ஆவியானவர் - பார்க்க).

தேவன் நம்மை "மகிமைப் படுத்தியும்" இருக்கின்றார் (ரோமர் 8:30). மகிமை என்ற பதம் நமது சரீரங்கள் உயிர்த்தெழுவதையும், நமது நித்திய ஜீவனையும் குறிப்பது. இயேசு பிதா தமக்குத் தந்த மகிமையை நாம் காண வேண்டுமென்று ஜெபித்தார் (யோவான் 17:24), பவுல்

அந்த மகிமையிலே நாமும் பங்கடைவோம் என்றார் (ரோமர் 8:17) இம்மைக்குரிய நமது சரீரங்கள் மகிமையான சரீரங்களாக மாறிப் போகும் (1 கொரிந்தியர் 15:42-44), மரணம் ஜெயமாக விழுங்கப் படும் (1 கொரிந்தியர் 15:54-57). நமது இரட்சிப்பு இம்மைக்கு மட்டுமல்ல மறுமைக்கும் உரியது என்பதைப் பவுல் சுட்டிக் காட்டினார். நமது நம்பிக்கைக்கு நடு மையமாக விளங்குவது சரீர உயிர்த்தெழுதல் ஆகும் (1கொரிந்தியர் 15:12- 20), நித்திய ஜீவன் நமக்கு வாக்களிக்கப் பட்டிருக்கிறது (யோவான் 3:16; 10:28 பார்க்க).

வேதத்திலே நமது இரட்சிப்பை விவரிக்கின்ற வேறு சில சொற்களும் உண்டு. உதாரணமாக நாம் கிறிஸ்துவுக்குள் "மீட்கப்'' பட்டிருக்கிறோம் (எபேசியர் 1:7). மீட்பு என்றால் "ஒரு விலை கொடுத்து விடுதலையாக்குவது'' என்று பொருள். இயேசு கிறிஸ்து தேவனுக்கென்று நம்மை விலைக் கிரயமாகக் கொண்டு (அப்போஸ்தலர் 20:28; வெளிப்படுத்தல் 5:9), பாவத்திலிருந்தும் (தீத்து 2:14), நியாயப் பிரமாணத்தின் சாபத்திலிருந்தும் (கலாத்தியர் 3:13) நம்மை மீட்டுக் கொண்டார். நாம் கிரயத்துக்குக் கொள்ளப் பட்டோம் (1கொரிந்தியர் 6:20), அவரது சொந்த இரத்தத்தினாலே மீட்கப் பட்டோம் (1பேதுரு 1:18-19).

நமது இரட்சிப்பை விவரிக்கப் பயன்படும் இன்னொரு பதம் தேவனுடைய பிள்ளைகளாக நமது "புத்திர சுவிகாரம்'' ஆகும். பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்துவின் கிரியையினாலும் (எபேசியர் 1:5), நம்மைப் பிள்ளைகளாக்குகிற பரிசுத்த ஆவியானவரை நாம் பெற்றுக் கொள்வதனாலும் (ரோமர் 8:14-17; கலாத்தியர் 4:5-7) நாம் தமது பிள்ளைகளாக புத்திர சுவிகாரம் அடையும் படி நம்மை முன்குறித்திருக்கிறார். இப்போதைக்கு, நமது

வாரிசுரிமைக்கு உத்தரவாதமாக ஒரு அச்சாரத்தை மட்டுமே பெற்றிருக்கிறோம். ஆனால் எதிர்காலத்தில் நமது சரீரங்கள் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு, நாம் குமாரர்களாக, குமாரத்திகளாக நமக்குரிய பூரண உரிமையை அடைந்து அனுபவிக்கப் போகின்ற அந்த பூரண புத்திர சுவிகாரத்தைப் பற்றியும் பவுல் எழுதுகின்றார் (ரோமர் 8:18-25; எபேசியர் 13-14).

ஆக, இரட்சிப்பு என்ற பதம் கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் பயன்படுத்தப் படுவதைக் காண்கிறோம். நாம் இரட்சிக்கப் பட்டோம் (எபேசியர் 2:5,8; 2 தீமோத்தேயு 1:9), நாம் இரட்சிக்கப் படுகிறோம் (1கொரிந்தியர் 1:18; 2கொரிந்தியர் 2:15; பிலிப்பியர் 2:12-13), நாம் இரட்சிக்கப் படுவோம் (ரோமர் 13:11; 1 தெசலோனிக்கேயர் 5:9; 1பேதுரு 1:5). மேலே பயன்படுத்திய பதங்களைக் கொண்டு சொல்வோமானால் : முற்காலத்திலே நாம் "நீதிமான்களாக்கப் பட்டோம் “மீட்கப் பட்டோம்”, “புதிய சுபாவம்” கிடைக்கப் பெற்றோம்; இக்காலத்திலே நாம் "பரிசுத்தமாக்கப் படுகிறோம்"; இனிவரும் காலத்திலே நாம் முழுமையான "புத்திர சுவிகாரத்தை' அடைந்து கொள்வோம், நமது சரீரங்கள் "மகிமையடையும்.

மனிதனின் மறுமொழி மனிதர்கள் தங்களைத் தாங்களே இரட்சித்துக் கொள்ள முடியாதவர்கள். அவர்கள் தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் மட்டுமே இரட்சிக்கப் பட முடியும். ஆனால் அதற்காக இரட்சிப்பில் மனிதனின் பங்கு எதுவுமே இல்லை என்றாகி விடாது. சிலுவையிலே இயேசு உலகத்தின் பாவங்களை எல்லாம் சுமந்து தீர்த்து விட்ட போதிலும் (யோவான் 1:29), உலக மக்கள் அனைவரும் இரட்சிக்கப் படவில்லை. தேவன் அருளும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள நாம் செய்ய

வேண்டியது ஒன்றே ஒன்று தான் : அது கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது (யோவான் 3:16-18; அப்போஸ்தலர் 16:31).

கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது என்றால், இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நம்புவதாகும் (யோவான் 8:24); அது கிறிஸ்துவை ஒருவன் தன் உள்ளத்திலும் வாழ்க்கையிலும் ஏற்றுக் கொள்வதும் (மத்தேயு 10:40;யோவான் 1:12; வெளிப்படுத்தல் 3:20), அவரில் முழுமையான நம்பிக்கை வைப்பதுமாகும் (2தீமோத்தேயு 1:12). விசுவாசம் என்பது இயேசுவை அறிந்திருப்பது மட்டுமல்ல; நமது உள்ளங்களை அவருக்கென அர்ப்பணித்திருப்பதும் கூட. உண்மையான விசுவாசம் இருக்குமென்றால், நாம் நமது பாவங்களை அறிக்கையிடுவோம் (1யோவான் 1:9), நமது பாவங்களுக்காக மனம் வருந்தி அவற்றை விட்டுத் திரும்புவோம் (லூக்கா 13:3,5; அப்போஸ்தலர் 2:38). நமக்கு மெய்யாகவே விசுவாசம் இருக்குமெனில், மனிதர்கள் முன்பாக பகிரங்கமாக நமது வாய்களைத் திறந்து கர்த்தராகிய இயேசுவை அறிக்கை செய்வோம், நாம் கிறிஸ்தவர்கள் என்ற உண்மையை மறைக்க வகை பார்க்க மாட்டோம் (மத்தேயு 10:32-33; ரோமர் 10:9-10). ஞானஸ்நானம் பெற வேண்டுமென்ற இயேசுவின் கட்டளைக்கும் கீழ்ப்படிவோம் (மத்தேயு 28:19-20; மாற்கு 16:15-16; அப்போஸ்தலர் 2:38; பொதுவான தலைப்பு : தண்ணீர் ஞானஸ்நானம் - பார்க்க).

இரட்சிப்பு என்பது இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலமாக தேவன் நமக்காகச் செய்யும் கிரியை எனினும், நாம் அந்த இரட்சிப்பை விசுவாசிக்க வேண்டும். ஆனால் அந்த இரட்சிப்பு நம்மிடமிருந்து வருவதல்ல; அது தேவனிடமிருந்தே வருவது, அவரே தமது கிருபையினால்

*நமக்கு அதை இலவசமாகத் தருகிறார். நாம் நமது சொந்த பெலத்தினாலோ, முயற்சியினாலோ இரட்சிப்பைப் பெறுவதோ அல்லது நமது நற்கிரியைகளினாலே அதைச் சம்பாதிப்பதோ இல்லை (ரோமர் 9:16). ஆனால் நமது விசுவாசத்தினால் கூட நாம் அதைச் சம்பாதிக்க முடியாது. விசுவாசம் என்பது நமது சொந்த இரட்சிப்பை உண்டாக்கிக் கொள்வதற்காக நாம் செய்கின்ற ஏதோ ஒரு வேலையோ அல்லது வேறு எதுவுமோ அல்ல; அது வெறுமனே தேவனிலும் அவரது கிருபையின் ஈவிலும் வைக்கப் படும் நம்பிக்கை மட்டுமே (ரோமர் 4:5).*

*ஆகவே தான், இரட்சிப்பும் அதன் ஆசீர்வாதங்கள் அனைத்தும் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டே கிடைக்கிறது (எபேசியர் 2:8) என்று பவுல் எழுதுகின்றார். வேறு பல இடங்களில் "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு" என்பதைச் சுருக்கமாக "விசுவாசத்தினாலே" என்று குறிப்பிடுகின்றார். விசுவாசத்தினாலே நாம் நீதிமான்களாக்கப் படுகிறோம் (ரோமர் 3:27-28; கலாத்தியர் 2:15-16). விசுவாசத்தினாலே பரிசுத்தமாக்கப் படுகிறோம் (அப்போஸ்தலர் 26:18; கலாத்தியர் 3:1-5). விசுவாசத்தினாலே நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம் (யோவான் 1:12-13). ஆனால் அந்த விசுவாசமும் கூட தேவனுடைய ஈவே; அதைக் குறித்து மேன்மை பாராட்ட நமக்கு இடமில்லை (அப்போஸ்தலர் 3:16; எபேசியர் 2:9; பிலிப்பியர் 1:29; 2 தீமோத்தேயு 2:25). நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும், அதைப் பாதுகாப்பவரும், அதைப் பூரணப் படுத்தி முடித்து வைப்பவரும் இயேசுவே (எபிரெயர் 12:2).*

*கிருபைக்கும் விசுவாசத்துக்கும் இடையேயுள்ள தொடர்பை ஜன்னல் என்ற உதாரணத்தைக் கொண்டு விளக்கலாம். ஒரு ஜன்னல் வழியே நமது அறைக்குள்*

*சூரியவொளி வருகின்றது, ஆனால் அதற்காக ஜன்னலே சூரியவொளியை உற்பத்தி செய்வதாகி விடாது! கிருபை என்பது சூரியவொளி போன்றது, விசுவாசமோ ஜன்னல் போன்றது. நாம் தேவ கிருபையை விசுவாசத்தினாலே பெற்றுக் கொள்கிறோம், ஆனால் நமது விசுவாசம் தேவ கிருபையை உருவாக்குவதோ சம்பாதித்துத் தருவதோ இல்லை. தேவ கிருபை உள்ளே நுழைய முடியாதபடி நமது ஜன்னல்களை நாம் மூடியும் வைக்கலாம். தேவனில் விசுவாசமும் நம்பிக்கையும் வைப்பது நமது இரட்சிப்புக்கு அவசியமான நிபந்தனையாகும், ஆனால் அதுவே நமது இரட்சிப்பின் ஆதாரமாகி விடாது.*

**விசுவாசமும் கிரியைகளும்**

*உலகத்தின் மற்ற மதங்கள் எல்லாம் மனிதன் நற்செயல்களைச் செய்வதன் மூலம் புண்ணியத்தை, இரட்சிப்பைச் சம்பாதிக்கிறான் என்பதாகப் போதிக்கின்றன. மற்ற மதங்களைச் சேர்ந்தோர் கிறிஸ்தவர்களும் இரட்சிப்பை அடையவே நன்மைகள் புரிகின்றனர் என்று எண்ணுகின்றனர், காரணம் கிறிஸ்தவர்கள் எண்ணற்ற நற்செயல்கள் செய்வதைக் காண்கின்றனர். ஆகவே அவர்கள் கிறிஸ்தவத்திற்கும் மற்ற மதங்களுக்கும் அப்படியொன்றும் பெரிய வித்தியாசமில்லை என்று முடிவு கட்டுகின்றனர். ஆனால் இம்மக்களின் கருத்து தவறானது. கிறிஸ்தவத்துக்கும் மற்ற மதங்களுக்கும் இடையே பெருத்த வேறுபாடு உண்டு. கிறிஸ்தவர்கள் முதலில் இரட்சிப்பை அடைகின்றனர், அதன் பிறகே நற்கிரியைகள் செய்யத் திறன் பெறுகின்றனர். நாம் இரட்சிப்பைப் பெறுவதற்காக நற்செயல்கள் செய்வதில்லை; நாம் ஏற்கனவே இரட்சிக்கப் பட்டு விட்டதால் நற்கிரியைகள் செய்கிறோம். ஆனால் இந்த இடத்தில் சில கிறிஸ்தவர்களும் கூட ஒரு பெரிய தவறு செய்கின்றனர். அவர்கள், இரட்சிக்கப் பட்டு விட்டோம், இனி*

இரட்சிப்பைக் காத்துக் கொள்வதற்காக நன்மைகள் செய்ய வேண்டும் என்று தவறாக எண்ணுகின்றனர். ஆனால் எப்படி மக்கள் தங்கள் சொந்த முயற்சியினாலோ, கிரியையினாலோ இரட்சிப்பைச் சம்பாதிக்க முடியாதோ அப்படியே தங்கள் முயற்சியினாலோ, கிரியையினாலோ அதைக் காத்துக் கொள்ளவும் முடியாது (கலாத்தியர் 3:3). ஆரம்பம் முதல் முடிவு மட்டும் நமது இரட்சிப்பு தேவ கிருபையினால் மட்டுமே ஆனது, அது விசுவாசத்தினாலே மட்டுமே பெற்றுக் கொள்ளப் படுவது.

இது உண்மை தான் எனினும், கிறிஸ்தவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும், அவரைப் பிரியப் படுத்தக் கூடிய காரியங்களைச் செய்ய வேண்டும். நமது வாழ்வில் நற்கிரியைகளோ, நன்னடத்தையோ வெளிப்படவில்லை என்றால் நமது விசுவாசம் பொய்யானது, போலியானது. நற்கிரியைகள் எப்பொழுதும் மெய் விசுவாசத்துடன் இணைந்தே செல்லும் (யாக்கோபு 2:17 மற்றும் குறிப்புரை பார்க்க).

ஒரு மரத்தின் உவமையைக் கொண்டு விசுவாசத்துக்கும் கிரியைகளுக்கும் உள்ள தொடர்பை விளக்கலாம். கனி கொடுக்க வேண்டும் என்றால் (அதாவது, நற்கிரியைகள் செய்ய) நாம் முதலாவது உயிரோடிருக்க வேண்டும். ஆனால் விசுவாசியாதவர்கள், இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் இன்னும் மரித்தே கிடக்கின்றனர்! தேவனைப் பிரியப் படுத்தக் கூடிய நற்செயல்கள் செய்யும் திறன் அவர்களிடம் இல்லை. எப்படி ஒரு பட்டுப் போன, செத்துப் போன மரம் கனி கொடுக்க முடியாதோ அப்படியே இரட்சிக்கப் படாமல் பாவத்தில் மரித்துக் கிடக்கும் மக்களும் உண்மையிலேயே நற்செயல்களைச் செய்ய முடியாது. அதாவது, தேவன் பேரிலும், பிற மானிடர் பேரிலும் கொள்ளும் சுயநலமற்ற

அன்பினால் ஏவப்பட்டு நன்மை புரிய முடியாது. தங்களை இரட்சிக்கும் படியாக இவர்கள் தேவன் செய்து முடித்த கிரியையில் அல்ல, தங்கள் சொந்தக் கிரியைகளிலேயே நம்பிக்கை வைத்துள்ளனர் (ரோமர் 4:4-5). மெய்யான நற்செயல்கள் என்பவை நமது சொந்த நன்மைக்காக அன்றி, மற்ற மனிதர்களின் நலனுக்காகவும், தேவன் பாலுள்ள நமது அன்பைக் காட்டுவதற்காகவும் செய்யப் படுபவை (யோவான் 14:21).

மறுபுறத்தில், உயிருள்ள பழமரம் என்றால் அது கனி கொடுத்தேயாக வேண்டும். ஒரு கனிமரம் கனியே தரவில்லை என்றால் அது பட்டுப் போன மரத்துக்குச் சமானம், அல்லது ஒருவேளை விரைவில் பட்டுப் போகும். நாம் விசுவாசிக்கிறோம் என்று சொல்லியும் நற்செயல்கள் செய்யவில்லை என்றால் நமது விசுவாசம் போலியானது (மத்தேயு 7:21; யோவான் 2:4). நற்கிரியைகளே நமது விசுவாசத்திற்குச் சான்று. மெய்யான விசுவாசம் எப்பொழுதும் நன்மையான செயல்களைப் பிறப்பிக்கும்.

அப்படியானால், பிற மதங்களின் படி, மக்கள் கனி கொடுப்பதன் மூலம் உயிர் பெற விரும்பும் செத்த மரங்களுக்கு ஒப்பானவர்கள். ஆனால் கிறிஸ்தவ மதத்தின் படியோ நாம் முதலாவது ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும்; அதன் பின்பு தான் கனி கொடுக்கக் கூடியவர்களாவோம்.

ஆகவே, நமது பாவங்களை விட்டு விட்டு தேவனுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் நாம் நமது விசுவாசத்தைப் "பயன் படுத்த" வேண்டும். மெய்யான விசுவாசம் நமக்கிருந்தால் நமது நடத்தை முற்றிலும் மாற்றம் பெறும் (ரோமர் 8:13; 1கொரிந்தியர் 6:9-11; கலாத்தியர் 5:19-26). ஆனால் இவையெல்லாம் சாத்தியமாக ஒரே

*காரணம் இவற்றைச் செய்யக் கூடிய வல்லமையை தேவன் ஏற்கனவே நமக்கு அருளியிருப்பது தான். அவர் நமக்குப் புது ஜீவனையும், புது சிந்தையையும், புது சுபாவத்தையும் தருகின்றார்; இதன் காரணமாக நாம் அவருக்குப் பிரியமான வாழ்க்கை செய்யக் கூடியவர்களாகிறோம். "ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே . . . அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப் படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராய் இருக்கிறார்" (பிலிப்பியர் 2:12-13).*

# 4. இரட்சிப்பு - தேவனின் தெரிந்தெடுப்பா, மனிதனின் தெரிந்தெடுப்பா?

**முக்கிய வசனங்கள்**

*யோசுவா 24:15... யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள். மத்தேயு 23:37 ... நான் (கிறிஸ்து) மனதாயிருந்தேன் ... உங்களுக்கோ மனதில்லாமல் போயிற்று. யோவான் 7:17 ... அவருடைய (தேவனுடைய) சித்தத்தின் படி செய்ய மனதுள்ளவன் எவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்.*

*யோவான் 15:16 நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை,' நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். அப்போஸ்தலர் 7:51 நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள். அப்போஸ்தலர் 13:46 ... நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்.*

*ரோமர் 8:29-30 தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களை முன்குறித்திருக்கிறார்... அவர்களை அழைத்தும் இருக்கிறார்;... அவர்களை நீதிமான்களாக்கியும் இருக்கிறார்: ...அவர்களை மகிமைப் படுத்தியும் இருக்கிறார்.*

*ரோமர் 9:10-24 தேவன் எவன் மேல் இரக்கமாய் இருக்கச் சித்தமாய் இருக்கிறாரோ அவன் மேல் இரக்கமாய் இருக்கிறார்; எவனைக் கடினப்படுத்தச் சித்தமாய் இருக்கிறாரோ அவனைக் கடினப் படுத்துகிறார். ரோமர் 11:32 எல்லார் மேலும் இரக்கமாய் இருக்கத் தக்கதாக*

*தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப் போட்டார். எபேசியர் 1:4-5... அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார். 1 தீமோத்தேயு 2:4 . எல்லா மனுஷரும் இரட்சிக்கப் படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் (தேவன்) சித்தமுள்ளவராய் இருக்கிறார். 1 பேதுரு 1:2 பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின் படியே.... தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு (கிறிஸ்தவர்களுக்கு) எழுதுகிறதாவது. 2 பேதுரு 1:10.. உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்குங்கள்.*

***பிரச்சனை***

*யோவான் 8:34இல் இயேசுவும், ரோமர் 6:14-18 இல் பவுலும் அவிசுவாசிகள் அனைவரும் பாவத்துக்கு அடிமைகள் என்று திட்டவட்டமாகக் கூறி விட்டனர். யாருடைய ஒத்தாசையும் இல்லாத படி அவிசுவாசிகள் தேவனுடைய காரியங்களைப் புரிந்து கொள்வது கூட இயலாது ( 1கொரிந்தியர் 2:14). தங்கள் சொந்தப் பெலத்தினாலே அவர்கள் நீதியைத் தெரிந்து கொள்ள முடியாது. பிதாவானவர் ஒருவனை இழுத்துக் கொள்ளாவிடில் அவன் இயேசுவண்டை வரமாட்டான் (யோவான் 6:44). குமாரன் வெளிப் படுத்தினாலொழிய யாரும் பிதாவை அறிந்து கொள்ள முடியாது (மத்தேயு 11:27-28). காணும் படியாகவும், விளங்கிக் கொள்ளும் படியாகவும் மனிதரின் இருதயங்களைத் தேவன் திறந்தருள்வது பற்றி லூக்கா 24:45 மற்றும் அப்போஸ்தலர் 16:14 இல் படிக்கிறோம்.*

*இயேசு, பவுல் இருவருமே அவிசுவாசிகள் பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப் பட முடியும் என்றனர் (ரோமர் 8:36; ரோமர் 6:17-18), விசுவாசிகள் நீதிக்கு*

அடிமைகளாக முடியும் என்றும் பவுல் கூறினார். இந்த இரட்சிப்பு மனிதனுடைய முயற்சியின் விளைவு அல்ல, இது தேவனுடைய இலவசமான ஈவு (ரோமர் 6:23; எபேசியர் 2:8-9 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).

இயேசு சீஷர்கள் தம்மைத் தெரிந்து கொள்ளவில்லை என்றும், அவர்கள் போய்க் கனி கொடுக்கும் படிக்குத் தாமே அவர்களைத் தெரிந்து கொண்டதாகவும் சொன்னார் (யோவான் 15:16). தேவன் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார் என்றும் (எபேசியர் 1:4), நாம் தமக்குச் சுவிகார புத்திரராகும் படி முன்குறித்திருக்கிறார் என்றும் (எபேசியர் 1:5,11) பவுல் கூறுகிறார். நமது தெரிந்தெடுப்பு தேவனின் முன்னறிவின் படியானது (ரோமர் 8:29-30; பேதுரு 1:2). தேவனுடைய தெரிந்து கொள்ளுதல் மனுஷனுடைய விருப்பத்தையோ, முயற்சியையோ பொறுத்ததல்ல, அது தேவனுடைய இரக்கத்தையே பொறுத்தது என்று பவுல் ரோமர் 9:15 இல் திட்ட வட்டமாக எழுதுகிறார்.

இரட்சிப்பு தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்தினால் மட்டுமே வருகிறது, அதைச் சம்பாதிக்க நாம் செய்யக் கூடியது ஒன்றுமேயில்லை என்பதை எல்லாக் கிறிஸ்தவர்களும் நம்புகின்றனர். ஆனால் இங்கே ஒரு பிரச்சனை எழுகிறது. அதாவது, நமது இரட்சிப்பில் நாம் நிறைவேற்ற வேண்டிய பங்கு என்று எதுவுமே கிடையாதா? பாவத்துக்காக மனம் வருந்துவதும், விசுவாசம் வைப்பதும் நாமாகச் செய்கின்ற காரியங்களா, அல்லது தேவனே அவற்றை நம்மில் உருவாக்குகின்றாரா? தேவனுடைய கிருபையை எதிர்க்கும், தேவனுக்கு “மாட்டேன்” என்று சொல்லும் சக்தி, வல்லமை மனிதனுக்கு உண்டா?

*தனது இரட்சிப்பில் மனிதனின் தெரிந்தெடுப்புக்கு இடமுண்டா? வெவ்வேறு கிறிஸ்தவர்கள் இக்கேள்விக்கு வெவ்வேறு விதங்களில் பதிலளிக்கின்றனர். யார் இரட்சிக்கப் படுவார்கள் என்பதைத் தேவனே தீர்மானிக்கின்றார்; மனிதன் பாவி ஆதலால் அவனால் இதைத் தீர்மானிக்க முடியாது என்று சில கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். தேவன் இரட்சிக்கப் படும் படியாக எல்லாரையும் தெரிந்து கொள்ளாமல் ஒரு சிலரை மட்டுமே தெரிந்து கொள்கிறார், மற்றவர்களை அழிவுக்கென்று தெரிந்து கொள்கிறார் என்பது இவர்களது எண்ணம், இந்தக் கிறிஸ்தவர்கள், அழைக்கப் பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப் பட்டவர்களோ சிலர் (மத்தேயு 22:14) என்ற இயேசுவின் கூற்றையும், சில பாத்திரங்கள் மகிமைக்காகவும் சில அழிவுக்காகவும் ஆயத்தமாக்கப் பட்டவை (ரோமர் 9:22-23) என்று பவுல் கூறியதையும் - சுட்டிக் காட்டுகின்றனர்.*

*ரோமர் 9:18 இல் பவுல், தேவன் எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாய் இருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாய் இருக்கிறார், எவனைக் கடினப் படுத்தச் சித்தமாய் இருக்கிறாரோ அவனைக் கடினப் படுத்துகிறார் என்று எழுதுகின்றார். வேறொரு இடத்தில், நித்திய ஜீவனுக்கு நியமிக்கப் பட்டவர்கள் எவர்களோ அவர்கள் (அப்போஸ்தலர் 13:48) என்றும், சிலர் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாமல் இடறுவதற்கு நியமிக்கப் பட்டவர்கள் (1பேதுரு 2:8) என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. தேவனே யார் யார் இரட்சிக்கப் பட வேண்டும் என்று தெரிந்து கொள்கிறார். பிறகு அவர்களுக்கு மட்டும் மனந்திரும்பும் திறனையும் (2 தீமோத்தேயு 2:25) விசுவாசிக்கும் திறனையும் (பிலிப்பியர் 1:29) தாமே வழங்குகின்றார் என்று இக்கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். தெரிந்தெடுக்கப் பட்டவர்கள் எதையும் தெரிந்தெடுப்பதில்லை, அவர்களால் இரட்சிப்புக்கு "வேண்டாம்" என்று சொல்ல முடியாது.*

வேறு பல கிறிஸ்தவர்களோ நமது இரட்சிப்பில் தேவனின் தெரிந்தெடுப்பு மட்டுமல்ல, நமது பங்கும் அடங்கியிருக்கிறது என்று நம்புகின்றனர். பழைய ஏற்பாட்டின் யூத மக்கள், தங்களுடைய எந்தப் புண்ணியத்தினாலும் அன்றி தேவனால் தெரிந்து கொள்ளப் பட்ட போதிலும், அவரைப் பின்பற்றுவதா வேண்டாமா என்று தீர்மானிக்கும் உரிமையும் வாய்ப்பும் பெற்றதாகவே தோன்றுகிறது. (உபாகமம் 30:19; யோசுவா 24:15). புதிய ஏற்பாட்டில் இயேசுவும் தேவனுடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவன் எவனோ அவன் தேவனுடைய உபதேசத்தை அடையாளம் கண்டு கொள்வான் என்று சொன்னார் (யோவான் 7:17). நாம் இரட்சிப்பு அடையும் படியாக மனந்திரும்பவும் (அப்போஸ்தலர் 2:38), விசுவாசிக்கும் படியும் (ரோமர் 10:9-10) கட்டளையிடப் படுகிறோம். இந்தக் கிறிஸ்தவர்கள் தேவன் நம்மை முதலில் அழைக்கிறார், ஆனால் நாம் தேவ அழைப்பையும் இரட்சிப்பையும் எதிர்த்து நிற்கவும் கூடும் என்று நம்புகின்றனர்.

இந்த இரண்டாம் வகைக் கிறிஸதவர்களில் ஒரு பிரிவினர், தேவன் பாவத்துக்கு அடிமைப் பட்டுக் கிடக்கும் ஒரு அவிசுவாசியை எடுத்து அவன் மீண்டும் சுயாதீனமாக ஒரு தெரிந்தெடுப்பு செய்யக் கூடிய அளவிற்கு மட்டும் அவனை விடுதலையாக்குவதாக நம்புகின்றனர். அப்படி விடுதலையாக்கப் பட்ட ஒருவன் தேவனைத் தெரிந்து கொள்வானானால் இரட்சிக்கப் படுகிறான்; சாத்தானைத் தெரிந்து கொள்வானானால் மீண்டும் பாவ அடிமைத்தனத்தில் அகப்பட்டு அழிந்து போகிறான்.மற்றவர்களோ மனிதர்கள் தேவனைத் தெரிந்து கொள்ளவே முடியாத படி அவ்வளவாகப் பாவக் கட்டில் சிக்கியுள்ளனர் என்று எண்ணுகின்றனர். ஆகவே, இரட்சிக்கப் படுவதில் தேவனே எல்லாவற்றையும்

தீர்மானிக்கிறார், ஆனால் கெட்டுப் போவதிலோ மனிதனே எல்லாவற்றையும் தீர்மானிக்கிறான் என்பது இவர்களது நம்பிக்கை.

அதாவது தேவன் இரட்சிப்பிற்காக ஒருவனைத் தெரிந்து கொள்ளும் போது, அவன் தேவனை எதிர்க்கவில்லை என்றால் அவன் இரட்சிக்கப் படுகிறான். ஆனால் அவன் எதிர்ப்பான் என்றால் தேவன் அவனை இரட்சிக்கப் படும்படி கட்டாயப் படுத்துவதில்லை, ஆக அவன் தனது சொந்தத் தெரிந்தெடுப்பினால் கெட்டழிந்து போகிறான். ஆனால் இப்படி நாம் தேவனை எதிர்த்து நிற்பது சாத்தியமா? தேவன் சர்வ வல்லமை படைத்தவர் என்பதை அநேகக் கிறிஸ்தவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். படைத்தவரை எதிர்க்க நாம் யார்? (ரோமர் 9:19-21). ஆனாலும் கூட, வேறு பல கிறிஸ்தவர்கள் தேவன் நமக்கு தெரிந்தெடுக்கும் சுயாதீனத்தை, தீர்மானிக்கும் உரிமையைக் கொடுத்திருப்பதாகவே நம்புகின்றனர். அவர்கள் தேவன் தங்களுக்காக வைத்திருந்த திட்டங்களை எதிர்த்து நின்ற மக்களைப் பற்றிய வேதபகுதிகளையும் (மத்தேயு 23:37; அப்போஸ்தலர் 7:51; 13:46), தேவனை எதிர்த்து நிற்கக் கூடாது என நம்மை எச்சரிக்கும் வேத பகுதிகளையும் (2 கொரிந்தியர் 6:1; எபிரெயர் 3:8,13; 12:25) சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆக, நமது கேள்விக்கு கிறிஸ்தவர்கள் மூன்று முக்கிய பதில்கள் அளிப்பதைக் காண்கிறோம் : 1) மனிதன் தனது இரட்சிப்பையோ அழிவையோ தெரிந்தெடுக்கும் உரிமையற்றவன்; 2) மனிதன் இரண்டில் எதையும் தெரிந்தெடுக்கக் கூடியவன்; 3) மனிதன் தானாக இரட்சிப்பைத் தெரிந்து கொள்ள முடியாது, ஆனால் தேவன் அவனை அழைத்தபிறகு அவன் அவருக்கு எதிர்த்து நிற்பானானால் அழிவைத் தெரிந்தெடுப்பவனாவான்.

நமது இரட்சிப்பை நாம் தெரிந்தெடுக்க முடியும் என்ற கேள்விக்குப் பதிலான இந்த மூன்று முக்கியக் கருத்துக்களையும் ஒரு கருத்துப் படத்தின் மூலம் விளக்கலாம். ஒரு சிறுவன் சாலையோரமாகக் கை கால் கட்டி வைக்கப் பட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். அவன் பாவத்தில் கட்டப் பட்டுள்ள அவிசுவாசியைக் குறிப்பவன். அங்கே ஒரு மனிதன் ஒரு மாட்டு வண்டியில் வருகிறான். அவன், நம்மை இரட்சிக்க விரும்பும் தேவனுக்கு அடையாளம். மாட்டு வண்டியில் வந்தவன் கீழ்க்கண்ட மூன்று காரியங்களுள் ஒன்றைச் செய்யலாம். 1) அவன் கட்டி வைக்கப் பட்ட சிறுவனின் கட்டுகளை அவிழ்க்காமலேயே அவனை மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு போகலாம். இது, நமது இரட்சிப்பில் நமக்கு எந்தப் பங்கும் இல்லை, நாம் தேவனை எதிர்த்து நிற்கவும் முடியாது என்று நம்புவோரின் கண்ணோட்டத்தைக் குறிக்கும். 2) அந்த மனிதன் சிறுவனின் கட்டுகளை அவிழ்த்து விட்டு, அவன் தன்னோடு வர விரும்புகிறானா என்று கேட்கலாம். சிறுவன் அவனோடு போவதைத் தெரிந்து கொண்டால் அவனை அம்மனிதன் தனது மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு போவான். இது, தேவன் நாம் இரட்சிப்பா அழிவா என்ற இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ளுமளவிற்கு நம்மை விடுதலையாக்குகிறார் என்று நம்புவோரின் நிலையைக் குறிப்பது. 3) மாட்டு வண்டியில் வந்தவன் சிறுவனை வண்டியில் ஏற்றிய பின் அவனது கட்டுகளை அவிழ்த்து விடலாம். இப்பொழுது சிறுவன் விருப்பப் பட்டால் வண்டியிலிருந்து கீழே குதித்து விடலாம். அவன் ஒன்றும் செய்யாமல் சும்மாயிருந்தால் அவன் வண்டியின் போக்கிலேயே சுமந்து செல்லப் படுவான். இது தேவனே நம்மைத் தெரிந்து கொள்கிறார், நமது இரட்சிப்புக்கான அனைத்தையும் செய்கிறார், ஆனால் நாம் அவரை எதிர்க்கவும் அவரது கிரியையை ஏற்க மறுக்கவும் கூடும் என்ற கருத்தைக் காண்பிக்கிறது.

**தாமஸ் ஹேல்**

சுருக்கமாக, முதலாவது கண்ணோட்டத்தின் படி, இரட்சிப்போ அழிவோ தேவனே எல்லாவற்றையும் தீர்மானிக்கிறார். இரண்டாவது கருத்தின் படி, இரட்சிப்போ அழிவோ இரண்டில் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்ள மனிதனுக்கு தேவன் சுயாதீனம் தருகின்றார். மூன்றாவது அபிப்பிராயத்தின் படி, இரட்சிப்புக்காக தேவனே தெரிந்தெடுக்கிறார், ஆனால் மனிதன் அவரை எதிர்த்து நின்று கேட்டை, அழிவைத் தெரிந்து கொள்ளக் கூடும்.

## தேவன் எல்லாரையும் அழைக்கிறாரா?

தேவன் ஒவ்வொரு தனி மனிதனும் இரட்சிக்கப்படும் படி விரும்புகிறாரா அல்லது ஒரு சிலர் மட்டும் இரட்சிக்கப் பட விரும்புகிறாரா? மத்தேயு 22:14 இல் இயேசு அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப் பட்டவர்களோ சிலர் என்றார். இயேசுவே உலக ரட்சகர் என்பதும் (யோவான் 4:42; 1 யோவான் 4:14) உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கவே அவர் மரித்தார் என்பதும் (யோவான் 1:29; 1 யோவான் 2:2) தெளிவு. அதோடு, பவுலும் எல்லா மனுஷரும் இரட்சிக்கப் படவே தேவன் சித்தம் கொண்டிருக்கிறார் என்று எழுதுகிறார் (ரோமர் 11:32; 1 தீமோத்தேயு 2:4-6; 2 பேதுரு 3:9), "எல்லா மனுஷரும்" என்பதன் பொருள் என்ன?

“எல்லா மனுஷரும்” என்பது “எல்லா இன மனிதர்கள்” என்று சில கிறிஸ்தவர்கள் எண்ணுகின்றனர். அதாவது, எல்லா மக்கள் கூட்டத்திலிருந்தும் ஒரு சில தனி நபர்களையாவது தேவன் அழைக்கிறார் அல்லது தெரிந்து கொள்கிறார். முழு உலகிற்கும் கிறிஸ்துவின் நற்செய்தி எடுத்துச் செல்லப்படும் படி தேவன் விரும்புகிறார், எனினும் விசுவாசம் என்ற வரத்தை ஒவ்வொரு மக்கள் இனத்தையும்

*சேர்ந்த ஒரு சிலருக்கு மட்டுமே வழங்குகிறார் என்பது இவர்கள் நம்பிக்கை. வேறு சில கிறிஸ்தவர்களோ "எல்லா மனுஷரும்'' என்பது "ஒருவர் விடாமல் அத்தனை மனிதர்களையும்'' குறிப்பதாகக் கருதுகின்றனர். தேவன் எல்லா மனிதர்களையும் அழைக்கிறார் என்ற போதிலும் விசுவாசிகள் மட்டுமே "தெரிந்து கொள்ளப் பட்டவர்கள்" என்று கூறப்பட முடியும். (கிரேக்க' மொழிப் பதம் இந்த இரு அர்த்தங்களையுமே தரக் கூடியது.)*

*இயேசுவைக் குறித்துக் கேள்வியே படாதவர்களைப் பற்றி என்ன? அவர்கள் இரட்சிக்கப் பட முடியுமா? முடியாது என்றே பெரும்பாலான கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். எல்லா மனிதர்களும் சுபாவப்படி பாவிகளே. எல்லாரும் மரணத்திற்குப் பாத்திரவான்கள் (ரோமர் 3:10-12; 6:23). கிறிஸ்துவினாலே அன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை (யோவான் 14:6; அப்போஸ்தலர் 4:12). எனவே ரோமர் 10:13-14இல் பவுல் எழுதுகின்றார்: ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப் படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்வார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப் படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப் படுவார்கள்?*

*இயேசுவைப் பற்றிக் கேள்வியே படாதவர்கள் மீது தேவன் இரக்கம் காட்டலாம் (லூக்கா 12:47-48; ரோமர் 2:12), ஆனால் அது அவரது சொந்த தீர்மானம். இயேசுவைப் பற்றிக் கேள்வியே படாதவர்களை தேவன் என்ன செய்யப் போகிறார் என்பது பற்றி வேதம் திட்டவட்டமாக எதுவும் கூறவில்லை. எனினும், பிறருக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்ல வேண்டியது நமது பொறுப்பு என்பதை மட்டும் திட்டமாகக் கூறுகிறது.*

**தாமஸ் ஹேல்**

**சுருக்கம்**

இக்கட்டுரையில் எழுப்பப் பட்டுள்ள கேள்விகள் கடினமானவை. வேதம் இவற்றுக்குத் திட்டவட்டமான பதில்களைத் தரவில்லை. தேவனுடைய சித்தம் ஒரு புரியாத புதிர்! ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாய் இருக்கிறது! (ரோமர் 11:33-36). ஒருவேளை நாம் பார்த்த கருத்துக்கள் எல்லாமே ஓரளவுக்கு உண்மை எனலாம். யோவான் அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்த படியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம் (1யோவான் 4:19) என்று எழுதுகிறார். அதை நாம் இப்படிச் சொல்லலாம்: அவர் முந்தி நம்மைத் தெரிந்து கொண்ட படியால் நாமும் அவரைத் தெரிந்து கொள்ளுகிறோம். இரட்சிப்பு என்பது தேவனுடைய கிரியை, ஆனால் அதில் நமக்கும் ஒரு பங்கிருப்பது போல் தான் தோன்றுகிறது. இதைத் தான் பவுல் இவ்வாறு கூறுகின்றார்: ... அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப் படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின் படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராய் இருக்கிறார் (பிலிப்பியர் 2:12-23).

# 5. நாம் நமது இரட்சிப்பை இழந்து போக முடியுமா?

**முக்கிய வசனங்கள்**

*யோவான் **6:39** அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்து போகாமல் ... சித்தமாய் இருக்கிறது.*

*யோவான் **10:28...** ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை. ரோமர் **8:38-39** மரணமானாலும் ஜீவனானாலும் • • • நிகழ் காரியங்களானாலும் வருங் காரியங்களானாலும் ... தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்க மாட்டாது. எபேசியர் **1:13-14** நீங்களும் ..... விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப் பட்டீர்கள் ... ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாய் இருக்கிறார்.*

*பிலிப்பியர் **1:5** ... உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவார். **2** தீமோத்தேயு **1:12** . . . நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராய் இருக்கிறார்.*

***1** யோவான் **2:19** ... நம்முடையவர்களாய் இருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே.*

*லூக்கா **8:11-15.** கொஞ்சக் கால மாத்திரம் விசுவாசித்து, சோதனை காலத்தில் பின்வாங்கி போகிறார்கள். யோவான் **15:2** என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்.*

*ரோமர் **11:22** ஆகையால் தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய். கலாத்தியர் **5:1-4.** நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள். **1** தீமோத்தேயு **1:4** . . . ஆகிலும் ஆவியானவர்... சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே... சிலர்... விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள். எபிரெயர் **6:4-6** ஏனெனில் ஒரு தரம் பரிசுத்த ஆவியைப் பெற்றும் ருசி பார்த்தும் மறுதலித்துப் போனவர்கள் மனந்திரும்புவதற்கு ஏதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்.*

*எபிரெயர் **10:26-27** சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கிறவர்களாய் இருந்தால் பாவங்களின் நிமித்தம் செலுத்தத் தக்க வேறொரு பலி இனி இராமல், நியாயத் தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும் கோபாக்கினையுமே இருக்கும்.*

*எபிரெயர் **10:29** தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் என்று எண்ணி,... நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாய் இருப்பான் ...*

*1யோவான் **2:24** ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப் பட்டது உங்களில் நிலைத்திருக்கக் கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப் பட்டது உங்களில் நிலைத்திருந்தால் நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.*

**பிரச்சனை**

நாம் இயேசுவில் விசுவாசம் வைப்பதற்கு முன் பாவத்துக்கும் சாத்தானுக்கும் அடிமைகளாய் இருந்தோம் (ரோமர் 6:17). நாம் விசுவாசிகளான பின்பு நீதிக்கு அடிமைகளானோம் (ரோமர் 6:18). தேவனின் கிருபையை நிராகரிப்பதும் நமது இரட்சிப்பை இழந்து போவதும் முடியவே முடியாது என்பது இதன் பொருளா?

விசுவாசிகள் இரட்சிப்பை இழந்து போகவே முடியாது என்று அநேகக் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். விசுவாசிகள் பாவம் செய்யலாம், விழுந்து போவது போல் காணப் படலாம், ஆனால் தேவன் அவர்களை எப்படியாவது தமது கிருபையில் மீண்டும் நிலை நிறுத்துவார் என்று இவர்கள் கூறுகின்றனர். இவர்கள் இதை "நித்தியப் பாதுகாப்பு" என்று அழைக்கின்றனர். 'ஒரு முறை இரட்சிக்கப் பட்டால் இரட்சிக்கப் பட்டதுதான்'' என்கின்றனர்.

வேறு சில கிறிஸ்தவர்களோ விசுவாசிகள் தேவனைப் புறக்கணிப்பதும் தங்கள் இரட்சிப்பை இழந்து போவதும் சாத்தியம் எனக் கருதுகின்றனர். தேவன் அவர்களைத் திருப்பிக் கொண்டுவர முயற்சி செய்வார், ஆனால் அவர்கள் தொடர்ந்து அவரை நிராகரிக்கும் பட்சத்தில் அவர்கள் மீது இரட்சிப்பை மீண்டும் திணிக்க மாட்டார். (பொதுவான தலைப்பு : இரட்சிப்பு - தேவனின் தெரிந்தெடுப்பா மனிதனின் தெரிந்தெடுப்பா? பார்க்க.)

வேதத்தில் நித்தியப் பாதுகாப்பு நித்தியப் பாதுகாப்பு என்ற கேள்விக்கு வேதாகமம் தெளிவான பதிலேதும் கொடுப்பதில்லை. சில வசனங்கள் நாம் இரட்சிப்பை இழக்க முடியாது என்றும், வேறு சில வசனங்களோ நாம்

அதை இழக்கக் கூடும் என்றும் கூறுவது போல் தோன்றுகிறது.

விசுவாசிகள் தேவனை நிராகரிக்கவோ அல்லது இரட்சிப்பை இழக்கவோ முடியாது என்று நம்பும் கிறிஸ்தவர்கள் தேவன் நித்திய ஜீவனைத் தருகிறார் என்று கூறும் வேத வசனங்களைச் சுட்டிக் காட்டுகின்றனர் (யோவான் 3:16; 6:54; 11:26 பார்க்க). இயேசு தமது ஆடுகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதாகவும் "அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை; ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை" (யோவான் 10:28) என்றும் சொன்னார். அவர் தம்மிடத்தில் வருகின்ற எவரையும் தாம் புறம்பே தள்ளுவதில்லை என்றும், பிதாவானவர் தமக்குத் தந்தவைகளில் ஒன்றையும் தாம் இழந்து போகப் போவதில்லை என்றும் சொன்னார் (யோவான் 6:37,39). தேவனுடைய அன்பை விட்டு நம்மை எதுவும் பிரிக்க மாட்டாது என்றும் (ரோமர் 8:38-39), நாம் பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவுக்குள் முத்திரை போடப் பட்டிருக்கிறோம், அவர் நமது சுதந்திரத்தின் அச்சாரமாய் இருக்கிறார் என்றும் (எபேசியர் 1:13-14) பவுல் எழுதுகின்றார். உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவார் (பிலிப்பியர் 1:5). தேவன் நாம் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததைக் காத்துக் கொள்ளவும் (1 தீமோத்தேயு 1:12), தேவ பக்தி உள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும் (2பேதுரு 2:9), வழுவாதபடி நம்மைக் காக்கவும் வல்லவராய் இருக்கிறார் (யூதா 24). இந்த வசனங்கள் ஒரு விசுவாசி நித்தியமாய்ப் பத்திரமாக இருப்பதைக் காட்டுகின்றன.

ஆனால் விசுவாசிகளும் தங்கள் இரட்சிப்பை இழக்க முடியும் என்று நம்பும் கிறிஸ்தவர்களோ சில எச்சரிப்பின்

வேத பகுதிகளைச் சுட்டிக் காட்டுகின்றனர் : முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப் படுவான் (மாற்கு 13:13). மேலும் சில வேத பகுதிகள் : 1 கொரிந்தியர் 15:1-2; கொலோசெயர் 1:21-23; எபிரெயர் 3:6,12; 10:35-36. யோவான் 15:1-6 இல் இயேசு, ஒருவன் என்னில் நிலைத்திரா விட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப் பட்டவைகளைச் சேர்த்து அக்கினியிலே போடுகிறார்கள் என்று கூறியதையும் இவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். பவுல் ரோமர் 11:22 இல், தேவனுடைய தயவிலும் கிருபையிலும் நிலைத்திராத புற ஜாதியினர் வெட்டுண்டு போவார்கள் என்று சொல்கிறார். நியாயப் பிரமாணத்தைக் கைக்கொண்டு நீதியைச் சம்பாதிக்க விரும்பிய கலாத்திய விசுவாசிகள் கிருபையினின்று விழுந்தார்கள் (கலாத்தியர் 5:1-4) என்றும் பவுல் கூறுகிறார்.

விதைக்கிறவன் உவமைக்கு விளக்கம் அளிக்கையில் இயேசு தாமே கூட, சிலர் "கொஞ்சக் கால மாத்திரம் விசுவாசித்து சோதனை காலத்தில் பின்வாங்கிப் போகிறார்கள்" (லூக்கா 8:13) என்று சொன்னார். சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் என்று பவுல் குறிப்பிட்டார் (1தீமோத்தேயு 4:1). எபிரெயர் நிருப ஆக்கியோன் ஒருதரம் பரிசுத்த ஆவியைப் பெற்றும், பிறகு கிறிஸ்துவை மறுதலித்து விடும், தன்னைப் பரிசுத்தம் செய்த தேவனுடைய குமாரனின் இரத்தத்தை அசுத்தம் என்று எண்ணி, கிருபையின் ஆவியை நிந்தித்து விடக் கூடிய அபாயம் குறித்து எழுதுகிறார் (எபிரெயர் 6:4-6; 10:28-29,39). புதிய ஏற்பாடு இதே போன்ற வேறு சில எச்சரிப்புகளையும் தருகிறது (2பேதுரு 2:20-21; வெளிப்படுத்தல் 3:5; 22:19). நமது இரட்சிப்பை இழப்பது சாத்தியமல்ல என்றால், இந்த எச்சரிப்புகளின் அவசியம் என்ன என்பது இக்கிறிஸ்தவர்களின் கேள்வி.

**தாமஸ் ஹேல்**

*அந்திக் கிறிஸ்துகள் சபையிலிருந்து நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள். ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாய் இருக்கவில்லை; நம்முடையவர்களாய் இருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்கள் அல்ல என்று வெளியாகும் படிக்கே பிரிந்து போனார்கள் என்று யோவான் எழுதுகிறார் (1யோவான் 2:19). அதாவது, அவர்கள் உண்மையில்*

*விசுவாசிகளாகவே இருக்கவில்லை. விசுவாசிகள் இரட்சிப்பை இழக்க முடியாது என்று கூறும் கிறிஸ்தவர்கள், பிற்காலத்தில் விசுவாசத்திலிருந்து விழுந்து போகிறவர்கள் முதலிலேயே உண்மை விசுவாசிகளாக இருந்திருக்க மாட்டார்கள் என்கின்றனர். ஆனால் விசுவாசிகளும் இரட்சிப்பை இழக்க முடியும் என்ற கருத்து கொண்டோரோ அப்படி விழுந்து போகிறவர்களில் சிலர் மெய்யான விசுவாசிகள், சிலர் மட்டுமே போலி விசுவாசிகள் என்றும், மெய்யான விசுவாசிகளும் பின்னர் கிறிஸ்துவை நிராகரித்ததால் நம்முடையவர்களாய் இராமற் போனார்கள் என்றும் கருதுகின்றனர். யார் மெய்க் கிறிஸ்தவன் யார் போலிக் கிறிஸ்தவன் என்று பிறரை நியாயம் தீர்ப்பதில் நாம் கவனமாய் இருக்க வேண்டும் (மத்தேயு 7:1-2). நாம் பெருமை கொண்டு, நாம் ஒரு நாளும் விழ மாட்டோம் என்று எண்ணவும் கூடாது.*

*இப்படியிருக்க, தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கக் கடவன் (1கொரிந்தியர் 10:12) என்று பவுல் எழுதுகிறார். யோவானும் கூட, ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப் பட்டது உங்களில் நிலைத்திருக்கக் கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப் பட்டது உங்களில் நிலைத்திருந்தால் நீங்களும் குமாரனிலும்*

பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள் (1யோவான் 2:24) என்று எழுதுகிறார். ஆக, புதிய ஏற்பாட்டின் சில வசனங்கள் ஒரு விசுவாசி தனது இரட்சிப்பை இழக்க முடியாது என்பதற்கு ஆதரவாகவும், வேறு சில வசனங்களோ விசுவாசி இரட்சிப்பை இழக்கக் கூடும் என்பதற்கு ஆதரவாகவும் அமைந்துள்ளதைக் காண்கிறோம். நமது மானிட மனங்களால் புரிந்து கொள்ள முடியாத ஒரு அரும்பெரும் சத்தியத்தின் இரு பக்கங்களைப் பார்த்து கொண்டிருக்கிறோம் என்பது நிச்சயம். தேவனுடைய ஞானம் நம்முடைய ஞானத்தைக் காட்டிலும் சிறந்தது.

விசுவாசிகள் இந்த இரு சத்தியங்களையுமே ஒரு சமச்சீரான நிலையிலிருந்து பார்க்க வேண்டுமென யாரோ ஒருவர் சொல்லிச் சென்றுள்ளார். ஆனால் தனது இரட்சிப்பை இழந்து விடுவேனோ என்று பயந்து நடுங்கும் விசுவாசிக்கு, அவனது இரட்சிப்பு நித்தியமானது என்று வலியுறுத்திக் கூறலாம். தான் விழவே மாட்டோம் என்று அளவுக்கு மீறித் தைரியம் கொண்டிருப்பவனுக்கோ, அவனும் விழக் கூடியவன் தான் என்ற சத்தியத்தை வலியுறுத்திக் கூற வேண்டும். இங்கும் வேத புத்தகத்தின் ஆழமும், செறிவும் நமக்கு வியப்பளிக்கின்றன. வேதம் ஒவ்வொரு நபரின் தேவைகளையும் சந்திக்கிறது. "மரணத்துக்கு ஏதுவான பாவம்'' எது?

1 யோவான் 5:16-17இல், மரணத்துக்கு ஏதுவான பாவம் செய்த ஒரு சகோதரனுக்காக (விசுவாசிக்காக) நாம் ஜெபிக்கக் கூடாது என்று வாசிக்கிறோம். யோவான் ஒருவேளை ஆவிக்குரிய மரணம் பற்றிப் பேசலாம். அல்லது ஒருவேளை பாவத்திலேயே தொடர்ந்து வாழ்கின்ற ஒரு கிறிஸ்தவ சகோதரனின் மரணம் பற்றிப் பேசலாம்; அவன் சரீரம் மரிக்கும், அவன் ஆவியோ கெட்டழியாமல் மீட்கப் படும் (1கொரிந்தியர் 5:5 பார்க்க). இங்கே யோவான்

ஆவிக்குரிய மரணம் பற்றிக் குறிப்பிடுவாரானால், இந்த வசனம் விசுவாசிகள் இரட்சிப்பை இழக்கக் கூடும் என்ற கருத்தை ஆதரிப்பதாக அமையும். ஆனால் அது எந்தப் பாவம் என்பதை யோவான் திட்டவட்டமாகக் கூறவில்லை.

இந்த "மரணத்துக்கு ஏதுவான பாவம்" என்பது ஒரு வேளை பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணமாக இருக்கலாம், அது மன்னிக்கவே படாது என்று இயேசுவும் சொன்னார் (மாற்கு 3:28-29). ஒரு கிறிஸ்தவன் இந்தப் பாவத்தைச் செய்ய முடியுமா இல்லையா என்பது குறித்து இயேசு எதுவுமே சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். எனினும் எபிரெய நிருப ஆக்கியோன் ஒரு விசுவாசி ஒருதரம் பரிசுத்த ஆவியைப் பெற்றும் - அதாவது ஒரு மெய் விசுவாசி, தேவனைப் புறக்கணித்து, கர்த்தரை நிந்திக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் பற்றிப் பேசுகிறார். . . மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் (எபிரெயர் 6:4- 6). பிற்பாடு, எபிரெயர் 10ல் ஆசிரியர் கூறுவதாவது: சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கிறவர்களாய் இருந்தால், பாவங்களின் நிமித்தம் செலுத்தத் தக்க வேறொரு பலி இனியிராது (எபிரெயர் 10:26). தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் என்று எண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவர்கள் பற்றியும் அவர் எழுதுகிறார் (எபிரெயர் 10:29).

அப்படியானால் தேவனுடைய ஆவியானவரை அசட்டை செய்து, துணிகரமாய் பாவத்தில் வாழும் ஒருவன் முடிவிலே தேவனுடைய குரலையே கேட்க முடியாதவனாகி, தனது இரட்சிப்பின் தருணத்தை என்றென்றுமாய் இழந்து விடுவான் எனத் தோன்றுகிறது.

பாவம் செய்யக் கூடாது என அறிந்த பின்னரும் மக்கள் தொடர்ந்து பாவம் செய்வார்கள் எனில், அவர்களது இருதயங்கள் கடினப் படும். அவர்கள் தேவனுடைய குரலைக் கேட்க முடியாதது மட்டுமல்ல; தேவன் அவர்களை அழைப்பதையே கூட நிறுத்தி விட நேரிடலாம்.

ஒரு விசுவாசியும் விசுவாசத்திலிருந்து விழுந்து போகவும், கிறிஸ்துவின் அழைப்பைத் தொடர்ந்து அசட்டை செய்வதன் மூலம் மேற்கண்ட நிலைமையை அடையவும் கூடும் என்பது அநேகக் கிறிஸ்தவர்களின் கருத்து; மேலும், சில வசனங்கள் (எபிரெயர் 6:4-6; 10:26-31) இந்த சாத்தியக் கூற்றைப் பற்றியே குறிப்பிடுவதாக இவர்கள் நம்புகின்றனர். ஆனால் சில கிறிஸ்தவர்களோ, ஒரு மெய்யான விசுவாசி ஒரு நாளும் அந்த நிலையை அடைய மாட்டான்; எப்படியும் தான் மரிக்கும் முன் ஒரு நாளிலே மனந்திரும்பி மீண்டும் விசுவாசத்திற்குள் வந்தே தீருவான் என்று நம்புகின்றனர்.

**சுருக்கம்**

எல்லாக் கிறிஸ்தவர்களுமே, நாம் தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகவே இரட்சிக்கப் படுகிறோம் என்று நம்புகின்றனர் (எபேசியர் 2:8-9). எல்லாக் கிறிஸ்தவர்களுமே பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையினால் மட்டுமே அந்த விசுவாசத்தில் நிலைத்திருக்கிறோம் என்றும் நம்புகின்றனர் (கலாத்தியர் 3:3). எனினும் புதிய ஏற்பாட்டுக் காலத்திலிருந்து இன்று வரை, ஒரு உண்மையான விசுவாசி தனது இரட்சிப்பை இழப்பது சாத்தியமா என்பது குறித்து கிறிஸ்தவர்களிடையே வேறுபட்ட கருத்துக்களே நிலவி வருகின்றன. வேதம் இக்கருத்து பற்றி திட்டவட்டமாக எதையும்

போதிக்கவில்லை. ஆகவே, நமது கருத்து எதுவாயினும், நம்மிடமிருந்து வேறுபட்ட கருத்து கொண்டுள்ள நமது கிறிஸ்தவ சகோதர சகோதரிகளோடு பிரிவினைகள், பேதங்கள் ஏற்பட அனுமதிக்கக் கூடாது. யூதா நிருபத்தில் இந்த இரண்டு கருத்துகளுமே அடுத்தடுத்து குறிப்பிடப் படுவதைக் காணலாம். வசனம் 21இல், தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொண்டு, நித்திய ஜீவனுக்கு ஏதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள் என்றும், வசனம் 24இல், வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ள தேவன் என்றும் யூதா எழுதுகின்றார்.

# 6. பரிசுத்த ஆவியானவர்

**பரிசுத்த ஆவியானவர் - அவர் யார்?**

பரிசுத்த ஆவியானவர் என்பவர் தேவனே தாம். திரித்துவ தேவனில் அவரும் ஒருவர். தேவன் என்பவர் ஒருவரே, ஆனால் எப்பொழுதுமே மூன்று விதங்களில் அல்லது வடிவங்களில் காணப்படுகிறார், அந்த மூன்றுமே முழுமையான தேவனின் வடிவங்கள் தாம்: பரமண்டலங்களில் உள்ள நமது பிதா; பூமியில் மனிதனாக அவதரித்த குமாரன்; விசுவாசிகளின் உள்ளங்களில் வசிக்கும் பரிசுத்த ஆவியானவர் என்பதை எல்லாம் அனைத்துக் கிறிஸ்தவர்களுமே விசுவாசிக்கின்றனர். இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரும் தேவனுடைய பாகங்கள் அல்ல; அவர்களே தேவன் தாம். இதைப் புரிந்து கொள்வது கடினம் என்றாலும், வேதம் அப்படித்தான் நமக்குக் கற்பிக்கிறது.

உதாரணமாக, இயேசு ஞானஸ்நானம் பெற்றுத் தண்ணீரிலிருந்து கரையேறின உடனே பரிசுத்த ஆவியானவர் புறாவின் வடிவத்தில் வந்து அவர்மேல் இறங்கினார், பிதாவும் பரலோகத்திலிருந்து கூப்பிட்டு, "நீர் என்னுடைய நேசகுமாரன்" என்று சொன்னார் (மாற்கு 1:9-11). இயேசுவும், நாம் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படிக் கட்டளையிட்டார் (மத்தேயு 28:19). பவுல் அப்போஸ்தலன் இப்படியாக ஆசீர்வாதம் கூறுகின்றார் : கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக (2கொரிந்தியர் 13:14), தேவத்துவத்தின் மூன்று நபர்களும் எப்பொழுதும் ஒருங்கே குறிப்பிடப் படுகின்றனர் (எபேசியர் 2:18; 4:4-6; யூதா 20-21).

**தாமஸ் ஹேல்**

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் மூவரும் தனித்தனி நபர்கள் (யோவான் 14:16- 17,26; 16:7-15; 1 கொரிந்தியர் 12:4-6; 1 பேதுரு 1:2). ஆனால் ஒருவருக்கொருவர் சமமானவர்கள். அவர்கள் மூவருமே "தேவன்" என்றே அழைக்கப் படுகின்றனர் (யோவான் 6:27 எபிரெயர்1:8; அப்போஸ்தலர் 5:3-4). மூவருமே ஜீவன் தருபவர்கள் (யோவான் 5:21; ரோமர் 8:11). மூவருமே தெய்வீகத்துக்குரிய மகிமையை ஏற்றுக் கொள்பவர்கள் (யோவான் 5:23 : 2 கொரிந்தியர் 13:14). மூவருமே நித்தியமானவர்கள் (யோவான் 1:1; எபிரெயர் 9:14).

பரிசுத்த ஆவியானவரை அவித்துப் போட முடியும் (1 தெசலோனிக்கேயர் 5:19). ஆனால் பரிசுத்த ஆவியானவர் ஏதோ ஒரு விதமான ஆற்றலோ, சக்தியோ அல்லர்; அவர் ஒரு நபர். திரித்துவத்தின் மற்ற இரு நபர்களையும் போலவே ஆவியானவரும் நம்மோடு தனிப்பட்ட உறவு கொள்பவர். அவர் பேசுவார் (அப்போஸ்தலர் 13:2), அவரைப் துக்கப் படுத்த முடியும் (ஏசாயா 63:10; எபேசியர் 4:30), அவரை நிந்திக்கவோ, அவமானப் படுத்தவோ முடியும் (எபிரெயர் 10:29). பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப் பேசுவது துஷணம் எனக் கருதப் படும், இந்தப் பாவத்துக்கு மன்னிப்பே கிடையாது (மாற்கு 3:28-29). பரிசுத்த ஆவியானவர் பிதாவோடும் குமாரனோடும் ஒன்றாயிருக்கிறார். இதை நாம் ரோமர் 8:9-10 இல் காண முடியும். இங்கே "தேவனுடைய ஆவி'', ''பரிசுத்த ஆவி'' ''கிறிஸ்துவின் ஆவி'', மற்றும் "கிறிஸ்து" என்ற பதங்கள் எல்லாமே ஒன்றுக்குப் பதிலாக ஒன்று பயன்படுத்தப் பட்டுள்ளன, எல்லாமே ''தேவன்'' என்ற அர்த்தத்திலேயே வருகின்றன.

இந்த ஒருமைப் பாடு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் மூவரும் ஒருவரையொருவர் ஒத்தவர்கள் என்று பொருள்படாது. குமாரன் பிதா அல்லர், ஆனால் பிதாவினால் ஜெநிப்பிக்கப் பட்டவர்(யோவான் 3:16); பரிசுத்த ஆவியானவர் பிதாவோ, குமாரனோ அல்லர், ஆனால் பிதாவினாலும் குமாரனாலும் அனுப்பப் பட்டவர் (யோவான் 15:26). ஆனால் மூவரும் கருத்தொருமித்தவர்கள், ஒரே சிந்தையும், ஒரே சித்தமும், ஒரே நோக்கமும் கொண்டவர்கள், தன்மையிலும் ஒன்றுபட்டவர்கள்.

திரித்துவ தேவனை மேல் ஓடு, வெள்ளைக் கரு, மஞ்சள் கரு என்ற மூன்று பாகங்கள் கொண்ட முட்டைக்கு ஒப்பிடலாம். ஆனால் தேவன் ஒருவரே, மூன்று பாகங்களாலானவர் அல்லர். திரித்துவ தேவனை தண்ணீர், பனிக்கட்டி, நீராவி என்ற மூன்று வடிவங்களில் காணப்படும் நீருக்கும் ஒப்பிடலாம். இது முதலாவதைக் காட்டிலும் சற்றுப் பொருத்தமான உவமை, காரணம் இம்மூன்று நிலைகளிலும் காணப்படுவது ஒரே பொருளே. ஆனால் இங்கே பிரச்சனை என்னவென்றால் நீர் ஒரே சமயத்தில் இந்த மூன்று நிலைகளிலும் காணப்படுவது முடியாத காரியம், தேவனோ ஒரே நேரத்தில் மூவராகவும் இருக்கிறார் (மாற்கு 1:10-11).

பிதாவாகிய தேவனை ஒரு நாடகம் எழுதும் கதாசிரியருக்கு ஒப்பிடுவது இன்னும் நலமாக இருக்கும். நாடகம் நாம் வாழ்கின்ற உலகம். கதாசிரியர் முற்றிலும் தமக்கே ஒப்பான ஒரு கதாபாத்திரத்தை நாடகத்தில் படைக்கின்றார். அப்படி கதாசிரியருக்கு முழுக்க முழுக்க ஒத்த அந்தக் பங்கெடுத்துக் கொள்கிறது, கதாபாத்திரம் இயேசு. கதாசிரியரின் ஆவியும் நாடகம் முழுவதிலும் ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் ஆட்டி வைக்கிறது, ஒரு

கதாபாத்திரத்திடமிருந்து வல்லமையை எடுக்கிறது, வேறொரு கதாபாத்திரத்துக்கு வல்லமையை அளிக்கிறது. இது உலகில் செயல்படும் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் "உலகில் வசிக்கும் தேவன்." தாம் உலகை விட்டுப் போவதாகவும் (யோவான் 14:2-3), ஆனால் நம்மோடிருக்கும் படியாக பரிசுத்த ஆவியானவரை அனுப்பப்போவதாகவும் (யோவான் 14:16-20, 26) இயேசு சொன்னார். பரிசுத்த ஆவியானவர் என்பவர் செயல்படும் தேவன், உலகில் கிரியை செய்யும் தேவனே தாம். சரி, அப்படியானால், பரிசுத்த ஆவியானவர் என்ன செய்கிறார்?

**பரிசுத்த ஆவியானவர் - அவரது பணி**

முதலாவதாக, பரிசுத்த ஆவியானவர் உலகத்தின் படைப்பில் பங்கெடுத்துக் கொண்டார் (ஆதியாகமம் 1:1-2). மனுஷனுக்கு ஜீவ சுவாசத்தைக் கொடுத்தவர் அவரே (ஆதியாகமம் 2:7; யோபு 33:4). இரண்டாவதாக, வேதாகமத்தின் நூல்களை எழுதிய ஆக்கியோன்கள் தேவன் என்ன சொல்ல விரும்பினாரோ அதைத் துல்லியமாக எழுதும்படி அவர்களை ஏவியெழுப்பி எழுதச் செய்தவர் பரிசுத்த ஆவியானவரே (அப்போஸ்தலர் 28:25; எபிரெயர் 9:8 10:15; 2 பேதுரு 1:21).

பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டிலும் செயல் பட்டார். அவர் போதித்தார் (நெகேமியா 9:20,30), தேவனுடைய மக்களுக்கு வல்லமையும் வரங்களும் அருளுவதற்காக அவர்கள் மீது வந்திறங்கினார் (எண்ணாகமம் 11:17; 27:18; 1 சாமுவேல் 19:20-24; 2 இராஜாக்கள் 2:9-14). எனினும் தாவீது, தேவன் எங்கே தமது பரிசுத்த ஆவியானவரைத் தன்னிடமிருந்து எடுத்து

விடுவாரோ என்று பயந்தான் (சங்கீதம் 51:11). ஆகவே, ஒருவேளை பழைய ஏற்பாட்டுக் காலங்களில் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் உள்ளங்களில் வாசம் செய்யாமல் குறிப்பிட்ட வேளைகளில் குறிப்பிட்ட ஊழியங்களை நிறைவேற்றுவதற்காகக் குறிப்பிட்ட நபர்கள் மீது வந்திறங்கி இருக்கலாம்.

இயேசு பரிசுத்த ஆவியானவராலே உற்பவித்தார் (மத்தேயு 1:20), ஆவியானவரால் வல்லமையாய் அபிஷேகிக்கப் பட்டார் (மாற்கு 1:10; லூக்கா 4:18; அப்போஸ்தலர் 10:38). நம்மைப் போலவே இயேசுவுக்கும் ஆவியானவரின் முழுமையாக மனிதனாய் ஒத்தாசையும் வல்லமையும் தேவைப்பட்டது, ஏனெனில் அவர் இருந்தார். இயேசு இப்பூவுலகில் இருந்த போது தெய்வீகத் தன்மை பொருந்தியவராகவே இருந்த போதிலும், தமது தெய்வீக வல்லமையையும் மகிமையையும் துறந்தே வாழ்ந்தார் (யோவான் 17:5; பிலிப்பியர் 2:7).

யோவான் 14-16 அதிகாரங்களில், இயேசு தாமும் பிதாவும் சேர்ந்து சீஷர்களிடம் பரிசுத்த ஆவியானவரை அனுப்பப் போகிற ஒரு புதிய ஆவியானவரின் யுகம் பற்றிப் பேசுகின்றார் (யோவான் 14:26; 15:26). ஆனால் சீஷர்கள் ஆவியானவரை ஏற்கனவே அறிந்திருந்தனர், காரணம் அவர் ஏற்கனவே அவர்களோடு வாழ்ந்திருந்தார் (யோவான் 14:16-17). இந்தப் புதிதாக "அனுப்புதல்", ஆவியானவர் அதற்கு முன் உலகத்தில் இருந்ததேயில்லை எனப் பொருள் படாது. ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சில புதிய காரியங்களைச் செய்யும் படியாக பரிசுத்த ஆவியானவர் இவ்வுலகிற்குள் ஒரு விசேஷித்த முறையில் வந்தார்.

உலகில் கிறிஸ்துவின் சரீரமாம் திருச்சபையை நிலைநாட்டுவதற்காகப் பரிசுத்த ஆவியானவர் ஒரு

சிறப்பான முறையில் வந்தார் (எபேசியர் 1:22-23; 5:29-30). நமது ஒருமைப்பாட்டுக்கும் ஐக்கியத்திற்கும் ஆதாரம் பரிசுத்த ஆவியானவரே (1கொரிந்தியர் 12:13; எபேசியர் 4:3). பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் சபையைப் பெலனால் தரிப்பித்தார் (அப்போஸ்தலர் 2:1-4), இந்த நிகழ்ச்சி பழைய ஏற்பாட்டிலேயே முன்னுரைக்கப் பட்டிருந்தது (யோவேல் 2:28-29; அப்போஸ்தலர் 2:17-18). சபைக்கு உதவும் பொருட்டு ஆவியானவர் விசேஷித்த வரங்களைத் தந்தருள்கிறார் (ரோமர் 12:6-8; 1கொரிந்தியர் 12:8-10). ஊழியத்திற்கான மக்களைத் தெரிந்தெடுப்பதில் சபையை வழிநடத்துபவர் அவரே (அப்போஸ்தலர் 13:2), தீர்க்கதரிசனங்கள், சொப்பனங்கள் மற்றும் வெளிப்பாடுகள் மூலமாகத் தமது வார்த்தையைத் திருச்சபைக்கு அனுப்புகிறவரும் அவரே (அப்போஸ்தலர் 10:9-16; 21:9-10; 1கொரிந்தியர் 14:26-32; 1தீமோத்தேயு 4:14; வெளிப்படுத்தல் 1:1).

ஆனால் இந்த ஆவியானவரின் யுகம் கூட்டாகத் திருச்சபைக்கு மட்டுமானது அல்ல. பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசிக்கும் நெருக்கமாகி விட்டார். மனிதர்களை அவர்களது பாவங்களைக் குறித்து கண்டித்து உணர்த்துபவர் இந்த ஆவியானவரே (யோவான் 16:8- 11). தேவன் தமது சொந்த ஆவியானவரை நமக்குள்ளே வைப்பார் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைத்தார் (எசேக்கியேல் 36:25-28). இயேசுவும் தமது சீஷர்களிடம், பரிசுத்த ஆவியானவர் அவர்களிடையே மட்டுமல்ல, வெகு விரைவிலேயே அவர்களுக்குள்ளேயும் வந்து வாசம் பண்ணுவார் என்று வாக்களித்திருந்தார் (யோவான் 14:17). தாம் பரத்திற்கு ஏறிச் செல்லும் முன் இயேசு தமது சீஷர்கள் மேல் ஊதிப் "பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னார் (யோவான் 20:22). பரிசுத்த ஆவியானவர் எல்லாக்

கிறிஸ்தவர்களுக்குள்ளும் வசிக்கிறார் (ரோமர் 8:9; 1கொரிந்தியர் 6:19; கலாத்தியர் 4:6). நாம் விசுவாசிகளாகும் போது, ஆவியானவரால் பிறக்கிறோம் (யோவான் 3:3-6; 1யோவான் 5:1), நாம் தேவனுடைய பிள்ளைகளாகி விட்டோம் என்று நம்முடைய ஆவியுடனே கூட அந்தப் பரிசுத்த ஆவியானவரும் சாட்சி கொடுக்கிறார் (ரோமர் 8:16; 1யோவான் 5:6-8). தேவனை "எங்கள் பிதாவே" என்று கூப்பிடக் கூடிய உரிமையைப் பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தருகின்றார் (ரோமர் 8:15; கலாத்தியர் 4:6). ஆவியானவர் நமக்குப் போதிப்பார் (யோவான் 14:26; 15:26; 16:13-14) என்றும், நம்மை வழிநடத்துவார் (மாற்கு 13:11) என்றும் இயேசு வாக்களித்தார். இதன் உதாரணங்களை அப்போஸ்தலர் 15:28 மற்றும் 16:6-7இல் காண்கிறோம். நாம் தேவ சித்தத்திற்கு ஏற்றபடி ஜெபிக்கவும் ஆவியானவர் நமக்கு உதவுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளும் வாழ்கின்றார் (ரோமர் 8:9); எனினும், வெவ்வேறு கிறிஸ்தவர்களிடமும் வெவ்வேறு விதமாகக் கிரியை செய்கின்றார். நாம் விசுவாசிகளாகும் போது ஆவியானவரால் முத்திரையிடப் படுகிறோம் என்று கூறும் பவுல் (எபேசியர் 1:13-14), நம்மை ஆவியானவரால் நிறைந்திருக்கவும் சொல்கிறார் (எபேசியர் 5:18). சீஷர்கள் யோவான் 20:22இல் ஆவியானவரைப் பெற்றுக் கொண்டனர், ஆனால் அப்போஸ்தலர் 2:4இல் தான் ஆவியானவரால் நிரப்பப் பட்டனர், பிறகு மீண்டும் அப்போஸ்தலர் 4:31இல் நிரப்பப் பட்டனர். சிறப்பான ஊழியத்திற்கென்று ஆவியானவர் சிறப்பான விதங்களிலும் வந்திறங்கக் கூடும் (அப்போஸ்தலர் 13:2- 4; 1 தீமோத்தேயு 4:14). நாம் ஆவியை அவித்துப் போடக் கூடாது என்று பவுல் சொல்கிறார் (1தெசலோனிக்கேயர் 5:19). பவுல்

தீமோத்தேயுவின் மேல் தன் கைகளை வைத்ததினால் அவனுக்கு உண்டான தேவ வரத்தை அவன் அனல் மூட்டி எழுப்பி விடும் படி கூறப்படுகிறது (2தீமோத்தேயு 1:6), ஒன்று, நாம் நமது வாழ்வில் ஆவியானவர் இன்னும் அதிகம் அதிகமாகக் கிரியை செய்ய விடலாம், அல்லது அவர் கிரியை செய்யாதபடி தடுத்துப் போடலாம் என்பதைக் காண்கிறோம். ஒன்று நாம் ஆவியானவரால் நிறைந்திருக்கலாம், அல்லது ஆவியானவரை அவித்துப் போடலாம்.

இந்த "ஆவியானவரால் நிறைந்திருப்பது" என்பதன் பொருள் என்ன? எல்லாக் கிறிஸ்தவர்களின் வாழ்விலும் சம அளவில் காணப் படாத ஆவியானவரின் கிரியைகள் எவை? அவற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம் : ஆவியானவரின் வரங்கள், இதன் உதாரணத்தை 1 கொரிந்தியர் 12:8-10இல் காணலாம்; ஆவியானவரின் கனிகள், இவற்றை கலாத்தியர் 5:22-23இல் பார்க்கலாம். ஆவியானவரின் வரங்கள் மற்றும் வல்லமை பற்றி மேலும் அறிய பொதுவான தலைப்பு: பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் - பார்க்க. ஆவியானவரின் கனிகள் அல்லது "பரிசுத்தம்" பற்றிக் கீழே காண்போம்.

**பரிசுத்தம் அல்லது பரிசுத்தமாக்கப் படுதல்**

பரிசுத்தம் அல்லது பரிசுத்தமாக்கப் படுவது என்றால் என்ன? சுருங்கச் சொன்னால் அது கிறிஸ்துவுக்கு ஒத்திருப்பது. அதன் விளைவு அன்பும், பிற ஆவியின் கனிகளும் (1கொரிந்தியர் 13:1- 13; கலாத்தியர் 5:22-23). அது உலகிலிருந்தும் பாவத்திலிருந்தும் பிரித்தெடுக்கப் பட்ட வாழ்வு. அது தேவனுக்கென்று நாம் பிரித்தெடுக்கப் படுவதுமாகும், அதாவது நமது திறமைகள், தாலந்துகள், தருணங்கள் அனைத்தும் தேவனுக்குக் கையளிக்கப் படுவது.

*தேவன் நம்மைப் பரிசுத்தமானவர்களாகவே ஏற்கனவே காண்கிறார் (எபிரெயர் 10:10). ஆனால் நாமோ நமது வாழ்வில் அசுத்தம் இருப்பதைக் காண்கிறோம். இதை நாம் எப்படி விளங்கிக் கொள்வது? வேதத்திலே பரிசுத்தம் என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. முதலாவது அர்த்தத்தின் படி, நியாயாதிபதியாகிய தேவன் நம்மைப் பரிசுத்தமானவர்கள் அல்லது குற்றமற்றவர்கள் என்று தீர்க்கிறார். இயேசு கிறிஸ்துவே நமது பரிசுத்தமாய் இருக்கிறார் (1கொரிந்தியர் 1:30), நாம் "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கப் படுகிறோம் (எபேசியர் 1:1; பிலிப்பியர் 1:1). தேவனுடைய பார்வையில் கிறிஸ்துவுக்குள் நமது நிலை இதுவே.*

*ஆனால் வேதத்தில் காணப்படும் பரிசுத்தம் என்ற பதத்தின் இரண்டாவது அர்த்தம் நமது அனுபவத்தில், அன்றாட வாழ்வில் எந்த அளவுக்குப் பரிசுத்தம் காணப்படுகிறது என்பதாகும். நமது வாழ்க்கையைப் பார்க்கையில் பரிபூரண பரிசுத்தத்தைக் காண்கிறோமா? இல்லையே. கிறிஸ்தவர்கள் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளும் அந்த வேளையில் தானே நீதிமான்கள் என்று தீர்க்கப் படுகின்றனர், ஆனால் அவர்கள் இன்னும் பாவிகளே, இன்னும் பரிசுத்தமாக வேண்டியவர்களே. இது ஆவியானவரால் நடைபெறும் இடையறாத கிரியை, இதன் மூலமாகவே நமது அனுதின வாழ்வில் மெய்யான பரிசுத்தம் அடைகிறோம் (2 தெசலோனிக்கேயர் 2:13; 1 பேதுரு 1:2).*

*பரிசுத்தமான வாழ்க்கை செய்யும் படியாக தேவன் நம்மை அழைக்கிறார் (எபேசியர் 1:4; 1தெசலோனிக்கேயர் 4:3-7; 1 பேதுரு 1:15-16), இயேசுவும் நம்மைப் பூரண சற்குணர்களாயிருக்கும்படி அழைக்கிறார் (மத்தேயு 5:48). ஆனால் உண்மையில் நம்மைப் பரிசுத்தமாக்குவது பரிசுத்த ஆவியானவரே.*

**தாமஸ் ஹேல்**

பரிசுத்தமாக்கப் படுதல் என்பதும் நமது இரட்சிப்பில் உள்ளடக்கம் (2தெசலோனிக்கேயர் 2:13). பரிசுத்தமில்லாமல் நாம் தேவனைப் பார்க்க முடியாது (எபிரெயர் 12:14). பரிசுத்தம் என்பது நாம் இரட்சிக்கப் பட வேண்டுமானால் நம்மிடம் இருந்தாக வேண்டிய ஒன்றல்ல; அது, நாம் ஏற்கனவே இரட்சிக்கப் பட்டு விட்டதால் சாத்தியமாகின்ற ஒன்று (ரோமர் 6:22). நாம் நமது சொந்த முயற்சிகளால் மட்டுமே பரிசுத்தமாகி விடுவதில்லை. பரிசுத்த ஆவியானவரும் நமக்கு உதவுகிறார். ஆவியானவரால் மாத்திரமே நாம் நமது பாவ சுபாவத்தின் பாவங்களுக்கு மரிக்கிறோம் (ரோமர் 8:13). கலாத்தியர்கள் இரட்சிப்பை தேவனுடைய இலவச ஈவாகப் பெறுவதில் ஆரம்பித்தனர், ஆனால் பின்னரோ தாங்கள் பரிசுத்தமாவதற்கு அல்லது பூரணமடைவதற்கு தங்கள் மானிட முயற்சிகளைச் சார்ந்திருக்கத் தொடங்கினர், இதைக் கண்டு பவுல் பெரிதும் வருந்தினார் (கலாத்தியர் 3:3; பொதுவான தலைப்பு: இரட்சிப்பின் வழி - பார்க்க).

பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே நாம் பரிசுத்தமாக முடியும். ஆனால் அதற்காக நாம் செய்ய வேண்டியது என்று எதுவுமே இல்லை என்றாகி விடாது. நாம் தேவனுடைய சிட்சையை ஏற்றுக் கொள்ள வேண்டும் (1கொரிந்தியர் 9:24-27; 1 தீமோத்தேயு 4:7). நம்மைத் தடை செய்யக் கூடிய ஆவிக்குரிய, சரீர பாவங்கள் அனைத்தையும் "தள்ளி விட வேண்டும் (2கொரிந்தியர் 7:1; எபிரெயர் 12:1-2), நமது சரீரங்களையும் மனங்களையும் தேவனுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோமர் 6:13,19; 12:1-2). நாம் வேதத்தைப் படிக்க வேண்டும் (2தீமோத்தேயு3:16), வசனங்களை மனனம் செய்ய வேண்டும் (சங்கீதம் 119:11; 2 பேதுரு 1:4), பிறகு அந்த வசனங்கள் நமது நடத்தையை மாற்ற அனுமதிக்க வேண்டும். நமக்கு மேலாக தேவன் வைத்திருக்கும்

தலைவர்களிடமிருந்தும் நாம் உதவி பெறலாம் (எபேசியர் 4:11-13). இவை எல்லாவற்றுக்கும் மேலாக நாம் ஜெபித்து தேவ ஒத்தாசைக்காகக் கேட்க வேண்டும் (கொலோசெயர் 1:9-10; 1 தெசலோனிக்கேயர் 3:12-13;5:23) இல்லாவிடில் தவறி விழுவோம்.

சில கிறிஸ்தவர்கள் இதற்கு இன்னும் ஒரு படி உள்ளது, பரிசுத்தமாக்கப் படுதல் என்ற விசேஷித்த அனுபவம் ஒன்று இருக்கிறது என்று நம்புகின்றனர். அதிகமாக ஜெபித்து தேவனுடைய முகத்தைத் தேடும்பொழுது பரிசுத்தமாக்கப் படுதல் என்ற விசேஷித்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று இவர்கள் நம்புகின்றனர் (கிருபையின் முதல் பணி நமது இரட்சிப்பு). இக்கிறிஸ்தவர்கள் முதலில் நாம் இரட்சிக்கப் படும்போது மறுபடியும் பிறக்கிறோம், உலகத்திலிருந்து வேறு பிரிக்கப் படுகிறோம் (1யோவான் 5:4), ஆவியானவரால் உள்வாசம் செய்யப் படுகிறோம் (ரோமர் 8:9) என்று போதிக்கின்றனர். நாம் கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் ஆகிறோம் (1கொரிந்தியர் 3:1). ஆனால் "இரண்டாம் ஆசீர்வாதம்" என்று சில சமயங்களில் அழைக்கப் படும் இந்தக் "கிருபையின் இரண்டாம் பணி" நம்மைப் பரிசுத்தமாக்குகிறது, சுயத்தை வேறு பிரிக்கிறது (கலாத்தியர் 2:20), நம்மை ஆவியானவரால் நிரப்புகிறது (எபேசியர் 5:18). அப்பொழுது நாம் பூரண புருஷராகிறோம் (எபேசியர் 4:11), தேவ அன்பு நமக்குள் பூரணப் படுகிறது (1யோவான் 4:12,17). இந்தக் கிறிஸ்தவர்கள் நாம் பரிபூரணமாகப் பரிசுத்தமாக்கப் படுவது சாத்தியம் என்றும், அதன்பிறகு தெரிந்தோ, விரும்பியோ பாவமே செய்ய மாட்டோம் என்றும் நம்புகின்றனர் (1யோவான் 3:9).ரோமர் 7ஆம் அதிகாரத்தின் பிற்பகுதி முதிர்ச்சியடையாத கிறிஸ்தவனைச் சித்தரிக்கிறது என்றும், ரோமர் 8 ஆம் அதிகாரம் இந்த "இரண்டாவது

ஆசீர்வாதத்தைப்' பெற்றுக் கொண்ட ஒரு முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவனைச் சித்தரிக்கிறது என்றும் நம்புகின்றனர். இந்தப் பரிசுத்தமாக்குதலின் அனுபவத்துக்கு எடுத்துக் காட்டாக அப்போஸ்தலர் 2:4 மற்றும் 9:17இல் காணப்படும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும் அனுபவத்தைச் சுட்டிக் காட்டுகின்றனர், (பொதுவான தலைப்பு: பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் - பார்க்க).

எனினும், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக்கப் படுதல் என்பது நீண்ட காலம் பிடிக்கும் ஒரு மெதுவான முறைமை, நாம் மரிக்கும் வரை அது தொடரும் என்றே நம்புகின்றனர். பரிசுத்தமாவதற்கென்று தனியாக எந்த அனுபவமும் தேவையில்லை என்பது இவர்களது கருத்து. நாம் பரிசுத்தமாக்கப் படுகிறோம் (கலாத்தியர் 3:3; எபிரெயர் 10:14; 12:10-11), அல்லது நாம் தொடர்ந்து ஓட வேண்டும் அல்லது பாவத்துக்கு எதிராக தொடர்ந்து போராட வேண்டும் (எபிரெயர் 12:1-4) என்றெல்லாம் கூறும் வேத வசனங்களை இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். புதிய ஏற்பாட்டில் அநேக வசனங்கள் நாம் நமது சரீரங்களை அடக்கியொடுக்கிக் "கீழ்ப்படுத்த வேண்டும் என்றும், நம்மை ஜீவபலியாக "ஒப்புக் கொடுக்க" வேண்டும் என்றும், ஓட்டப் பந்தயத்தில் "ஓட" வேண்டும் என்றும், "போராட" வேண்டும் என்றும் கூறுகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கையில் நாம் முற்றிலும் பரிசுத்தமாகவில்லை என்றே தோன்றுகிறது. பவுல் தன்னைத் தேறினவர்கள் வரிசையில் சேர்த்துக் கொண்ட போதிலும் (பிலிப்பியர் 3:15), தான் இன்னும் முற்றும் தேறவில்லை என்றும், தேறும்படி தொடர்ந்து நாடுவதாகவுமே கூறுகின்றார் (பிலிப்பியர் 3:12-14). சிலர் 1 யோவான் 1:8 ஐயும் கட்டிக் காட்டுகின்றனர். அங்கே யோவான் நமக்குப்

பாவமில்லை என்று சொல்வோமானால் நாம் உண்மை சொல்லவில்லை என்கிறார்.

நாம் எந்த அளவுக்குக் கிறிஸ்துவில் தேர்ச்சி அல்லது முதிர்ச்சி அடைகிறோமோ அந்த அளவுக்கு அதிகமாக நமது பாவத்தையும் அசுத்தத்தையும் உணர்கின்றோம். பவுல் தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் தாமே பிரதான பாவி என்கிறார் (1தீமோத்தேயு 1:15). இந்தக் கருத்துடைய கிறிஸ்தவர்கள் ரோமர் 7இன் பிற்பகுதி, அன்றாட வாழ்வில் பாவத்துக்கு எதிராகப் போராடும் ஒரு கிறிஸ்தவனையே சித்தரிப்பதாக நம்புகின்றனர். ஒரு கிறிஸ்தவன் கொஞ்சம் கொஞ்சமாகப் பாவத்தை மேற்கொண்டு ரோமர் 8ல் வர்ணிக்கப்படுகின்ற வாழ்க்கையை அடையக் கூடும், எனினும் இவ்வுலகில் வாழும் பரியந்தம் தனது பாவ சுபாவத்துடன் போராடிக் கொண்டே தான் இருப்பான் என்பது இவர்களது கருத்து.

ஒவ்வொரு கிறிஸ்தவனின் அனுபவமும் வேறுபடும். அநேகக் கிறிஸ்தவர்கள் தாங்கள் இந்த "இரண்டாவது ஆசீர்வாதத்தை அதாவது ஆவியானவரின் நிறைவைப் பெற்றுக் கொண்டதாகக் கூறுகின்றனர். இன்னும் சில கிறிஸ்தவர்கள் மெல்லப் மெல்லப் பரிசுத்தமாக்கப் படுவதோடு கூடவே, அவ்வப்பொழுது திடீர் திடீரென இன்னும் அதிகமாகப் பரிசுத்தத்தில் வளருகின்ற அனுபவங்களையும் பெறுவதாகக் கூறுகின்றனர். தேவன் ஒவ்வொருவரின் வாழ்விலும் வெவ்வேறு விதங்களில் கிரியை செய்கின்றார். பரிசுத்த ஆவியானவரின் இடைபடுதல்களை நமது சொந்த தனிப்பட்ட அனுபவங்களைக் கொண்டு ஒரு வரையறைக்குள் திணிக்க முயலக் கூடாது.

*பரிசுத்தமாக்கப் படுதலின் அனுபவத்தைப் பற்றி நமது நம்பிக்கை எதுவாக இருந்தாலும் சரி, நமது பொறுப்பு தெள்ளத் தெளிவானது; நாம் பரிசுத்தமாய் இருக்க அழைக்கப் படுகிறோம். பேதுரு - நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராய் இருங்கள்" என்று எழுதுகிறார் (1பேதுரு 1:15). யாவரோடும் சமாதானமாய் இருக்கவும் பரிசுத்தம் உள்ளவர்களாய் இருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (எபிரெயர் 12:14).*

# 7. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்

**முக்கிய வசனங்கள்**

*மாற்கு 1:8 . . அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். லூக்கா 24:49 . .. நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப் படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் ...*

*யோவான் 14:16-17 நான் பிதாவை வேண்டிக் கொள்வேன், அப்பொழுது ... சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருள்வார்.*

*யோவான் 20:22 (இயேசு) அவர்கள் மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் ... என்றார். அப்போஸ்தலர் 1:4 நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.*

*அப்போஸ்தலர் 1:8 பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன் அடைந்து .... சாட்சிகளாய் இருப்பீர்கள்.*

*அப்போஸ்தலர் 2:1-4 அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப் பட்டு வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.*

*அப்போஸ்தலர் 2:38-39 பேதுரு அவர்களை நோக்கி : . . . அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (என்று சொன்னான்)*
*அப்போஸ்தலர் 8:14-17 பேதுருவும் யோவானும் அவர்கள் மேல் (சமாரியர்கள்) கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்*

**தாமஸ் ஹேல்**

*அப்போஸ்தலர் 10:44-48 வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.... பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப் பட்டது* **---** *அப்போஸ்தலர் 19:1-6 பவுல் அவர்கள் மேல் எபேசியர் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார். 1 கொரிந்தியர் 12:7-11 ஆவியினுடைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப் பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவையும் உணர்த்தும் வசனமும், விசுவாசமும் ... குணமாக்கும் வரங்களும் .. அற்புதங்களைச் செய்யும் சக்தியும் ... தீர்க்க தரிசனம் உரைத்தலும் ... ஆவிகளைப் பகுத்தறிதலும், ... பற்பல பாஷைகளைப் பேசுதலும் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் ... அளிக்கப்படுகிறது.*

**பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்றால் என்ன?**

*பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது முதன்முதலில் யோவான்ஸ்நானனால் குறிப்பிடப் பட்டது (மத்தேயு 3:11; மாற்கு 1:8; லூக்கா 3:16). தன்னுடைய ஞானஸ்நானம் தண்ணீரினால்' கொடுக்கப் படுவது, ஆனால் இயேசுவோ விசுவாசிகளுக்குப் பரிசுத்த ஆவியானவராலும் அக்கினியாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான் உரைத்தான். தண்ணீர் ஞானஸ்நானத்தில் விசுவாசியை ஒரு போதகர் தண்ணீரினால் ஞானஸ்நானம் செய்கிறார், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்திலோ, இயேசு தாமே விசுவாசியை பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் செய்கிறார், யோவான் கொடுத்த தண்ணீர் ஞானஸ்நானத்தையும், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தையும் வேறுபடுத்திக் காட்டும் வண்ணமாக*

*இயேசு அப்போஸ்தலர் 1:5இலும் இதே பதத்தைப் பயன்படுத்துகின்றார். பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பதை பரிசுத்த ஆவியானவர் தமது சீஷர்கள் மேல் "வந்து இறங்கும் நேரம் எனவும், அவர்கள் பெலன் அடையும் நேரம் எனவும் இயேசு விவரிக்கின்றார் (அப்போஸ்தலர் 1:8). அப்போஸ்தலர் 1:4 மற்றும் லூக்கா 24:49 இல், இயேசு இந்த வல்லமைக்காகத் தமது சீஷர்களைக் காத்திருக்கச் சொன்னார்.*

*அப்படியே சீஷர்கள் காத்திருந்தனர், பெந்தெகொஸ்தே நாளன்று இந்தப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளவும் செய்தனர் (அப்போஸ்தலர் 2:1-4). ஆவியானவரின் வல்லமையால் அந்நிய பாஷைகளில் பேசத் தொடங்கினர். பின்னர் ஆதித் திருச்சபையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும் வரங்களும் அப்போஸ்தலர்களாலும் உதவிக் காரரர்களாலும் பயன்படுத்தப் பட்டதைக் காண்கிறோம் (அப்போஸ்தலர் 3-9 அதிகாரங்கள்).*

*பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த வல்லமையையும் வரங்களையும் பெற்றுக் கொண்ட மக்களைப் பற்றிப் புதிய ஏற்பாடு முழுவதிலும் வாசிக்கிறோம் (1கொரிந்தியர் 12-14 அதிகாரங்கள்; 2 கொரிந்தியர் 12:12; 1 தீமோத்தேயு 4:14; 2 தீமோத்தேயு 1:6), கேள்வி என்னவென்றால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும், விசேஷித்த வரங்களும் இன்றும் நமக்குக் கிடைக்கக் கூடுமா என்பதே. அப்படிக் கிடைக்கக் கூடும் என்றால், நாம் அவற்றை எப்படி, எப்பொழுது பெற்றுக் கொள்ளலாம்? பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் அனுபவங்கள் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் இருக்கின்றார் என்று வேத வசனம் திட்டவட்டமாகப் போதிக்கிறது (ரோமர் 8:9;*

*1கொரிந்தியர் 6:19; கலாத்தியர் 4:6), ஆனால் வெவ்வேறு விசுவாசிகளின் வாழ்விலும் அவர் வெவ்வேறு விதங்களில் செயல்படுகின்றார்.*

*யோவான் ஸ்நானன் தனது தாயின் வயிற்றில் கருவாக இருக்கும் போதே பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப் பட்டான் (லூக்கா 1:15, 41-44). இயேசு தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறின உடனே, ஆவியானவர் புறாவின் வடிவில் அவர் மீது வந்திறங்கினார் (மாற்கு 1:10; யோவான் 1:32-33). இயேசு இப்பூவுலகில் ஊழியம் செய்த நாட்களில் தமது பன்னிரு சீஷர்களுக்கும் அதன்பிறகு வேறு எழுபத்திரண்டு சீஷர்களுக்கும் வியாதிகளைக் குணமாக்கும், பிசாசுகளைத் துரத்தும் அதிகாரத்தையும் வல்லமையையும் கொடுத்தார் (லூக்கா 9:1-2; 10:1,9,17-19). பிற்பாடு பரிசுத்த ஆவியானவர் அவர்களுடன் கூட இருப்பது மட்டுமின்றி அவர்களுக்கு உள்ளேயும் வருவார் என்று வாக்கும் அருளினார்(யோவான் 14:16-17). பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னரே இயேசு தமது சீஷர்கள் மேல் ஊதி, “பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லியிருந்தார் (யோவான் 20:22).*

*ஆனால் அதே சீஷர்களைப் பார்த்து பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மீது வல்லமையாய் வந்து இறங்குவதற்காக, அதாவது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்துக்காகக் காத்திருக்கும்படியும் சொன்னார் (லூக்கா 24:49; அப்போஸ்தலர் 1:4). அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் அவர்கள் ஆவியானவரின் வல்லமையையும் வரங்களையும் பெற்றுக் கொண்டது, திருச்சபை யுகத்தின் ஆரம்பமாக அமைந்தது. அவர்கள் எங்கும் திரிந்து பிரசங்கித்து, ஞானஸ்நானம் கொடுத்து, சீஷர்களாக்கி, வல்லமையையும் வரங்களையும் அடையும் படி பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளச் சொல்லி*

ஊக்குவித்தனர் (அப்போஸ்தலர் 8:14-17; 9:17; 19:1-6; 1 கொரிந்தியர் 12:8-10).

இந்தப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்ற அனுபவத்தைக் குறிக்க அப்போஸ்தலர் நடபடிகளில் பயன்படுத்தப் படும் கிரேக்கப்' பதங்கள் பல உண்டு. அவற்றுள் "பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம்" (அப்போஸ்தலர் 1:4; 11:16), "பெலனடைதல்" (அப்போஸ்தலர் 1:8), பரிசுத்த ஆவியானவர் "வரும்போது", (அப்போஸ்தலர் 1:8; 8:16; 10:44; 11:15; 19:6) போன்ற சில பதங்களை ஏற்கனவே பார்த்து விட்டோம். இன்னும் "பரிசுத்த ஆவியினாலே நிரப்பப் படுதல்' (அப்போஸ்தலர் 2:4; 4:31; 9:17), பரிசுத்த ஆவி "பொழிந்தருளப் படுதல் (அப்போஸ்தலர் 10:46), பரிசுத்த ஆவியைப் "பெறுதல்" (அப்போஸ்தலர் 8:15; 10:47; 19:2) ஆகிய வேறு சில பதங்களும் உண்டு.

லூக்கா 9:1-2; 10:9, 17-19 இல் வல்லமையையும் வரங்களையும் பெற்ற அதே சீஷர்கள், யோவான் 20:22 இல் பரிசுத்த ஆவியைப் "பெற்றுக் கொண்ட" அதே சீஷர்கள் அப்போஸ்தலர் 2இல் மீண்டும் அவரைப் பெற்றுக் கொண்டதைக் கவனியுங்கள் (அப்போஸ்தலர் 10:47 பார்க்க). அப்போஸ்தலர் 2:4இல் பரிசுத்த ஆவியானவரால் "நிரப்பப் பட்ட" அதே சீஷர்கள் அப்போஸ்தலர் 4:31இல் மீண்டும் "நிரப்பப் பட்டனர்". வெவ்வேறு விதமான அனுபவங்களுக்கு ஒரே பெயர் கொடுக்கப் படுவதையும், ஒரே வித அனுபவத்துக்கு வெவ்வேறு பெயர்கள் கொடுக்கப் படுவதையும் காணலாம்.

அது மட்டுமல்ல, அப்போஸ்தலர் நடபடிகளில் ஒரு அனுபவம் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு விதங்களில்

இடம் பெறுகின்றது. இந்த அனுபவமானது சில சமயங்களில் இவ்வாறாக நிகழ்ந்தது :1) மனந் திரும்புதலுக்குப் பிறகு, ஏதோ ஒரு விதத்தில் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்ட பிறகு (யோவான் 20:22; அப்போஸ்தலர் 2:4; 4:31); 2) மனந்திரும்புதலுக்குப் பிறகு, தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பு (அப்போஸ்தலர் 8:9-17); 3) மனந்திரும்பிய அதே வேளையில், தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பு (அப்போஸ்தலர் 10:44-48); 4) மனந்திரும்பிய பிறகு, தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்து சில மணித் துளிகளுக்குப் பிறகு (அப்போஸ்தலர் 19:1-6). சிலருக்கு, அவர்கள் மேல் கரங்கள் வைக்கப் பட்ட போது பரிசுத்த ஆவியானவர் வந்தார் (அப்போஸ்தலர் 8:17; 9:17; 19:6; 2 தீமோத்தேயு 1:6); வேறு சிலருக்கோ, அப்படி யாரும் விசேஷமாக கைகளை வைக்காமலேயே பரிசுத்த ஆவியானவர் வந்தார் (அப்போஸ்தலர் 2:4; 4:31; 10:44).

ஆகவே, பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசியின் மீது எவ்விதத்திலும் வரலாம், பல்வேறு விதங்களில் கிரியை செய்யலாம் என்பதை இவ்வசனத்திலிருந்து அறிந்து கொள்கிறோம். பரிசுத்த ஆவியானவர் சுயாதீனம் உள்ளவர்; நாம் அவருக்குச் சட்ட திட்டங்களை வகுக்க முடியாது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமை நமது வாழ்வில் வெளிப்படுகிறதா என்பதே முக்கியம். அந்த வல்லமை வெளிப்பட வேண்டுமென நாம் ஜெபிப்பது அவசியம் (அப்போஸ்தலர் 8:14-17; 9:17). பரிசுத்த ஆவியானவர் ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையில் எப்படி செயல்பட்டாலும் சரி, அந்தக் கிரியைக்காக நாம் தேவனைத் துதிக்கவும், அவருக்கு நன்றி செலுத்தவும் வேண்டும். திருச்சபையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை இயேசுவில் விசுவாசம் வைத்துள்ள ஒவ்வொருவருடனும் பரிசுத்த ஆவியானவர் இருக்கின்றார் என்பதை எல்லாக் கிறிஸ்தவர்களுமே

விசுவாசிக்கின்றனர் (ரோமர் 8:9; எபேசியர் 4:30). தண்ணீர் ஞானஸ்நானத்திலும், கர்த்தருடைய பந்தியிலும் பரிசுத்த ஆவியானவரை ஒரு சிறப்பான முறையில் பெற்றுக் கொள்கிறோம் என்றும் அநேகக் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர் (1கொரிந்தியர் 10:2-4; 12:13; தீத்து 3:5). இன்னும் வேறு பலரோ, ஒரு விசேஷித்த ஊழியத்திற்காக, அதாவது போதகர், டீக்கன் அல்லது மிஷனெரி போன்ற குறிப்பிட்ட ஊழியங்களுக்காகவோ அல்லது மீண்டும் மீண்டும் வல்லமை மற்றும் இடையறாத ஊக்கம் பெறவோ பரிசுத்த ஆவியானவரை ஒரு விசேஷித்த முறையில் பெற்றுக் கொள்ள முடியும் என்று நம்புகின்றனர் (அப்போஸ்தலர் 4:31).

ஆதித் திருச்சபையானது, அப்போஸ்தலர் 8:14-17இல் விவரிக்கப் பட்டுள்ளதைப் போல, சபைத் தலைவர்கள் கிறிஸ்தவர்களின் தலைகள் மீது கரங்கள் வைத்து ஜெபிப்பதன் மூலம் பரிசுத்த ஆவியானவர் விசேஷித்த முறையில் அவர்கள் மீது இறங்கி அவர்களுக்கு வல்லமையும் வரங்களும் அருளுகிறார் என்று நம்பியது. இது மனந்திரும்புதலின் அனுபவத்திலும், தண்ணீர் ஞானஸ்நானத்திலும் இருந்து வேறுபட்ட ஒரு தனி அனுபவம் என்பது ஆதி சபையின் நம்பிக்கை. திருச்சபை வரலாற்றின் முதல் சில நூற்றாண்டுகள் வரை இதுவே பரவலான நம்பிக்கையாக இருந்து வந்தது.

எனினும், தொடர்ந்து வந்த சபை வரலாற்றில், பெரும்பாலான கிறிஸ்தவர்களிடம் 1 கொரிந்தியர் 12:7-11 இல் விவரிக்கப் படும் வரங்களோ, விசேஷித்த ஆவியானவரின் வல்லமையோ காணப் படவில்லை. உதாரணமாக, பெரும்பான்மை மக்கள் தெய்வீக சுகத்தைக் கண்ணால் கண்டதேயில்லை. அநேகர், இவ்வித வரங்கள் தேவனால் ஆதித் திருச்சபைக்கு மட்டுமே அளிக்கப்

பட்டவை என்று கருதத் தொடங்கி விட்டனர். இன்றும், சில கிறிஸ்தவர்கள் இவ்வரங்களில் பெரும்பாலானவை நமது யுகத்துக்கு அளிக்கப்படவில்லை என்றே நம்புகின்றனர். இவர்கள், நம்முடைய அறிவு, தீர்க்க தரிசனம் சொல்லுதல், அந்நிய பாஷைகள் இவையெல்லாம் குறைவுள்ளவை, நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்து போகும் என்று 1 கொரிந்தியர் 13:8-10 இல் பவுல் கூறுவதைச் சுட்டிக் காட்டுகின்றனர். இந்தக் கிறிஸ்தவர்கள் “நிறைவு” என்பது எழுதி முடிக்கப் பட்ட புதிய ஏற்பாட்டைக் குறிப்பதாகக் கருதுகின்றனர். புதிய ஏற்பாடானது கிறிஸ்து மரித்ததிலிருந்து நூறு ஆண்டுகளுக்குள் முழுவதும் எழுதி முடிக்கப் பட்டு விட்டது.

ஆனால் வேறு பல கிறிஸ்தவர்களோ, இவ்வரங்கள் அனைத்தும் இன்றும் நமக்குக் கிட்டக் கூடியவையே என்றும், அதோடு, தங்களுக்கே இவ்வரங்கள் இருப்பதாகவும் கூறுகின்றனர். 1 கொரிந்தியர் 13:8-10இல் பவுல் குறிப்பிட்டது இவர்கள் நாம் இயேசுவை முகமுகமாய்ச் சந்திக்கப் போகின்ற ஒரு எதிர்காலத்திற்கே உரியது என்கின்றனர் (1கொரிந்தியர் 13:12). திருச்சபை வரலாறு முழுவதிலுமே பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும் வரங்களும் ஆங்காங்கு அவ்வப்பொழுது காணப்பட்டதுண்டு என்று இவர்கள் கூறுகின்றனர். உண்மையாகவே, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலே ஆவியானவரின் வல்லமையும் வரங்களும் அதிக அளவில் காணப்படுகின்றன. இந்தக் கிறிஸ்தவர்கள் விசுவாசிகளுக்கு அளிக்கப் பட்டுள்ள வரங்கள் பற்றிய வாக்குத்தத்தங்கள் அடங்கிய வேத பகுதிகளான மாற்கு 16:17-18; யோவான் 14:12; அப்போஸ்தலர் 2:17-18' ஆகியவற்றைக் சுட்டிக் காட்டுகின்றனர்.

நாம் எப்படி, எப்பொழுது இந்த வல்லமையைப் பெற்றுக் கொள்கிறோம்? வல்லமையும் வரங்களும் இன்றைய திருச்சபைக்கும் கிட்டக் கூடியவை என்றும் நம்பும் கிறிஸ்தவர்களிடையே, அவை எப்படி எப்பொழுது கிடைக்கும் என்பது பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அநேகர் "பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்" என்பது அப்போஸ்தலர் *10:44*இல் விவரிக்கப் பட்டுள்ளது போல, மனந்திரும்பும் போதே ஒவ்வொரு விசுவாசிக்கும் கிடைத்து விடுகிறது, ஆனால் அந்த வரங்கள் விசுவாசியின் வாழ்வில் தென்பட ஆண்டுகள் பல ஆகலாம் என்று நம்புகின்றனர். இன்னொரு கூட்டம் கிறிஸ்தவர்கள், "ஆவியானவரின் ஞானஸ்நானம்" தண்ணீர் ஞானஸ்நானத்தின் போதே பெறப்படுவதாகக் கருதுகின்றனர். இவர்கள் மத்தேயு *3:16-17*இல் குறிப்பிடப் பட்டுள்ள இயேசுவின் தண்ணீர் ஞானஸ்நானத்தையும், அப்போஸ்தலர் *19:5-6*இல், தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்த சற்று நேரத்துக்கெல்லாம் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகள் மீது இறங்கியதையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவ்விரண்டு கூட்டத்தாருமே, அப்போஸ்தலர் நடபடிகளில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பற்றிப் பேசும் எஞ்சிய வசனங்கள் அனைத்தும், ஆவியானவரைப் பெற்றுக் கொள்வதில் வழக்கத்திற்கு மாறான விதிவிலக்குகளையே விவரிக்கின்றன என்றும், பொதுவாக ஆவியானவர், மனந் திரும்பும் வேளையிலோ அல்லது தண்ணீர் ஞானஸ்நானத்தின் வேளையிலோ தான் பெற்றுக் கொள்ளப் படுகிறார் என்றும் நம்புகின்றனர். ஆனால் ஆவிக்குரிய வாழ்வின் ஆரம்ப கட்டத்தில் பெறப்படும் ஆவியானவரின் வல்லமையோ வரங்களோ பல ஆண்டுகளுக்கு வெளியே புலப்படுவதில்லை என்பதால், தேவன் தாமே அவற்றை நம் வாழ்வில் வெளிப் படுத்திக்

காட்ட வேண்டுமென நாம் ஜெபிப்பது அவசியம் என்று இவர்கள் நம்புகின்றனர்.

மூன்றாவதாக ஒரு கூட்டம் கிறிஸ்தவர்கள், ஆவியானவரின் வல்லமையும் வரங்களும் எந்த நேரத்திலும் பெற்றுக் கொள்ளப் படலாம், ஆனால் அவை பொதுவாக மனந்திரும்புதல் மற்றும் தண்ணீர் ஞானஸ்நானம் ஆகிய இந்த இரண்டும் அல்லாத வேறொரு சமயத்திலே தான் பெறப் என்றே அப்போஸ்தலர் நடபடி வேத பகுதிகள் கூறுவதாக நம்புகின்றனர் (அப்போஸ்தலர் படுகின்றன 2:4; 8:17; 1தீமோத்தேயு 4:14; 2 தீமோத்தேயு 1:6). ஒருவன் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை வேண்டி, ஜெபிக்கையில் அது அருளப் படும் என்பது இவர்கள் நம்பிக்கை. கேட்கின்ற யாருக்கும் அது கிடைக்கும் என்கின்றனர். இந்த வல்லமையைப் பெற்றுக் கொள்வதற்கு, சபைத் தலைவர்கள் தங்கள் கரங்களை நமது தலை மீது 8:17; 19:6). வைத்து ஜெபிப்பது உதவும் என்று இவர்கள் நம்புகின்றனர் (அப்போஸ்தலர்

இங்கே மற்றொரு கேள்வி எழுகிறது : அந்நிய பாஷை அல்லது பல பாஷை வரம் நமது வாழ்வில் எவ்வளவு முக்கியம் வாய்ந்தது? மேலே கூறப்பட்ட மூன்று கருத்துக்களை ஆதரிப்போரும், பல பாஷை வரம் என்பது பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டதற்கான பல அடையாளங்களுள் ஒன்று என்பதை ஒத்துக் கொள்கின்றனர். பல பாஷை வரம் என்பது, முன்னொரு போதும் கற்றிராத ஒரு விசேஷித்த பாஷையில் பேச ஆவியானவர் தரும் திறமையாகும் (1கொரிந்தியர் 12:10; 14:1-5). புதிய ஏற்பாட்டில், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்ற அனைவருமே தேவனை ஒரு அந்நிய மொழியில் துதித்துப் போற்றினர் எனலாம் (மாற்கு 16:17; அப்போஸ்தலர் 2:4; 10:46; 19:6; 1 கொரிந்தியர் 14:18).

ஆனால் இந்த வரம் அனைத்து விசுவாசிகளுக்குமானதா அல்லது ஒரு சிலருக்கே மட்டும் உரியதா என்பது பற்றி பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

தேவன் ஒரு சிலர் மட்டுமே ஒரு விசேஷித்த பாஷையில் பேச விரும்புகிறார் என்று சில கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். அநேக ஆவிக்குரிய கிறிஸ்தவர்களுக்கு இவ்வரம் இல்லை என்பது நாமறிந்த உண்மை. பவுலும் கூட எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? என்று கேட்கிறார் (1கொரிந்தியர் 12:30). அதாவது, எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசவில்லை என்பதே பவுல் கூற விரும்பும் கருத்து. இந்தக் கருத்துடைய கிறிஸ்தவர்கள் அந்நிய பாஷை வரத்துக்காக தேவனிடம் ஜெபிப்பது சரியெனக் கருதலாம், காரணம் இந்த வரத்தின் மூலமாக ஏராளமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் எல்லாரும் அந்நிய பாஷையில் பேசியே ஆக வேண்டும் என்று வேதத்தில் திட்டவட்டமாக எழுதப்படவில்லை என்பதையும் இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனினும், வேறு அநேகக் கிறிஸ்தவர்கள், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்துக்கு முக்கிய அடையாளம் அல்லது சான்று ஒரு விசேஷித்த பாஷையில் பேசுவதே என்று நம்புகின்றனர். கொரிந்து சபை மக்கள் அனைவரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி தான் விரும்புவதாகப் பவுல் எழுதியதை இவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர் (1கொரிந்தியர் 14:5). ஆகவே இவர்கள் அந்நிய பாஷை வரம் என்பது இருவகைப் படும் என்று கருதுகின்றனர் : ஒன்று, தேவனுடைய செய்தியைப் பகிரங்கமாக மக்களுக்கு எடுத்துரைப்பது - இது ஒரு சிலருக்கு மட்டுமே கொடுக்கப்படும் வரம், இவ்வரத்தை உடையவர்கள் அந்தப் பாஷையின் அர்த்தத்தையும் தெரிவிக்க வேண்டும்

(1கொரிந்தியர் 14:1-5,13,26- 27); அடுத்தது தனியாக தேவனைத் துதிக்கும், தேவனிடம் ஜெபிக்கும் தனிப்பட்ட ஆராதனையின் வரம், இது அனைத்து விசுவாசிகளுக்கும் அருளப் படுவது (1கொரிந்தியர் 14:2, 15-17). இவர்களைப் பொறுத்தவரை, 1கொரிந்தியர் 12:30 முதல் வகையான அந்நிய பாஷையை, அதாவது ''செய்தி உரைக்கும்' பாஷையைப் பற்றியே பேசுகிறது. வேறு விதமாகச் சொன்னால், ஒரு திருச்சபை ஆராதனையில் அந்நிய பாஷையில் பேசி சபையாருக்குச் செய்தியளிக்கும் அழைப்பு எல்லாருக்கும் கொடுக்கப்படுவதில்லை. எனினும், இந்தக் கிறிஸ்தவர்களின் கருத்துப்படி யாரும் வியாக்கியானம் செய்யாமலே, அந்நிய பாஷையில் "தேவனிடம் பேசவும்," அவரைப் போற்றிப் பாடவும் (1கொரிந்தியர் 14:2,28), அதன் மூலம் கிட்டும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் எல்லாரும் வரம் பெற்றிருக்க வேண்டும்.

வேறு சில கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் போது இந்தத் தனிப்பட்ட அந்நிய பாஷை வரத்தை தேவன் அருளுகின்றார் என்ற போதிலும், எல்லாருமே அதை உடனடியாகவே பயன்படுத்தத் தொடங்கி விடுவதில்லை என்று எண்ணுகின்றனர். சிலர் இவ்வரத்தைப் பற்றியே அறியாதிருக்கலாம், இன்னும் சிலர் வேறு ஏதாவது காரணங்களுக்காகப் பயன்படுத்தாமல் இருக்கலாம். பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்துக்கு ஒரே அடையாளம் பல பாஷை வரம் தான் என்று இக்கிறிஸ்தவர்கள் நம்புவதில்லை; ஆவியானவரின் வல்லமை நம் வாழ்விற்குள் வந்து விட்டது என்பதற்கு ஆவியானவரின் எந்தவொரு வரமும் சான்றாக அமையலாம்.

இந்த மூன்றாம் வகை கருத்துடையோர், எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசியாக வேண்டும் என்பதில்லை என்ற முதல் வகையினர் கருத்தையும், ஆனால் அதே

*வேளையில் எல்லாரும் தனிப்பட்ட ஜெபம் மற்றும் துதி தோத்திரத்துக்காக அந்நிய பாஷை வரம் பெற்றவர்களாய் இருக்க தேவன் விரும்புகிறார் என்ற இரண்டாம் வகையினரின் கருத்தையும் ஒத்துக் கொள்கின்றனர்.*

**சுருக்கம்**

*பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும் வரங்களையும் பற்றி நாம் எப்படி நினைத்தாலும் சரி, சில காரியங்களை மனதில் கொள்ள வேண்டும் :1) வல்லமையும் வரங்களும் பொதுவான நன்மைக்காகவும் (1கொரிந்தியர் 12:7; 14:3) மற்றவர்களுக்குச் சாட்சி சொல்வதற்கு பெலப்படுத்தவும் (அப்போஸ்தலர் 1:8) அளிக்கப் பட்டுள்ளன; 2) அவை அன்புடனும் ஒரு கட்டுப் பாட்டுடனும் பயன்படுத்தப்பட வேண்டும், இல்லாவிடில் அவற்றால் பயனொன்றும் இல்லை (1கொரிந்தியர் 13:1-3; 14:40); 3) அவற்றை விரும்ப வேண்டும், விலக்கவோ தடுக்கவோ கூடாது (1கொரிந்தியர் 12:31; 14:1,39); 4) அவை நமக்குள்ளே பிரிவினைகளை உண்டாக்கக் கூடாது (1கொரிந்தியர் 12:4-6). ஆவியானவரின் வரங்களைப் பற்றி நமது கருத்துக்கள் எப்படியிருப்பினும் நாம் கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளாய் இருக்கிறோம். கிறிஸ்துவுக்குள் நாம் எல்லாரும் ஒன்றாய் இருக்கிறோம் (1கொரிந்தியர் 12:13; கலாத்தியர் 3:28).*

# 8. தண்ணீர் ஞானஸ்நானம்

**முக்கிய வசனங்கள்**

*மத்தேயு **28:19-20...** சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து... உபதேசம் பண்ணுங்கள். மாற்கு **16:16** விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான். யோவான் **3:5** . ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் ..*

*அப்போஸ்தலர் **2:38..** நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கு என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் ... அப்போஸ்தலர் **22:16...** நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப் படு ... ரோமர் **6:3-4** நாமும் அவருடைய மரணத்திற்கு உள்ளாக்கும் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப் பட்டோம். ஞானஸ்நானத்தினாலே கலாத்தியர் **3:27** உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. எபேசியர் **5:25-26** கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும் . . . ஒப்புக் கொடுத்தார்.*

*தீத்து **3:5** அவர் (கிறிஸ்து) . . . மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். எபிரெயர் **10:22** துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப் பட்ட இருதயம் உள்ளவர்களாயும், சுத்த*

*ஜலத்தால் கழுவப்பட்ட சரீரம் உள்ளவர்களாயும் ... (தேவனிடத்தில்) சேரக் கடவோம். 1 பேதுரு 3:21 அதற்கு (நோவாவின் காலத்து வெள்ளத்துக்கு) ஒப்பனையான ஞானஸ்நானமானது இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது.*

***தண்ணீர் ஞானஸ்நானம் என்பது என்ன?***

*தண்ணீர் ஞானஸ்நானம் என்றால், மத்தேயு 28:19இல் கர்த்தராகிய இயேசு கட்டளையிட்ட வண்ணமாக, பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தில் ஒரு நபரின் மீது தெளிப்பதன் மூலமோ, ஊற்றுவதன் மூலமோ, அல்லது மூழ்கச் செய்வதன் மூலமோ தண்ணீர் இடுவதாகும்.*

*ஞானஸ்நானத்துக்கு ஒப்பான ஒரு சடங்கை பழைய ஏற்பாட்டு யூதர்கள் கைக்கொண்டனர். அது, பிறந்த எட்டாம் நாளில் ஆண் குழந்தைகளின் நுனித்தோல் விருத்தசேதனம் செய்யப் படுவதாகும் (ஆதியாகமம் 17:10-14). கிறிஸ்துவில் விசுவாசிகளானவர்கள் சரீரப் பிரகாரமான விருத்த சேதனத்தைச் செய்ய வேண்டியதில்லை என்று பவுல் கூறினார் (அப்போஸ்தலர் 15:1-29; கலாத்தியர் 5:2). கொலோசெயர் 2:11-12, சரீரப் பிரகாரமான விருத்த சேதனத்தின் இடத்தை ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டதையும், கிறிஸ்துவைப் பற்றும் "ஆவிக்குரிய விருத்தசேதனத்தினாலே" நமது பழைய பாவ சுபாவம் "வெட்டப் பட்டு" அகற்றப் பட்டதையும் குறிப்பதாக வேத பண்டிதர்கள் நம்புகின்றனர்.*

*யோவான் ஸ்நானன் பாவ மன்னிப்புக்கு என்று மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தான்*

*(மாற்கு 1:4), இது கிறிஸ்தவ ஞானஸ்நானமல்ல. இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு யோவானின் ஞானஸ்நானம் கிறிஸ்தவர்களுக்குப் போதுமானதல்ல என்று கருதப் பட்டது (அப்போஸ்தலர் 18:25), யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்த எபேசு விசுவாசிகள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே மறுபடியும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டியது அவசியமாயிற்று (அப்போஸ்தலர் 19:1-7). எனினும் ஒரே கிறிஸ்தவ ஞானஸ்நானம் மட்டுமே உண்டு (எபேசியர் 4:5).*

*இயேசு தாமே யோவான் ஸ்நானனால் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார் (மத்தேயு 3:13-17). பாவமோ, பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டிய அவசியமோ இல்லாத இயேசு எல்லா நீதியையும் நிறைவேற்றும் படியாக ஞானஸ்நானம் பெற்றார் (மத்தேயு 3:15). அவர் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்று, கரையேறினதும் பரிசுத்த ஆவியானவர் அவர் மீது வந்தார், ஊழியத்திற்காக அவரைப் பெலப் படுத்தினார் (மாற்கு 1:10). இயேசு சிலுவையில் தமது மரணத்தையும் ஒரு "ஸ்நானம்" என்றே குறிப்பிட்டார் (லூக்கா 12:50). இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற ஸ்நானமே, நமது ஞானஸ்நானத்திற்கு ஆதாரமாகத் திகழ்கிறது, அதன் காரணமாகவே நாம் ஞானஸ்நானம் பெறுகின்றோம் (ரோமர் 6:3-4; கொலோசெயர் 2:12; 1 பேதுரு 3:21). ஆதிமுதற் கொண்டே திருச்சபையானது இயேசுவின் கட்டளைக்கு அடிபணிந்து, புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்துள்ளது. கிறிஸ்தவ ஞானஸ்நானத்திற்கு புதிய ஏற்பாட்டில் காணப்படும் சில நல்ல உதாரணங்கள் : அப்போஸ்தலர் 2:41;8:12; 8:38; 10:48; 16:15; 16:33; 19-15. இவ்வசனங்களில் பொதுவாக, கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் அறிக்கையிடப் பட்டவுடனே தண்ணீர்*

ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. பல வேளைகளில் முழுக் குடும்பங்களும் ஒரே சமயத்தில்

ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர் (அப்போஸ்தலர் 10:48; 16:31-33), ஞானஸ்நானம் என்பது கிறிஸ்தவ மார்க்கத்திற்கு மட்டுமே உரித்தான ஒன்றல்ல. கிறிஸ்துவுக்கு முன், யூதரல்லாதோர் யூத மார்க்கத்திற்கு வரும்போது தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுக்கப் பட்டனர். கிறிஸ்துவின் காலத்தில் வழக்கத்தில் இருந்த கிரேக்க "மர்ம" மதங்களில் சேர ஞானஸ்நானம் அவசியமாயிருந்தது. அவை சில வேளைகளில் ஞானஸ்நானம் எடுப்பவனின் தலை மீது தண்ணீருக்குப் பதிலாக இரத்தத்தைச் சொட்டு சொட்டாக விட்டன.

நாம் தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுப்பது ஏன்? புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று இயேசு நமக்குக்கட்டளையிட்டார் (மத்தேயு 28:19). எல்லா நாடுகளிலும் பண்பாடுகளிலுமே தண்ணீர் ஞானஸ்நானமானது, ஒருவர் தனது பழைய மதத்தை விட்டு கிறிஸ்தவ மார்க்கத்திற்குள் வருவதைக் காட்டும் செயலாக அமைகின்றது. இது இரட்சிப்பின் ஆரம்பப் படிகளுள் ஒன்று (அப்போஸ்தலர் 2:38). இயேசுவும் இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தை ஞானஸ்நானத்தோடு இணைத்துப் பேசினார் (மாற்கு 16:16). திருச்சபை வரலாற்றிலே, இரட்சிப்புக்கும் ஞானஸ்நானத்துக்கும் என்ன தொடர்பு என்பது குறித்துப் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்துள்ளன.

ஞானஸ்நானமானது "இரட்சிப்பின் எத்தனங்களுள்" ஒன்று, தேவனுடைய கிருபை நமக்கு வழங்கப்படும் வழிகளுள் ஒன்று என்பதாக அநேக கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். இரட்சிப்பின் மிக முக்கியமான ஏதுகரம்

வேத வசனம் ஆகும் (ரோமர் 10:17; 1 பேதுரு 1:23). இந்தக் கிறிஸ்தவர்கள் தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலமாகவும் தேவ கிருபை நமக்கு வருகிறது என்று கருதுகின்றனர். தண்ணீர் ஞானஸ்நானத்திலும் கூட முக்கியமான காரியம் தேவனுடைய எழுதப்பட்ட வசனமே (எபேசியர் 5:26). இவ்வகைக் கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்திற்கு வெளிப்படையான, கண்ணுக்குப் புலனாகும் அடையாளமும் (தண்ணீர்), உள்ளான ஆவிக்குரிய ஈவும் (கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதலில் பங்கடைதல், பாவ மன்னிப்பு, ஆவியானவர் மூலமாக சபையில் அங்கமாகுதல்) உண்டு என்று நம்புகின்றனர்.

விசுவாசத்தினால் பெறப்படும் ஞானஸ்நானத்தின் மூலமாக நமது ஜீவன் உண்மையிலேயே கிறிஸ்துவுடன் மரிக்கவும் உயிர்த்தெழவும் செய்கிறது என்றும் (ரோமர் 6:3-4; கொலோசெயர் 2:12), கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறது என்றும் (கலாத்தியர் 3:27) இவர்கள் விசுவாசிக்கின்றனர். அப்போஸ்தலர் 2:38இல் பேதுரு பாவ மன்னிப்புக்கென்று (நாம்) ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று கூறுவதால் இவர்கள், தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் ஒரு விசேஷித்த விதத்தில் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்கிறோம் என்று நம்புகின்றனர். 1 பேதுரு 3:21 இல் பேதுரு ஞானஸ்நானமானது... இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது என்று எழுதுகிறார். இது வெறுமனே மாம்ச அழுக்கை நீக்குதலாய் இராமல், தேவனைப் பற்றும் நல்மனச் சாட்சியை உண்டாக்கும் ஆவிக்குரிய கழுவுதலாய் இருக்கிறது என்றும் பேதுரு கூறுகின்றார்.

எனவே இக்கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்தில் நமது பாவங்கள் உண்மையாகவே "கழுவப்படுகின்றன", நமது

மனச் சாட்சிகள் மெய்யாகவே “சுத்திகரிக்கப் படுகின்றன" என்று கூறுகின்றனர் (அப்போஸ்தலர் 22:16; எபேசியர் 5:26; தீத்து 3:5; எபிரெயர் 10:22). அவர்கள் கண்ணோட்டத்தில், ஞானஸ்நானம் என்பது உண்மையில் நமது ஆவிக்குரிய விருத்தசேதனம், “மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்து போடுதல்” ஆகும் (கொலோசெயர் 2:11-12).

“ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்” என்று இயேசு சொன்னார் (யோவான் 3:5). இந்தக் கிறிஸ்தவர்கள் இவ்வசனத்தில் வரும் “ஜலம்" என்ற சொல் ஞானஸ்நானத்தையே குறிப்பதாகக் கருதுகின்றனர். வெறும் தண்ணீரினால் ஒரு பயனுமில்லை, ஆனால் ஞானஸ்நானம் என்பது தேவன் தமது வாக்கினால் கட்டளையிட்டபடி பயன்படுத்தப் படும் தண்ணீர் ஆகையால் (மாற்கு 16:16; எபேசியர் 5:26), அது வலிமையுள்ளதாகிறது.'ஞானஸ்நானத்தில் தேவன் தமது கிருபையை அருளிச் செய்கின்றார். ஆனால் அது விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப் பட வேண்டும். தேவனுடைய வாக்கின் பேரில் விசுவாசம் இல்லாத பட்சத்தில் நமக்கு எந்த நன்மையும் கிட்டாது. தண்ணீர் ஞானஸ்நானமானது தேவனது வாக்கின்' மேல் உள்ள நமது விசுவாசத்தைப் பலப்படுத்துகிறது

வேறு பல கிறிஸ்தவர்கள் தண்ணீர் ஞானஸ்நானத்தில் அப்படி எந்த விசேஷித்த கிருபையும் இருப்பதாக நம்புவதில்லை. தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும் வழியாக இயேசுவில் விசுவாசம் வைப்பதையும் (யோவான் 1:12; 3:16; ரோமர் 10:9-10), தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் வைப்பதையும் (ரோமர் 1:16;

10:17; 1 பேதுரு 1:23) மட்டுமே பல வேத வசனங்கள் குறிப்பிடுவதால், தேவ வசனம் ஒன்றே "கிருபையின் எத்தனம்" என்று இக்கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர். இரட்சிப்பைப் பெற நாம் செய்ய வேண்டியதெல்லாம் தேவ வசனத்தைக் கேட்பதும் இயேசுவில் விசுவாசம் வைப்பதுமே. தண்ணீர் ஞானஸ்நானம் என்பது, விசுவாசிக்கையில் நமக்குள்ளாக என்ன நடைபெறுகிறது என்பதன் வெளிப்படையான அடையாளம் மட்டுமே என்பது இவர்கள் கருத்து.

இவர்கள் கண்ணோட்டத்தில், ஞானஸ்நானம் என்பது நம்மை எந்தவொரு விசேஷித்த முறையிலும் சுத்திகரிப்பதோ, அல்லது நமக்குப் பாவ மன்னிப்பைக் கொணருவதோ அல்ல. அது கிறிஸ்துவில் நமது மரணத்தின், கிறிஸ்துவை நாம் தரித்து கொண்டதன், கிறிஸ்துவினால் நாம் விருத்தசேதனம் அடைவதன் வெறும் அடையாளம் மட்டுமே (ரோமர் 6:3-5; கலாத்தியர் 3:27; கொலோசெயர் 2:11-12). நாம் விசுவாசிக்கையில் என்ன நடைபெறுகிறது என்பதன் வெளிப்புற அடையாளம் மட்டுமே. யோவான் 3:5 ஜலத்தினால் பிறப்பது என்று கூறுவது நமது சரீரப் பிரகாரமான பிறப்பையே குறிப்பதாகச் சிலர் கருதுகின்றனர்; வேறு சிலர் இங்கே ஜலம் என்பது தேவனுடைய வசனம் என்றும் எண்ணுகின்றனர். இந்தக் கிறிஸ்தவர்களில் சிலர், ஞானஸ்நானமானது ஒருவர் தான் கிறிஸ்துவில் வைத்துள்ள விசுவாசத்தை உலகுக்குப் பறைசாற்றும் ஒரு சாட்சியின் செயல் என்றும் கூறுகின்றனர்; எனவே ஞானஸ்நானம் அந்தரங்கமாக அல்ல, பகிரங்கமாக எடுக்கப் பட வேண்டும். இக்கிறிஸ்தவர்களில் சிலர் எப்படி பழைய ஏற்பாட்டில் விருத்தசேதனமானது யூதர்களுடனான தேவனது உடன்படிக்கைக்கு அடையாளமாக அமைந்திருந்ததோ, அப்படியே ஞானஸ்நானமானது கிறிஸ்தவர்கள் என்னும் தேவ மக்களுடன் தேவனுடைய உடன்படிக்கையின்

*அடையாளமாகும் என்று நம்புகின்றனர். தங்கள் கருத்துக்கு ஆதரவாக கொலோசெயர் 2:11-13ஐ சுட்டிக் காட்டுகின்றனர். ஞானஸ்நானத்தின் அர்த்தம் என்னும் விஷயத்தில், உண்மையான ஆவிக்குரிய கிறிஸ்தவர்களில் சிலர் ஒரு கருத்தையும், மற்றவர்கள் வேறொரு கருத்தையும் கொண்டுள்ளனர். எல்லாருமே தாங்கள் வேதாகமத்தின் உபதேசத்தைத்தான் கைக்கொண்டிருப்பதாக நம்புகின்றனர். நமது சொந்தக் கருத்து எதுவாயினும், மற்றவர்களை நாம் நியாயம் தீர்க்கவோ குறை சொல்லவோ கூடாது.*

*இது சம்பந்தமாக, ஞானஸ்நானத்தின் அவசியம் மற்றும் நீடிப்பு பற்றிப் பல கேள்விகள் எழுகின்றன. முதலாவது கேள்வி : விசுவாசி ஒருவன் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பே மரித்து விட்டால் என்ன நடக்கும்? வேதம் குறிப்பிட்டு எதையும் சொல்லவில்லை. எனினும் அந்த விசுவாசி இரட்சிக்கப் படுவான் என்றே ஏறத்தாழ எல்லாக் கிறிஸ்தவர்களும் நம்புகின்றனர். மாற்கு 16:16 இன் படி, ஞானஸ்நானம் எடுக்காதது அல்ல, அவிசுவாசம் கொள்வதே ஒருவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது. லூக்கா 23:40-43 இல் காணப்படும் கள்ளன் ஞானஸ்நானம் எடுக்க வாய்ப்பு பெறாவிடிலும், பரதீசு செல்வான் என வாக்கு பெறுகிறான். எனினும், ஞானஸ்நானம் எடுக்க மறுப்பவன் ஒரு பெரிய அபாய நிலையில் இருக்கிறான் என்றே சபை நம்புகிறது. அவனது விசுவாசம் உண்மை தானா? அறிந்தே கிறிஸ்துவின் கட்டளைக்கு அடிபணிய மறுப்போம் என்றால் நாம் பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க முடியாது (மத்தேயு 7:21). ஆகவே, ஒருவனுக்கு சபைத் தலைவர்கள் ஞானஸ்நானம் கொடுக்க முன்வருகையில், அவன் எவ்விதத்திலும் தாமதிக்காமல், முதல் வாய்ப்பையே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

இரண்டாவது கேள்வி இதுதான்: ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட விசுவாசி ஒருவன் தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் பண்ணி, பாவ வாழ்க்கை வாழ்ந்து விட்டு, பின்னர் மனந் திரும்பி மீண்டும் கிறிஸ்துவண்டை வருவான் என்றால், அவன் மீண்டும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமா? இதற்குத் திருச்சபையின் பதில் எப்பொழுதுமே "இல்லை" என்பதே. ஒரேயொரு ஞானஸ்நானம் மட்டுமே உண்டு (எபேசியர் 4:5). தேவன் நம்மைத் தமது பிள்ளைகளாக்கிக் கொண்டபிறகு நாம் கலகம் பண்ணி, தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பதால் வரக் கூடிய நன்மைகளை இழந்து போகலாம். பின்னொரு நாளில் நாம் மனந்திரும்புவோம் என்றால், நாம் மீண்டும் புத்திர சுவிகாரம் செய்யப் பட வேண்டியதில்லை, மன்னிக்கப் பட மட்டுமே வேண்டும் (லூக்கா 15:11-24). நாம் உண்மை அற்றவர்களாய் இருந்த போதிலும் தேவன் உண்மை உள்ளவராய் இருக்கிறாரே (ரோமர் 3:3; 1129; 2 கொரிந்தியர் 1:20).

இதன் தொடர்பாக வரும் இன்னொரு கேள்வி : நாம் ஒருசபையில் ஞானஸ்நானம் பெற்ற பின்பு, வேறொரு சபையில் சேரும் போது மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டுமா? இதற்கு விடை “இல்லை” என்பதே. ஒரேயொரு கிறிஸ்தவ ஞானஸ்நானம் மட்டுமே உண்டு (எபேசியர் 4:5). பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்ற எந்த விசுவாசியும் (மத்தேயு 28:19) மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டியதில்லை.

## குழந்தைகளின் ஞானஸ்நானம்

குழந்தைகளின் ஞானஸ்நானத்தைப் பொறுத்த வரை திருச்சபையில் பல்வேறுபட்ட வழக்கங்கள் கடைபிடிக்கப்

படுகின்றன. திருச்சபை வரலாற்றில், ஞானஸ்நானத்தைப் பற்றிய ஆதிகால விவாதங்கள் குழந்தை ஞானஸ்நானம் பற்றிக் குறிப்பிடுவதுடன், அது அப்போஸ்தலர்களின் வழிவந்த பாரம்பரியம் என்று கூறுகின்றன. எனினும் 1500ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட புராட்டஸ்டன்ட் சீர்திருத்தத்துக்குப் பின்பு சில புராட்டஸ்டன்ட் திருச்சபைகள் வயது வந்தோருக்கும், சற்று பெரிய பிள்ளைகளுக்கும் மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்கப் பட வேண்டும் என்று நம்ப ஆரம்பித்தன.

இன்றைக்கு பல சபைகள் இந்த ஒழுங்கையே கடைபிடிக்கின்றன. இவ்வித சபைகளிலுள்ள கிறிஸ்தவர்கள் வேதாகமத்தில் குழந்தை ஞானஸ்நானத்திற்கு தெளிவான எடுத்துக் காட்டுகள் இல்லையென வாதிடுகின்றனர். இவர்கள் கிறிஸ்தவ நம்பிக்கைகளைக் கற்றுக் கொள்ளக் கூடியவர்களுக்கும் இயேசுவே கர்த்தர் எனத் தங்கள் வாயினால் அறிக்கை செய்யக் கூடியவர்களுக்கும் மட்டுமே ஞானஸ்நானம் என்று நம்புகின்றனர்(ரோமர் 10:9-10). முதலில் மனந்திரும்புதல், பிறகு தான் ஞானஸ்நானம் என்கின்றனர் (அப்போஸ்தலர் 2:38).

இதை இவர்கள் "விசுவாசியின் ஞானஸ்நானம்" என்று அழைக்கின்றனர் (அப்போஸ்தலர் 8:37). இவர்கள், குழந்தைகள் மனந்திரும்பவோ, விசுவாசம் கொள்ளவோ முடியாது என்று கருதுகின்றனர்; ஆகவே சிறு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் பெறும் தகுதியில்லை. பெரும்பாலான இவ்வகைச் சபைகளில் ஞானஸ்நானம் பெறக் குறைந்த பட்ச வயது 10 முதல் 12 ஆண்டுகள் ஆகும். ஒருவேளை, ஒரு பிள்ளை தனது விசுவாசத்தை வாய் விட்டுத் தெளிவாகக் கூறும் என்றால் ஐந்து அல்லது ஆறு வயதில் ஞானஸ்நானம் கொடுக்கப் படும். இப்படி குழந்தைகள் ஞானஸ்நானத்தைக் கடைபிடிக்காத சபைகள்

ஞானஸ்நானத்துக்குப் பதிலாக குழந்தை பிரதிஷ்டை வைபவம் என்ற ஒன்றை ஏற்படுத்தியுள்ளன.

ஆயினும், பல புராட்டஸ்டன்ட் திருச்சபைகள் விசுவாசிகளான பெற்றோர்களின் குழந்தைகளுக்கு, அவர்கள் பிறந்த சில நாட்களுக்குள்ளேயே ஞானஸ்நானம் கொடுக்கின்றன. இந்தக் கிறிஸ்தவர்கள் ஆதித்திருச்சபையில் குழந்தை பிரதிஷ்டை வைபவம் என்று எதுவும் இருந்ததாக வேதத்தில் எங்கும் எழுதப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். அதுபோலவே கிறிஸ்தவப் பெற்றோரின் குழந்தைகள் யாரும் பின்னர் தனியே வந்து ஞானஸ்நானம் பெற்றதாகவும் காண்பதில்லை. முழுக் குடும்பங்களும் ஞானஸ்நானம் பெற்றதாகவே வாசிக்கிறோம். குழந்தைகளே இல்லாத வீடுகள் அபூர்வமாகவே இருந்திருக்கும் (அப்போஸ்தலர் 16:15; 16:33; 1 கொரிந்தியர் 1:16).

இவர்கள் ஞானஸ்நானமானது பழைய ஏற்பாட்டில் காணப்படும் ஆண்களின் விருத்தசேதனத்திற்கு ஒத்தது என்று நம்புகின்றனர். அதாவது யூதக் குழந்தைகளுக்கும் வயது வந்த பின் யூத மதத்தில் சேர விரும்பியவர்களுக்கும் அது செய்யப் பட்டது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளையும் சிறு பிள்ளைகளையும் இயேசுவிடம் கொண்டு வந்த போது அவர், “சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள்; அவைகளைத் தடை பண்ணாதிருங்கள், தேவனுடைய இராஜ்யம் அப்படிப் பட்டவர்களுடையது" என்றார் (மாற்கு 10:13-16; லூக்கா 18:16-17). எனவே இச்சபைகள், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்ற இயேசுவின் கட்டளையில் வயது வந்தோருக்கு ஞானஸ்நானம் கொடுப்பது மட்டுமல்ல, குழந்தைகள் மற்றும் சிறுபிள்ளைகளுக்கு கொடுப்பதும் அடங்கும் என்று

நம்புகின்றனர் (மத்தேயு 28:19; அப்போஸ்தலர் 2:39). ஞானஸ்நானம்

இந்தக் கேள்வி ஞானஸ்நானத்தின் அர்த்தத்தை மையமாகக் கொண்டது. குழந்தை ஞானஸ்நானமானது ஞானஸ்நானத்தின் அர்த்தத்துக்குப் பொருந்துவதா? ஞானஸ்நானம் என்பது தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ளும் ஒரு வழி என்று நம்பும் கிறிஸ்தவர்கள் பொதுவாக குழந்தை ஞானஸ்நானத்தைக் கடைபிடிக்கின்றனர். இவர்களில் சிலர் சிறு குழந்தைகளும் விசுவாசிக்க முடியும் (விசுவாசிக்கவும் செய்கின்றனர்) என்று நம்புகின்றனர் (பொதுவான தலைப்பு: குழந்தைகளும் தேவனுடைய இராஜ்யமும் - பார்க்க).

இன்னும் சிலரோ பெற்றோரின் விசுவாசமே போதும் (பழைய ஏற்பாட்டில் என்கின்றனர் விருத்தசேதனம் செய்யப் படுகையில் யூதப் பெற்றோர் செய்வது போல). எனினும், ஞானஸ்நானம் பெற்ற குழந்தை வளர்ந்து பெரியவனாகும் போது இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளக் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தாக வேண்டும். ஞானஸ்நானம் ஒரு வெளிப்புற அடையாளம் மட்டுமே என்று நம்பும் சபைகள் குழந்தை ஞானஸ்நானம் கொடுக்கவும் செய்யலாம், கொடாமலும் இருக்கலாம். புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானமானது, பழைய ஏற்பாட்டு விருத்தசேதனத்தைப் போல தேவன் ஒரு கூட்டம் மக்களுடன் செய்யும் ஓர் உடன்படிக்கைக்கு அடையாளமாகும் என்று நம்புகின்ற சபைகள் பொதுவாக குழந்தை ஞானஸ்நானத்தையே கடைபிடிக்கின்றன.

ஆனால், ஞானஸ்நானமானது ஒருவர் தனது தனிப்பட்ட விசுவாசத்தை உலகுக்கு அறிவிக்கும் பகிரங்கமான சாட்சி என்றோ ஒருவர் கிறிஸ்துவில் தனது விசுவாசத்தைத் தனது

வாயினால் அறிக்கையிட வேண்டும் என்றோ நம்பும் சபைகள் அப்படி விசுவாசத்தை வாயினால் அறிக்கையிடக் கூடிய பருவம் வரும் வரை ஞானஸ்நானம் கொடுப்பதில்லை,

**எந்த விதமான ஞானஸ்நானம் சரி?**

ஞானஸ்நானம் மூன்று முக்கிய விதங்களில் கொடுக்கப் படுகிறது மூழ்குதல், தெளித்தல் மற்றும் ஊற்றுதல், பெரும்பாலான சபைகளில் ஞானஸ்நானம் பெறுபவரின் தலை மீது தண்ணீர் தெளிக்கப் படுகிறது அல்லது ஊற்றப் படுகிறது. குழந்தைகள் ஞானஸ்நானம் பெறுவார்களானால், பொதுவாக தெளிப்பது அல்லது ஊற்றும் முறையே பின்பற்றப் படுகிறது, பழைய காலங்களில் குழந்தைகளுக்கும் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப் பட்டதுண்டு. வயது வந்தோருக்கு இம்மூன்று முறைகளுமே பயன்படுத்தப் படுகின்றன. மிகவும் சுகவீனமாயிருக்கும் மக்களுக்கும், பாலைவனங்கள் அல்லது பனிப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கும் பொதுவாக முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப் படுவதில்லை. எனினும் ஆதித் திருச்சபையின் நாட்கள் தொட்டே இங்கோ, எங்கோ இந்த மூன்று முறைகளுமே பின்பற்றப் பட்டு வந்துள்ளன.

ஞானஸ்நானம் எப்படி கொடுக்கப் பட வேண்டும் என்று வேதம் திட்டவட்டமாக எதுவும் கூறவில்லை. புதிய ஏற்பாட்டிலே பொதுவாக ஞானஸ்நானங்கள் எல்லாம் நதிகளிலேயோ (மாற்கு 1:5), அல்லது தண்ணீர் அதிகமாய் இருந்த இடங்களிலேயோ (யோவான் 3:23) தான் நடைபெற்றன. அங்கே மூழ்கி ஞானஸ்நானம் பெறுவதே வசதியாக இருந்திருக்கும், ஒரு வேளை அதுவே வழக்கமான முறையாக இருந்திருக்கலாம். ஆனால் சில சமயங்களில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பது வசதிப் பட்டிருக்காது.

உதாரணமாக, பிலிப்பிய சிறைக் காவலன் நள்ளிரவில் பவுலின் காயங்களைக் கழுவி, அவனுக்கு உணவு கொடுப்பதன் மத்தியிலே, தன் வீட்டார் அனைவரோடுங் கூட ஞானஸ்நானம் பெற்றான் (அப்போஸ்தலர் 16:33). பெந்தெகொஸ்தே நாளன்று, அந்த ஒரே நாளில் மூவாயிரம் பேர் மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுத்தனர் (அப்போஸ்தலர் 2:41). இவ்விதமான சமயங்களில் தண்ணீர் தெளிக்கப் படவோ, ஊற்றப் படவோ செய்திருக்கலாம் என்றே அநேக வேத பண்டிதர்கள் நம்புகின்றனர்.

ஞானஸ்நானம் என்பதைக் குறிக்கும் கிரேக்கச்' சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. பொதுவான அர்த்தம் "மூழ்குதல்" என்பது. கிறிஸ்துவுடன் நமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை (ரோமர் 6:3-4) மூழ்குதல் மிக அற்புதமாகச் சித்தரிக்கிறது. ஆகவே பல சபைகள் முழுக்கு ஞானஸ்நானம் மட்டுமே கொடுக்கின்றன. ஆயினும் "மூழ்குதல்" என்பது ஒன்றே "ஞானஸ்நானம்' (Baptism) என்ற பதத்தின் பொருளாகாது. மாற்கு 7:3-4இல் குறிப்பிடப் படும் பாரம்பரிய சுத்திகரிப்பைக் காட்டும் கிரேக்கச் சொல் இதே "Baptism" என்ற பதம் தான், இங்கே இது "தெளித்தல்" என்ற பொருளில் வருகிறது (லூக்கா 11:38-39 பார்க்க). புறஜாதிகள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்றது (அப்போஸ்தலர் 1:5), ஆவியின் வரம் "பொழிந்தருளப் பட்டது" எனக் குறிப்பிடப் படுகிறது (அப்போஸ்தலர் 2:17-18; 10:44-46). "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப் பட்ட இருதயம் உள்ளவர்களாவது " பற்றியும் வேதம் பேசுகின்றது (எசேக்கியேல் 36:25; எபிரெயர் 10:22), இது தண்ணீர் ஞானஸ்நானத்தையே குறிப்பதாக அநேகக் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். ஆகவே, பல சபைகள் தெளிப்பது அல்லது ஊற்றுவது மூலம் ஞானஸ்நானம் கொடுக்கின்றன.

**தாமஸ் ஹேல்**

## சுருக்கம்

*இந்தக் கட்டுரையில் ஞானஸ்நானம் குறித்த மூன்று முக்கிய கேள்விகள் விவாதிக்கப் பட்டுள்ளன : 1) ஞானஸ்நானத்தின் அர்த்தம் என்ன - அது கிருபையைப் பெறும் வழிவகையா, அல்லது வெறும் அடையாளம் மட்டுமா ? 2) ஞானஸ்நானம் குழந்தைகளுக்கும் உண்டா, அல்லது பெரிய பிள்ளைகளுக்கும் வயது வந்தோருக்கும் மட்டும் தானா? 3) தண்ணீர் பயன் படுத்தப் படும் மூன்று முறைகளும் சரிதானா அல்லது முழுக்கு ஞானஸ்நானம் மட்டுமே சரியா? தொடர்புடைய வேத வசனங்களைப் படித்து ஆராய்ந்த பின்னரே இக்கேள்விகளுக்கான விடையைத் தீர்மானிக்க வேண்டும். நாம் எதைத் தீர்மானித்தாலும் சரி, வேறு விதமாகத் தீர்மானிக்கும் மக்களை நியாயம் தீர்க்கவோ குறை சொல்லவோ கூடாது. இக்கேள்விகளுக்கு வேதம் திட்டவட்டமான பதில்களை அளிக்கவில்லை. ஞானஸ்நானத்தைப் பற்றிய நமது சொந்த நம்பிக்கைகள் மற்ற கிறிஸ்தவ சகோதர சகோதரிகளிடமிருந்து நம்மைப் பிரிக்கக் கூடாது, ஏனெனில் அவர்களுக்காகவும் கிறிஸ்து மரித்தாரே. உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிகைக்கு அழைக்கப் பட்டது போல ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் (எபேசியர் 4:4-6).*

# 9. கர்த்தருடைய பந்தி

**முக்கிய வசனங்கள்**

*மத்தேயு **26:26-29** இயேசுவின் கடைசி விருந்து, முதல் கர்த்தருடைய பந்தி.*

*மாற்கு **14:22-25** இயேசுவின் கடைசி விருந்து, முதல் கர்த்தருடைய பந்தி.*

*லூக்கா **22:17-20** இயேசுவின் கடைசி விருந்து மற்றும் கர்த்தருடைய பந்தியைக் கைக்கொள்ள வேண்டுமென்ற முதல் கட்டளை.*

*யோவான் **6:48-59** நாம் புசிக்க வேண்டிய, பருக வேண்டிய இயேசுவின் சரீரம் மற்றும் இரத்தம்.*

*1 கொரிந்தியர் **10:16-17** கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்தில் பங்கு பெறுதல்.*

*1 கொரிந்தியர் **11:17-34** தகுதியான முறையில் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுதல்.*

**கர்த்தருடைய பந்தி என்றால் என்ன?**

*கர்த்தருடைய பந்தி அல்லது திருவிருந்து முதல்முதலாக நமது ஆண்டவர் மரணமடைவதற்கு முந்திய நாள் ஆசரிக்கப் பட்டது. அது பஸ்கா பண்டிகையின் பஸ்கா விருந்து, அது இயேசுவின் வாழ்க்கையின் கடைசி வாரத்தில் இடம் பெற்றது. எகிப்திலிருந்து தாங்கள் மீட்கப் பட்டதை நினைவு கூரும், கொண்டாடும் வண்ணமாக ஒவ்வோராண்டும் பஸ்காவை ஆசரிக்கும் படி தேவன்*

யூதர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார் (யாத்திராகமம் 12:1-20). பஸ்கா பண்டிகையின் போது புளிப்பில்லா அப்பம் மட்டுமே புசிக்கப் பட வேண்டும் என்று சொல்லியிருந்தார். 1 கொரிந்தியர் 5:7இல், கிறிஸ்துவே நமக்குப் பஸ்கா பலியானார் என்று பவுல் எழுதுகின்றார். எனவே, கிறிஸ்தவர்கள் பஸ்காவுக்குப் பதிலாக கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கின்றனர்.

கர்த்தருடைய பந்தியை நாம் கைக்கொள்ள வேண்டுமென்று இயேசு கட்டளையிட்டார். சுவிசேஷங்களில் இந்தக் கட்டளை லூக்கா 22:19 இல் மட்டுமே காணப்படுகிறது. ஆனால் பவுல் இந்தக் கட்டளையை 1 கொரிந்தியர் 11:23-25 இல் வலியுறுத்தி எழுதுகின்றார். ஆதிக் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியை அடிக்கடி ஆசரித்தனர் (அப்போஸ்தலர் 2:42; 20:7).

மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் 1 கொரிந்தியர் ஆகிய நான்கு இடங்களிலும் உள்ள கர்த்தருடைய பந்தி பற்றிய வேத வசனங்களில், எந்த ஒரு இடத்திலும் இயேசுவின் வார்த்தைகள் அனைத்தையும் காண முடிவதில்லை. ஆனால் நான்கு பகுதிகளையும் சேர்த்து, கீழ்க்கண்டவாறு ஒரு தொகுப்பை நாம் உருவாக்கலாம்:

நீங்கள் வாங்கிப் புசியுங்கள்; இது உங்களுக்காகக் கொடுக்கப் படுகிற என்னுடைய சரீரமாய் இருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள். இந்தப் பாத்திரம் பாவ மன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப் படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாய் இருக்கிறது, (அல்லது) என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாய் இருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவு

கூறும்படி இதைச் செய்யுங்கள் (மத்தேயு 26:26-29; மாற்கு 14:22-25; லூக்கா 22:17-20; 1 கொரிந்தியர் 11: 23-25).

திருச்சபை வரலாறு நெடுகிலும் கர்த்தருடைய பந்தியை ஆசரிப்பதில் பல்வேறு வழிகள் கையாளப் பட்டுள்ளன. இன்று பல திருச்சபைகளில் ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய பந்தி ஆசரிக்கப் படுகிறது. வேறு பல சபைகள் ஓராண்டுக்கு மூன்று அல்லது நான்கு முறைகள் மட்டுமே அதை ஆசரிக்கின்றன. இயேசுவின் காலத்திய யூத பஸ்கா பண்டிகையின் வழக்கத்தைப் பின்பற்றி கர்த்தருடைய பந்தியில் புளிப்பில்லா அப்பத்தையும் உண்மையான திராட்சை ரசத்தையும் பல சபைகள் பயன்படுத்துகின்றன. ஆனால் வேறு பல சபைகளோ புளிப்பிடப் பட்ட அப்பத்தையும், புளிக்க விடப் படாத திராட்சைப் பழ ரசத்தையும் உபயோகிக்கின்றன. பொதுவாக இதில் பங்குபெறும்முன் பாவ அறிக்கைக்கென ஒரு நேரம் ஒதுக்கப் படுகின்றது. பல சபைகளில் கர்த்தருடைய பந்தி ஆலயத்தின் பீடத்தைச் சுற்றியுள்ள பகுதியில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. சில சபைகளிலோ சபையார் அமர்ந்திருக்கும் இடங்களிலேயே இவை அளிக்கப் படுகின்றன.

பெரிய சபைகள். பல சிறு சிறு குவளைகளைப் பயன்படுத்துகின்றன, சில சபைகளோ முதல் கர்த்தருடைய பந்தியில் நடந்தது போல ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெரிய பாத்திரங்களைப் பயன்படுத்துகின்றன. வெகுசில சபைகள் கர்த்தருடைய பந்திக்கு முன் ஒருவர் மற்றவரின் பாதங்களைக் கழுவும் பழக்கத்தையும் 13:1-17). பின்பற்றுகின்றன (யோவான்

இயேசுவின் சரீரமும் இரத்தமும் இயேசு “இது என் சரீரம் ... இது என் இரத்தம்” என்றார். இதன் பொருள் என்ன

*என்பது குறித்து கிறிஸ்தவர்கள் மத்தியில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அநேகக் கிறிஸ்தவர்கள் அப்பம் மற்றும் இரசத்தில், ஏதோ ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய விதத்தில் உண்மையான இயேசுவின் சரீரமும் இரத்தமும் பிரசன்னமாவதாக நம்புகின்றனர். இவர்கள், நாம் ஆசீர்வதிக்கிற பாத்திரமும், பிட்கிற அப்பமும் கிறிஸ்துவின் இரத்தம் மற்றும் சரீரத்தின் ஐக்கியமாய் இருக்கிறது என்று பவுல் கூறுகின்ற 1 கொரிந்தியர் 10:16ஐச் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும் 1 கொரிந்தியர் 11:27, 29இல் பவும் அபாத்திரமாய்க் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றால் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றம் உள்ளவர்களாய் இருப்போம் என்று சொல்வதையும் இவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். "என் மாம்சம் மெய்யான போஜனமாய் இருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாய் இருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்" என்றார் இயேசு (யோவான் 6:55-56).*

*வேறு பல கிறிஸ்தவர்களோ கர்த்தருடைய பந்தியில் இயேசுவின் மெய்யான சரீரமும் இரத்தமும் பிரசன்னமாகிறது என்று நம்புவதில்லை. கர்த்தருடைய பந்தியை முதன்முதலாக ஆண்டவர் ஏற்படுத்திய பொழுது அவர் இன்னும் மரித்திருக்கவில்லை என்பதால், இயேசு "இது என் சரீரத்தைக் குறிக்கிறது" என்றும் "இது என் இரத்தத்தைக் குறிக்கிறது" என்றுமே சொன்னதாகப் பொருள் கொள்ள வேண்டும் என்பது இவர்களது கருத்து. யோவான் 6:55-56, உண்மையாகவே இயேசுவின் மாம்சத்தைப் புசித்து, இரத்தத்தைக் குடிப்பதாகாது, அது அவரில் விசுவாசம் வைப்பதையே குறிக்கும் என்று இவர்கள் நம்புகின்றனர். யோவான் 6:35இல் இயேசு: "என்னிடத்தில் வருகிறவன்*

*ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்று சொன்னார். ஆகவே இக்கிறிஸ்தவர்கள் இயேசுவின் சரீரம் மற்றும் இரத்தத்தில் பங்கு பெறுவதும் அவரை விசுவாசிப்பதும் ஒன்றே என்கின்றனர். கர்த்தருடைய பந்தியை நாம் ஆசரிப்பது ஏன்?*

*கர்த்தருடைய பந்தியை நாம் ஆசரிக்கும்படி இயேசு கட்டளையிட்டார். ஆனால் ஒரு நபர் அதில் பங்கு பெறக் கூடாத நேரங்களும் உண்டு. 1 கொரிந்தியர் 11:27இல் நாம் அபாத்திரமாய் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறக் கூடாது என்று பவுல் கூறுகின்றார். நாம் யாருமே நம்மில் நாமே இயேசுவின் மரணத்துக்கும், மன்னிப்புக்கும் தகுதியானவர்கள் அல்லர், அப்படியானால் நாம் எப்படி "தகுதியான முறையில்" பங்கு பெறுவது? இதற்கு விடை, நாம் முதலாவது நம்மை நாமே சோதித்தறிந்து, நமது பாவங்களை அறிக்கையிட்டு, மனந்திரும்ப வேண்டும். அதன் பிறகு தான் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும் ( 1 கொரிந்தியர் 11:28-31; 1 யோவான் 1:9).*

*எனவே, அறிக்கை செய்யப் படாத பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவன் கர்த்தருடைய பந்தியில் பங்குபெறக் கூடாது. அப்படி பங்கு பெற்றால் அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாய் இருப்பான் (1கொரிந்தியர் 11:27). அப்படிப் பட்டவன் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான், இது பலவீனத்தையோ, வியாதியையோ, சில வேளைகளில் மரணத்தையோ கூட கொண்டு வரலாம் (1கொரிந்தியர் 11:29-30). இது ஒரு பயங்கரமான காரியம். பல சபைகள், பாவத்தை அறிக்கை செய்யாதபடி, அதிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களைக் கர்த்தருடைய பந்தியில் சேர அனுமதிப்பதில்லை,*

காரணம் அது அவர்கள் மேல் நியாயத் தீர்ப்பையே கொண்டு வரும்.

மனந்திரும்பாமல் கர்த்தருடைய பந்தியில் சேருவது ஆபத்தான காரியம் என்றாலும், மனந்திரும்பவே மறுப்பது அதைவிடப் பெரிய ஆபத்தாகும்! நாம் பாவம் செய்து விட்டால், அதை அறிக்கையிட்டு, மனந்திரும்பி, அதன் பின்பு கர்த்தருடைய பந்திக்கு வர வேண்டும்.

கர்த்தருடைய பந்தி என்பது நாம் பாவ அறிக்கையுடனும் மனந்திரும்புதலுடனும் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூரும் வேளை என்று எல்லாக் கிறிஸ்தவர்களுமே நம்புகின்றனர். ஏனெனில் அவருடைய பந்தியில் நாம் புசித்துக் குடிக்கும் போதெல்லாம் அவருடைய மரணத்தை நினைவு கூரும்படி இயேசு தாமே நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார் (1கொரிந்தியர் 11:24-25). கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கையில் நாம் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருவது மட்டுமல்ல, அவரது மரணத்தின் மூலம் வரும் கிருபையை மற்றவர்களுக்கும் கூறித் தெரியப் படுத்துகிறோம். பவுல் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் என்று எழுதுகின்றார் (1கொரிந்தியர் 11:26). கிறிஸ்துவின் மரணத்தினாலே நாம் மன்னிப்பையும், நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்கிறோம்; கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதன் மூலம் இந்த ஆசீர்வாதங்களுக்கான நமது நன்றியறிதலைக் காட்டுகிறோம். அதோடு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம், ஏனெனில் அவர் வருமளவும் நாம் கர்த்தருடைய பந்தியை ஆசரித்து கொண்டே இருப்போம் (1கொரிந்தியர் 1:26).

கர்த்தருடைய பந்தியை அநேகக் கிறிஸ்தவர்கள் "பரிசுத்த திருவிருந்து " என்றும் அழைக்கின்றனர்.

இது நாம் கிறிஸ்துவோடு கொண்டுள்ள ஐக்கியத்தைக் காட்டுகிறது. "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்" என்றார் இயேசு (யோவான் 6:56). எனினும், இது கிறிஸ்துவோடு மட்டும் உள்ள ஐக்கியமல்ல, நமது உடன் விசுவாசிகளோடும் உள்ள ஐக்கியமாகும். நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் பங்கு பெறுகிறோம்; ஆதலால், நாம் ஒருவரோடொருவரும் பங்கு பெறுகிறோம். ஒரேயொரு அப்பம் - அதாவது, கிறிஸ்து இயேசு - உண்டு, நாம் அநேகராய் இருந்த போதிலும், அந்த ஒரே அப்பத்தில் நாம் எல்லாரும் பங்கு பெறுகிறபடியால், நாமும் ஒரே சரீரமாய் இருக்கிறோம் (1 கொரிந்தியர் 10:17).

மேலும், அநேகக் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியும் "கிருபையின் எத்தனங்களுள்' ஒன்று, அதாவது தேவனுடைய கிருபை நமக்குக் கிடைக்கின்ற வழிவகைகளுள் ஒன்று என்று நம்புகின்றனர். கர்த்தருடைய பந்தியின் மூலமாக நாம் உண்மையான நியாயத் தீர்ப்பு அடைவது போலவே (1கொரிந்தியர் 11:27-32), உண்மையான ஆசீர்வாதங்களையும் பெறமுடியும். இந்தக் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் நாம் ஒரு விசேஷித்த முறையில் பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதாக எண்ணுகின்றனர். "இது பாவ மன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப் படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாய் இருக்கிறது" என்று இயேசு சொன்னார் (மத்தேயு 26:28). "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன்

உண்டு" என்றும் அவன் "என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்' என்றும் கூட இயேசு சொன்னார் (யோவான் 6:54-56).

சிறப்பான எனவே, இந்தக் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் தேவன் தமது கிருபையை ஒரு விதத்தில் நமக்குத் தருகிறார், இந்தக் கிருபையில் பாவ மன்னிப்பு, கிறிஸ்துவோடு ஐக்கியம், நித்திய ஜீவன் இவை எல்லாமே அடங்கும் என்பதாக நம்புகின்றனர் இவர்கள் அப்பமும், இரசமும் உள்ளான, ஆவிக்குரிய ஒரு கிருபையின் வெளிப்படையான, கண்ணுக்குப் புலனாகும் அடையாளங்கள் என்கின்றனர். வெறுமனே அப்பத்தையும் இரசத்தையும் பெற்று உட்கொள்வதால் ஒன்றும் நடக்காது; விசுவாசத்துடன் அவற்றைப் பெற்றுக் கொள்கையில் தான் கர்த்தருடைய பந்தியின் உள்ளான கிருபையையும் பெற்றுக் கொள்வோம். விசுவாசம் இன்றி பெற்றுக் கொண்டால், கிருபையையும் பெற மாட்டோம்; பதிலாக ஆக்கினைத் தீர்ப்பையே அடைவோம் (1கொரிந்தியர் 11:27-32).

வேறு பல கிறிஸ்தவர்களோ, கர்த்தருடைய பந்தியில் விசேஷித்த கிருபை எதுவும் இருப்பதாக நம்புவதில்லை. இவர்கள் தேவனுடைய கிருபை தேவ வசனத்தின் மூலமாக, எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையின் மூலமாக மட்டுமே நமக்குக் கிட்டுவதாகக் கருதுகின்றனர். சிறப்பான வழிகளிலோ, ஆசரிப்புகளிலோ தேவன் தமது கிருபையை அளிப்பதாக இவர்கள் நம்புவதில்லை. நாம் விசுவாசத்தினாலே இயேசுவில் நம்பிக்கை வைக்கும்பொழுது, சரீரப் பிரகாரமாக அல்ல, ஆவிக்குரிய பிரகாரமாக "அவருடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுகிறோம்". கர்த்தருடைய பந்தி ஒரு விதத்தில் சிறப்பானது தான், அதில் தான் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூரும் வகையில்

நாம் சபையாகக் கூடி வருகிறோம், அது ஒரு கூட்டு ஆராதனை மற்றும் சாட்சியின் செயல்பாடு மட்டுமே என்பது இவர்களது கருத்து.

**சுருக்கம்**

சம்பந்தப் பட்ட வேத வசனங்களைப் படித்துப் பார்த்து விட்டு அதன்பிறகே கிறிஸ்தவர்கள் இக்கேள்விகளுக்குப் பதில்களைத் தீர்மானிக்க வேண்டும். முக்கியமான கேள்விகள் இரண்டு. முதலாவது, கர்த்தருடைய பந்தியில் நாம் இயேசுவின் உண்மையான சரீரத்தையும் இரத்தத்தையுமே பெற்றுக் கொள்கிறோமா, இல்லையா? இரண்டாவது, நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் போது கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருகிறோம். நமது பாவங்களை அறிக்கையிடுகிறோம், சரி - ஆனால் தேவன் அருளும் மன்னிப்பையும் ஒரு சிறப்பான விதத்தில் பெற்றுக் கொள்கிறோமா? இக்கேள்விகள் பற்றி நாம் என்ன தீர்மானம் செய்தாலும் சரி, நம்மிலிருந்து கருத்து வேறுபடக் கூடிய சகோதர சகோதரிகளைக் குற்றம் தீர்க்கக் கூடாது.

நாம் எல்லாருமே கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கிறோம். அதன் அர்த்தத்தைப் பற்றிய நமது சொந்த நம்பிக்கைகள் நமது சகோதர சகோதரிகளிடமிருந்து நம்மைப் பிரிக்கக் கூடாது, ஏனெனில் கிறிஸ்து அவர்களுக்காகவும் மரித்தாரே. 1 கொரிந்தியர் 12:13இல் நாம் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப் பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப் பட்டோம் என்று பவுல் எழுதிய போது தண்ணீர் ஞானஸ்நானத்தையும் கர்த்தருடைய பந்தியையுமே குறிப்பிட்டார் என்று பலர்

நம்புகின்றனர். கர்த்தருடைய பந்தி நம்மைக் கூட்டிச் சேர்க்க வேண்டுமேயன்றி பிரித்து விடக் கூடாது.

கர்த்தருடைய பந்தியில் கிறிஸ்துவின் இரத்தம் உண்மையாகவே பிரசன்னமாய் இருந்தாலும், இராவிட்டாலும் தமது மரணத்தையும் அதனால் நமக்கு என்ன நடந்தது என்பதையும் நாம் நினைவு கூரும்படி இயேசு கட்டளையிட்டுள்ளார். இயேசுவின் மரணம் அவரது இரத்தம் - செய்துள்ளது என்பதை நாம் எண்ணித் தீர்க்கவே முடியாது; நீதிமானாக்கப் நமக்காக என்னவெல்லாம் படுதல் (ரோமர் 5:9), மீட்பு மற்றும் பாவ மன்னிப்பு (எபேசியர் 2:13; கொலோசெயர் 1:20), மனச்சாட்சியைச் சுத்திகரித்தல் (எபிரெயர் 9:14), இரக்கத்தைப் பெற்றுக் கொள்ள வழி திறத்தல் (எபிரெயர் 10:19), பாவத்திலிருந்து சுத்திகரிப்பு (1யோவான் 1:7), மாபெரும் வெற்றி (வெளிப்படுத்தல் 12:11). கிறிஸ்துவின் இரத்தம்-ஓ, அது எவ்வளவு விலையேறப் பெற்றது!

# 10. திருச்சபை ஆட்சிமுறை

**முக்கிய வசனங்கள்**

*அப்போஸ்தலர் **6:1-6** அப்போஸ்தலர்கள் மற்றும் முதலாவது உதவிக்காரர்கள் **1** கொரிந்தியர் **12:28** சபையில் ஊழியங்கள்: தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு ஊழியங்களையும், ஆளுகைகளையும். ஏற்படுத்தினார். எபேசியர் **2:20** சபையானது அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் (கட்டப் பட்டிருக்கிறது;) அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாய் இருக்கிறார். எபேசியர் **4:11-13** கிறிஸ்து சபையில் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். **1** தீமோத்தேயு **3:1-13** கண்காணியானவர்கள் (பேராயர்கள்) மற்றும் உதவிக்காரர்களின் தகுதிகள். **1** தீமோத்தேயு **5:17-20** மூப்பர்களின் பணி, ஊதியம் மற்றும் ஒழுங்கு. தீத்து **1:5-9** மூப்பர்கள் மற்றும் கண்காணியானவர்களின் தகுதிகள்.*

**திருச்சபை**

கிரேக்க மொழியில் "*சர்ச்*" என்பது, ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக "*அழைக்கப் பட்ட*" மக்களின் "*கூடுகை*" அல்லது "*சபை*" என்று பொருள்படும். கிறிஸ்தவத் திருச்சபையானது தேவனுடைய மக்களாய் இருக்கும்படி அவரால் "*அழைக்கப் பட்ட* தாகும் (1பேதுரு 2:9-10). "*சபை*' என்ற பதம் உள்ளூர் விசுவாசிகளின் கூடுகையையும் குறிக்கலாம், உலகனைத்திலும் உள்ள மொத்த

விசுவாசிகளின் கூட்டத்தையும் குறிக்கலாம். எங்கெல்லாம் மூன்றோ நான்கோ விசுவாசிகள் கூடி வருகிறார்களோ அங்கெல்லாம் அது உள்ளூர்ச் சபையாகும். உலகெங்கிலும் உள்ள அனைத்து விசுவாசிகளும் சேர்ந்தது உலகளாவிய, ஆவிக்குரிய திருச்சபையாகும். இயேசுவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு அவரது நாமத்தில் ஞானஸ்நானம் பெறுபவர்கள் ஒரு சபையின் அங்கங்களாவர் (1கொரிந்தியர் 12:13), ஆனால் யாரெல்லாம் உண்மை விசுவாசிகள் என்பதை தேவன் மட்டுமே அறிவார் (மத்தேயு 13:24-30, 36-43).

திருச்சபையானது அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் போட்ட அஸ்திபாரத்தின் மேல் கட்டப் பட்டுள்ளது, அதற்கு இயேசு கிறிஸ்து தாமே பிரதான மூலைக்கல்லாய் இருக்கிறார் (மத்தேயு 16:18; 1 கொரிந்தியர் 3:11; எபேசியர் 2:19-22; 1 பேதுரு 2:4-8). அது பரிசுத்த ஆவியானவரால் தோற்றுவிக்கப் பட்டது (அப்போஸ்தலர் 2:1-4, 36-41). பரிசுத்த ஆவியானவர் சபைக்குள் வாசம் பண்ணுகிறார்; சபையானது தேவனுடைய ஆலயமாய் இருக்கிறது (1கொரிந்தியர் 3:16; எபேசியர் 2:22). வேறொரு இடத்தில், சபை “கிறிஸ்துவின் மணவாட்டி" என்றும் அழைக்கப் படுகிறது (2 கொரிந்தியர் 11:2; எபேசியர் 5:22-32; வெளிப்படுத்தல் 19:7). சபையானது "கிறிஸ்துவின் சரீரம்" எனவும் பெயர் பெறுகின்றது (ரோமர் 12:4-5; 1 கொரிந்தியர் 12:27), அதற்கு இயேசு கிறிஸ்து தாமே சிரசாய் இருக்கின்றார் (எபேசியர் 4:15-16; 5:23; கொலோசெயர் 1:18).

இயேசுவே சபைக்குத் தலைவர்களையும் தந்தார் : அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள் (எபேசியர் 4:11). தேவனே சபையில் பற்பல ஊழியங்களை ஏற்படுத்தினார்

*(1கொரிந்தியர் 12:28), அந்த ஊழியங்களை நிறைவேற்றுவதற்கான தமது விசேஷித்த வரங்களையும், வல்லமையையும் அருளுபவர் பரிசுத்த ஆவியானவரே (1கொரிந்தியர் 12:7-11).*

*எனினும், வேதத்தில் உதவிக்காரரர்கள், மூப்பர்கள், கண்காணியானவர்கள், சங்கங்கள் இவை பற்றியும் வாசிக்கிறோம். இவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து உழைப்பது எப்படி? திருச்சபையானது எவ்வாறு ஆளுகை செய்யப் படுகிறது?*

**வேதாகமத்தில் திருச்சபை தலைமைத்துவம்**

*எபேசியர் 4:11இல் பவுல் பல தரப்பட்ட தலைவர்களைப் பற்றி எழுதுகின்றார், அவர்களில் முதன்மையானவர்கள் அப்போஸ்தலர்கள். கிரேக்க மொழியில் "அபாஸ்ட்ல்" என்றால் "அனுப்பப் பட்டவன்" என்று பொருள். முதல் பன்னிரு அப்போஸ்தலர்களையும் இயேசுவே தெரிந்தெடுத்தார் (மாற்கு 3:13-19). அவர்கள் விசேஷமானவர்கள், இயேசுவின் ஊழியம், மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் இவற்றைத் தங்கள் கண்ணாரக் கண்டவர்கள் (அப்போஸ்தலர் 1:21-22). பவுலும் தாம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் கண்டார் என்பதன் அடிப்படையிலேயே தாமும் ஒரு அப்போஸ்தலனே என வாதிட்டார் (1 கொரிந்தியர் 9:1-2; 15:5-11).*

*இந்த அப்போஸ்தலர்கள் ஊரூராகச் சென்று பல புதிய சபைகளை நாட்டினர். சபைக்குப் புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதியை வழங்கியவர்கள் இவர்களே, சபையில் அறுதியான அதிகாரம் பெற்றிருந்தவர்களும் இவர்களே. எனினும், வேதமானது வேறு சில மக்களையும் "அப்போஸ்தலர்கள்" என அழைக்கின்றது, அவர்கள்*

பர்னபா (1 கொரிந்தியர் 9:5-6), கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபு (கலாத்தியர் 1:19), சீலா மற்றும் தீமோத்தேயு (1தெசலோனிக்கேயர் 1:1; 2:6-7) மற்றும் சிலர் (ரோமர் 16:7; வெளிப்படுத்தல் 2:2).

எபேசியர் 4:11 இல் பவுல் தரும் தலைவர்கள் பட்டியலில் இரண்டாவது வருவோர் தீர்க்கதரிசிகள். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களைப் போலவே இவர்கள் தாங்கள் தேவனிடமிருந்து நோடியாகப் பெற்ற வார்த்தைகளை மக்களுக்கு அளித்தனர் (1கொரிந்தியர் 14:30), இதில் புத்தி சொல்லி ஊக்குவிப்பது, விசுவாசத்தில் உறுதிப் படுத்துவது, ஆறுதல் சொல்வது (அப்போஸ்தலர் 15:32; 1 கொரிந்தியர் 14:3,31), கூடவே வருங்காலத்தைப் பற்றி முன்னறிவிப்பது ஆகிய அனைத்தும் அடங்கும் (அப்போஸ்தலர் 11:28; 21:10-11). தீர்க்கதரிசனமானது 1 கொரிந்தியர் 12:8-10 இல் விசுவாசிகளுக்கு அருளப்படும் பரிசுத்த ஆவியானவரின் வரங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப் படுகிறது. அவர்கள் "பேசுவதை" சபையில் உள்ள மற்றவர்கள் நிதானித்து அறிய வேண்டும் என்று பவுல் கற்பித்தார் (1கொரிந்தியர் 14:29-33). ஆதித் திருச்சபையில், ஆண்களும் பெண்களுமாக இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகள் அநேகர் இருந்தனர் (அப்போஸ்தலர் 11:27-28; 13:1; 15:32; 21:9-10; 1 கொரிந்தியர் 11:4-5; 1 தீமோத்தேயு 4:14).

எபேசியர் 4:11இல் பவுலின் பட்டியலில் இடம் பெறும் மூன்றாவது தலைவர்கள் சுவிசேஷகர்கள். இப்பதத்தின் பொருள் "நற்செய்தியை, சுவிசேஷத்தைச் சொல்பவன். முதல் ஏழு உதவிக் காரரர்களில் ஒருவனான பிலிப்பு ஒரு சுவிசேஷகன் என்றும் அழைக்கப் பட்டான் (அப்போஸ்தலர் 21:8). அவன் நற்செய்தியை, அதாவது சுவிசேஷத்தை புதிய புதிய பகுதிகளுக்கும், மக்களுக்கும் எடுத்துச் சென்றான் (அப்போஸ்தலர் 8:5-8; 8:26-40).

*தீமோத்தேயு “அப்போஸ்தலன்" என அழைக்கப் பட்ட போதிலும், ஒரு சுவிசேஷகனுடைய வேலையைச் செய்யும் படி கட்டளை பெற்றான் (2 தீமோத்தேயு 4:5). “மேய்ப்பர்கள்” மற்றும் "போதகர்கள்" என்போர் இறுதியாகக் குறிப்பிடப் படுகின்றனர்.*

*இது சபையாகிய மந்தையை மேய்க்கும், ஆலோசனை அளிக்கும், போதித்துக் கற்பிக்கும் தலைவர்களைக் குறிக்கும். சபையானது ஆதி முதலே மிஷனெரிகளை அனுப்பி வந்துள்ளது (அப்போஸ்தலர் 13:1-3; 15:22,32; 18:27), "அப்போஸ்தலன்" என்ற பதமே “அனுப்பப் பட்டவன்” என்று தான் பொருள்படும் ஆதலால் மிஷனெரிகள், அதிலும் குறிப்பாக, புதிய சபைகளை நாட்டும் மிஷனெரிகள் அப்போஸ்தலர்களே என்று சில கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். ஆனால் மற்ற மிஷனெரிகள் சுவிசேஷகர்களையோ அல்லது போதகர்களையோ போன்றவர்கள்; அல்லது ஒரு வேளை மிஷனெரிகள் என்பது முற்றிலும் வேறான ஒரு அலுவலைக் குறிக்கலாம் (பொதுவான தலைப்பு : திருச்சபையின் நோக்கம் — பார்க்க).*

*"மூப்பர்" என்ற பதம் முதன்முதலில் எருசலேம் திருச்சபையில் இருந்த தலைவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டது (அப்போஸ்தலர் 11:30). அவர்களது பொறுப்பு ஒரு குறிப்பிட்ட உள்ளூர்ச் சபையை ஆளுகை செய்வதும் வழிநடத்திச் செல்வதுமாகும். தங்களது முதலாவது மிஷனெரிப் பயணத்தின் முடிவில் பவுலும் பர்னபாவும், தாங்கள் நாட்டிய ஒவ்வொரு சபைகளிலும் மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து விட்டுச் சென்றனர் (அப்போஸ்தலர் 14:23). எருசலேமின் சபை மூப்பர்களில் இந்த அப்போஸ்தலர்களும் அடங்குவர், பேதுரு (1பேதுரு*

5:1), யோவான் (2,3 யோவான்) இருவருமே தங்களை மூப்பர்கள் என அழைத்துக் கொள்கின்றனர். எனவே “மூப்பர்” என்ற பதம் பல்வேறு அலுவல்களை உள்ளடக்கியதாகும். மூப்பர்கள் சபையின் காரியங்களை விசாரித்து நடத்த வேண்டும் (1தீமோத்தேயு 5:17), சபையை மேய்க்கவும் கண்காணிக்கவும் வேண்டும் (அப்போஸ்தலர் 20:28-31; 1 பேதுரு 5:1-4), பிணியாளிகளுக்கு எண்ணெய் பூசி ஜெபிக்க வேண்டும் (யாக்கோபு 5:14), அதோடு சில மூப்பர்கள் போதிக்கவும் பிரசங்கிக்கவும் வேண்டும் (1தீமோத்தேயு 5:17);, பவுல் தமது பிந்தைய நிருபங்களில் “கண்காணி” என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். அதாவது "மேற்பார்ப்பவன்". பிலிப்பியத் திருச்சபையின் கண்காணிகள் பற்றி அவர் குறிப்பிடுகிறார் (பிலிப்பியர் 1:1), கண்காணியானவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் குறித்து 1 தீமோத்தேயு 3ஆம் அதிகாரத்திலும் தீத்து 1ஆம் அதிகாரத்திலும் எழுதுகிறார்.

அநேகக் கிறிஸ்தவ பண்டிதர்கள் "கண்காணி" மற்றும் “மூப்பர்' என்ற பதங்கள் ஒரே பதவியைக் குறிப்பவை எனக் கருதுகின்றனர். இவர்கள் “மூப்பர்” என்பது பதவியையும், "கண்காணி" என்பது மூப்பர் பதவியிலுள்ளவர்கள் செய்யும் பணி அல்லது ஊழியத்தையும் குறிப்பதாக நம்புகின்றனர். அப்போஸ்தலர் 20:178இல் பவுல் ஒரு கூட்டம் மூப்பர்களை 'கண்காணிகள்” என்று அழைத்துப் பேசுவதையும், 1 பேதுரு 5:1-2இல் பேதுரு மூப்பர்களைக் கண்காணிப்பு செய்யும்படி கூறுவதையும் இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வேறு பல கிறிஸ்தவ அறிஞர்களோ ஆதித் திருச்சபையிலேயே கண்காணிகளுக்கும் மூப்பர்களுக்கும் தனித்தனி அலுவல்கள் இருந்ததாக நம்புகின்றனர். இவர்கள்

தீத்து 1ஆம் அதிகாரத்தில் குற்றம் சாட்டப்படாதவன் என்று ஆரம்பித்து மூப்பர்களுக்கும் கண்காணிகளுக்கும் இருக்க வேண்டிய தகுதிகள் பற்றி இரண்டு வெவ்வேறு பட்டியல்கள் கொடுக்கப் பட்டிருப்பதைக் காட்டுகின்றனர் (தீத்து 1:5-9 பார்க்க). இவர்கள் 1 தீமோத்தேயு 3:1-7 மற்றும் 5:17-20இல் கண்காணிகள் மற்றும் மூப்பர்கள் குறித்துத் தனித் தனியாக விவாதிக்கப் படுவதையும் சுட்டிக் காட்டுகின்றனர். ஒரு சில மூப்பர்கள் மட்டுமே போதிக்கக் கூடியவர்களாய் இருந்தனர் (1தீமோத்தேயு 5:17), ஆனால் எல்லாக் கண்காணிகளும் போதக சமர்த்தர்களாக இருக்க வேண்டியதிருந்தது (1 தீமோத்தேயு 3:2). இந்தக் கிறிஸ்தவர்கள், எல்லாக் கண்காணிகளுமே மூப்பர்களாக இருந்தனர், ஆனால் எல்லா மூப்பர்களும் கண்காணிகள் அல்லர் என்று கருதுகின்றனர். வேறு விதமாகச் சொன்னால் சில மூப்பர்களுக்குக் கண்காணி பதவி கொடுக்கப் பட்டது, மற்ற மூப்பர்களோ அந்தக் கண்காணிகளுக்கு உதவியாளர்களாக இருந்தனர்.

சபையில் ‘‘உதவிக்காரர்களும்' இருந்தனர் (1 தீமோத்தேயு 3:8). முதலாவது உதவிக்காரர்கள் பற்றி அப்போஸ்தலர் 6:1-இல் பார்க்கிறோம். "உதவிக்காரன்" என்றால் "ஊழியம் செய்கிறவன்’’. சபையில் நடைபெறும் உலகப் பிரகாரமான காரியங்களை நிர்வகிக்கவும், ஏழைகளையும் பிணியாளிகளையும் பராமரிக்கவும் உதவிக்காரர்கள் நியமிக்கப் பட்டனர். உதவிக்காரர்களுக்குரிய தகுதிகளை பவுல் 1 தீமோத்தேயு 3:8-13இல் பட்டியலிடுகிறார். அவர்கள் சபையில் நடைபெறும் வழக்கமான அன்றாட அலுவல்களையும் ஊழியங்களையும் மட்டுமே கவனித்த போதிலும் அவர்களது ஞானம் மற்றும் ஆவியானவரின் நிரப்புதல் இவற்றின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப் பட்டனர் (அப்போஸ்தலர் 6:3). உதாரணமாக ஸ்தேவானும்

(அப்போஸ்தலர் 6:5, 8-10), பிலிப்புவும் (அப்போஸ்தலர் 6:5; 8:4-8) மிகச் சிறந்த ஆவிக்குரிய ஊழியம் செய்த இரு உதவிக்காரர்கள் ஆவர். சபையின் தலைவர்களுக்கு விசேஷித்த அதிகாரமும் பொறுப்பும் கொடுக்கப் பட்டிருந்தாலும் சபையார் அனைவருமே பிறருக்குக் கிறிஸ்துவைக் குறித்துச் சொல்ல வேண்டும், தேவைப் படும் சமயங்களில் தேவப் பணிக்குக் கரம் கொடுத்து உதவ வேண்டும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

## திருச்சபை ஆளுகை

திருச்சபை வரலாற்றிலே நான்கு முக்கிய வகையான ஆளுகைகள் அல்லது ஆட்சிமுறைகள் இருந்துள்ளன. அவற்றை உண்மையில் யார் பொறுப்பில் இருக்கிறார் என்பதன் அடிப்படையில் விவரிக்கலாம். முடிவான அதிகாரம் 1) ஒரு பேராயரிடம் (கண்காணி), இவர் பல உள்ளூர்த் திருச்சபைகளை மேற்பார்ப்பார், அல்லது 2) ஒரு மூப்பர் குழுவிடம், இவர்கள் ஒரு சபையையோ, பல உள்ளூர்ச் சபைகளையோ மேற்பார்ப்பர், அல்லது 3) ஒரு போதகரிடம், இவர் தானே தனது சபையை நடத்துவார் அல்லது 4) முழுச் சபையாரும் ஒரு குழுவாகச் செயல்படுவர். இந்த நான்கு ஆட்சி வகைகளுமே புதிய ஏற்பாட்டின் பல்வேறு வசனங்களை அடிப்படையாகக் கொண்டவை, இவை நான்குமே வேதத்தின் முன்மாதிரியைப் பின்பற்றுபவை எனலாம்.

ஒரு பேராயரின் கையில் அதிகாரம் உள்ள சபைகளில் கிறிஸ்தவர்கள், தாங்கள் அப்போஸ்தலர்களால் ஏற்படுத்தப் பட்ட சபை ஆட்சி முறையைத் தொடர்வதாகக் கூறுகின்றனர். அப்போஸ்தலர்கள் அநேக சபைகளையும், அச்சபைகளின் மூப்பர்களையும் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர் (அப்போஸ்தலர் 8:14-17; 14:23).

"தீர்ப்புச் செய்கின்ற'', "கட்டளையிடுகின்ற'', "அதிகாரத்தைப்" பயன்படுத்துகின்ற அளவுக்கு இதைச் செய்தனர் (1கொரிந்தியர் 5:3; 9:1-2; 2 கொரிந்தியர் 10:1-11; 2 தெசலோனிக்கேயர் 3:14; தீத்து 1:5). இவர்கள் தீமோத்தேயு மற்றும் தீத்து பேராயர்கள் போல் செயல்பட்டதைச் சுட்டிக் காட்டுகின்றனர். இவர்கள் எபேசு மற்றும் கிரேத்தா தீவின் சபைகளை ஆளுகை செய்யும் படியாக பவுலினால் தேர்ந்தெடுக்கப் பட்டனர் (1தீமோத்தேயு 1:3; 5:19-22; தீத்து 1:5; 3:10). எருசலேமின் சபை கமிட்டி கூட்டங்களில் (அப்போஸ்தலர் 11,15 அதிகாரங்கள்) பேதுருவும் யாக்கோபும் தலைமை வகித்ததையும், தீர்மானங்கள் செய்ததையும் இவர்கள் கட்டிக் காட்டுகின்றனர். பேராயரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டு, உள்ளூர்ச் சபைகளில் போதகர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் செயல்படுவர், ஆனால் முடிவான முக்கியமான அதிகாரமோ பேராயரின் கையிலே இருக்கும்.

சபை மூப்பர்களின் கையில் எல்லா அதிகாரமும் இருக்கின்ற சபைகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள், அப்போஸ்தலர்கள் முதல் நூற்றாண்டு திருச்சபைக்கு மட்டுமே கொடுக்கப் பட்டனர் என்றும், மூப்பர்களால் ஆளப்படுவதே நிரந்தரமான சபை ஆட்சி முறை என்றும் நம்புகின்றனர் (அப்போஸ்தலர் 14:23; தீத்து 1:5). இவர்கள் "மூப்பர்'' என்பதும் "கண்காணி" என்பதும் ஒரே பதவியைக் குறிக்கும் வெவ்வேறு பதங்கள் எனக் கருதுகின்றனர். இவ்வகை சபைகளில் சிலர் "ஆளுகின்ற மூப்பர்கள்'', வேறு சிலர் "போதிக்கின்ற மூப்பர்கள்" (1தீமோத்தேயு 5:17). இவர்களுக்கு உதவியாக உதவிக்காரர்கள் குழுவும் இருக்கலாம். இச்சபைகளில் பல, ஒரு பெரிய கூட்டம் மூப்பர்கள் பல சபைகளைக் கண்காணிக்கின்ற அல்லது பல சபைகளின் மூப்பர்களுழ ஒன்றாகக் கூடி தங்கள்

*சபைகளுக்குப் பொதுவான பிரச்சனைகளைப் பற்றிப் பேசி முடிவெடுக்கின்ற ஓர் அமைப்புக்கு உட்பட்டவை.*

*மூன்றாம் வகையான சபை ஆட்சிமுறையில் முழு அதிகாரமும் ஒரேயொரு மூப்பர் அல்லது போதகரின் கையில் உள்ளது. இவ்வகை சபைகள் உள்ளூர்ச் சபைகள் தன்னாட்சி முறையைப் பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்துபவை. உள்ளூர்ச் சபைக்கு வெளியே உள்ள யாரும் சபை மீது அதிகாரம் செலுத்த முடியாது என்பது இவர்களது கருத்து. இச்சபைகளின் போதகர் சபையை நடத்திச் செல்வதில் உதவியாக இருக்கக் கூடிய மூப்பர்கள் மற்றும் உதவிக்காரரர்கள் குழு ஒன்று இருப்பினும், இறுதியான அதிகாரம் போதகருடையதே. பவுல் தமது மிஷனெரிப் பயணங்களை ஆங்காங்கே நிறுத்தி, வருடக் கணக்கில் ஒரு சபையில் போதித்த போது, உள்ளூர்ச் சபைகளில் அவருக்கு இருந்த அதிகாரத்தை இவ்வகை சபைகள் சுட்டிக் காட்டுகின்றன. பவுல் இப்படிப் பலமுறை செய்தார் (அப்போஸ்தலர் 18:11; 19:10; 20:31). தீமோத்தேயுவும் எபேசு சபையில் இவ்வகையான போதகராகவே செயல்பட்டிருக்க வேண்டும் ( 1தீமோத்தேயு 1:3; 4:11-14).*

*சபை ஆட்சி முறையின் நான்காவது வகை, உள்ளூர்ச் சபையின் அதிகாரம் அனைத்தையும் அச்சபையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்குகிறது. உள்ளூர்ச் சபை சுயேச்சையாகச் செயல் பட வேண்டும் என்ற மூன்றாவது வகை மக்களுடன் அக்கருத்தில் ஒன்றுபடும் இச்சபை மக்கள் விசுவாசிகள் மீது ஒரே நபர் ஆளுகை செய்வதை ஒத்துக் கொள்வதில்லை. இக்கருத்துடைய கிறிஸ்தவர்கள் சபைக்குக் கிறிஸ்து மட்டுமே தலையாய் இருக்கிறார் (கொலோசெயர் 1:18) என்றும், நாம் யாரையும் ரபீ என்றோ, பிதா என்றோ, குரு என்றோ அழைக்கக்*

*கூடாது என கிறிஸ்து நமக்குக் கட்டளையிட்டதையும் (மத்தேயு 23:8-10) சுட்டிக் காட்டுகின்றனர். எல்லா விசுவாசிகளுமே 'ஆசாரியர்கள்" தாம் (1 பேதுரு 2:9; வெளிப்படுத்தல் 5:10). தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் (அப்போஸ்தலர் 6:3), போதிப்பதிலும் (1 கொரிந்தியர் பங்கு பெற்றதைக் காட்டும் வேத 14:26), ஒழுங்கு நடவடிக்கையிலும் முழுச் சபையுமே வசனங்களை இக்கிறிஸ்தவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர் (மத்தேயு 18:17; 1 கொரிந்தியர் 5:4-5; 2 கொரிந்தியர் 2:6). ஆகவே, இச்சபைகள் முழுச் சபையையும் கூட்டி முக்கியமான எந்த விஷயத்தையும் தீர்மானிப்பதற்கு ஓட்டெடுப்பு நடத்துகின்றனர். இவ்வகை சபைகளில் பிரசங்கம் செய்யவும், போதிக்கவும் ஒரு தனிப் போதகர் இருக்கலாம், ஆனால் அவருக்குச் சபை மக்கள் மீது அதிகாரம் கிடையாது. இச்சபைகளுள் சிலவற்றுக்குத் தலைவர்கள் என்று யாரும் இருப்பதில்லை. பிரசங்கித்தல், வேதபாட வகுப்பு நடத்துதல் போன்ற பணிகளை நிறைவேற்ற அந்தந்தத் துறைகளில் வரம் உள்ள சபை மக்களே பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்கின்றனர்.*

**தலைவர்களைத் தேர்ந்தெடுத்தல்**

*கண்காணிகள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரரர்களுக்கான தகுதிகள் 1 தீமோத்தேயு 3:1- 13; தீத்து 1:5-9; அப்போஸ்தலர் 6:1-6 இவற்றில் பட்டியலிடப் பட்டுள்ளன; ஆகவே அவற்றை நாம் இங்கே விவாதிக்கப் போவதில்லை. அவை பற்றிய கருத்துக்களை அறிய மேற்குறிப்பிட்ட வேத பகுதிகளின் குறிப்புரைகளைக் காணவும். ஆனால் இங்கே தலைவர்களை நியமிப்பது எப்படி என்ற கருத்துப் பற்றிச் சில விஷயங்களைச் சொல்லியே ஆக வேண்டும்.*

அப்போஸ்தலர்களின் காலத்தில், புதிய சபைகளின் மூப்பர்கள் அப்போஸ்தலர்களாலேயோ (அப்போஸ்தலர் 14:23) அல்லது தீமோத்தேயு, தீத்து போன்ற அவர்களது உடன் ஊழியர்களாலேயோ நியமிக்கப் பட்டனர். அப்போஸ்தலர் 6:1-6 இல் குறிப்பிடப் படும் உதவிக்காரர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டனர், பவுலும் பர்னபாவும் பரிசுத்த ஆவியானவரால் அவரது தீர்க்கதரிசிகள் மூலமாகத் தெரிந்தெடுக்கப் பட்டனர் (அப்போஸ்தலர் 13:1-3).

ஒரு சந்தர்ப்பத்தில், துரோகியான யூதாஸின் இடம் யாருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை அறிய சபையானது சீட்டுக் குலுக்கிப் போட்டது (அப்போஸ்தலர் 1:23-26). ஆதி சபையானது வெவ்வேறு பதவிகள் அல்லது பணிகளுக்காக மக்களை நியமிப்பது பற்றி உபவாசித்து ஜெபித்தது, அப்படி தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மீது கரங்களை வைத்து ஜெபித்தது (அப்போஸ்தலர் 6:6; 13:1-3; 14:23; 1 தீமோத்தேயு 4:14; 5:22). பல சந்தர்ப்பங்களில் இப்படி குறிப்பிட்ட ஊழியத்திற்கென்று மக்களின் தலைகளில் கரம் வைத்து ஜெபித்த போது, தீர்க்கதரிசனங்களும் வெளிப்பட்டன (அப்போஸ்தலர் 13:1-3; 1 தீமோத்தேயு 1:18; 4:14).

அப்போஸ்தலர்களின் காலம் முடிந்த பிறகு, வெவ்வேறு சபைகள் வெவ்வேறு முறைகளைப் பின்பற்ற ஆரம்பித்தன. பேராயர்களால் (கண்காணி) ஆளப்படும் சபைகளில், ஒரு குறிப்பிட்ட நபர் சபைத் தலைவராக வேண்டுமெனில் அவர் அதற்கென்று விசேஷமாகப் படித்திருக்க வேண்டும். இவ்வகை சபையில் பேராயரே மற்ற புதிய தலைவர்களை, அவர்கள் தலைமீது கரங்களை வைத்து ஜெபிப்பதன் மூலம் பிரதிஷ்டை செய்வார்.

மூப்பர்கள் குழுவினால் ஆட்சி செய்யப் படும் சபைகள் பொதுவாக தலைவர்களைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில் சபை மக்களுக்கு ஓரளவு பங்கு கொடுக்கின்றன, ஆனால் தலைவர்களைப் பிரதிஷ்டை செய்வது மூப்பர்களே, இவர்களும் தலைகளில் கை வைத்து ஜெபிப்பதன் மூலமே பிரதிஷ்டை செய்கின்றனர். இவர்களும் இதற்கென்று விசேஷப் படிப்பு அவசியமெனக் கருதுகின்றனர்.

ஒரு தனிப் போதகரால் ஆளப்படும் சபைகள் பொதுவாக அவராலேயே நிறுவப் பட்டவையாக இருக்கும். பொதுவாக இவர் ஏற்கனவே அதற்கென்று விசேஷமாகப் படித்திருப்பார், வேறு எங்காவது பிரதிஷ்டையும் செய்யப் பட்டிருப்பார். இவ்வகைப் போதகர்கள் தாங்களாகவே தங்களது உதவிப் போதகர்களை, அல்லது சபையை விட்டுச் செல்லும் நிலைமை ஏற்பட்டால் தங்களுக்கு அடுத்துத் தலைவர்களாக வரவிருப்போரைத் தேர்ந்தெடுக்கின்றனர், ஆனால் பொதுவாக இவ்விஷயங்களில் சபையின் ஆலோசனையும் ஏற்கப் படுகிறது.

முழு சபை மக்களும் ஆட்சி புரியும் சபைகளில் பிரசங்கிப்பதற்கும், போதிப்பதற்கும் என்று ஒரு தனிப் போதகர் இருப்பார், இவரை சபைப் பொதுக் கூட்டமானது வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கும்; அவர் சரிவர ஊழியம் செய்யவில்லை என்றால் அதேவிதமான வாக்கெடுப்பின் மூலமாக அவர் அகற்றவும் படலாம். இவ்வகை சபைகளில் தலைவர்கள் என யாருமே இல்லாமலும் போகலாம், சபை மக்களால் தெரிந்தெடுக்கப் படும் சாதாரண சபை மக்களே சபையின் காரியங்களை விசாரித்து நடத்துவர்.

சுருக்கம்

**தாமஸ் ஹேல்**

எந்த வகையான சபை ஆட்சிமுறை மிகச் சிறந்தது என்பது பற்றி வேதம் திட்டவட்டமாக எதுவும் கூறுவதில்லை. அப்படி திட்டவட்டமாகக் கூறியிருந்தால் ஒரு வேளை இந்த நான்கு வகையான ஆட்சி முறைகள் தோன்றவே வாய்ப்பு இருந்திருக்காது. ஒருவேளை மேற்கூறப்பட்ட நான்கு முறைகளுமே ஏற்புடையவை எனலாம், கிறிஸ்தவர்கள் தத்தம் சூழ்நிலைகளுக்கு எது மிகச் சிறந்ததாகப் படுகின்றதோ அவ்வகை ஆட்சிமுறையைப் பின்பற்றலாம். சபை ஆட்சிமுறை பற்றி நாம் என்ன நினைத்தாலும் சரி, வேறு விதமாக நினைக்கும் நமது சகோதர, சகோதரிகளை நியாயம் தீர்க்கவோ குறை சொல்லவோ கூடாது. சபைகள் தத்தமக்கே உரிய முறைகளில் ஆட்சி செய்யட்டும், அது எந்த முறையானாலும் அவற்றுக்கு இடையே ஐக்கியமும் நல்லுறவும் நீடித்து நிற்கட்டும்.

நாம் எந்த வகை தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டாலும் சில விஷயங்களை வேதம் திட்ட வட்டமாய்ப் போதிக்கிறது; சபை உறுப்பினர்கள் சபைத் தலைவர்களை மதிக்க வேண்டும் (1தெசலோனிக்கேயர் 5:12), அவர்களுக்குக் கீழடங்கவும் (1பேதுரு 5:5) அவர்களுக்குக் கீழ்ப்படியவும் (எபிரெயர் 13:17) வேண்டும். தலைவர்களின் உபதேசங்களைப் பரிசோதித்துப் பார்க்கலாம், நிதானித்து அறியலாம் (அப்போஸ்தலர் 17:11; 1 கொரிந்தியர் 14:29; 1 யோவான் 4:1; வெளிப்படுத்தல் 2:2), ஆனால் தலைவர்கள் பேரில் கொண்டு வரப் படும் குற்றச் சாட்டுகளை இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் இல்லாத பட்சத்தில் ஏற்றுக் கொள்ளவே கூடாது (1தீமோத்தேயு 5:19). இறுதியாக, தேவைப் பட்டால் நமது தலைவர்களை நமது பணத்தினால் தாங்க வேண்டும் (மத்தேயு 10:9-13; 1 கொரிந்தியர் 9:3-11; 1 தீமோத்தேயு 5:17-18).

# 11. திருச்சபையில் பெண்கள்

**முக்கிய வசனங்கள்**

*நியாயாதிபதிகள் 4:4 தெபோராள். தீர்க்கதரிசியானவள், இஸ்ரவேலில் தலைமையானவள், நியாயாதிபதி.*

*அப்போஸ்தலர் 1:14; 2:1-4; 16-18; 21:8-9 பரிசுத்த ஆவியானவரும் தீர்க்கதரிசன வரமும் பெண்களுக்கும் உண்டு.*

*ரோமர் 16:1,7 பெபேயாள், உதவிக்காரி? யூனியா, அப்போஸ்தலப் பெண்? 1கொரிந்தியர் 11:3-16 (குறிப்பாக வசனம் 5) பெண்கள் ஜெபிப்பது, தீர்க்கதரிசனம் சொல்வது. 1கொரிந்தியர் 14:26-40 (குறிப்பாக வசனங்கள் 26,34,35)பெண்கள் ஆராதனையில் இடையூறு செய்வது.*

*கலாத்தியர் 3:26-28 ஆண்களும் பெண்களும் தேவனுக்கு முன் சமம். 1தீமோத்தேயு 2:11-15 பெண்கள் போதிக்கவோ, ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தவோ கூடாது. 1 தீமோத்தேயு 3:11-13 பெண்கள் சபையில் ஊழியக்காரிகள்.*

**திருச்சபையில் பெண்களின் பணி என்ன?**

*திருச்சபை வரலாறு நெடுகிலுமே பெரும்பாலும் பெண்கள் சபையை நடத்திச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. பிரசங்கிமார்கள், போதகர்கள், மேய்ப்பர்கள் எல்லாருமே பொதுவாக ஆண்கள் தாம். இருந்தபோதிலும் உலகின் சில பகுதிகளில் சில சந்தர்ப்பங்களில் பெண்கள் சபையை நடத்தவும், போதிக்கவும் செய்ததுண்டு. கடந்த சில நூறு ஆண்டுகளாக பிரசங்கிப்பதிலும், போதிப்பதிலும், சபைகளை*

*நடத்துவதிலும் பெண்களின் பங்கு அதிகரித்து வருகின்றது. இதுவும், உலகின் பல்வேறு சமுதாயங்கள் தங்கள் பெண்களுக்கு அதிக சுதந்தரத்தை அனுமதிப்பதுவும் ஒரே சமயத்தில் நடைபெற்றுள்ளன.*

*பெண்கள் சபையை நடத்திச் செல்வது பற்றி வேதம் கூறுவது என்ன? அது அவ்வளவு தெளிவாக இல்லை. அநேக சபைகள் பெண்களைப் பிரசங்கிக்கவோ அல்லது போதகராக இருக்கவோ அனுமதிப்பதில்லை, ஆனால் இச்சபைகளில் பெரும்பாலானவை பெண்களை மிஷனெரிகளாக அனுப்பி பிரசங்கிக்கவும் போதிக்கவும் விடுகின்றன. இதற்கு மாறாக, வேறு பல சபைகளோ பெண்களைப் போதிக்கவும் பிரசங்கிக்கவும் அனுமதிப்பதோடு, போதகர்களாகவும் பேராயர்களாகவும் கூட இருக்க விடுகின்றன.*

*பெண்கள் சபையில் ஜெபிப்பதும், தீர்க்கதரிசனம் சொல்வதும் கலாத்தியர் 3:28 இல் பவுல் கிறிஸ்து இயேசுவுக்குள் ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை என எழுதுகின்றார். நாம் அனைவருமே தேவ கிருபை அவசியப் படுகின்ற பாவிகள் தாம். உண்மையில் கலாத்தியர் 3:28 தான், மேற்கத்திய நாடுகளில் அடிமைத் தனத்துக்கு எதிரான கிறிஸ்தவர்களின் போராட்டத்துக்கு ஆதாரமாகப் பயன்படுத்தப் பட்ட மிக முக்கியமான வசனமாகும். ஆண்களும் பெண்களும் கிறிஸ்துவில் ஒன்றுதான் என்பது அவர்கள் எல்லா விதங்களிலும் ஒத்தவர்கள் எனப் பொருள் படாது. தேவனுக்கு முன்பாக ஆண்களும் பெண்களும் சரிசமமானவர்கள், ஆனால் சபையில் அவர்களுக்கென தனித்தனிப் அதேபோல கணவனும் மனைவியும் பங்குகள் உண்டு. ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்றாலும், இல்லற வாழ்வில் அவர்களது பங்குகள் வெவ்வேறானவை (எபேசியர் 5:21-23; பொதுவான தலைப்பு: கிறிஸ்தவத் திருமணம் - பார்க்க).*

இயேசுவின் சீஷர்களை வல்லமையால் தரிப்பிக்கும் படி பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மீது இறங்கிய போது அங்கே கூடியிருந்தவர்களில் ஆண்களும் பெண்களும் இருந்தனர் என்பதை அப்போஸ்தலர் 1,2 அதிகாரங்கள் தெளிவாக்குகின்றன. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் ... என்னுடைய ஊழியக்காரரர் மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்ற யோவேலின் தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காட்டி பேதுரு பேசினார் (யோவேல் 2:28-29; அப்போஸ்தலர் 2:16-18). பழைய ஏற்பாட்டில் ஏராளமான பெண் தீர்க்கதரிசிகள் இருந்தனர் (யாத்திராகமம் 15:20; நியாயாதிபதிகள் 4:4; 2 இராஜாக்கள் 22:14; நெகேமியா 6:14; ஏசாயா 8:3). புதிய ஏற்பாட்டில் சுவிசேஷகனாகிய பிலிப்புவுக்கு தீர்க்கதரிசனம் சொல்லக் கூடிய நான்கு குமாரத்திகள் இருந்தனர் (அப்போஸ்தலர் 21:8-9).

1 கொரிந்தியர் 12:11 இல் பவுலும், பரிசுத்த ஆவியானவர் ஆண்களுக்கு மட்டுமல்ல எல்லாருக்கும் தமது வரங்களைத் தந்தருளுவார் என்பதை ஒத்துக் கொள்கிறார். 1 கொரிந்தியர் 11:5 இல் பவுல், கொரிந்து சபையில் ஆராதனை நேரத்தில் ஜெபித்த, தீர்க்கதரிசனம் சொன்ன பெண்கள் பற்றிப் பேசுகின்றார். ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதாவது பெண்கள் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்று அவர் சொல்வதால், பெண்கள் ஆராதனையில் ஜெபிப்பது அல்லது தீர்க்கதரிசனம் சொல்வது தகுதியானதே என்பது தெளிவாகிறது. சபை கூடுகையில் எல்லாரும் பங்கெடுக்கலாம் என்று பவுல் சொல்வது பெண்களும்

எல்லாவற்றிலும் கலந்து கொள்ளலாம் என்பதையே காட்டுகிறது (1 கொரிந்தியர் 14:26).

உதவிக்காரிகளாக, உடன் ஊழியக்காரிகளாக பெண்கள் பெண்கள் சபையில் உதவிக்காரிகளாகப் பணி செய்யலாம் என்று அநேகர் நம்புகின்றனர்.

1 தீமோத்தேயு 3:8-13 இல் பவுல் ஆண்கள் மற்றும் கணவர்களைப் பற்றி எழுதுகின்றார். வசனம் 11 பெண்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. அது இருவிதமான பெண்களைக் குறித்ததாக இருக்கலாம். ஆனால் அங்கே ஸ்திரீகள் என்பது "மனைவிகளைக்'' குறிக்கிறதா அல்லது "உதவிக்காரிகளைக்'' குறிக்கிறதா என்பது திட்டமாய்த் தெரியவில்லை. ஆனால் ரோமர் 16:1இல் பவுல் பெபேயாள் என்ற ஊழியக்காரியைப் பெரிதும் பாராட்டிப் பேசுகிறார் என்பது மட்டும் தெரிகிறது. (இங்கே ‘‘ஊழியக்காரி" என்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கும் கிரேக்கப் பதம்' ‘‘உதவிக்காரி'' என்று பொருள் படுவது.)

ரோமர் 16:3,6,12 மற்றும் பிலிப்பியர் 4:2-3 இல் பவுல் பெண்களான வேறு அநேக ‘‘உடன் ஊழியர்களையும் குறிப்பிடுகிறார். பிரிஸ்கில்லாள் மற்றும் ஆக்கிலா என்ற தம்பதியினர் எப்பொழுதும் ஒன்றாகவே கூறப் படுகின்றனர், இவர்கள் போதனை ஊழியத்தில் இருந்ததாகத் தோன்றுகிறது (அப்போஸ்தலர் 18:18-26). அதோடு, ரோமர் 16:7 இல் பவுல் யூனியா என்று குறிப்பிடுவது ஓர் ஆணல்ல, பெண்ணே என்று பல வேத பண்டிதர்கள் கருதுகின்றனர். (அந்தக் கிரேக்கப் பெயர் ஆண்பாலாகவோ பெண்பாலாகவோ இருக்கக் கூடியது.) அது பெண்ணைக் குறிக்குமென்றால் பவுல் ஒரு பெண்ணை ‘‘அப்போஸ்தலர்'' என்று குறிப்பிடுகிறார்.

**பெண் தலைவர்கள்**

பெண்கள் உதவிக்காரிகளாய் இருக்கலாம், எனினும் அவர்கள் போதகர் பதவியிலிருந்து ஒரு சபையை நடத்திச் செல்லலாமா கூடாதா என்ற கேள்வி எழவே செய்கின்றது. இக்கேள்விக்கு வேதம் திட்டவட்டமான பதில் கொடுப்பதில்லை, விளைவாக இன்று பல்வேறு சபைகளும் பல்வேறு வழக்கங்களைக் கைக்கொள்கின்றன. பெண்கள் சபையில் பேசக் கூடாது என்றும், உபதேசம் பண்ணவும், ஆண்கள் மேல் அதிகாரம் செலுத்தவும் கூடாது என்றும் கூறும் 1 கொரிந்தியர் 14:33-35, தீமோத்தேயு 2:11-15 ஆகிய வேத பகுதிகளைப் பல கிறிஸ்தவர்கள் கட்டிக் காட்டுகின்றனர். இந்த வசனங்கள் தெளிவாய் இருப்பதால் அநேக சபைகள் பெண்கள் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் மட்டும் கற்பிக்க அனுமதிக்கின்றன, ஆண்களுக்குப் போதிக்க அனுமதிப்பதில்லை. ஏறக்குறைய இச்சபைகள் அனைத்துமே சபைக் கூட்டங்களில் ஜெபிக்கவும், சாட்சி சொல்லவும் பெண்களை அனுமதிக்கின்றன. பெரும்பாலான சபைகள் பெண் மிஷனெரிகள் புதிதாக நாட்டப் பட்ட சபைகளில் பிரசங்கிக்கவும், ஆண்களுக்கும் போதிக்கவும் விடுகின்றனர்.

வேறு சில கிறிஸ்தவர்கள் இதே வசனங்களை வேறு விதமாகப் பொருள் கொள்கின்றனர். இவர்கள், பெண்கள் பேசாமலிருக்க வேண்டும் என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதிய அதே வேளையில் பெண்கள் ஜெபிக்கும் போதும் தீர்க்கதரிசனம் சொல்லும் போதும் தங்கள் தலையில் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்றும் எழுதியதைச் சுட்டிக் காட்டுகின்றனர் ( 1 கொரிந்தியர் 11:5). எனவே 1 கொரிந்தியர் 14:34-35 "பேசவே கூடாது'' என்று கூறவில்லை; ''பேசி'' அல்லது ''உரத்துப் பேசி'' பிறருக்கு இடையூறு செய்வதைப் பற்றியே கூறுகிறது என்று இவர்கள்

கூறுகின்றனர். பவுலின் காலத்தில் பெண்கள் ஆராதனை நடக்க நடக்கவே கேள்விகள் கேட்டிருப்பதும், தங்கள் கணவர்மாரைச் சத்தம் போட்டுக் கூப்பிட்டிருப்பதும் சாத்தியமே.

அதேபோல, 1 தீமோத்தேயு 2:11-15இல் பவுல் தீமோத்தேயுவிடம் சரியானபடி போதிக்கப் படாத பெண்கள் ஆண்களிடமிருந்து அதிகாரத்தைப் பறித்துக் கொள்ளாமல், அவர்களுக்குக் கீழடங்கி இருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்றே சொல்லுகிறார் என்பதாக இந்த இரண்டாம் வகை கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். நன்றாகப் போதிக்கப் பட்ட, பிறருக்குப் போதிக்கும் திறன் படைத்த ஒரு பெண்ணுக்கு சபையானது அதிகாரம் கொடுக்கத் தீர்மானிக்கலாம் என்பது இவர்களின் கருத்து. பழைய ஏற்பாட்டின் நியாயாதிபதிகள் நூலில் வரும் தெபோராள், தேவ சித்தத்தின் படி யூதர்களைத் தலைமையேற்று நடத்திச் சென்ற ஒரு தீர்க்கதரிசியானவள், இதற்கு ஒரு நல்ல உதாரணம் ஆவாள் (நியாயாதிபதிகள் 4:4).

மூன்றாவது வகை கிறிஸ்தவர்களோ பவுல் எழுதியதெல்லாம் தீமோத்தேயுவுக்கும், முதலாம் நூற்றாண்டு கொரிந்திய மற்றும் எபேசிய சபைகளுக்கும் மட்டுமே பொருந்தும் என்கின்றனர். பவுலின் விதிகள் வெகுவாய் மாறிப் போன கலாச்சாரம் கொண்ட இக்காலச் சபைகளுக்குப் பொருந்தா, அது அவரது எண்ணமும் அல்ல என்று இக்கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். பவுல் ஓர் அடிமையை அவன் விட்டு ஓடிவந்த எஜமானிடமே திருப்பி அனுப்பிய போதிலும் அடிமைப் பழக்கத்தை ஆதரிக்கவில்லை, ஆகவே பிலேமோன் தனது அடிமையை விடுதலை செய்து அனுப்பும் படி சொன்னார் (பிலேமோன் 17- 21) என்பதை இவர்கள் உதாரணமாகச் சுட்டிக் காட்டுகின்றனர். கிறிஸ்துவின் நிமித்தமாக தெய்வ

பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் என்றே பவுல் கட்டளையிட்டாரே ஒழிய பெண்கள் மட்டுமே கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று கூறவில்லை (எபேசியர் 5:21). இயேசு கலாச்சாரத் தடைச் சுவர்களை எல்லாம் தகர்த்தெறிந்து எல்லாருக்கும் சுயாதீனத்தை அளித்தார் என்பதை இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஒரு சமுதாயம் ஏற்கனவே பெண்களுக்கு விடுதலையையும் முழு உரிமையையும் அளித்திருக்கும் பட்சத்தில், பெண்கள் சபையில் போதிப்பதைக் கண்டு அவிசுவாசிகளான ஆண்கள் இடறலடைய மாட்டார்கள். எனவே, சபையானது பெண்களுக்கும் தலைமைப் பதவிகளைக் கொடுக்க வேண்டும் என்பது இவர்களது கருத்து.

ஓரிரு வசனங்களை மட்டும் படித்தவுடன் ஏதோ ஒன்று திட்டவட்டமாகப் புலப்படுவது போல் தோன்றினாலும், விஷயம் அவ்வளவு சுலபமானது அல்ல. நாம் என்ன தீர்மானித்தாலும் அது வேறொரு வழக்கத்தைப் பின்பற்றும் நமது சகோதர சகோதரிகளை விட்டு நம்மைப் பிரிக்க அனுமதிக்கக் கூடாது. யூதன் என்றும் கிரேக்கன் என்றும் இல்லை, அடிமை என்றும் சுயாதீனன் என்றும் இல்லை, ஆண் என்றும் பெண் என்றும் இல்லை; நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாய் இருக்கிறீர்கள் (கலாத்தியர் 3:28).

# 12. சிறு பிள்ளைகளும் தேவனுடைய இராஜ்யமும்

**முக்கிய வசனங்கள்**

*ஆதியாகமம் **17:10-14** . . . உங்களில் ஆண்பிள்ளைகள் எல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். சங்கீதம் **22:9-10...** என் தாயின் முலைப் பாலை நான் உண்கையில் என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாய் இருக்கப் பண்ணினீர்.*

*சங்கீதம் **51:5** இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள்.*

*மத்தேயு **18:2-6** இப்படிப் பட்ட ஒரு பிள்ளையை என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு மத்தேயு **21:15-16...** குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்...*

*மாற்கு **10:14-16** இயேசு .... சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள் .. தேவனுடைய இராஜ்யம் அப்படிப் பட்டவர்களுடையது . . . என்றார். லூக்கா **1:15** (யோவான்) தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டிருப்பான். அப்போஸ்தலர் **2:38-39** வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள உண்டாயிருக்கிறது.*

**யாவருக்கும் கேள்வி**

*இரட்சிக்கப் படுவதற்கு நாம் விசுவாசம் உள்ளவர்களாகி ஞானஸ்நானம் பெற வேண்டியது அவசியம்*

என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது (மாற்கு 16:16). பாவ மன்னிப்பு உண்டாகும்படி நாம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டுமென கட்டளை பெறுகிறோம் (அப்போஸ்தலர் 2:38). நாம் இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும், வாயினால் அறிக்கை செய்ய வேண்டும் என்றும் வேதம் கூறுகிறது (ரோமர் 10:9-10). இயேசுவை விசுவாசிப்பவன் நித்திய ஜீவனை அடைவான் என்று யோவான் 3:16 கூறுகின்றது.

**கேள்வி இதுதான்:** பேச அறியாத குழந்தைகள் அல்லது சிறுபிள்ளைகள் என்ன ஆவார்கள்? அவர்களால் மனந்திரும்பவோ விசுவாசிக்கவோ, அல்லது வாயினால் அறிக்கையிடவோ முடியுமா? அப்படி முடியாத பட்சத்தில், அவர்கள் எப்படி இரட்சிப்பை பெற முடியும்? இதோடு இணைந்து வரும் அடுத்த கேள்வி : ஒரு சிறு குழந்தை மரணம் அடைந்தால் எங்கே போகும்? மோட்சத்துக்கா, நரகத்துக்கா? இவை கடினமான கேள்விகள், ஏனெனில் வேதம் இவற்றுக்குத் திட்டவட்டமான பதில்களைத் தருவதில்லை. சிறுபிள்ளைகளும் தேவனுடைய இராஜ்யமும் பற்றி வேத வசனங்கள் அதிகமில்லை, அப்படி இருப்பவையும் நேரடியான பதில்கள் கொடுப்பவையாக இல்லை. வேதாகமத்தில் சிறுபிள்ளைகள் எல்லாரும் பாவம் செய்தவர்கள் என்று வேதம் கூறுகிறது (ரோமர் 3:23; 5:12). தான் துர்க்குணத்தில் உருவானதாக மட்டுமல்ல, தனது தாய் தன்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள் என்றும் சங்கீதக்காரன் சொல்கிறான் (சங்கீதம் 51:5). யோபுவும் இதே விதமாகப் பேசுகின்றான் (யோபு 25:4). ஆக, நாம் அனைவருமே, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளும் கூட பாவ சுபாவம் உள்ளவர்கள், தேவனுக்கு எதிரிடையானவர்கள் என்று வேதம் கூறுகிறது. பாவத்திலிருந்து இரட்சிக்கப் படவும் நீதிமானாக்கப் படவும் ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் தேவனுடைய கிருபை அவசியம்.

**தாமஸ் ஹேல்**

தேவ ஒத்தாசையினாலும் கிருபையினாலும், பிறந்த குழந்தைகளும் கூட தேவனில் நம்பிக்கை வைக்க முடியும் என வேதம் கூறுகின்றது (சங்கீதம் 22:9-10). இயேசு ஒரு சிறுபிள்ளையை அழைத்துத் தமக்கு முன்பாக நிறுத்தி "என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிற இந்தச் சிறியரில் ஒருவன் பற்றிப் பேசினார் (மத்தேயு 18:6). இயேசு சங்கீதம் 8:2ஐயும் மேற்கோள் காட்டி;, "குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்றார் (மத்தேயு 21:16). யோவான்ஸ்நானன் தன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப் பட்டிருப்பான் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப் பட்டிருந்தது (லூக்கா 15, 41-44). எனவே, சில குழந்தைகளாவது தேவனில் விசுவாசம் வைக்கக் கூடியவர்களாக இருப்பதாகவே தோன்றுகிறது.

இயேசு சிறுபிள்ளைகள் தம்மிடத்தில் வருவதைத் தடுக்கக் கூடாதென தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டார், அவர் சிறுபிள்ளைகளுக்காக ஜெபித்து அவர்களை ஆசீர்வதித்தார் (மாற்கு 10:13-16). இதில் சிறு குழந்தைகளும் அடங்குவர் (லூக்கா 18:15). தேவனுடைய இராஜ்யம் அப்படிப் பட்டவர்களுடையது என்றும் அவர் சொன்னார் (மாற்கு 10:14). தேவன் சிறுபிள்ளைகளைப் பட்சமாய்க் கண்ணோக்குகிறார். அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரம பிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் (மத்தேயு 18:10). ஆனால் தேவதூதர்கள் எல்லாச் சிறுபிள்ளைகளுக்கும் இருக்கிறார்களா அல்லது இயேசுவில் "விசுவாசமாய்" இருக்கும் குழந்தைகளுக்கு மட்டும் இருக்கிறார்களா என்பது இங்கே திட்டமாக எழுதப்படவில்லை (மத்தேயு 18:2-6; மாற்கு 9:42).

பழைய ஏற்பாட்டிலே, தேவனுடைய குடும்பத்திற்குள் சேர்த்துக் கொள்ளப் படும் படியாக யூத

ஆண்குழந்தைகள் அனைவரும் விருத்தசேதனம் செய்யப் பட வேண்டுமென்று அவர் கட்டளை கொடுத்திருந்தார். இது குழந்தை பிறந்த எட்டாம் நாளிலே செய்யப்பட வேண்டும், இதுவே தேவனுக்கும் 17:10-13). ஓர் ஆண் யூதர்களுக்கும் நடுவேயுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாகும் (ஆதியாகமம் குழந்தை விருத்தசேதனம் செய்யப் படாதிருந்தால் தேவனுடன் உள்ள உடன்படிக்கையை மீறினதால் அவன் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் (ஆதியாகமம் 17:14). இங்கே பெண் குழந்தைகள் பற்றியோ, உடன்படிக்கையைப் பொறுத்த மட்டில் அவர்கள் நிலைமை பற்றியோ எதுவும் குறிப்பிடப் படவில்லை.

நாம் பழைய ஏற்பாட்டின் நியாயப் பிரமாணத்திலிருந்து விடுதலையாகி இருக்கிறோம் எனப் புதிய ஏற்பாடு தெளிவாகக் கூறுகின்றது. தேவனுடைய குடும்பத்தில் அங்கமாவதற்கு சரீரப் பிரகாரமான விருத்தசேதனம் அவசியமில்லை. நாம் யூதர்களின் சட்ட திட்டங்களால் அல்ல, விசுவாசத்தினாலே தேவனுடைய பிள்ளைகளாக்கப் படுகிறோம். நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராய் இருக்கிறீர்களே (கலாத்தியர் 3:26).

**திருச்சபையில் சிறுபிள்ளைகள்**

சிறுபிள்ளைகளும் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளும் கூட தேவ வல்லமையினாலும் கிருபையினாலும் ஏதோ ஒரு விதமான விசுவாசம் கொள்ளக் கூடியவர்களாகவும், தேவனுடைய இராஜ்யத்தில் இருக்கக் கூடியவர்களாகவும் உள்ளனர் (சங்கீதம் 22:9-10; லூக்கா 18:15-16). ஆனால் இது எல்லாக் குழந்தைகளுக்கும் பொருந்துமா அல்லது ஒரு சிலருக்கு மட்டுமா? இது எப்படி உண்மையாக இருக்க

முடியும்? திருச்சபை வரலாறு நெடுகிலும் வேத பண்டிதர்கள் இக்கேள்விகளுக்குப் பலதரப்பட்ட விடைகளை அளித்துள்ளனர்.

அநேகக் கிறிஸ்தவர்கள் பிள்ளைகளை தேவனுடைய குடும்பத்திற்குள் கொண்டு வருவதற்கு விருத்தசேதனத்திற்குப் பதிலாக தண்ணீர் ஞானஸ்நானம் ஏற்படுத்தப் பட்டுள்ளதாக நம்புகின்றனர். தண்ணீர் ஞானஸ்நானமே "கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனம்' (கொலோசெயர் 2:11-13) என்றும், அதன் மூலமாகவே, விசுவாசத்தினாலே நமது மாம்சத்துக்குரிய பாவ சரீரம் களையப் பட்டு, நாம் தேவனுடைய குடும்பத்தின் அங்கங்களாகிறோம் என்றும் இவர்கள் நம்புகின்றனர். இயேசு சிறு பிள்ளைகள் தம்மிடத்தில் வருகிறதற்குத் தடை பண்ணக் கூடாது என்று கட்டளையிட்டார் (மாற்கு 10:14), விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான் என்று வாக்கும் அருளினார் (மாற்கு 16:16; பொதுவான தலைப்பு: தண்ணீர் ஞானஸ்நானம் - பார்க்க). இந்தக் கிறிஸ்தவர்களில் சிலர் குழந்தைகள் இயேசுவில் விசுவாசம் வைக்க முடியும் என நம்புகின்றனர். மற்றவர்களோ, குழந்தைக்காக அதன் பெற்றோர் விசுவாசிக்க முடியும், அப்படிப் பட்ட பெற்றோரின் விசுவாசத்தை தேவன் ஏற்றுக் கொள்கிறார் என்று நம்புகின்றனர் (1கொரிந்தியர் 7:14). பின்னர், குழந்தை தக்க வயதை அடையும் போது இயேசுவை ஏற்றுக் கொள்வதா வேண்டாமா என்பதைத் தானாகத் தீர்மானிப்பான்.

வேறுபல கிறிஸ்தவர்கள் இரண்டாவதான ஒரு கண்ணோட்டம் உடையவர்கள். இக்கருத்தின் படி, தேவன் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக எல்லாரையும் அல்ல, ஒரு சிலரை மாத்திரமே அழைக்கிறார் (யோவான் 15:16,19; ரோமர் 9:18; பொதுவான தலைப்பு: இரட்சிப்பு

- தேவனின் தெரிந்தெடுப்பா, மனிதனின் தெரிந்தெடுப்பா? - பார்க்க). தேவன் சில குழந்தைகளை இரட்சிப்புக்கென்று தெரிந்தெடுக்கிறார், சில குழந்தைகளைத் தெரிந்தெடுப்பதில்லை. அப்படி தேவனால் தெரிந்தெடுக்கப் பட்ட குழந்தைகள் மரணம் அடைந்தால் மோட்சத்திற்குப் போவர்; மற்ற குழந்தைகள் மரித்தால் மோட்சம் போக மாட்டார்கள்.

இன்னும் சில கிறிஸ்தவர்கள் மூன்றாவதான ஒரு கருத்து கொண்டவர்கள். இவர்கள், தேவன் எல்லாருக்கும் சிறியோர், பெரியோர் அனைவருக்கும்) இரட்சிப்பை வழங்க ஆயத்தமாய் இருக்கிறார், ஆனால் எல்லாரும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பலர் தேவனுக்கு எதிர்த்து நிற்பார்கள். இது குழந்தைகளுக்கும் பொருந்தும் என்கின்றனர். இந்தக் கிறிஸ்தவர்கள் குழந்தைகளின் மனங்கள் இன்னும் உருவாகவில்லை என்றாலும் அவர்கள் தங்கள் ஆவியினாலோ, இருதயத்தினாலோ விசுவாசிக்க முடியும் என நம்புகின்றனர் (சங்கீதம் 22:9-10; மத்தேயு 18:5-6; லூக்கா 1:15). ஆனாலும் எல்லாக் குழந்தைகளும் விசுவாசிக்க மாட்டார்கள் என்றும் இவர்கள் கருதுகின்றனர். பெரியவர்களைப் போலவே, சில குழந்தைகளும் தேவனை எதிர்த்து நிற்கின்றனர். விசுவாசம் உள்ள குழந்தைகள் மட்டுமே, மரணம் அடைந்தால் மோட்சம் செல்வார்கள்.

இறுதியாக குழந்தைகளுக்குப் பாவசுபாவம் இருந்த போதிலும் அவர்கள் பாவம் செய்வதில்லை எனச் சில கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். குழந்தைகள் "அறியாப் பருவத்தினர்" ஆகவே எந்தக் குழந்தையும் மரித்தால் மோட்சம் போகும் என இக் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.

**சுருக்கம்**

இந்த விஷயத்தைக் குறித்து நமது கருத்து எதுவாக இருப்பினும், பெற்றோர்களாகிய நமது கடமை மிகத் தெளிவானது. ஞானஸ்நானம் என்பது ஒவ்வொருவருக்கும் மிக முக்கியமான காரியம். நமது குழந்தைகளை நாம் ஞானஸ்நானம் கொடுத்தாலும் பிரதிஷ்டை செய்தாலும் அவர்களை தேவனுடைய கரங்களுக்குள் ஒப்புவித்து அவர்களின் இரட்சிப்புக்காக அவரையே நம்ப வேண்டியது அவசியம். நாம் அவர்களுக்கு தேவனைப் பற்றியும் அவருடைய வசனத்தைப் பற்றியும் போதிக்கவும் (உபாகமம் 4:9-10;6:6-7; சங்கீதம் 78:5-6) அன்புடன் கண்டித்து வழிநடத்தவும் வேண்டும் (எபேசியர் 6:4; கொலோசெயர் 3:21). வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைக ளகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது (அப்போஸ்தலர் 2:39).

# 13. கிறிஸ்தவத் திருமணம்

**முக்கிய வசனங்கள்**

*ஆதியாகமம் 1:26-28; 2:23-24 வீழ்ச்சிக்கு முன் ஆணும் பெண்ணும்.*

*உன்னதப் பாட்டு அதிகாரங்கள் 1-8 இலட்சிய மண வாழ்வில் காதல். மத்தேயு 5:31-32; 19:3-9 திருமணம், மணமுறிவு பற்றி இயேசுவின் போதனை. 1 கொரிந்தியர் 7:1-17 திருமணம், மணமுறிவு பற்றி பவுலின் போதனை. எபேசியர் 5:21-33 திருமண வாழ்வில் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருத்தல்.*

*1 பேதுரு 3:1-7 திருமண வாழ்வில் ஒருவரையொருவர் கனம் பண்ணுதலும் மதித்தலும். திருமணத்திற்கான தேவதிட்டம்*

*தேவன் நம்மை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்; ஆண், பெண் இருவருமே தேவ சாயலில் உருவாக்கப் பட்டனர் (ஆதியாகமம் 1:26). தேவன் தாமே மூன்று காரணங்களுக்காகத் திருமணத்தை ஏற்படுத்தினார். முதலாவது காரணம், துணையாயிருக்க. மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கண்ட தேவன் அவனுக்கு ஏற்ற துணை ஒன்றை உருவாக்கினார் (ஆதியாகமம் 2:18). தேவன் திருமணத்தை ஏற்படுத்த இரண்டாவது காரணம், பிள்ளைகள் பெறுவதன் மூலம் குடும்பங்கள் தழைத்தோங்க. தேவன் ஆணையும் பெண்ணையும் பார்த்து நீங்கள் பலுகிப் பெருகுங்கள் என்றார் (ஆதியாகமம் 1:28). திருமணத்திற்கான மூன்றாவது காரணம் பாலுறவு இன்பம். இதின் நிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான், அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்.*

ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாய் இருந்தும் வெட்கப் படாதிருந்தார்கள் (ஆதியாகமம் 2:24-25; நீதிமொழிகள் 5:5-21; உன்னதப் பாட்டு அதிகாரங்கள் 1-8). ஆதாமும் (முதல் மனிதன்) ஏவாளும் (முதல் மனுஷி) இணையாக முழு உலகையும் ஆண்டனர்.

ஆனால் பாவத்தின் காரணமாக ஆதாமும் ஏவாளும் தேவனுடைய அனாதி திட்டத்திலிருந்து விழுந்து போயினர். அவர்களது பாவத்தின் விளைவாக அவர்களுக்கிடையே வெட்கமும் பேதங்களும் (ஆதியாகமம் 3:7), குற்றச் சாட்டும் (ஆதியாகமம் 3:12), மனைவி மீது கணவனுக்கு ஆளுகையும் (ஆதியாகமம் 3:16) ஏற்பட்டன. அதோடு கூட, அவர்களது ஆளுகைக்குக் கீழ்ப்பட்டிருந்த இயற்கையானது இப்பொழுது அவர்களுக்குச் சத்துருவாக மாறிப் போனது (ஆதியாகமம் 3:17-19). மற்ற தீமைகள் தோன்ற வெகு நாட்களாகவில்லை, அவற்றுள் சில: கொலை (ஆதியாகமம் 4:8), பலதார மணம் (ஆதியாகமம் 4:19) மற்றும் பழிக்குப் பழி (ஆதியாகமம் 4:23). மணமுறிவினால் விளையும் தீமைகளைக் கட்டுப் படுத்தும் நோக்குடனே மோசேயின் நியாயப் பிரமாணத்தில் கட்டளைகள் கொடுக்கப் பட்டன (யாத்திராகமம் 21:10; உபாகமம் 21:15-17; 24:1-4), எனினும் பலதார மணமோ மணமுறிவோ தேவனுக்குப் பிரியமில்லை. ஆதிமுதல் மனுக்குலத்துக்கான அவரது இலட்சியத் திட்டம் ஓர் ஆண் ஒரு பெண்ணை மணந்து, தன் ஆயுள் பரியந்தம் அவளோடு மட்டுமே வாழ்வது தான் (மத்தேயு 19:4-9).

கிறிஸ்தவத் திருமணம் கிறிஸ்தவர்களுக்கு, திருமணம் என்பது சிறப்பான முக்கியத்துவம் கொண்டது, காரணம் அது கிறிஸ்துவுக்கும் அவரது திருச்சபைக்கும் இடையிலுள்ள ஆவிக்குரிய உறவோடு சம்பந்தப் பட்டது (எபேசியர் 5:32).

இயேசு இப்பூவுலகில் சுற்றித் திரிந்த நாட்களில் தமது முதலாவது அற்புதத்தை ஒரு திருமண வீட்டிலே செய்து, அத்திருமணத்தை ஆசீர்வதித்தார் (யோவான் 2:1-11). தேவனுடைய இராஜ்யத்தின் வருகையையும் அறிவித்தார். ஆகவே கணவன் மனைவி இடையே நாம் ஒரு புதிய உறவை எதிர்பார்க்க வேண்டும். யூதன் என்றும் கிரேக்கன் என்றும் இல்லை, அடிமை என்றும் சுயாதீனன் என்றும் இல்லை, ஆண் என்றும் பெண் என்றும் இல்லை; நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாய் இருக்கிறீர்கள் (கலாத்தியர் 3:28) என்கிறார் பவுல். கணவனும் மனைவியும் தங்கள் திருமண உறவில் சமமானவர்கள் என்பது இதன் பொருளா?

பாலுறவு என்று வரும் போது கணவர்களும் மனைவிகளும் சரிசமமே என்பதை எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒத்துக் கொள்கின்றனர். இருவருமே ஒருவருக்கொருவர் பாலுறவுக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று பவுல் திட்ட வட்டமாகச் சொல்லி விட்டார் (1கொரிந்தியர் 7:3). மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி என்று எழுதுகிறார் (1கொரிந்தியர் 7:4). பவுலின் காலத்திய மக்களுக்கு இது ஒன்றும் புதிதல்ல; ஆதாம் ஏவாள் காலத்திலிருந்து பவுலின் காலம் வரை, மனைவியானவள் தனது புருஷனின் உடைமை அல்லது சொத்து என்றே உலகம் கருதி வந்தது. ஆனால் பவுல் அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அதே வசனத்தில் தொடர்ந்து வேறொன்றையும் சொல்கிறார்: அப்படியே, புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதன் அதிகாரி. பவுலின் முதல்-நூற்றாண்டு வாசகர்களுக்கு இப்போதனை முற்றிலும் புதியது. மேலும், உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் நேரம் ஒதுக்கும் படியாக இருவரும் சில காலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் பாலுறவில்

திருப்திப் படுத்த மறுக்கக் கூடாது என்றும் பவுல் கற்பித்தார் (1கொரிந்தியர் 7:5). மனைவி ஒரு "தோட்டம்'', கணவன் அந்தத் தோட்டத்தில் தனது வித்தை விதைப்பவன் என்பதாகச் சில மதங்கள் போதிக்கின்றன. ஆனால் கிறிஸ்தவத் திருமணத்திலோ மனைவி ஏதோ ஒரு சொத்தோ, உடைமையோ அல்ல, அந்த உறவில் சமமாகப் பங்குபெறும் ஒரு பங்காளி. கிறிஸ்தவத் திருமணம் ஒரு பங்காளித்துவம் ஆகும்.

கணவனும் மனைவியும் தங்கள் உறவின் பிற அம்சங்களிலும் இணையானவர்களா? இந்தக் கேள்விகளுக்குக் கிறிஸ்தவர்கள் வேறுபட்ட பதில்களைத் தருகின்றனர். ஒரு கிறிஸ்தவத் திருமணத்தில் கணவன் மற்றும் மனைவியின் பங்குகள் பற்றி இரண்டு முக்கியக் கருத்துக்கள் நிலவுகின்றன. முதலாவது கருத்து, பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கொண்டிருப்பது, மனைவியானவள் கணவனின் தலைமைக்குக் கீழ்ப்பட்டவள், அவனுக்குக் கீழ்ப்படிய வேண்டியவள் என்பதாகும். இவர்கள் ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாய் இருக்கிறார் என்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாய் இருக்கிறான் என்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாய் இருக்கிறார் என்றும் பவுல் எழுதுவதைச் சுட்டிக் காட்டுகின்றனர் (1 கொரிந்தியர் 11:3). தொடர்ந்து, ஸ்திரீ புருஷனிலிருந்து தோன்றியவள், புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப் பட்டவள் என்றும் கூறிவிட்டு (1 கொரிந்தியர் 11:8- 9), ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீ இல்லாமல் புருஷனும் இல்லை, புருஷன் இல்லாமல் ஸ்திரீயும் இல்லை என்று சொல்லி முடிக்கிறார் (1 கொரிந்தியர் 1:11-12). இந்தக் கிறிஸ்தவர்கள் ''தலை'' என்ற சொல் கணவன் மனைவியை ''ஆள்'' அல்லது "வழி நடத்த வேண்டும், பாதுகாக்கவும் பராமரிக்கவும் வேண்டும் எனவும் (எபேசியர்

*5:25), போஷிக்கவும் காப்பாற்றவும் வேண்டும் எனவும் (எபேசியர் 5:29) மொத்தத்தில் மனைவிக்கு அவன் பொறுப்பாளி எனவும் பொருள்படுவதாக நம்புகின்றனர். பிள்ளைகளைக் குறித்த பொறுப்பு தகப்பன்மாருக்கே கொடுக்கப் பட்டிருப்பதை இவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர் (எபேசியர் 6:4; 1 தீமோத்தேயு 3:4-5). மனைவிகள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல தங்கள் சொந்தப் புருஷருக்கும் எந்தக் காரியத்திலும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும், ஏனெனில் கிறிஸ்து சபைக்குத் தலையாய் இருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாய் இருக்கிறான் (எபேசியர் 5:22-24) என்ற பவுலின் கட்டளைகளையும் இக்கிறிஸ்தவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.*

*அதே நேரத்தில், கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்து தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தது போல கணவர்களும் மனைவிகளில் அன்பு கூர வேண்டும் என்று கட்டளையிடப் படுகிறது (எபேசியர் 5:25); அவர்கள் தங்கள் சொந்த சரீரங்களைப் போல தங்கள் மனைவிகளை நேசிக்க வேண்டும் (எபேசியர் 5:28). அப்போஸ்தலனாகிய பேதுருவும் மனைவிகள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று கட்டளை இட்டதுடன், அதற்கு உதாரணமாக சாராள் ஆபிராமுக்குக் கீழ்ப்படிந்திருந்ததைச் சுட்டிக் காட்டுகிறார் (1 பேதுரு 3:1-6).*

*ஆனால் திருமணத்தைப் பொறுத்தவரை கீழ்ப்படிதல் என்பது ஒருவழிப் பாதையல்ல. எபேசியர் வேதபகுதி எல்லா விசுவாசிகளுக்கும் உரிய கட்டளையுடன் ஆரம்பிக்கிறது : தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் (எபேசியர் 5:21). கிறிஸ்து தேவனுக்குச் சமமாய் இருந்த போதிலும், பிதாவுக்குக் கீழ்ப்படிந்தவரானார் (பிலிப்பியர் 2:6-8). அதேபோல, கணவனுடைய "தலைமை" என்பது*

சமமானவர்களுக்குள் தலைமை என இக்கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். மனிதர்கள் என்ற முறையில் கணவர்களும் மனைவிகளும் சமமானவர்களே எனினும் இருவரும் ஆற்ற வேண்டிய பங்குகள் வெவ்வேறானவை, எனவே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிவதும் வேறுபடுகின்றது.

நாம் அனைவரும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவது போலவே, மனைவியும் கணவனை இல்லத் தலைவனாக, இல்லத்தரசனாக ஏற்று அவனுக்குக் கீழ்ப்படிகிறாள்; கிறிஸ்து சபைக்காகச் செய்தது போலவே கணவனும் தன்னை வெறுத்து, தன் மனைவிக்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுப்பதன் மூலம் அவளுக்குக் கீழ்ப்படிகிறான்.'

கிறிஸ்தவத் திருமணத்தில் கணவன் மனைவியின் பங்குகள் குறித்த இரண்டாவது கருத்து, கணவன் மனைவியின் பங்குகளில் உண்மையில் எந்த வேறுபாடும் கிடையாது என்பதாகும். இந்தக் கிறிஸ்தவர்கள், பிள்ளைகளும் வேலைக்காரர்களும் "கீழ்ப்படிய" (obey) வேண்டுமென்று கட்டளை பெற்றாலும் (எபேசியர் 6:1,5) மனைவிகள் புருஷர்களுக்கு "அடங்கியிருக்க" (submit) வேண்டும் என்றே கட்டளையிடப் பட்டிருப்பதாகக் (எபேசியர் 5:21) கூறுகின்றனர். [தமிழ் வேதாகமம் இரண்டு பதங்களையும் ஒன்றுபோல் "கீழ்ப்படிந்திருங்கள்" என்றே மொழி பெயர்த்துள்ளது.] எனவே கணவர்களும் மனைவிகளுக்கு அடங்கியிருக்க வேண்டும் என்பது இவர்கள் கருத்து. பேதுரு, தனது காலத்திய முறையையே மாற்றி மனைவிகள் கணவர்களைக் கனம் பண்ண வேண்டியதற்குப் பதிலாகக் கணவர்கள் மனைவிகளைக் கனம் பண்ண வேண்டுமெனக் கட்டளையிடுகிறார் (1 பேதுரு 3:7). "தலை" என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ள கிரேக்கப் பதம் "ஆளுகிறவன்" அல்லது "தலைமை" என்பதைக்

குறிக்கவில்லை, புதிய ஏற்பாட்டில் அச்சொல் தலைமை என்ற பொருளில் வருவதேயில்லை, அது "ஜீவனின் ஆதாரம்" அல்லது “ஆதிமூலம்" என்பதையே குறிக்கும் என்பதாகக் கிறிஸ்தவப் பண்டிதர்கள் பலர் கூறுகின்றனர் (எபேசியர் 1:22; 4:15; கொலோசெயர் 1:18; 2:10,19). எனவே, இக்கிறிஸ்தவர்களின் கருத்துப் படி, 1 கொரிந்தியர் 11:3 இல் பவுல் கூறுவதன் பொருள், ஒவ்வொரு மனிதனின் “ஜீவாதாரமும்” கிறிஸ்துவே, மனிதனிலிருந்து மனுஷி வந்தாள், தேவனிலிருந்து கிறிஸ்து வந்தார் என்பதாகும். இந்தக் கருத்து 1 கொரிந்தியர் 11:8 11:12 உடன் மிக நன்றாகப் பொருந்திப் போகிறது.

இந்தக் கிறிஸ்தவர்கள், ஆதியிலே தேவன் கணவனையும் மனைவியையும் சரிசமமாக இருக்க வேண்டுமென்றே படைத்தார் என நம்புகின்றனர். ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாள் செய்த பாவம், பெண்ணின் மேல் சாபத்தை வருவித்த போதிலும் (ஆதியாகமம் 3:1-6, 16), கிறிஸ்து அந்தச் சாபத்தை முறித்துப் போட்டார், எனவே கிறிஸ்தவத் திருமணம் அந்த உண்மையைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். திருமணத்தில் ஆணும் பெண்ணும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள் என்றால் (ஆதியாகமம் 2:24), அவர்கள் "ஆளுபவன், "கீழ்ப்படிபவள்” என்று இருவராகப் பிரிக்கப்படக் கூடாது.

இந்த இரண்டில் எந்தக் கருத்தை நம்புபவர்களாக இருந்தாலும் சரி, கணவன் மனைவி இருவருமே ஒருவர் மற்றவருக்குத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்று வேதம் திட்டவட்டமாகக் கூறுகின்றது. உண்மையில், இயேசுவும் "புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்” (மாற்கு 10:7) என்ற பழைய ஏற்பாட்டுக் கூற்றை மேற்கோள்

*காட்டி, அதை ஆதரித்துப் பேசினார். "விட்டு'' என்றால் வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று பொருளல்ல, ஆனால் கணவன் மனோரீதியில் தன் பெற்றோரை ''விட்டு விட'' வேண்டும். ஒரு மனிதன் தன் பெற்றோரை விட, தனது பிள்ளைகளை விட அதிகமாக தன் மனைவிக்கே தன்னை அர்ப்பணிக்க வேண்டும்! திருமணத்தில் கணவனும் மனைவியும் இருவராயிராமல் ஒரே மாம்சமாகி விடுகிறார்கள் (மாற்கு 10:8). சில கலாச்சாரங்களில், வாழ்க்கைத் துணை என்பவர் ''மறுபாதி'' எனவும் அழைக்கப் படுவதுண்டு.*

*ஆனால் வேறெந்த மனுஷனையும், மனுஷியையும் விட தேவனே முதன்மையாக வைக்கப் பட வேண்டும். கணவனும் மனைவியும் எந்த அளவிற்கு தேவனண்டை நெருங்கிச் சேர்கிறார்களோ அந்த அளவிற்கு ஒருவருக்கொருவர் அதிக நெருக்கமாவார்கள். பிரசங்கி 4:9-12, ஒருவராய் இருப்பதை விட இருவராய் இருப்பது நலம், அதிலும் முப்புரி நூல் சீக்கிரமாய் அறாது என்று கூறுகிறது. ஒரு கிறிஸ்தவக் சேர்க்கை வலிமை மிக்கது. கணவனும், மனைவியும், மூன்றாவது இழையாக தேவனும் சேர்ந்த*

**மணமுறிவும் மறுமணமும்**

*திருமண வைபவத்தின் போது கிறிஸ்தவர்கள் கொடுக்கும் வாக்குறுதிகள் தேவனுக்கு முன்பாகவும், சபைக்கு முன்பாகவும் கொடுக்கப் படுகின்றன. திருமணம் என்பது ஆயுள் பரியந்த அர்ப்பணம். தேவன் விவாகரத்தை வெறுக்கிறார் என வேதம் கூறுகின்றது (மல்கியா 2:14-16). பழைய ஏற்பாட்டுக் காலங்களில் விவாகரத்து மலிந்திருந்தது. தகுந்த காரணமின்றி ''சுலபமாக'' விவாகரத்து செய்வதற்கு ஒரு தடை கொண்டுவர தேவன் விரும்பினார். கணவனால்*

*தள்ளி விடப் பட்ட மனைவிக்குச் சட்டப் பூர்வமான பாதுகாப்பு ஏற்படுத்தவும் எண்ணினார். மோசேயின் நியாயப் பிரமாணமானது ஒரு கணவன் தன் மனைவியை விவகாரத்து செய்யத் தகுந்த காரணம், அதாவது விபசாரம் என்ற காரணம் இருக்க வேண்டும், அப்படித் தள்ளி விடுகையில் அவன் தள்ளுதலின் சீட்டு என்ற ஒன்றை எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கோரியது (உபாகமம் 24:1-4), இயேசுவின் காலம் வருவதற்குள், ஒருவன் தன் மனைவியை எந்தக் காரணத்திற்காக வேண்டுமானாலும் தள்ளி விடலாம் என்று சில பரிசேயர்கள் போதித்து வந்தனர் (மத்தேயு 19:3). தேவன் எற்படுத்தி வைத்த திருமண உறவை யார் முறித்தாலும் அது பாவமாகும் என்றார் இயேசு. 'ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்'' (மத்தேயு 19:6). தேவன் ஒருபோதுமே விவாகரத்தை விரும்பவில்லை, ஆனால் யூதர்களின் இருதய கடினத்தின் நிமித்தம் மோசே அதை அனுமதித்தார் என்று இயேசு சொன்னார் (மத்தேயு 19:8). திருமணத்தை முறிப்பது தவறு என்பதை அனைத்துக் கிறிஸ்தவர்களும் நம்புகின்றனர்.*

*ஆனால் இயேசு வேறொன்றும் சொன்னார்: ''எவனாகிலும் தன் மனைவி வேசித்தனம் செய்ததின் நிமித்தமே அன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரம் செய்கிறவனாய் இருப்பான் '' (மத்தேயு 19:9).வேறொரு இடத்தில், ''வேசித்தன முகாந்தரத்தினால் ஒழிய தன் மனைவியைத் தள்ளி விடுகிறவன், அவளை விபசாரம் செய்யப் பண்ணுகிறவனாய் இருப்பான்; அப்படித் தள்ளி விடப் பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரம் செய்கிறவனாய் இருப்பான்" (மத்தேயு 5:32) என்றும் சொன்னார். இவற்றில் இயேசு கூறுவதன் பொருள் என்ன?*

*இதைப் பற்றிக் கிறிஸ்தவர்களிடையே மூன்று விதமான கருத்துக்கள் நிலவுகின்றன.*

*முதலாவது, விவாகரத்து ஒருபோதும் அனுமதிக்கப் பட முடியாது, ஆகையால் முதல் கணவன் அல்லது மனைவி உயிரோடிருக்கும் போது மறுமணம் செய்வது தவறு என்று பல கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர் (ரோமர் 7:2-3). மாற்கு 10:11-12 இல் இயேசுவின் வார்த்தைகளில் வேசித்தனம் செய்ததின் நிமித்தமே அன்றி என்ற சொற்றொடர் இடம் பெறவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். இக்கிறிஸ்தவர்கள், அப்படி முதல் மனைவி அல்லது கணவன் இருக்கும் போதே மறுமணம் செய்பவர்கள் விபசாரம் செய்கிறார்கள். காரணம் தேவனுடைய பார்வையில் அவர்களது முதல் மனைவி / கணவனுடனேயே மணவாழ்வு நடத்துகிறார்கள் என்கின்றனர்.*

*ஒருவன் தனது மனைவியை விவாகரத்து செய்வதன் மூலம் அவளை விபசாரம் செய்யப் பண்ணுகிறான் அல்லது மறுமணம் செய்யத் தூண்டுகிறான், அதுவும் விபசாரத்துக்குச் சமமே என்று நம்புகின்றனர் (மத்தேயு 5:32). இக்கிறிஸ்தவர்கள், புருஷன் உயிரோடிருக்கையில் வேறொரு புருஷனை விவாகம் பண்ணுகிற ஸ்திரீ விபசாரி என்னப் படுவாள் என்று ரோமர் 7:3 இல் பவுல் எழுதுவதையும் சுட்டிக் காட்டுகின்றனர். தங்கள் கணவன் அல்லது மனைவியை விவாகரத்து செய்பவர்கள் ஒன்று மறுமணம் செய்யாமல் இருக்க வேண்டும், அல்லது தங்கள் கணவன் / மனைவியுடன் ஒப்புரவாக வேண்டும் என்றும் பவுல் கூறுகின்றார் (1கொரிந்தியர் 7:1). எனவே இந்த வியாக்கியானத்தின் படி, விவாகரத்தான ஒரு நபர், தனது முதல் துணை உயிரோடிருக்கும் பரியந்தம் மறுமணம் செய்ய அனுமதிக்கப் படுவதில்லை.*

*வேறு பல கிறிஸ்தவர்கள் இரண்டாவதான ஒரு கண்ணோட்டம் உடையவர்கள் : அதாவது, திருமண உறவு ஏற்கனவே முறிந்து விட்ட பட்சத்தில் சில சூழ்நிலைகளில் மணமுறிவை அனுமதிக்கலாம். உதாரணமாக, ஒருவரின் வாழ்க்கைத் துணை ஏற்கனவே விபசாரம் செய்து விட்ட பிறகு, விவாகரத்து அவரை விபசாரம் செய்யப் பண்ணுவதில்லை. சில கிறிஸ்தவர்கள் கணவனால் கைவிடப் படுதல் (முறையான விவாகரத்து இன்றி மனைவியைக் கைவிட்டு ஓடிப் போகும் கணவன்), அல்லது வழக்கத்திற்கு மாறான சந்தர்ப்பச் சூழ்நிலைகள் (மனைவியை அடித்துக் கொடுமைப் படுத்துதல்) இவையும் விபசாரத்திற்குச் சமமே என்று கருதுகின்றனர். இவர்களில் சிலர், அவிசுவாசியான வாழ்க்கைத் துணை விசுவாசியான துணையை விட்டு பிரிந்து போக விரும்பினால், பவுலின் ஆலோசனையைப் பின்பற்றி அவரைப் பிரிந்து செல்ல அனுமதிப்பது சரியே என்று நம்புகின்றனர் (1 கொரிந்தியர் 7:15). மறுமணம் என்று வரும்போது, இக்கிறிஸ்தவர்களில் சிலர் தனது வாழ்க்கைத் துணையை விவாகரத்து செய்யும் ஒருவர், அதற்குக் காரணம் எதுவாயிருந்தாலும் சரியே, முதல் துணை உயிரோடு இருக்கும் வரை மறுமணம் செய்யவே கூடாது என்று எண்ணுகின்றனர் (1 கொரிந்தியர் 7:11). வேறு சிலரோ விவாகரத்து செய்யப் பட்டவர் (அதாவது, பாதிக்கப் பட்ட அப்பாவியான துணை) உடனடியாக மறுமணம் செய்து கொள்ளலாம் என்று கருதுகின்றனர். இவர்கள், இப்படிப் பட்ட விஷயத்தில் சகோதரனாவது சகோதரியாவது அடிமைப் பட்டவர்களல்ல என்ற பவுலின் வார்த்தைகளைச் சுட்டிக் காட்டுகின்றனர் (1 கொரிந்தியர் 7:15).*

*இன்னும் சில கிறிஸ்தவர்கள் மூன்றாவதாக ஒரு கருத்தைக் கொண்டுள்ளனர்: அதாவது, எந்தக் காரணம் கொண்டும் திருமண உறவு முறிக்கப் படுவது தவறு, ஆனால்*

முதல் மணமுறிவுக்குக் காரணம் எதுவாக இருப்பினும் மறுமணம் அனுமதிக்கப் படலாம். மோசேயின் நியாயப் பிரமாணத்தின் படி சரியோ, தவறோ ஒருவன் வேறொருத்தியைத் திருமணம் செய்ய வேண்டும் என்பதற்காகவே, நியாயமான காரணமின்றி முதல் மனைவியை விவாகரத்து செய்தால் அவன் விபசாரம் செய்கிறவனாய் இருப்பான் என்றே இயேசு சொன்னதாக இவர்கள் நம்புகின்றனர் (மத்தேயு 19:9) ஆனால் மத்தேயு 5:32 இல் இயேசு, "தன் மனைவியைத் தள்ளி விடுகிறவன் அவளை விபசாரம் செய்யப் பண்ணுகிறவனாய் இருப்பான்" என்று சொன்ன போது விவாகரத்து செய்யப் பட்டதாலேயே ஒரு மனைவி விபசாரியாகி விடுகிறாள் என்று சொல்லியிருக்க முடியாது என்று இக்கிறிஸ்தவர்கள் வாதிடுகின்றனர்.

விவாகரத்து செய்யப் படும் ஒவ்வொரு அப்பாவிப் பெண்ணும் (அதாவது, அவள் விபசாரம் செய்யாத போதிலும் தள்ளிவிடப் படுபவள்) பின்னர் மறுமணம் செய்து கொள்வாள் என்றோ அல்லது மறுமணம் செய்யாமல் உண்மையாகவே விபசாரி ஆகிவிடுவாள் என்றோ இயேசு சொல்லியிருக்க முடியாது. சில பெண்கள் மீண்டும் மணம் செய்யாமலே போகலாம், விபசாரமும் செய்ய மாட்டார்கள். இயேசு சொன்னது என்னவென்றால், விபசாரம் செய்யாத தன் மனைவியை ஒருவன் விவாகரத்து செய்வானானால் பார்ப்பவர்கள் கண்ணில் அவள் ஒரு விபசாரி போலவே தென்படுவாள்; மற்றவர்கள் அவள் தன் கணவனுக்குத் "துரோகம்" செய்ததாலேயே விவாகரத்து செய்யப் பட்டாள் என்று யோசிப்பார்கள். அவள் மறுமணம் செய்தால் அவளது இரண்டாவது கணவனும் விபசாரக்காரன் "போலவே தென்படுவான்". இந்த வியாக்கியானம் ரோமர் 7:3இல் பவுல் கூறும்

வார்த்தைகளுக்கு மிகப் பொருத்தமானது. அங்கே பவுல், தனது முதல் கணவன் உயிரோடிருக்கையில் இரண்டாம் திருமணம் செய்து கொள்ளும் பெண் விபசாரி என்று சொல்லாமல் விபசாரி என்னப்படுவாள் என்றே சொல்கிறார்.

இந்த மூன்றாம் வகையான கருத்து படைத்த கிறிஸ்தவர்கள், விசுவாசிகள் தங்கள் அவிசுவாசிகளான வாழ்க்கைத் துணைகளை விவாகரத்து செய்யக் கூடாது, அவிசுவாசிகளான துணைகள் பிரிந்து போக விரும்பினால் மட்டுமே அவர்கள் போகும்படி அனுமதிக்கலாம் என்று கருதுகின்றனர் (1 கொரிந்தியர் 7:10-16). 1 கொரிந்தியர் 7:8-9 இல் வரும் விவாகம் இல்லாதவர்கள், கைம்பெண்கள் என்ற பதங்களும் 1 கொரிந்தியர் 7:25 இல் வரும் கன்னிகைகள் என்ற பதமும் வெவ்வேறானவை என்பதால், பவுல் வசனங்கள் 8-9 இல் "ஏற்கனவே மணமாகி ", விவாகரத்து பெற்ற அல்லது துணைகளை இழந்த மக்களைப் பற்றி பேசுகிறார் என்று நம்புகின்றனர். அது உண்மையாய் இருப்பின், தங்கள் பாலுறவு இச்சைகளைக் கட்டுப் படுத்த இயலாதோர் மறுமணம் செய்ய அனுமதி கொடுக்கிறார். ஆகவே, இந்த விளக்கத்தைப் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் முந்திய (தவறான) விவாகரத்துக்கு என்ன காரணம் என்பதையெல்லாம் ஆராய்வதில்லை. முந்திய திருமணத்தின் முறிவுக்குத் தாங்களும் ஒரு காரணம் என்பதற்காக அவர்கள் மனஸ்தாபப் பட்டு, மனந்திரும்பும் பட்சத்தில் அவர்கள் மீண்டும் மணம் செய்து கொள்ளலாம் என்கின்றனர்.

மணமுறிவு மற்றும் மறுமணம் என்ற விஷயம் மிகச் சிக்கலானது. இப்பொருள் பற்றி ஒரு முடிவுக்கு வரும்முன் சம்பந்தப் பட்ட வசனங்களை ஜெபத்துடனும் கருத்துடனும் படித்தறிய வேண்டியது அவசியம். விவாகரத்தோ மறுமணமோ செய்வதற்கு முன் தனது போதகர் அல்லது சபை மூப்பர்களோடு பேசி ஆலோசனை பெற வேண்டியது

அதிக அவசியம். இந்த விஷயத்தில் வெவ்வேறு சபைகள் வெவ்வேறு கொள்கைகளைப் பின்பற்றும்.

**பலதார மணம்**

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்திருந்த போதிலும், இது ஏதேன் தோட்டத்தில் ஏற்பட்ட ஆதாம் ஏவாளின் பாவத்துடைய விளைவாகவே இருந்திருக்க வேண்டும். திருமணத்தில் இருவர் "ஒரே மாம்சமாகின்றனர்". இதில் மூன்றாவது ஒருவருக்கு இடமேதும் கிடையாது, அதுதான் தேவனின் ஆதி ஏற்பாடு. முற்காலத்தில் எது அனுமதிக்கப் பட்டது என்பது நமது கவலை அல்ல, கிறிஸ்தவர்களுக்கு ஒரு சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருக்கக் கூடாது என்பதைப் புதிய ஏற்பாடு தெளிவு படுத்துகின்றது ( 1 கொரிந்தியர் 7:2). எல்லாக் கிறிஸ்தவர்களும் இதை ஒத்துக் கொள்கின்றனர். எனினும் ஒருவன் விசுவாசி ஆவதற்கு முன்பே இரண்டு அல்லது அதற்கும் அதிகமான மனைவிகள் உடையவனாய் இருப்பான் என்றால், அவர்களைக் கைவிடாமல் அவர்கள் அனைவரையும் ஆதரிக்க வேண்டும் (யாத்திராகமம் 21:10). எனினும் இப்படி இரண்டு, மூன்று மனைவிகள் உள்ள ஒருவனை சபையின் தலைமைப் பதவிகளில் இருத்தக் கூடாது' என்று பவுல் கூறினார் (1 தீமோத்தேயு 3:2,12; தீத்து 1:6).

மணமானவரோ, ஆகாதவரோ, வேசியோ யாருடனும் சரி கிறிஸ்தவர்கள் தங்கள் கணவன் அல்லது மனைவி தவிர வேறு யாருடனும் பாலுறவு கொள்ளக் கூடாது என்பது தெளிவு (1 கொரிந்தியர் 6:15). விவாகம் யாவருக்குள்ளும் கனம் உள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப் படாததாயும் இருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக் காரரையும் தேவன் நியாயம் தீர்ப்பார் (எபிரெயர் 13:4).

# 14. சரீர சுகமும் விடுதலையும்

*முக்கிய வசனங்கள்*

*மத்தேயு 8:16-17 இயேசுவின் ஊழியத்தில் சுகமளித்தலும் விடுவித்தலும். மத்தேயு 12:43-45 அசுத்த ஆவிகளைப் பற்றிய போதனை. மாற்கு 5:1-17 இயேசு அசுத்த ஆவி பிடித்த மனிதனை விடுவிக்கிறார். மாற்கு 9:14-29 இயேசு வலிப்பு நோயுள்ள சிறுவனிடமிருந்து அசுத்த ஆவியைத் துரத்துகிறார். மாற்கு 16:16-18 சரீர சுகமளிப்பதும் பிசாசுகளைத் துரத்துவதும் விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்கள்.*

*1 கொரிந்தியர் 12:9-10 குணமாக்கும் வரம், அற்புதங்கள் செய்யும் வரம், ஆவிகளைப் பகுத்தறியும் வரம். யாக்கோபு 5:14-16 மூப்பர்கள் பிணியாளிகளுக்கு எண்ணெய் பூசி ஜெபித்தல்.*

## வியாதிகளில் தெய்வீக சுகம்

*வியாதிகளிலிருந்து சுகமளிப்பது பற்றிய அநேக வாக்குத்தத்தங்கள் வேதத்தில் உண்டு. பழைய ஏற்பாட்டிலே யூதர்களுக்கு வியாதிகளிலிருந்து பாதுகாப்பும் (யாத்திராகமம் 15:26), சரீரசுகமும் (சங்கீதம் 103:1-5) வாக்களிக்கப் பட்டன. வியாதிக்கு மூலகாரணம் சாத்தானே என்கிறது வேதாகமம் (லூக்கா 13:16; அப்போஸ்தலர் 10:38). கர்த்தருடைய ஆவியானவராலும் வல்லமையாலும் தாம் அபிஷேகிக்கப் பட்டதற்கு ஒரு காரணம் குணமாக்குவதே என்றார் இயேசு (லூக்கா 4:17-18; 5:17). இயேசு பிணியாளிகள் எல்லாரையும் சொஸ்தமாக்கினார் என்றும் (மத்தேயு 8:16), அவர் ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச்*

சொஸ்தமாக்கினார் என்றும் (மத்தேயு 4:23) வேதம் கூறுகிறது. இந்தக் குணமாக்கும் வல்லமை இயேசுவின் சீஷர்களுக்கும் அளிக்கப் பட்டது (மத்தேயு 10:1,8; மாற்கு 6:7,13; லூக்கா 10:9). விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களுள் ஒன்றாக இயேசு, சரீர சுகத்தையும் குறிப்பிட்டார் (மாற்கு 16:18), அப்போஸ்தலர் நடபடிகள் முழுவதிலும் சரீர சுகம் அருளப் படுவதைக் காண்கிறோம். சபையானது வியாதிப் பட்டோருக்காக ஜெபிக்கவும், அதன் மூலம் அவர்கள் குணமடைவதைப் பார்க்கவும் யாக்கோபு எதிர்பார்த்தார் (யாக்கோபு 5:14-16). பரிசுத்த ஆவியானவரின் வரங்களில் குணமாக்குதலும், அற்புதங்கள் செய்வதும் அடங்கும் (1 கொரிந்தியர் 12:9-10, 28). ஆதித் திருச்சபையில் அப்போஸ்தலர்கள் காலத்திலும், அதைத் தொடர்ந்து பலப்பல நூற்றாண்டுகளாகவும் அநேக சரீரசுகங்கள் இடம் பெற்றன.

தேவன் கடந்த காலங்களில் செய்தது போலவே இன்றும் சுகமளிக்கிறார் என அநேகக் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். இவர்கள் எபிரெயர் 13:8 ஐச் சுட்டிக் காட்டி இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார் என்கின்றனர். மாற்கு 1:40-41 ஐயும் காட்டி, இயேசு எப்பொழுதுமே குணமாக்கச் சித்தமுள்ளவராய் இருந்தார் என்கின்றனர். இன்று உலகெங்கிலும் உள்ள ஏராளமான கிறிஸ்தவர்கள் தாங்கள் தெய்வீக வல்லமையால் சுகம் பெற்றதாகச் சொல்கின்றனர், வேறு பலர் அப்படிப்பட்ட சரீர சுகங்களைத் தாங்கள் கண்டதாகக் கூறுகின்றனர். இரட்சகர் சிலுவை மீது நமது பாவங்களை மட்டுமல்ல நமது நோய்களையும் சுமந்து தீர்த்தார் எனக் கூறும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை இவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர் (எண்ணாகமம் 21:8-9; ஏசாயா 53:4-5). ஏசாயா 53 வேதபகுதி மூலமொழியான எபிரெய' மொழியில் அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை

ஏற்றுக் கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்றே பொருள்படுமாறு வருகிறது, மத்தேயு 8:17 இல் அவ்வாறே மேற்கோள் காட்டவும் படுகிறது.

இயேசு நமது பாவங்களையும் நமது வியாதிகளையும் சிலுவை மீது சுமந்து தீர்த்தார் என்றால், இன்று தேவன் பாவங்களை மன்னிப்பது போலவே நோய்களையும் குணமாக்குவார் என்று எதிர்பார்க்கவே வேண்டும். இக்கிறிஸ்தவர்கள் பவுலின் சரீரத்திலிருந்த முள் ஒரு சரீர வியாதி அல்ல, உண்மையாகவே சாத்தானின் தூதன் என்று நம்புகின்றனர் (2 கொரிந்தியர் 12:7). பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் இன்றும் கிறிஸ்தவர்களுக்குக் கிட்டக் கூடியவை, அவற்றுள் குணமாக்கும் வரமும் அற்புதங்கள் செய்யும் வரமும் அடக்கம் என்று அநேகர் நம்புகின்றனர் (1 கொரிந்தியர் 12:9-10). இக்கிறிஸ்தவர்களுள் சிலர் நமது நோய்கள் எல்லாவற்றையும் தேவன் குணமாக்குவார் என்று எதிர்பார்க்க வேண்டும் என்கின்றனர். மற்றவர்களோ, தேவன் பெரும்பாலும் வியாதிகளைக் குணமாக்குவார், ஆயின் எல்லா வியாதிகளையுமே குணமாக்குவார் என எதிர்பார்க்கக் கூடாது என்கின்றனர்.

வேறு சில கிறிஸ்தவர்களோ தேவன் இன்று இயற்கைக்கு அப்பாற்பட்ட முறைகளில் சுகம் தருவதில்லை. மக்களைக் குணமாக்க மருத்துவர்களையும் மருந்துகளையுமே பயன்படுத்துகிறார் என்று நம்புகின்றனர். திருச்சபை வரலாற்றிலே பெரும்பாலான மக்கள், யாரும் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் சுகம் பெற்றதைக் கண்ணாரக் கண்டதில்லை. ஆகவே இவர்கள், தெய்வீக சரீர சுகமளிக்கும் வல்லமை சபை ஆரம்பித்த முதல் சில நூற்றாண்டுகளுக்கு மட்டுமே வழங்கப் பட்டிருந்தது என்கின்றனர். பவுலும் தமது நண்பனை வியாதிப்பட்டவனாக விட்டு வந்ததையும்

(2 தீமோத்தேயு 4:20), சுட்டிக் காட்டுகின்றனர். பவுலின் சரீரத்திலிருந்த முள் ஒரு சரீர வியாதியே (1 கொரிந்தியர் 12:7), அது ஒருவேளை ஒரு கண் நோயாக இருக்கக் கூடும் (கலாத்தியர் 4:15) என்பது இவர்கள் கருத்து. மத்தேயு 8:16-17 ஐ இவர்கள் வேறு விதமாக வியாக்கியானம் செய்கின்றனர், இயேசு இப்பூவுலகில் இருந்த போது நமது நோய்களைச் சுமந்தார், சிலுவை மீது நமது பாவங்களை மட்டுமே சுமந்தார் என்கின்றனர். இயேசு சிலுவை மீது நமது பாவங்களுக்காகவும், வியாதிகளுக்காகவும் மரிக்கவில்லை, நமது பாவங்களுக்காக மட்டுமே மரித்தார் என்று நம்புகின்றனர்.

மூன்றாவதான கண்ணோட்டம், இந்த இரண்டு கருத்துக்களுமே உண்மையல்ல, உண்மை இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட ஒன்று என்கிறது. இரு கருத்துக்களிலுமே ஓரளவிற்கு உண்மை இருக்கிறது என்பது இந்தச் சாராரின் எண்ணம். இத்துடன் தொடர்புடைய ஒரு தலைப்புக்கு, பொதுவான தலைப்பு : பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் - பார்க்க. சரீர சுகத்துக்காக ஜெபித்தல் வேதாகமத்தில் மக்கள் பல்வேறு விதங்களில் சுகமடைந்தனர். நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமெனில் “கேட்க” வேண்டும் என்று சொன்னார் இயேசு (மத்தேயு 7:7; யாக்கோபு 4:2).

பலரைப் பார்த்து அவர்களது விசுவாசமே அவர்களைக் குணமாக்கிற்று என்றும் சொன்னார் (மத்தேயு 8:10- 13; மாற்கு 10:52), அப்போஸ்தலர்களும் அதேவிதமாகச் செய்தனர் (அப்போஸ்தலர் 3:16). வேறு சிலர் தங்கள் “கீழ்ப்படிதலின் மூலமாகச் "சுகம் பெற்றனர் (2 இராஜாக்கள் 5:1-14; லூக்கா 17:14; யோவான் 9:7). அநேகத் திமிர்வாதக்காரர்கள் இயேசுவோ அல்லது அப்போஸ்தலர்களில் ஒருவரோ சொன்ன "அதிகாரமுள்ள

*ஒரு வார்த்தையின்'' மூலமாகக் குணம் பெற்றனர் (மாற்கு 2:10-11; யோவான் 5:8; அப்போஸ்தலர் 3:6; 14:10). இயேசு தமது சீஷர்களைப் பார்த்துத் தமது ''வாக்குத் தத்தங்களை உரிமை பாராட்டிப் பெற்றுக் கொள்ளச் சொன்னார் (மாற்கு 11:22-24; யோவான் 14:13-14). "எண்ணெய் பூசி ஜெபித்ததன்'' மூலம் ஏராளமான வியாதிகள் சுகமாயின (மாற்கு 6:13), சபை மூப்பர்கள், சுகவீனமாய் இருப்பவனுக்கு எண்ணெய் பூசி ஜெபிக்கும் படி யாக்கோபு ஆலோசனை கொடுத்தார் (யாக்கோபு 5:14-16). அநேகர் "தலை மீது கரங்கள் வைத்து" ஜெபிக்கப் பட்டதால் வியாதி நீங்கிச் சுகமாயினர் (மாற்கு 6:5-6; லூக்கா 4:40; அப்போஸ்தலர் 28:8), விசுவாசிகள் வியாதியஸ்தர் மேல் கைகளை வைத்தால் அவர்கள் சுகம் பெறுவார்கள் என்று இயேசு கூறினார் (மாற்கு 16:16; எபிரெயர் 6:1-2). இயேசுவின் வஸ்திரங்கள் (லூக்கா 6:19, 8:43-46), பேதுருவின் நிழல் (அப்போஸ்தலர் 5:15), பவுலின் கச்சைகள், உறுமால்கள் (அப்போஸ்தலர் 19:12) இவற்றைத் ''தொட்டதன் '' மூலம் சுகம் பெற்ற மக்களும் உண்டு. ஒருமுறை இயேசுவும் கூடத் ''திரும்பத் திரும்ப ஜெபித்தார் (மாற்கு 8:22-25).*

*எனினும், யாரும் நவீன மருந்துகளையோ, சிகிச்சையையோ எடுக்க மறுக்கவும் கூடாது. தேவன் நேரடியாகவே சுகம் கொடுக்க முடியும், எனினும் பல சமயங்களில் அவர் சுகம் கொடுப்பதற்கு ஏதாவது ஒரு ''வழி வகையைப்'' பயன்படுத்துகிறார். தொடுதல், எண்ணெய், ஏன் சேற்றைக் கூட அவர் பயன்படுத்தியுள்ளார் (யோவான் 9:6-7). அதே போல, மருந்தும் சுகம் தருவதன் ஒரு வழிமுறை என ஏற்றுக் கொள்ள வேண்டும். தீமோத்தேயு தன் வயிற்றிற்காகவும் தனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும் கொஞ்சம் திராட்சைரசத்தை*

மருந்தாகப் பயன்படுத்திக் கொள்ளும்படி பவுல் ஆலோசனை கூறினார் (1 தீமோத்தேயு 5:23). பவுல் தனது மிஷனெரிப் பயணங்களில் தன்னோடு வந்த மருத்துவரான லூக்காவை பிரியமான வைத்தியனாகிய லூக்கா என்று அடிக்கடி அழைக்கிறார் (கொலோசெயர் 4:14).

எனவே நாம் தேவனிடமிருந்து நேரடியாக மட்டுமோ அல்லது "வழி வகைகளான மருந்து மற்றும் மருத்துவர்கள் மூலமாக மட்டுமோ சுகம் பெற நாடக் கூடாது; மாறாக தேவனிடமிருந்தும் மருந்துகள் மூலமாகவும் சுகம் பெறப் பார்க்க வேண்டும் (2 இராஜாக்கள் 20:5-7), அவர் எந்த முறையில் நம்மைச் சுகப் படுத்தினாலும் சரி அதற்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

சில மக்கள் ஏன் சுகம் பெறவில்லை என்பதற்குப் பல காரணங்கள் கூறப் படுகின்றன. விடை பெறாத ஜெபத்துக்கு முக்கியக் காரணம் அவிசுவாசம், அது ஒரு வேளை நம்முடைய அவிசுவாசமாகவோ (மாற்கு 9:23-24), அல்லது நம்மைக் குணப் படுத்த முயல்வோரின் அவிசுவாசமாகவோ (மத்தேயு 17:19-20), அல்லது நம்மைச் சூழ்ந்துள்ளோரின் அவிசுவாசமாகவோ இருக்கலாம் (மாற்கு 6:5-6). மன்னியாமை (மாற்கு 11:24-25). கீழ்ப்படியாமை (2 இராஜாக்கள் 5:1, 8- 14), அல்லது கணவன் / மனைவியுடன் கருத்து வேறுபாடு (1 பேதுரு 3:7) இவை போன்ற அறிக்கையிடப் படாத பாவங்களும் காரணமாகலாம் (யோவான் 5:14; யாக்கோபு 5:16). தகுதியற்ற முறையிலோ அல்லது பாவங்களை அறிக்கையிடாத நிலையிலோ கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதும் வியாதி வருவதற்குக் காரணமாய் அமையலாம் (1 கொரிந்தியர் 11:27-30). சிலர் வியாதி குணமாக வேண்டுமென ஜெபிப்பது கூட இல்லை (யாக்கோபு 4:2) காரணம், ஒன்று

*அப்படி சுகம் கிடைக்கும் என்பதை அவர்கள் அறியவில்லை அல்லது நம்பவில்லை. நாம் நமது சரீரங்களைத் தகாத விதங்களில் பயன்படுத்தினாலோ அல்லது தேவன் அருளும் மற்ற வழிவகைகளில் சுகம் பெற மறுத்தாலோ ஒரு வேளை நாம் தேவனைப் "பரீட்சை" பார்க்கலாம், இதை வேதம் தடை செய்கிறது (மத்தேயு 4:6-7).*

*சில வேளைகளில், சுகம் பெறுவதற்கு அது ஏற்ற சமயமாக இராதிருக்கலாம். உதாரணமாக, இயேசு சுகவீனமாயிருந்த தமது நண்பனைப் பார்க்க உடனடியாகப் போகவில்லை, ஆனால் பின்னர் அவனை மரித்தோரிடமிருந்து உயிரோடு எழுப்பினார் (யோவான் 11:6, 43-44). இப்படியாக இயேசு பெரும் அற்புதம் ஒன்றைச் செய்தார். தமது வல்லமையை வெளிப் படுத்துவதற்காக, தேவன் அநேக ஆண்டுகள் கழிந்த பின் ஒரு விசேஷித்த நபரையோ அல்லது விசேஷித்த முறையையோ பயன்படுத்தி சுகம் கொடுக்கலாம் (மாற்கு 9:29; யோவான் 5:5-9 9:3). அல்லது தேவன் ஒருவர் இவ்வளவு காலம் தான் உயிர் வாழ வேண்டும் என்று குறித்திருக்கலாம். பழைய ஏற்பாட்டிலே தேவன் எசேக்கியாவுக்கு பதினைந்து ஆண்டுகள் மட்டும் வாழ்நாளைக் கூட்டிக் கொடுத்தார் (2 இராஜாக்கள் 20:5-7). எல்லாவற்றையும் விட, நோய்க்குறி தவறாக இருக்கவும் வாய்ப்புண்டு; ஒரு மனிதன் சரீர வியாதியால் அவதிப்படுவதாக நாம் எண்ண அவனோ பிசாசினால் பீடிக்கப் பட்டிருக்கலாம்.*

*பிசாசுகளின் பிடியிலிருந்து விடுதலை சரீர வியாதியைப் போன்றே, சாத்தான் மற்றும் அவனது பிசாசுகள் அல்லது அசுத்த ஆவிகளின் பிடியிலிருந்து விடுதலை பற்றியும் வேதாகமத்தில் ஏராளமான வாக்குத்தத்தங்கள் உள்ளன. தாம் பரிசுத்த ஆவியானவரால்*

அபிஷேகிக்கப் பட்டதற்கு ஒரு காரணம் நொறுங்குண்டவர்களை விடுதலையாக்குவதே என்று இயேசு சொன்னார் (லூக்கா 4:18). அவர் சென்ற இடமெல்லாம் பிசாசுகளினால் ஒடுக்கப் பட்டோரிடம் இருந்து பிசாசுகளைத் துரத்தினார் (மத்தேயு 4:24; மாற்கு 1:34; 3:11). இந்தப் பிசாசுகளைத் துரத்தும் அதிகாரத்தை முதலில் தமது பன்னிரு சீஷர்களுக்கும் அதன்பின்னர் வேறே எழுபது பேர்களுக்கும் கொடுத்தார் (லூக்கா 9:11; 10:1,17-19). விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களில் பிசாசுகளைத் துரத்துவதையும் சேர்த்துச் சொன்னார் (மாற்கு 16:17), இதை அப்போஸ்தலர் நடபடிகள் நெடுகிலும் காண்கிறோம் (அப்போஸ்தலர் 5:16; 8:7; 16:18; 19:11-12). பரிசுத்த ஆவியானவரின் வரங்களுள் ஆவிகளைப் பகுத்தறியும் வரமும் ஒன்று (1 கொரிந்தியர் 12:10).

பிசாசுகள் என்பவை பூமியில் வாழும் மக்களை அலைக்கழிப்பதற்காக வந்துள்ள மரித்துப் போனோரின் ஆவிகளல்ல. மரித்தோரின் ஆவிகள் கிறிஸ்துவோடு இருக்கும்படியாகப் பரலோகத்திற்கோ (பிலிப்பியர் 1:23) அல்லது இறுதி நியாயத் தீர்ப்புக்காகக் காத்திருக்கும் படியாக நரகத்திற்கோ (எபிரெயர் 9:27; வெளிப்படுத்தல் 20:5,13) செல்கின்றன என்று வேதம் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றது. பிசாசுகள் என்பவை சாத்தானின் பணிவிடைக் காரர்களான (மத்தேயு 12:26-27; மாற்கு 3:22-26), தீய அல்லது அசுத்த ஆவிகள் (மத்தேயு 10:1; 12:43). சாத்தானும் அவனுடைய ஆவிகளும் தேவனால் சிருஷ்டிக்கப் பட்டு, பின்னர் அவருக்கு எதிராகக் கலகம் செய்தவை (ஏசாயா 14:12-15; எசேக்கியேல் 28:13-17). பிசாசுகள் எண்ணற்றவை, உலகம் முழுவதிலும் பரவியுள்ளவை (மாற்கு 5:9; எபேசியர் 6:12). அவை மனிதர்களுக்குள்ளும் மிருகங்களுக்குள்ளும் புகவும், அவர்களை அடக்கியாளவும் முடியும்; உண்மையில், அவை

*ஒரு சரீரம் இன்றி வெளியே அலைய விரும்புவதில்லை (மத்தேயு 12:43-45; மாற்கு 5:2,12-13). அவைகள் இயேசு கிறிஸ்து தேவ குமாரன் என்று அடையாளம் காண, அறியக் கூடியவை (மாற்கு 1:23-24,34; அப்போஸ்தலர் 19:15), அந்த விதத்தில் அவை இயேசுவை "விசுவாசிக்கின்றன" (யாக்கோபு 2:19); ஆனால் தாங்கள் பாதாளத்தின் நரக வேதனைக்கே போய்ச் சேருவோம் என்பதையும் அறிந்திருப்பவை (மத்தேயு 8:29; லூக்கா 8:31). விக்கிரங்களுக்குப் படைக்கப் பட்ட பலிகள் உண்மையில் பேய்களுக்கே பலியிடப் பட்டவை எனப் பவுல் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 10:19-21).*

*சில நேரங்களில் ஒரு மனிதன் பிசாசினால் ''பீடிக்கப் படுகிறான்'', அதாவது அவனது ஆளுமையை அடக்கிப் போடுமளவிற்கு ஒரு அசுத்த ஆவியின் ஆளுமை அவனது சரீரத்தையும் மனதையும் அடக்கி ''ஆண்டு'' கொள்கிறது (மாற்கு 5:15-16). ஆனால் பொதுவாக, ஒரு மனிதன் முழுமையாக ஆளப் படுவதை" விட மனதிலும் சரீரத்திலும் அசுத்த ஆவியினால் ''தாக்கவோ "பீடிக்கவாம்" டுகிறான் எனலாம் (மத்தேயு 9:32; 12:22; மாற்கு 9:17-29; லூக்கா 6:8).*

*விசுவாசிகள் ஒரு அசுத்த ஆவியினால் முழுமையாகப் பீடிக்கப் பட முடியாது என்பதை எல்லாக் கிறிஸ்தவர்களுமே அறிவர், காரணம் விசுவாசிகள் தேவனால் ஆளவும் உரிமை கொண்டாடவும் படுபவர்கள் (1 கொரிந்தியர் 6:19-20). என்றாலும் விசுவாசிகள் அசுத்த ஆவிகளால் உள்ளிருந்து "தாக்கப் படவோ'', ''ஒடுக்கப் படவோ" முடியும் எனக் கிறிஸ்தவர்களில் அநேகர் நம்புகின்றனர். இவர்கள் சாத்தானின் தூதன் தன்னைக் குட்டுவதாக பவுல் சொன்னதையும் (2 கொரிந்தியர் 12:7),*

விக்கிரகங்களுக்குப் பலியிட்டவைகளைப் புசிப்பதன் மூலம் விசுவாசிகள் பேய்களோடே ஐக்கியமாயிருக்கக் கூடாது என்று அவர் எச்சரிப்பதையும் (1 கொரிந்தியர் 10:20-22) சுட்டிக் காட்டுகின்றனர். சரீர வியாதிகளுக்காக இயேசுவிடம் கொண்டு வரப் பட்டவர்கள் பல சமயங்களில் பிசாசுகளினாலேயே அவ்வியாதிகளுக்கு ஆளாகியிருந்ததையும் இவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர் (மாற்கு 3:10-11; லூக்கா 6:18-19). அவர்களில் பெரும்பாலானோர் அசுத்த ஆவியினால் உள்ளிருந்து முழுவதும் ஆளப் படவில்லை, ஓரளவுக்கு ஒடுக்கவே பட்டனர் என்று இவர்கள் நம்புகின்றனர். கிறிஸ்தவர்களும் பிசாசுகளின் பொய்களையும் போதனைகளையும் நம்புமளவிற்கு அவற்றால் தாக்கப் படலாம் (1 தீமோத்தேயு 4:1-3); நமது ஓய்வற்ற போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, இந்தப் பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு தான் எனப் பவுலும் நம்மை எச்சரிக்கிறார் (எபேசியர் 6:12). ஆவிகள் தேவனிடமிருந்து வந்தவையா என நாம் சோதித்தறிய வேண்டும் (1யோவான் 4:1-3).

எனினும் வேறு சில கிறிஸ்தவர்களோ, விசுவாசிகளுக்குள் எந்த அசுத்த ஆவியும் எந்நிலையிலும் இருக்க முடியாது என நம்புகின்றனர். பரிசுத்த ஆவியானவரும் அசுத்த ஆவியும் ஒரு விசுவாசிக்குள் ஒரே சமயத்தில் வசிப்பது சாத்தியமே அல்ல என்கின்றனர் (1 கொரிந்தியர் 6:19). இவர்களில் சிலர் உண்மையான ஒரு விசுவாசி எந்தச் சமயத்திலும் எவ்வகையிலும் ஒரு அசுத்த ஆவியினால் தாக்கப் படவே முடியாது என்று நம்புகின்றனர். வேறு சிலர் அசுத்த ஆவிகள் ஒரு விசுவாசியை வெளியிலிருந்து தாக்கலாம், ஆனால் விசுவாசியின் சரீரத்துக்குள் புகவே முடியாது என்கின்றனர்.

இந்த விஷயம் முக்கியத்துவம் உள்ளது, காரணம், இதுவே நாம் மற்றவர்களுக்காக எப்படி ஜெபிக்கிறோம் என்பதை நிர்ணயிப்பது. ஒரு விசுவாசிக்குள் பிசாசு இருக்கக் கூடுமானால் சில வியாதிகளிலிருந்தும் உணர்வுப் பிரச்சனைகளிலிருந்தும் முழு விடுதலை பெறவோ அல்லது சில பாவங்கள் மீது வெற்றி பெறவோ அவனுக்குள்ளிருக்கும் பிசாசு துரத்தப் பட்டாக வேண்டும். எனினும் பெரும்பாலான பாவங்கள் நமது பாவத் தன்மையின் விளைவே அன்றி, பிசாசு அல்லது சாத்தானால் வருபவை அல்ல என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். (கலாத்தியர் 5:19-21). விடுதலைக்காக ஜெபித்தல்

ஒரு கிறிஸ்தவனுக்குள் பிசாசு இருக்க முடியுமோ, முடியாதோ கிறிஸ்தவர்கள் அல்லாதோரை சாத்தானிடமிருந்தும் அவனுடைய அசுத்த ஆவிகளிடமிருந்தும் எப்படி விடுவிப்பது என்பதையாவது நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். தேவனுடைய சர்வாயுத வர்க்கம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்குமே வேண்டும், அதன் பாகங்கள் எபேசியர் 6:10-17 இல் குறிப்பிடப் பட்டுள்ளன : சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், இரட்சணியம் மற்றும் வேத வசனம். விடுதலை செய்யுமுன் ஜெபத்தில் தரித்திருந்து ஆயத்தப் பட வேண்டியது அதி முக்கியம் (மாற்கு 9:28-29; எபேசியர் 6:18). மாற்கு 9:29 "ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும்' என்று கூறுகிறது, பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கும் ஊழியம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு விசேஷித்த ஜெப நேரம் இன்றியமையாதது என சில கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். முடிந்தால், விடுவிக்கும் ஊழியத்திற்கான ஜெபம் தனிப்பட்ட விதத்தில் அன்றி ஒரு குழுவாக ஏறெடுக்கப் படுவது நல்லது. விடுவிக்கும் ஊழியத்தில் பங்கு பெறும் அனைவரும் முதிர்ந்த, ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாகவே இருக்க வேண்டும் (அப்போஸ்தலர் 19:13- 16 பார்க்க).

**தாமஸ் ஹேல்**

பிசாசின் பிடியிலிருந்து விடுதலைக்காக ஜெபிப்பதற்கு முன், பீடிக்கப் பட்ட நபரோடு நேரம் செலவிட வேண்டும். அந்நபர் கிறிஸ்தவர் அல்லாதவராகவோ, கிறிஸ்தவராக விருப்பம் அற்றவராகவோ இருக்கும் பட்சத்தில் விளைவாக, பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அற்றவராக இருப்பார்), அல்லது அவருக்குப் பின் தொடர் பணி செய்ய முடியாத பட்சத்தில், அப்படிப் பட்டவருக்காக ஜெபிக்கையில் நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஒரு சுருக்க ஜெபம் அந்நபரின் முன்னிலைமையைப் பார்க்கிலும் பின்னிலைமையை அதிகக் கேடாக்கக் கூடும் (மத்தேயு 12:43-45).

ஒருவரது வீட்டிலிருந்து விக்கிரங்கள் வெளியே அகற்றப் படாத பட்சத்தில் அவருக்காக பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுமாறு ஜெபிக்கவே கூடாது என்று சிலர் கருதுகின்றனர் (அப்போஸ்தலர் 19:19). இல்லையென்றால், அசுத்த ஆவிகள் எளிதில் திரும்பி வந்து விடும். அநேக சரீர நோய்களுக்கு, பிசாசினால் பீடிக்கப் படுதல் ஒரு காரணமாய் இருக்கலாம். அதே வேளையில் பல சரீர அல்லது மன நோய்கள், பிசாசினால் பீடிக்கப் பட்டதன் அறிகுறிகள் போலத் தோன்றலாம், ஆனால் உண்மையில் வெறும் சரீர, மன நோய்களாகவும் இருக்கலாம். உதாரணமாக, வலிப்பு நோய் பிசாசின் தாக்குதல் போல் காணப்படலாம், ஆனால் அது பொதுவாக மூளையுடன் தொடர்புடைய ஒரு நோய் மட்டுமே. இங்கே பெருத்த உதவியாக அமைவது, பரிசுத்த ஆவியானவரிடம் இருந்து வரும் ஆவிகளைப் பகுத்தறியும் வரம் ஆகும். இது ஒரு நபரைப் பீடித்துள்ள அல்லது அவதிப் படுத்துகிற அசுத்த ஆவியை அடையாளம் கண்டு கொள்ள உதவும் (1 கொரிந்தியர் 12:10).

உண்மையில், இந்த ஜெபமானது பிசாசின் பிடியிலிருந்து விடுவிப்பதில் பங்கு பெறும் அத்தனை பேருடைய பாதுகாப்புக்காகவும் ஜெபிப்பதிலேயே தொடங்க வேண்டும், இவர்கள் எல்லாருமே விசுவாசிகளாக இருக்க வேண்டியது மிக அவசியம் (அப்போஸ்தலர் 19:13-16). பிறகு சாத்தானும் அவனது சேனைகளும் கட்டப் பட வேண்டும் (மத்தேயு 16:19, 18:18), பீடிக்கப் பட்ட நபர் தனது பாவத்தை எல்லாம் அறிக்கையிட்டு வெறுத்து விட வேண்டும். சரீரசுகத்துக்காக ஜெபிப்பது பொதுவாக சுகத்துக்காக தேவனை நோக்கி "வேண்டுதல்" செய்வது (இது மனதிலே செய்யப் படும் அமைதியான ஜெபமாகவும் இருக்கலாம்); ஆனால் பிசாசிடமிருந்து விடுதலைக்காக ஜெபிப்பதோ இயேசு கிறிஸ்துவின் நாமத்திலும், அதிகாரத்தின் பேரிலும் பிசாசுக்கு இடப்படும் "கட்டளை" (லூக்கா 10:17 அப்போஸ்தலர் 16:18; 19:13-16).

எனினும் உரத்த சத்தமாகக் கத்த வேண்டும் என்பதில்லை; பிசாசையெல்லாம் பயம் காட்டி ஒருவரிடமிருந்து வெளியேற்ற முடியாது. பிசாசு தான் பீடித்திருக்கும் நபருக்கோ, மற்ற யாருக்குமோ எந்தத் தீங்கும் விளைவிக்காமல் புறப்பட்டு, நியாயத் தீர்ப்பு அடையும் படியாக இயேசு கிறிஸ்துவிடம் போக வேண்டும் என்று கட்டளை கொடுக்கப் பட வேண்டும் (யூதா 9). இயேசுவின் நாமம் வல்லமை மிக்கது, பொதுவாக உடனடியாக விடுதலை உண்டாகும், பீடிக்கப் பட்ட நபர் தான் விடுதலையாகி விட்டதை அறிந்து கொள்வார்.

இந்த ஜெபத்தைத் தொடர்ந்து அந்நபர் தேவ அன்பினாலும் பரிசுத்த ஆவியானவராலும் நிரப்பப் பட வேண்டுமென்ற ஜெபமும் உடனடியாக ஏறெடுக்கப் பட வேண்டும் (மத்தேயு 12:43-45). விடுவிக்கப் பட்ட நபர் முதலிலேயே தேவனுடைய பிள்ளையாக இராத பட்சத்தில்,

*இப்பொழுது உடனடியாக இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டும். சாத்தானை எதிர்த்து நிற்பது பற்றியும், அவன் வாழ்வில் பிசாசு நுழைய இடங்கொடுத்த அந்தக் குறிப்பிட்ட பாவத்தைத் தவிர்ப்பது பற்றியும் போதனை கொடுக்கப் பட வேண்டும் (யாக்கோபு 4:7; யோவான் 1:9). முழுமையான விடுதலைக்குத் தடையாக இருக்கக் கூடிய சில காரியங்கள் : அவிசுவாசம் (மத்தேயு 17:16-20), கிறிஸ்துவை ஏற்க மறுத்தல், பாவங்களை வெறுத்து விட்டு விடாதிருத்தல், மன்னியாமை, அசுத்த ஆவியை அடையாளம் காணத்தவறுதல் (அதாவது, பிசாசு பிடிக்காத ஒரு மனிதனிடம் இருந்து பிசாசை விரட்ட முயலுதல்).*
*சுருக்கம்*

*சரீர சுகம், பிசாசின் பிடியிலிருந்து விடுதலை ஆகிய இரண்டுமே தேவனின் அன்பை நமக்கு விளக்கிக் காட்டுவதுடன், அவர் நமது ஆவிகளைக் குறித்து மட்டுமல்ல சரீரங்களையும் மனங்களையும் குறித்தும் அக்கறையுடையவராய் இருக்கிறார் என்பதைத் தெரிவிக்கின்றன. தேவன் நமது சுகவீனங்களையும் பெலவீனங்களையும் சுகமாக்கவும், அடிமைத் தளையிலிருந்து நம்மை விடுதலையாக்கவும் ஆயத்தமாய் இருக்கிறார். நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருக்& வேண்டுமென்பதே தேவனின் விருப்பம் (3 யோவான்2).*

# 15. தீமைக்கு எதிர்த்து நிற்பது - நாம் செய்ய வேண்டியது எவ்வளவு?

***முக்கிய வசனங்கள்***

*யாத்திராகமம் 20:13 கொலை செய்யாதிருப்பாயாக.*

*யாத்திராகமம் 21:12-17; 22: 18-20 சில குறிப்பிட்ட பாவங்களுக்கு மரண தண்டனை வழங்கப் படுதல். யோசுவா 8:1-8 யுத்தத்தினால் அழிப்பதற்கு தேவன் அதிகாரம் வழங்கினார். 1 சாமுவேல் 15: 2-3 யுத்தத்தினால் தண்டிப்பதற்கு தேவன் அதிகாரம் வழங்கினார்.*

*மத்தேயு 5:38-48 தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். லூக்கா 6:30 உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு; உன்னுடையதை எடுத்துக்*

*கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதே. ரோமர் 13:1-7 தேவன் தீமையைத் தண்டிப்பதற்காக அரசாங்கத்தை ஏற்படுத்தியுள்ளார். 1 பேதுரு 2:13-14 தேவன் தீமை செய்பவர்களைத் தண்டிப்பதற்காக அதிகாரங்களை நியமித்திருக்கிறார்.*

**கேள்விகள்**

*இயேசு கிறிஸ்து தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பதை நமக்குப் போதித்தார், எடுத்தும் காட்டினார். இயேசு பழைய ஏற்பாட்டின் நியாயப் பிரமாணத்தை ஒழிக்கவில்லை (மத்தேயு 5:17). எனினும் நியாயப்*

பிரமாணத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இயேசுவின் போதனைகள் ஆழமானவை, அதிக ஆவிக்குரியவை. நியாயப் பிரமாணமானது மக்களின் வெளிப் படையான நடத்தைக்கு விதிகள் வகுத்தது, இயேசுவோ மக்கள் உள்ளே, தங்கள் இதயங்களில் என்ன எண்ணினர் என்பதைப் பார்த்தார். அவர் நியாயப் பிரமாணத்தின் பல கூறுகளையும் எடுத்து, நீதியோடு கூட அன்பையும் சேர்த்துக் கோரியதன் மூலம் பிரமாணத்தை இன்னும் கடினமாக்கினார்.

உதாரணமாக, நியாயப் பிரமாணம் கொலை செய்வது குற்றம் என்று தீர்த்தது, இயேசுவோ ஒருவனின் உள்ளத்தில் இருக்கும் கோபத்தையும் பகையையும் கூடக் குற்றமே என்று தீர்த்தார் (மத்தேயு 5:21-22). நியாயப் பிரமாணம் விபசாரம் செய்வது பாவம் என்றது, இயேசுவோ உள்ளத்தில் இச்சை கொள்வதே பாவம் என்றார் (மத்தேயு 5:27-28). நியாயப் பிரமாணம் நாம் நமது பிறரை நேசிக்க வேண்டும் என்று கட்டளையிட்டது, இயேசுவோ நாம் நமது சத்துருக்களையும் சிநேகிக்க வேண்டும் என்றார் (மத்தேயு 5:43-47). நியாயப் பிரமாணம் தனிப்பட்ட விதத்தில் அளவுக்கு மீறிப் பழிவாங்குவது தவறு என்றது, இயேசுவோ பழியே வாங்கக்கூடாது என்று தடுத்தார். அவர் சொன்னார் "தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டு விடு ” (மத்தேயு 5:39-40). இன்னும், "உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு; உன்னுடையதை எடுத்துக் கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதே ” என்றும் சொன்னார் (லூக்கா 6:30). மேலும் அவர் சொன்னது : "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ

அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு 7:12; லூக்கா 6:31).

தீமைக்கு எதிர்த்து நிற்பது பற்றி அநேகக் கேள்விகள் எழுகின்றன: நாம் தீமைக்கு எதிர்த்து நிற்கவே கூடாதா? தவறு செய்து கொண்டேயிருப்பவர்களை எதிர்க்க நாம் எந்தச் சக்தியையுமே பிரயோகிக்கக் கூடாதா? அரசாங்க அதிகாரிகள் தீமையைத் தண்டிப்பதற்காகத் தேவனால் நியமிக்கப் பட்டவர்கள், அவர்கள் பட்டயத்தை விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை என்று பவுலும் பேதுருவும் எழுதுகிறார்கள் (ரோமர் 13:1-7; 1 பேதுரு 2:13-14). யாரையும் தண்டிக்கவோ, துன்புறுத்தவோ முழு சமுதாயங்களும் அரசாங்கங்களும் வன்முறையைப் பயன் படுத்தவே கூடாதா? அப்படியானால், ஒரு கிறிஸ்தவன் காவல் துறையில் பணி புரிந்து குற்றவாளிக்கு எதிராகத் துப்பாக்கியையோ, பிரம்பையோ பயன்படுத்துவது சரியாகுமா? ஒரு கிறிஸ்தவன் நீதிபதியாக இருந்து, குற்றவாளிகளுக்குத் தண்டனையோ, மரண தண்டனையோ வழங்குவது சரியா? ஒரு கிறிஸ்தவன் இராணுவத்தில் சேருவதும், யுத்தத்தில் பங்கு பெறுவதும் சரிதானா?

முதலாவது கண்ணோட்டம்: யாருமே எப்பொழுதுமே தீமைக்கு எதிர்த்து நிற்கக் கூடாது அநேகக் கிறிஸ்தவர்கள் யாரும் எந்தச் சூழ்நிலையிலும் தீமை செய்வோருக்குப் பலவந்தமாக எதிர்த்து நிற்கவே கூடாது என்று நம்புகின்றனர். இயேசு, நாம் தம்மையே பின்பற்ற வேண்டும் என்றார் (மாற்கு 8:34-35), தாழ்மையான ஒரு ஊழியக்காரனின் மாதிரியையே நமக்குப் பின் வைத்துப் போனார் (மாற்கு 10:42-45). பாடுபடுவதில் நாம் கிறிஸ்துவையே பின்பற்றக் கட்டளை பெறுகிறோம் (1 பேதுரு 2:19-24). நாம் பழிக்குப் பழி செய்யக் கூடாது என்றும், நன்மையினாலே தீமையை வெல்ல வேண்டும்

என்றும் பவுல் கூறுகிறார் (ரோமர் 12:17-21; 1 தெசலோனிக்கேயர் 5:15). பேதுருவும் அதையே சொல்கிறார், நம்மைச் சபிப்பவர்களை நாம் ஆசீர்வதிக்க வேண்டும் என்கிறார். (1 பேதுரு 3:8-9). இந்தக் கிறிஸ்தவர்கள் நியாயப் பிரமாணம் கிறிஸ்துவில் நிறைவேறியது என்றும் (மத்தேயு 5:17), அவரது அன்பின் அறவழி அதிகக் கடினமானது என்றாலும் மிக உன்னதமானதும் கூட என்றும் நம்புகின்றனர். இயேசு பழைய ஏற்பாட்டின் நியாயப் பிரமாணத்தை ‘‘அன்பின் பிரமாணமாக' மாற்றிப் போட்டதால் (ரோமர் 13:10), தேவனால் பழைய ஏற்பாட்டில் அனுமதிக்கப் பட்டதெல்லாம் இன்று கிறிஸ்தவர்களுக்கான நெறிமுறைகளாக எடுத்துக் கொள்ளப் பட முடியாது.

ஆகவே, விசுவாசிகள் மற்ற மனிதர்களைக் கொல்லும் படியாக இராணுவத்தில் சேர்ந்து சண்டையிடுவது தகாது என இக்கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். பாவமே யுத்தங்களுக்கு மூலகாரணம் என்றும் (யாக்கோபு 4:1-4), பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து = போவார்கள் என்றும் (மத்தேயு 26:52) இவர்கள் கூறுகின்றனர். பழைய ஏற்பாட்டில் நடைபெற்ற ஆதி யுத்தங்களில் பெரும்பாலும் தேவனே யுத்தம் செய்தார், இஸ்ரவேலரின் உதவி அவருக்குத் தேவைப் படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகின்றனர் (யாத்திராகமம் 14:13-14; 24-28; யோசுவா 5:13-15; 6:15; நியாயாதிபதிகள் 4:14-15; 7:2-7; 22). பிற்காலத்தில் தேவனால் கட்டளையிடப் படாத யுத்தங்கள் செய்வது பற்றி இஸ்ரவேலரைத் தீர்க்கதரிசிகள் கடிந்து கொண்டனர், சேனைகளை அல்ல தேவனையே சார்ந்து வாழ வேண்டும் என்று எச்சரிக்கவும் செய்தனர் (ஏசாயா 31:1-3; சகரியா 4:6). பழைய ஏற்பாட்டிலும் கூட மனிதன் சமாதானத்தை நாட வேண்டும் என்பதே தேவனின் உன்னத நெறியாக

இருந்தது; உதாரணமாக, தாவீதின் கைகளில் யுத்தங்களின் இரத்தக் கறை படிந்திருந்தது என்பதால் தேவனுக்கு ஓர் ஆலயம் கட்டத் தன்னை அவர் அனுமதிக்க வேண்டுமென்ற அவனது வேண்டுகோள் நிராகரிக்கப் பட்டது (1 நாளாகமம் 28:3).

போர் பற்றி இக்கண்ணோட்டம் உள்ள கிறிஸ்தவர்கள் அதற்கு இசைவாக, மரண தண்டனை கொடுக்கப் படுவது தவறு என்றும் கருதுகின்றனர். தீமையை எதிர்த்து நிற்கக் கூடாது (மத்தேயு 5:39) என்னும் வேத வசனங்களோடு கூட, விபசாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிக்கப் பட்ட பெண்ணை இயேசு கல்லெறிந்து கொல்ல விடவில்லை (யோவான் 8:1-11) என்பதையும் இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆகவே, இக்கிறிஸ்தவர்களில் பெரும்பகுதியினர், ஒரு கிறிஸ்தவன் நீதிபதியாகவோ, அரசியல் பதவி வகிப்பவனாகவோ இருக்கக் கூடாது என்கின்றனர்.

காரணம், அப்படிப்பட்ட பதவிகளில் இருந்தால் அவன் தீமை செய்வோரைத் தண்டிப்பதற்காக "பட்டயத்தைப் பிடிக்கவும்", எப்பொழுது மரண தண்டனை கொடுக்க வேண்டும். எப்பொழுது போருக்குச் செல்ல வேண்டும் என்றெல்லாம் தீர்மானிக்கவும் வேண்டியதாகும். ஒரு கிறிஸ்தவன் காவல் துறையிலும் பணிபுரிய முடியாது என்பது இவர்கள் கருத்து. ஏனெனில் ஒரு போலீஸ்காரன் சமுதாயத்தைக் காப்பாற்றும் பொருட்டு குற்றவாளிகளிடம் வன்முறையைப் பயன்படுத்தவோ அல்லது குற்றவாளிகளைக் கொல்லவோ வேண்டியதாகும். இந்த விசுவாசிகள் நாம் இந்தப் பூமிக்கு உரியவர்கள் அல்லர், பரலோகக் குடிமக்கள் என்றும் (பிலிப்பியர் 3:20), நாம் சமாதானமான ஒரு வாழ்வை நாடவே அழைக்கப் பட்டிருக்கிறோம் என்றும் (எபிரெயர் 12:14) சுட்டிக் காட்டுகின்றனர். இவர்கள் ஓர்

அரசாங்கத்தில் பங்கு வகிக்க மறுத்த போதிலும், அவரவர் நாட்டு அரசாங்களை மதித்து நடந்து கொள்கின்றனர். உதாரணமாக, வரி கட்டுகின்றனர், தங்கள் அரசு அதிகாரங்களுக்காக ஜெபிக்கின்றனர் (மாற்கு 12:13-17; ரோமர் 13:1-7; 1 தீமோத்தேயு 2:1-2; 1 பேதுரு 2:13-17).

இரண்டாவது கண்ணோட்டம்: அதிகாரம் வகிப்பவர்கள் மட்டுமே தீமைக்கு எதிர்த்து நிற்க வேண்டும். வேறு பல கிறிஸ்தவர்களோ இயேசுவின் இந்த வார்த்தைகளை வேறு விதமாக வியாக்கியானம் செய்கின்றனர். இவர்கள், இயேசுவின் வார்த்தைகளை ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசியும் தனது தனி வாழ்வில் பின்பற்ற வேண்டும், ஆனால் இயேசு அரசாங்கங்களைப் பற்றியோ, காவல் துறை அதிகாரிகளும் பிற அரசு அதிகாரிகளும் நிறைவேற்ற வேண்டிய பொது வாழ்வின் கடமைகளைப் பற்றியோ பேசவில்லை என்று கருதுகின்றனர். தனிப்பட்ட விசுவாசிகளாக நாம் நமது ‘‘சகோதரனாலோ’’ அல்லது ‘‘சத்துருவினாலோ துன்புறுத்தப் படுகையில் நமது கோபத்தை விட்டு விட்டு நமது சகோதரனுடன் ‘‘ஒப்புரவாக வேண்டும்’’ என்றும், நமது எதிராளியுடன் எல்லாவற்றையும் சரிசெய்து கொண்டு "நல்மனம் பொருந்த வேண்டும்" என்றும் இயேசு கூறுகிறார் (மத்தேயு 5:22- 26).

தனிப்பட்ட விசுவாசிகளாக, நம்மை யாராவது ஒரு கன்னத்தில் அறைந்தால் நாம் பதிலுக்குச் சண்டை போடாமல், பழி வாங்க முயலாமல், நமது "மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுவதன் மூலம் நமது அன்பை அவனுக்குக் காண்பிக்க வேண்டும் (மத்தேயு 5:38-41). தனிநபர்களாக, நமது பகைவர்களே ஆயினும் நம்மிடத்தில் கை நீட்டிக் கடன் கேட்கும் எவருக்கும் கொடுக்க ஆயத்தம் உள்ளவர்களாயும் இருக்க வேண்டும் (மத்தேயு 5:42; லூக்கா

*6:35). இந்த இரண்டாவது கண்ணோட்டத்தின் பொருந்தும். படி, இயேசுவின் இந்த வார்த்தைகள் எல்லாம் தனிநபர்களுக்கு மட்டுமே*

*இன்னும் இக்கிறிஸ்தவர்கள், இயேசு இந்த வார்த்தைகளை எல்லாம் படைபலமற்ற ஒரு நாட்டின் சாதாரண தனி நபர்களுக்கே பேசினார் என்கின்றனர். அவர் நாட்டுப்புற அனுதின வாழ்க்கையின் காரியங்களை மனதில் கொண்டே பேசியிருப்பார். இயேசு பேசியதைக் கேட்டவர்கள் அவரது வார்த்தைகளைப் படைக்கும் காவல் துறைக்கும் பொருத்திப் பார்த்திருக்க மாட்டார்கள். இந்தக் கண்ணோட்டத்தின் படி, இந்த அதிகாரிகள் தீமையை எதிர்த்தாகவே வேண்டும். அதோடு, அதிகாரிகளே தீமை செய்வார்கள் என்றால் நாம் அவர்களையும் எதிர்க்கலாம் என்று இக்கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். புதிய ஏற்பாட்டிலே அதிகாரிகளை எதிர்த்து நிற்பது பற்றிய மூன்று உதாரணங்களைக் காண்கிறோம். முதலாவது, இயேசு தாமே கோபங் கொண்டு, தீமையை எதிர்த்து நின்றார்.*

*காசுக்காரரர்களின் பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு, அநியாயக்காரரர்களைச் சவுக்கினால் அடித்து விரட்டி, தேவாலயத்தைச் சுத்திகரித்தார் (யோவான் 2:13-16). இரண்டாவதாக, இயேசுவின் நியாய விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த போது யாரோ ஒருவன் அநியாயமாக அவரைக் கன்னத்தில் அறைய, அதற்கு அவர் எதிர்ப்பு தெரிவித்தார் (யோவான் 18:19-23). பவுலும் தனக்குத் தீங்கு இழைக்கப் படக் கூடாது என்பதற்காக இராயனுக்கு அபயமிட்டார் (அப்போஸ்தலர் 25:11). இந்த உதாரணங்களின் காரணமாக, நாமும் இவ்வாறு தீங்குக்கு எதிர்த்து நிற்க வேண்டும் என இக்கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.*

போர் என்பது பாவமானது என்பதை இவ்வகைக் கிறிஸ்தவர்கள் ஒத்துக் கொள்கின்றனர். எனினும் தீமை செய்பவர்களைத் தண்டிக்கவே அரசாங்கம் பட்டயத்தைப் பிடித்திருக்கிறது என்று பவுல் கூறுவதையும் சுட்டிக் காட்டுகின்றனர் (ரோமர் 13:4). போர் வீரர்கள் தங்கள் மனந்திரும்புதலைக் காட்டும் வண்ணமாகத் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று யோவான்ஸ்நானனிடம் கேட்ட போது அவன் அவர்களைத் தங்கள் சம்பளமே போதுமென்று திருப்தியாக இருக்கச் சொன்னானே ஒழிய, இராணுவத்தை விட்டு வெளியேறச் சொல்லவில்லை (லூக்கா 3:14).

இந்தக் கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டில் நியாயப் பிரமாணத்தின்படி தேவன் அனுமதித்த, ஆனால் நாம் இனி செய்யவே கூடாது என்று இயேசு சொன்ன காரியங்கள் தனி - உதாரணமாக விவாகரத்து (மத்தேயு 5:31) மற்றும் ஆணையிடுதல் (மத்தேயு 5:33) போன்றவை; இன்னும் தேவன் பழைய ஏற்பாட்டில் திட்டவட்டமாகக் கட்டளையிட்ட, ஆனால் இயேசு வேண்டாமென்று விலக்காத காரியங்கள் தனி - உதாரணமாக மரண தண்டனை அல்லது நியாயமான காரணத்துக்காகப் போரிடுதல் போன்றவை (எண்ணாகமம் 31:1-7; யோசுவா அதிகாரங்கள் 6-8; நியாயாதிபதிகள் 4:14-16; 7:2-22; 1 சாமுவேல் 15:2-3) என்று நம்புகின்றனர். யோவானின் தரிசனம், இயேசுவை இறுதி காலத்தில் தேவனோடு யுத்தம் பண்ணும் மக்களை அழிக்க வருகின்ற போர்த் தலைவராகக் காட்டுகிறது (வெளிப்படுத்தல் 19:11-19).

பெரும்பாலான யுத்தங்கள் நியாயமோ தர்மமோ அற்றவை என்ற போதிலும் சில யுத்தங்கள் அவசியமே, "நியாயமானவையே'' என்பது இக்கிறிஸ்தவர்களின் நம்பிக்கை. இவர்களில் பெரும்பாலானோர் மரண

தண்டனையும் அனுமதிக்கப் படக் கூடியதே என்று எண்ணுகின்றனர். புதிய ஏற்பாட்டிலும் கூட தேவனிடம் பொய் சொல்ல முயன்ற இரண்டு பேருக்கு மரண தண்டனை வழங்க தேவன் பேதுருவைப் பயன்படுத்தினாரே (அப்போஸ்தலர் 5:1-10). இவர்கள் யுத்தமோ, மரண தண்டனையோ தேவனின் பரிபூரண சித்தமல்ல, எனினும் சில குறிப்பிட்ட அநியாயங்களைத் தடுக்கவோ அல்லது சில குறிப்பிட்ட பாவங்களின் அகோரத்தைக் காட்டவே அவர் இன்னும் மரண தண்டனையை நியமித்திருக்கிறார். என்றும் நம்புகின்றனர்.

அரசாங்கத்தில் பங்கு கொள்வது என்பதைப் பொறுத்த வரை, பவுல் அரசாங்கத்தை மதித்து நடப்பது, அதன் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது மற்றும் வரி கட்டுவது இவை பற்றிக் கூறும் போதனைகளை இக்கிறிஸ்தவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர் (ரோமர் 13:1-7). அந்நாட்களில் இருந்த ரோமப் பேரரசன் கிறிஸ்தவர்களைக் கொடூரமாய்ச் சித்திரவதை செய்பவனாக இருந்த போதிலும், உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப் பட்டிருக்கிறது என்றும் அதிகாரிகள் தேவ ஊழியக்காரர்கள் என்றும் பவுல் எழுதுகிறார் (ரோமர் 13:1, 4, 6).

வரி வசூலிப்பவர்கள் தங்கள் வேலையை விட்டு விட வேண்டியதில்லை, ஆனால் நியாயமாய் வரி வசூலிக்க வேண்டும் (லூக்கா 3:12-13; ரோமர் 13:6-7). விசுவாசிகள் அரசாங்க அல்லது காவல்துறைப் பதவிகளில் இருப்பது நல்லது, அதன் மூலம் தேவனுடைய நீதியின் வழியைப் பின்பற்ற அரசை ஊக்குவிக்கலாம், அவசியமான சமயங்களில் கருணையும் காட்டலாம் என இக்கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். கிறிஸ்தவர்கள் அரசாங்கத்தில் ஓர் "ஒளியாக" இருக்க வேண்டும் என்று இவர்கள் கூறுகின்றனர் (மத்தேயு 5:15-14-16). தனி

நபர்களாக அவர்கள் பழி தீர்க்கவோ, தங்கள் சுய நாட்டங்களைப் பாதுகாக்கவோ “திருப்பிச் சண்டை போடக்" கூடாது எனினும் தீமை செய்வோரைத் தண்டிப்பதிலும் மற்றவர்களின் உடைமைகளையும் உரிமைகளையும் பாதுகாப்பதிலும் அரசாங்கத்துக்கு உதவ வேண்டும்.

மூன்றாவது கண்ணோட்டம்: தனி நபர்களும் தீமைக்கு எதிர்த்து நிற்கலாம் மூன்றாவது ஒரு கூட்டம் கிறிஸ்தவர்கள் யாரும் தீமை செய்யும் ஒருவனை எதிர்த்து நிற்கலாம், தேவைப் பட்டால் வன்முறையையும் கையாளலாம் என்று நம்புகின்றனர். தீமையை எதிர்ப்பது பற்றிய இப்போதனைகளை இயேசு கொடுத்தபோது, அவற்றை எல்லாச் சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்குமாகக் கொடுக்கவில்லை என்பது இவர்கள் கருத்து. இயேசுவின் போதனைகளுக்கு விதிவிலக்குகள் உண்டு, அவர் கூறியதைக் கேட்டவர்கள் அவர் சொல்லாமலேயே அதைப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்கின்றனர் இவர்கள்.

உதாரணமாக, குடிகாரன் ஒருவன் ஓர் அப்பாவியைக் கொல்ல முற்பட்டால் அவனைத் தடுப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம். பிள்ளைகள் பெற்றோரை அறைவதோ, அவமானப் படுத்துவதோ கூடாது, சாப்பிடுவதற்காக ஓர் இனிப்புப் பண்டத்தை வழங்கும் போது இன்னொன்றும் வேண்டுமென கையிலிருந்து தட்டிப் பறிப்பதை அனுமதிப்பதும் நல்லதல்ல. இப்படியாக, தீமையை நாம் எதிர்க்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கும் அநேகக் காரியங்கள் உண்டு என்பது இவர்கள் நம்பிக்கை.

தனிநபர்கள் தங்கள் சொந்த உரிமைகளையும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கும் கூட

குற்றவாளிகளின் வன்முறையை எதிர்த்து நிற்கலாம் என்று இக்கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். இவர்கள், இயேசுவின் சில போதனைகள், கருத்தைத் தெளிவாக்கவும் வலியுறுத்தவும் உயர்வு நவிற்சி அணியில் அமைந்திருந்தன, இவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை பொருள் கொள்ளக் கூடாது என்கின்றனர். இதற்கு ஓர் உதாரணம் மத்தேயு 5:29-30.

இயேசுவின் நாட்களில் வாழ்ந்த எந்தப் போதகனும் இப்படி உயர்வு நவிற்சி அணியைப் பயன்படுத்திப் போதிப்பது வழக்கமே. யாரும் சவால் விட்டாலும் கூட கிறிஸ்தவர்கள் பிறரோடு சண்டை, சச்சரவுகளில் ஈடுபடக் கூடாது என்பதை இவர்கள் ஒத்துக் கொள்கின்றனர் (மத்தேயு 5:39). என்றாலும் யாரோ நமக்குத் தீங்கிழைக்கவோ அல்லது நம்மைக் கொல்லவோ முற்பட்டால் நம்மைத் தற்காத்துக் கொள்வதற்காகச் சண்டையிடுவது சரியே என்கின்றனர். கிறிஸ்தவர்கள் தங்கள் பகைவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும், உண்மையிலேயே தேவையில் இருப்பவர்கள் மீது கருணை காட்டவும், அவர்கள் கேட்பதைக் கொடுக்கவும் வேண்டும் என்பதையும் இவர்கள் ஒத்துக் கொள்கின்றனர் (மத்தேயு 5:43-44; லூக்கா 6:30-36). ஆனால் தேவையில் இராத ஒருவர் கேட்கிறார் என்பதற்காகவோ, அல்லது திருட முயன்றதற்காகவோ நாம் நமது பணத்தை அல்லது சொத்துக்களை எல்லாம் அவருக்குக் கொடுத்து விட வேண்டியதில்லை.

இக்கிறிஸ்தவர்கள் காவல்துறை, படை மற்றும் அரசுப் பதவிகளில் சேருவது பற்றிய இரண்டாம் வகை கண்ணோட்டத்தின் அனைத்து வாதங்களையும் அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர். இப்படிப் பங்கு பெறுவது ஏற்புடையது மட்டுமல்ல, தேவ சித்தமாகவும் இருக்கலாம்

என்று நம்புகின்றனர். இந்த மூன்று முக்கியக் கண்ணோட்டங்களிலும் சிலச் சில கருத்துக்கள் சரியானவை என்று சில கிறிஸ்தவர்கள் தீர்மானிக்கலாம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆழமான வேத ஆராய்ச்சி, தியானம், ஜெபம் இவற்றுக்குப் பிறகும் பரிசுத்த ஆவியானவரின் துணையுடனுமே இவ்விஷயங்களில் ஒரு முடிவுக்கு வர வேண்டும். சபை வரலாறு நெடுகிலும் முதிர்ந்த ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் இவ்விஷயங்களில் கருத்து வேறுபட்டுள்ளனர். நாம் எந்தக் கருத்தைக் கொண்டிருந்தாலும் சரி, வேறு கண்ணோட்டம் உடையவர்களைக் குற்றம் சொல்லவோ, இவ்விஷயங்களைப் பற்றிச் சண்டை போடவோ கூடாது.

உபத்திரவம் - நமது மறுமொழி தீமையை எதிர்த்து நிற்பதுடன் சம்பந்தப் பட்ட ஒரு கேள்வி விசுவாசிகள் உபத்திரவப்படுத்தப்படுவது குறித்ததாகும். உபத்திரவம் என்பது நமது நற்செயல்கள் நிமித்தமாகவோ அல்லது இயேசு கிறிஸ்துவில் நமது விசுவாசத்தின் காரணமாகவோ மற்றவர்கள் நம்மை வதைக்கின்ற பாடுகள் ஆகும் (மத்தேயு 5:10-11; லூக்கா 6:22; 1 பேதுரு 2:20). எல்லாக் கிறிஸ்தவர்களுமே ஏதாவது ஒரு வகையில் துன்பப் படுத்தப் படுவார்களென புதிய ஏற்பாடு கற்பிக்கின்றது (மாற்கு 13:9; லூக்கா 21:12; 2 தீமோத்தேயு 3:12). கிறிஸ்தவர்களாக நாம் உபத்திரவத்தை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் இயேசு நமக்குப் போதித்தார்.

நாம் பயப்படக் கூடாது என்றும் (மத்தேயு 10:26), அதற்காகச் சந்தோஷப் பட்டுக் களிகூர வேண்டும் என்றும் (மத்தேயு 5:10-12) சொன்னார். பவுல் தான் பாடுகளில் களி கூருவதாகவும், காரணம் அதன் மூலம் தான் தேவ கிருபையை அனுபவிப்பதாகவும், அந்தக் கிருபை அவர் எதையும் சகிப்பதற்குப் போதுமானது என்றும் கூறினார் (2 கொரிந்தியர் 12:7-10), எனினும் நாம் சர்ப்பங்களைப் போல

வினாவுள்ளவர்களாகவும், எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் என்றும் இயேசு சொன்னார் (மத்தேயு 10:16-17).

உபத்திரவப்படுத்துகிறவனைப் பொறுத்த வரை, நாம் நம்மைத் துன்பப் படுத்துகிறவர்களை ஆசீர்வதிக்க வேண்டியதே அன்றி சபியாமல் இருக்கவும் (ரோமர் 12:14). அவர்களிடம் அன்பு கூரவும், அவர்களுக்காக ஜெபிக்கவும் (மத்தேயு 5:44) கட்டளை பெறுகின்றோம். நாம் அரசாங்க அதிகாரிகள் முன்பாகவும் நீதிமன்றங்களிலும் நிறுத்தப் படலாம், சிறைகளுக்கு அனுப்பப் படலாம், ஆயினும் அவர்கள் முன்னால் என்ன பேசுவது என்பதை முன்கூட்டியே நினைத்துக் கலங்க வேண்டியதில்லை, ஏனெனில் நாம் பேச வேண்டியது இன்னது என்று அந்தச் சரியான வேளையிலே பரிசுத்த ஆவியானவர் மூலமாக இயேசு நமக்குச் சொல்லித் தருவார் (மாற்கு 13:9-11; லூக்கா 21:12-19).

இயேசுவில் விசுவாசம் வைத்தற்காக நாம் தாக்கப் படுவோம் என்றால் நாம் திருப்பிச் சண்டை போடும்படி அவர் கூறவில்லை. தாம் கைது செய்யப் படுவதற்கு முன் தமது சீஷர்களைப் பார்த்து பட்டயங்கள் வாங்கிக் கொள்ளுமாறு சொன்ன போதிலும் (லூக்கா 2:35-38), தம்மைப் பாதுகாப்பதற்கு அந்தப் பட்டயங்களை அவர்கள் பயன்படுத்த அவர் அனுமதிக்கவில்லை (லூக்கா 22:51). மாறாக, பட்டயத்தை எடுப்பவர்கள் பட்டயத்தாலே மடிவார்கள் என அவர்களை எச்சரித்தார் (மத்தேயு 26:52). இயேசுவில் தங்களது விசுவாசத்தை வைத்ததற்காக உபத்திரப் படுத்தப் படும் விசுவாசிகள் எந்தச் சூழ்நிலையிலும் தங்களைக் காத்துக் கெள்ளும் பொருட்டு வன்முறையில் ஈடுபடக் கூடாது என்றே பெரும்பாலான கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.

**தாமஸ் ஹேல்**

**சுருக்கம்**

*இயேசுவின் இந்தக் கடினமான போதனைகளைப் பற்றி நாம் என்ன நினைத்தாலும் சரி, நம்மாலான வரை ஒருவரோடொருவர் சமாதானமாக வாழ வேண்டும் என்பதை எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒத்துக் கொள்கின்றனர் (எபிரெயர் 12:14). ஆண்டவரின் இராஜ்யம் இப்பூமியில் நிலைநாட்டப் படப் போகின்ற, மனிதர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிக்கின்ற, ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதை நிறுத்துகின்ற, ஜாதிகள் இனி யுத்ததைக் கற்பதை விட்டு விடுகின்ற அந்த நாளுக்காக நாம் அனைவருமே ஆவலாய்க் காத்திருக்கிறோம் (ஏசாயா 2:4; மீகா 4:3). அதுவரை, கூடுமானால் உங்களால் ஆன மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாய் இருங்கள் (ரோமர் 12:18).*

# 16. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

**முக்கிய வசனங்கள்**

*எசேக்கியேல் அதிகாரங்கள் **37-47** இஸ்ரேலின் சீரமைப்பு, படையெடுப்பு மற்றும் புதிய தேவாலயம். தானியேல் அதிகாரங்கள் **7-12** எதிர்காலம் பற்றிய தானியேலின் தரிசனங்கள். மத்தேயு அதிகாரம் **24** கடைசி காலத்தின் அடையாளங்கள். மாற்கு அதிகாரம் **13** கடைசி காலத்தின் அடையாளங்கள்.*

*லூக்கா **17:20-37; 21:5-36** தேவனுடைய இராஜ்யத்தின் வருகை. **1** கொரிந்தியர் **15:12-58** சரீர உயிர்த்தெழுதல்.*

***1** தெசலோனிக்கேயர் **4:13-18** கர்த்தருடைய வருகை.*

***2** தெசலோனிக்கேயர் **2:1-10** கர்த்தருடைய வருகைக்கு முன் அக்கிரமக்காரனுடைய வருகை.*

***2** பேதுரு **3:3-13** கர்த்தருடைய நாளில் அக்கினியால் எரிந்து அழிந்து போதல். **1**யோவான் **2:18; 4:1-3** அந்திக் கிறிஸ்துவும் அந்திக் கிறிஸ்துவின் ஆவியும்.*

*வெளிப்படுத்தல் அதிகாரங்கள் **6-22** தேவ கோபாக்கினை, மனிதரின் பாடுகள், அந்திக் கிறிஸ்துவின் கிரியை, கிறிஸ்துவின் ஜெய கம்பீர ஆளுகை பற்றிய தரிசனங்கள்.*

*வேத வசனங்களில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இயேசு கிறிஸ்து "ஜீவனுள்ளோரையும் மரித்தோரையும் நியாயம் தீர்க்கத் திரும்பவும் வருவார்" என எல்லாக் கிறிஸ்தவர்களுமே விசுவாசிக்கின்றனர் (மத்தேயு **25:31-46;** வெளிப்படுத்தல் **20:11-15;** பொதுவான தலைப்புகள்:*

முன்னுரை பார்க்க). இயேசு தமது சொந்த மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் மட்டுமல்ல (மத்தேயு 16:21; மாற்கு 8:31-32; 9:9-10; 10:33-34), தமது இரண்டாம் வருகையையும் முன்னறிவித்தார் (மத்தேயு 16:27; 25:31; மாற்கு 8:38; 13:26). அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பின்னர், இவ்வுலகிலே நாற்பது நாட்கள் தங்கியிருந்து தமது சீஷர்களை உற்சாகப் படுத்தினார் (அப்போஸ்தலர் 1:3). அவருடைய பரமேறுதலைப் பார்த்துக் கொண்டு நின்ற சீஷர்களுக்கு அவர் எப்படி ஏறிப் போனாரோ அப்படியே திரும்பவும் வருவார் என்ற ஒரு வாக்கு அருளப்பட்டது (லூக்கா 24:51; அப்போஸ்தலர் 1:9-11 பார்க்க). ஆதியிலிருந்தே, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கவும் எதிர்பார்த்திருக்கவும் வேண்டுமென அப்போஸ்தலர்கள் விசுவாசிகளுக்குக் கற்பித்து வந்தனர் (அப்போஸ்தலர் 3:19-21; தீத்து 2:13; எபிரெயர் 9:28).

இயேசு பரலோகத்தில் நமக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப் போவதாகவும், ஆயத்தம் பண்ணின பின்பு அவர் இருக்கிற இடத்திலே நாமும் இருக்கும்படி மறுபடியும் வந்து நம்மைத் தம்மிடத்தில் சேர்த்துக் கொள்ளப் போவதாகவும் வாக்களித்துச் சென்றார் (யோவான் 14:2-3). இயேசு தம்மைப் பின்பற்றுவோரைக் கடைசி நாளில் எழுப்புவதாகவும் வாக்குத்தத்தம் செய்தார் (யோவான் 6:39-40,54). கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள். அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப் படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப் படுவார்கள். அதன் பின்பு முடிவு உண்டாகும் என்று பவுல் எழுதுகின்றார் (1 கொரிந்தியர் 15:22-24). பவுல் நமது சரீர உயிர்த்தெழுதலை நமது புத்திர சுவிகாரத்தின் நிறைவு என்றும், அப்பொழுது நமது இரட்சிப்பு முழுமை பெற நாம்

*மகிமையுடைவோம் என்றும் விவரிக்கிறார் (ரோமர் 8:18-25, 30; பிலிப்பியர் 3:20-21; பொதுவான தலைப்பு : இரட்சிப்பின் வழி - பார்க்க).*

*இந்த உயிர்த்தெழுதல் சடுதியாய் நடைபெறும் ஒரு சம்பவம். 1 தெசலோனிக்கேயர் 4:13- 17இல், இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டு வருவார் என்று பவுல் எழுதுகின்றார். ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். மரித்தவர்களுக்கு சாவாமை உள்ள புதிய சரீரங்கள் கொடுக்கப் படும், உயிரோடிருப்பவர்களுக்கு அவர்களது பழைய சரீரங்கள் புதிதாய் மாறும்; இதெல்லாம் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே, நடைபெறும் (1கொரிந்தியர் 15:51-53).*

*வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே தமது தூதர்களை அனுப்புவது பற்றியும், அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களை உலகெங்கிலும் இருந்து கூட்டிச் சேர்ப்பது பற்றியும் இயேசுவும் குறிப்பிட்டார் (மத்தேயு 24:30-31; மாற்கு 13:26-27). அப்பொழுது ஒரே படுக்கையில் படுத்திருக்கும் (அல்லது வயலில் வேலை செய்து கொண்டிருக்கும் அல்லது எந்திரம் அரைத்துக் கொண்டிருக்கும்) இருவரில் ஒருவர் ஏற்றுக் கொள்ளப் படுவார், அடுத்தவர் கைவிடப் படுவார் என்றும் அவர் எச்சரித்தார் (மத்தேயு 24:40-41; லூக்கா 17:34-35). அநேகர்*

இச்சம்பவங்களை திருச்சபை "எடுத்துக் கொள்ளப் படுதல்" என்று குறிப்பிடுகின்றனர்.

இரண்டாம் வருகை மற்றொரு விதத்திலும் முக்கியமானது. அது தேவன் பூமிக்கு நீதியையும் சமாதானத்தையும் கொண்டுவரும் வேளையாகும். பழைய ஏற்பாடானது இயேசு கிறிஸ்துவை மேசியாவாகக் காட்டும் அநேக தீர்க்கதரிசனங்களைக் கொண்டது. சில தீர்க்கதரிசனங்கள் மக்களின் பாவங்களுக்காகவும் துக்கங்களுக்காகவும் அவர் மரிப்பார் என முன்னறிவித்தன (சங்கீதம் 22:1-31; ஏசாயா 53:1-12; தானியேல் 9:25,26); இவையெல்லாம் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேசு சிலுவையில் அறையுண்டு மரித்து, உயிரோடு எழுந்தபோது நிறைவேறின. வேறு சில தீர்க்கதரிசனங்கள் மேசியா, தம்மால் தெரிந்து கொள்ளப் பட்ட யூத ஜனங்களுக்காக ஒரு நீதியின் இராஜ்யத்தை நிலைப்படுத்துவார் என முன்னறிவித்தன (ஏசாயா 2:1-4; 11:1-16; எரேமியா 23:3-8; எசேக்கியேல் 37:15-28); இவை இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் நிறைவேறவில்லை.

சில வேத பகுதிகள் இரண்டாம் வருகை சமீபம் (எபிரெயர் 10:25; யாக்கோபு 5:9;1 யோவான் 2:18; வெளிப்படுத்தல் 22:7,12,20), ஆனால் அந்தக் குறிப்பிட்ட நாளையோ, வேளையையோ யாரும் அறிய மாட்டார்கள் என்கின்றன (மத்தேயு 24:36,44; மாற்கு 13:32-35). மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும், அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும், மனுஷகுமாரன் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள் (மத்தேயு 24:27,30; லூக்கா 17:24; வெளிப்படுத்தல் 1:7). இயேசு தமது வருகையை திருடன் ஒரு வீட்டைக்

கன்னமிட்டுத் திருடுகிறதற்கும், எந்த முன்னறிவிப்பும் இன்றி எஜமான் தன் வீட்டுக்குத் திரும்ப வருகிறதற்கும் ஒப்பிட்டுப் பேசினார் (மத்தேயு 24:42-51; மாற்கு 13:34-37; வெளிப்படுத்தல் 3:3; 16:15). பவுலும் பேதுருவும் இதே போன்றே எச்சரிப்புகளைக் கொடுத்தனர் (1 தெசலோனிக்கேயர் 5:1-4; 2 பேதுரு 3:10).

ஆயினும், இயேசுவின் வருகை சமீபம் என்பதைக் காட்டக் கூடிய சில அடையாளங்கள் உண்டு என்றும் வேதம் போதிக்கிறது (மாற்கு 13:28-29). "இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகம் எங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப் படும், அப்போது முடிவு வரும்" என்றார் இயேசு (மத்தேயு 24:14; மாற்கு 13:10). கடைசி நாட்களில் அக்கிரமக்காரரர் இன்னும் கேடாவார்கள், அநேகர் விசுவாசத்தை விட்டு வழுவிப் போவார்கள், இரண்டாம் வருகையைக் குறித்து மனிதர்கள் பரிகாசம் செய்வார்கள் (மத்தேயு 24:9-14; 2 தீமோத்தேயு 3:1-7,13; 2 பேதுரு 3:3-10; யூதா 17-19). யுத்தங்களும், பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் பூமியிலே உண்டாகும் என்றும், கூடவே சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும் என்றும் இயேசு முன்னறிவித்தார் (மாற்கு 13:24-28; லூக்கா 21:10-11, 25-26; வெளிப்படுத்தல் 6,8,9,16 அதிகாரங்கள்) இந்தத் துன்ப காலம் மகா உபத்திரவ காலம் (அல்லது) கொடுந்துன்ப காலம் என அழைக்கப் படுகிறது (தானியேல் 12:1; மாற்கு 13:19-20; வெளிப்படுத்தல் 7:14). மக்களை வஞ்சிக்கும் படியாக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்யக் கூடிய கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் வருவார்கள் என இயேசு எச்சரித்தார் (மாற்கு 13:6, 21-23). அநேக அந்திக்கிறிஸ்துக்கள் வந்திருக்கிறார்கள் என்று மட்டுமல்ல,

ஒரு குறிப்பிட்ட அந்திக் கிறிஸ்துவும் வருவான் என்பதாக யோவான் எழுதினார் (1யோவான் 2:18-22; 4:1-3).

தெசலோனிக்கேயருக்கு, கர்த்தருடைய நாள் இன்னும் வரவில்லை என்பதை உறுதிப் படுத்தும் வண்ணமாக கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப் பட்டால் ஒழிய அந்த நாள் வராது என்று பவுல் எழுதினார்; அந்தப் பாவ மனுஷன் சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் வருவான், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத் தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் (2 தெசலோனிக்கேயர் 2:1-10; வெளிப்படுத்தல் 13:14-15). தேவாலயத்தில் காணப்படும் இந்த விக்கிரகமே, இயேசு முன்னுரைத்த' பாழாக்குகிற அருவருப்பாய் இருக்க வேண்டும் (தானியேல் 9:26-27; 12:11; மத்தேயு 24:15; மாற்கு 13:14).

வெளிப்படுத்தல் 6-16 அதிகாரங்கள் மகா உபத்திரவங்களையும் கொடுந்துன்பங்களையும் பற்றிய தரிசனங்களால் நிறைந்து காணப் படுகின்றன, அவற்றின் முடிவில் இயேசு கிறிஸ்து நீதியின் இராஜ்யத்தை நிலை நாட்ட பூமிக்குத் திரும்பி வருகிறார். அதிகாரங்கள் 13-19, ஓர் அரசியல் ஆட்சியாளனையும் (கடலிலிருந்து எழும்பி வரும் மிருகமாகச் சித்தரிக்கப்படுபவன்) அந்திக் கிறிஸ்துவுக்காகப் பொல்லாத கிரியைகளை நடப்பிக்கின்ற ஒரு கள்ளத் தீர்க்கதரிசியையும் குறித்துப் பேசுகின்றன (தானியேல் 7:24-25; 9:26-27; 11:36-45; 12:1-13; மாற்கு 13:14,22; 2 தெசலோனிக்கேயர் 2:1-10; 1 யோவான் 2:18). இந்த அதிபதி பூமியின் திரளான சேனைகளை அர்மகெதோன் என்ற இடத்தில் கூட்டிச் சேர்ப்பான், அங்கே அவர்கள், மறுபடியும் பூமிக்கு வரும் கிறிஸ்துவால் முறியடிக்கப் படுவார்கள் (வெளிப்படுத்தல் 16:16; 17:14;

*19:11-21).* எசேக்கியேல் *38-39* அதிகாரங்களும், *2* தெசலோனிக்கேயர் *2:8* உம் கூட இந்த யுத்தத்தையே வருணிப்பதாகத் தோன்றுகிறது.

ஜனங்களை மோசம் போக்க முடியாதபடிக்குப் பிசாசானவன் ஆயிரம் ஆண்டுகள் பாதாளத்தில் தள்ளி அடைத்து வைக்கப் படுவது பற்றி வெளிப்படுத்தல் *20:1-7* கூறுகிறது. இதுவே ஆயிரமாண்டு அரசாட்சி என்று குறிப்பிடப் படுகிறது. (மிலெனியம் - இலத்தீன் மொழி - ஆயிரம் ஆண்டுகள்). கொடுந்துன்ப காலத்தில் மிருகத்தின் சிலையை வணங்க மறுத்ததற்காகக் கொல்லப் பட்டோரின் ஆத்துமாக்கள் மீண்டும் உயிரோடு எழுப்பப்படும். மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. உயிர்த்து எழுந்தவர்கள் கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். இந்த ஆயிரமாண்டு காலத்துக்குப் பிறகு சாத்தான் கொஞ்சக் காலம் விடுதலையாகிறான். சுற்றித் திரிந்து நாடுகளை மோசம் போக்கி, ஜனங்களை தேவனோடும் அவருடைய மக்களோடும் யுத்தம் பண்ணுவதற்காகக் கூட்டிச் சேர்க்கிறான். வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போடுகிறது. சாத்தான் நரகத்தில் தள்ளப் படுகிறான், மரித்தோராகிய சிறியோரும் பெரியோரும் இறுதி நியாயத் தீர்ப்பு அடைகின்றனர். ஜீவ புஸ்தகத்திலே எழுதப் பட்டவனாகக் காணப் படாதவன் எவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப் பட்டான் (வெளிப்படுத்தல் *20:7-15).*

இரண்டாம் வருகை பற்றிய மூன்று முக்கியக் கண்ணோட்டங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய வேத பகுதிகள் அநேகம் இருந்த போதிலும், பல விஷயங்கள் மறைவாகவே உள்ளன. கடைசி நாட்களின் சம்பவங்களை வரிசைக் கிரமமாகத் தொகுத்துக் கூறும்

முழுமையான வேதபகுதி என்று எதுவுமேயில்லை. இதன் காரணமாக, இரண்டாம் வருகை பற்றி மூன்று முக்கியக் கருத்துக்கள் நிலவுகின்றன. வெளிப்படுத்தல் 20ஆம் அதிகாரத்தில் காணப்படும் ஆயிரமாண்டு அரசாட்சி எப்போது இடம்பெறும் என்ற விஷயத்தில் இந்த மூன்று கண்ணோட்டங்களும் வேறுபடுகின்றன.

முதலாவது கண்ணோட்டம், "ஆயிரமாண்டு அரசாட்சி என்று பூமியில் எதுவும் கிடையாது"; பதிலாக, ஏற்கனவே மரித்துப் போன விசுவாசிகளுடன் சேர்ந்து தற்போது கிறிஸ்து பரலோகத்தில் நடத்திக் கொண்டிருக்கும் ஆளுகையையே இத்தரிசனம் குறிக்கிறது என்று சொல்கிறது. இந்தக் கண்ணோட்டம் உடைய கிறிஸ்தவர்கள் "ஆயிரம்" என்பது முழுமையைக் குறிக்கும் எண் எனவும், இது இயேசுவின் முதலாம் மற்றும் இரண்டாம் வருகைகளுக்கு இடைப்பட்ட காலத்தையே குறிக்கும் எனவும் நம்புகின்றனர். சாத்தான் என்று சொல்லப் பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தைக் கட்டி வைப்பது என்பது (வெளிப்படுத்தல் 20:2), கிறிஸ்துவின் முதலாம் வருகையில் ஆவிக்குரிய விதத்தில் சாத்தான் முறியடிக்கப் பட்டதற்கும் பரிசுத்த ஆவியானவரின் தடை செய்கிற வல்லமைக்கும் ஒரு அடையாளமாகக் கூறப் படுகிறது என்பது இவர்கள் கருத்து (லூக்கா 10:18; 2 தெசலோனிக்கேயர் 2:7; 1யோவான் 3:8). இந்தக் கிறிஸ்தவர்கள், மரித்துப் போன விசுவாசிகளின் ஆத்துமாக்கள் (வெளிப்படுத்தல் 20:4) இப்பொழுதே கிறிஸ்துவுடன் தான் உள்ளன என்பதையும் (2 கொரிந்தியர் 5:6-8; பிலிப்பியர் 1:23-24; 1 தெசலோனிக்கேயர் 4:14; 2 பேதுரு 1:13-14), தேவனுடைய இராஜ்யம் ஏற்கனவே வந்தாயிற்று (மத்தேயு 11:12; 12:28; கொலோசெயர் 1:13), ஆனால் அது கண்ணுக்குப் புலப்படுகின்ற, இவ்வுலகத்திற்குரிய இராஜ்யமல்ல என்பதையும் (லூக்கா 17:20-21; யோவான் 18:36-37 ரோமர் 14:17)

வலியுறுத்துகின்றனர். தானியேலின் எழுபது வாரங்கள் தீர்க்கதரிசனம் (தானியேல் 9:24-27) இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த திருச்சபையின் தோற்றம், யூதர்களின் தேவாலயத்தில் தனது உருவச் சிலையை ஸ்தாபிக்க முயன்ற ரோமப் பேரரசனின் முயற்சி, எருசலேம் மற்றும் அதன் தேவாலயத்தின் அழிவு, அதன் விளைவாக முடிவுக்கு வந்த பலிகள் என்னும் சம்பவங்களிலேயே நிறைவேறி விட்டது என இவர்கள் நம்புகின்றனர்.

இந்தக் கண்ணோட்டம் உள்ளவர்கள் முதலாம் உயிர்த்தெழுதல் (வெளிப்படுத்தல் 20:5), ஆவிக்குரிய உயிர்த்தெழுதல் மட்டுமே எனவும், காரணம் விசுவாசிகளாகிய நம்மை தேவன் ஏற்கனவே கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்து நம்மை அவரோடே கூட எழுப்பி .... உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்து விட்டார் எனவும் சுட்டிக் காட்டுகின்றனர் (எபேசியர் 2:4-6; 5:14; கொலோசெயர் 3:1).

இந்த முதலாவது கண்ணோட்டத்தின் படி, "இரண்டாம் உயிர்த்தெழுதல்'' என்பது சரீர உயிர்த்தெழுதல் ஆகும், இது கிறிஸ்து பூமிக்குத் திரும்ப வருகையில் நடைபெறும். இந்தக் கிறிஸ்தவர்கள் ஒரேயொரு சரீர உயிர்த்தெழுதல் மட்டுமே உண்டு என்றும் அதாவது, ஒரே சமயத்தில் விசுவாசிகளும் அவிசுவாசிகளும் உயிர்த்தெழுவர் - ஒரேயொரு கடைசி நியாயத்தீர்ப்பு மட்டுமே உண்டு என்று நம்புகின்றனர் (தானியேல் 12:2; மத்தேயு 25:31-46; யோவான் 5:28-29; வெளிப்படுத்தல் 20:11- 15). விசுவாசிகள் கிறிஸ்துவுக்கு எதிர்கொண்டு போய் நடுவானில் அவரைச் சந்திப்பார்கள் (1 தெசலோனிக்கேயர் 4:17), பிறகு உடனடியாகவே பூமிக்கு வந்து கடைசி யுத்தத்தில் பங்கு பெற்று சாத்தானையும் அவன் சேனைகளையும்

என்றென்றைக்குமாய் முறியடிப்பார்கள் (வெளிப்படுத்தல் 19:11-21; 20:7-10). இவர்கள் பழைய ஏற்பாட்டில் யூதர்களுக்கு ஒரு இராஜ்யம் இப்பூவுலகில் ஏற்படுத்தப் படுவது பற்றிய தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் முழுமையாகக் கிறிஸ்தவ திருச்சபைக்கே கொடுக்கப் பட்டவை என நம்புகின்றனர் (யோவேல் 2:28-32 ஐ அப்போஸ்தலர் 2:14-21 உடனும், சகரியா 9:9-13 ஐ மத்தேயு 21:1-9 உடனும், மல்கியா 4:1-6ஐ மத்தேயு 11:11-14; 17:10-13; ரோமர் 4:16; கலாத்தியர் 4:22- 31 உடனும் ஒப்பிட்டுப் பார்க்க.) ஆகவே, இவர்கள் இத்தரிசனங்கள் எல்லாம் ஒன்று, தற்காலத் திருச்சபை யுகத்திலேயே நிறைவேறி விட்டன என்றோ, அல்லது வெளிப்படுத்தல் 21-22 கூறும் புதிய வானம் புதிய பூமியில் மட்டுமே நிறைவேறும் என்றோ விசுவாசிக்கின்றனர்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய இரண்டாவது கண்ணோட்டம், “பூமியில் வெகு நீண்ட சமாதானமும் செழிப்பும் நிறைந்த ஒரு கால கட்டத்திற்குப் பிறகே " இயேசுவின் வருகை சம்பவிக்கும், அக்காலத்தில் உலகின் பெரும்பகுதி தேவனிடமாகத் திரும்பி கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் என்கிறது. இந்த நீண்ட காலம் ஒருவேளை துல்லியமாக ஓராயிரம் ஆண்டுகளாக இல்லாதிருக்கலாம். இந்த இரண்டாவது கண்ணோட்டம் உடையவர்கள் கிறிஸ்துவின் முதல் வருகையுடன் தேவனுடைய இராஜ்யம் ஆரம்பித்து விட்டது என்ற முதல் கண்ணோட்டத்தின் கருத்தை ஒத்துக் கொள்கின்றனர், ஆனால் உலகமானது கொஞ்சம் கொஞ்சமாக கிறிஸ்துவின் ஆளுகை சபை மூலமாகப் பெருகிக் கொண்டே போவதைக் காணும் என்று நம்புகின்றனர் (மத்தேயு 28:18; எபேசியர் 1:19-23). இராஜ்யத்தின் சுவிசேஷம் (மத்தேயு 24:14) பெரும்பாலான மக்களை ஆதாயம் செய்து கிறிஸ்துவண்டை கொண்டு வரும், திருச்சபை மூலமாக சமாதானமும்

ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் நிறைந்த ஓராயிரம் ஆண்டுகள் (அல்லது மிக நீண்ட காலம்) வரும் (யோவேல் 2:28-32; அப்போஸ்தலர் 2:17-21). கடைசி நாட்களில் ஜாதிகள் யுத்தம் செய்வதை நிறுத்தி தேவனுடைய அறிவைத் தேடும் என்பது போன்ற ஏராளமான தீர்க்கதரிசனங்களை இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர் (ஏசாயா 2:1-4; மீகா 4:1-5; சகரியா 8:20-23). வேறு அநேகத் தீர்க்கதரிசனங்களும் இந்த நீண்ட கால கட்டத்தைக் குறிப்பால் காட்டுகின்றன. இயேசு பூமிக்கு மீண்டும் வருவதற்கு முன் தமது திருச்சபை மூலமாகத் தமது ஆட்சியை நிறுவுவார் என்று இவர்கள் நம்புகின்றனர் (சங்கீதம் 2:72; ஏசாயா 11:6-10; எசேக்கியேல் 37:15-28; சகரியா 9:9-10). இந்த இரண்டாம் கண்ணோட்டம் முதலாம் கண்ணோட்டத்தைப் போலவே கிறிஸ்துவின் வருகை, சரீர உயிர்த்தெழுதல், இறுதி நியாயத் தீர்ப்பு ஆகிய அனைத்தும், வெளிப்படுத்தல் 21-22 ஆம் அதிகாரங்களில் விவரிக்கப் பட்டுள்ள புதிய வானமும் புதிய பூமியும் ஏற்படுவதற்குச் சற்றே முன்னர், ஒரு நொடிப் பொழுதிலே ஒன்றாக நடைபெறும் என்று கருதுகிறது.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய மூன்றாவது கண்ணோட்டம் "பூமியில் ஆயிரமாண்டு அரசாட்சி ஏற்படுவதற்கு முன்பே" இயேசு பூமிக்குத் திரும்ப வருவார் எனவும், இந்தக் காலகட்டத்தில் அவரோடு சேர்ந்து ஆளும்படியாக அத்தனை விசுவாசிகளும் உயிரோடு எழுப்பப் படுவர் எனவும் நம்புகிறது. இந்த மூன்றாவது கருத்தையுடைய கிறிஸ்தவர்கள், தீர்க்கதரிசிகள் குறிப்புகளாக, அடையாளங்களாகப் பேசியது உண்மைதான் என்று ஒத்துக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் அடையாளங்களாகப் பேசிய அனைத்தும் ஒரு நாளிலே உண்மையாகவே நடைபெறும் என்பதையும் வலியுறுத்துகின்றனர். ஆகவே, இவர்களில் பெரும்பாலானோர் யூதர்களுக்கு அருளப் பட்ட பழைய

ஏற்பாட்டின் வாக்குத்தத்தங்கள் எல்லாம் வரப் போகின்ற அந்த ஆயிரமாண்டு அரசாட்சியில் நிறைவேறியே தீரும் என்று நம்புகின்றனர் (ஏசாயா 11:1-16; 65:18-25; எரேமியா 23:5- 8; எசேக்கியேல் 37:15-28; சகரியா 14:9-21).

ரோமர் 11:25-29 இல் பவுல், ஒரு நாளிலே யூதர்கள் சுவிசேஷத்துக்குச் செவி கொடுப்பார்கள் என்று காட்டுவதற்குப் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களைச் சுட்டிக் காண்பிக்கிறார். மேலும், கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசனங்களில் கொடுக்கப் பட்டுள்ள கால கட்டங்கள் உவமானமோ அடையாளமோ அல்ல, உண்மையான கால அளவுகளைக் குறிப்பவை என்றும் நம்புகின்றனர். வெளிப்படுத்தல் 6-19 அதிகாரங்கள் உண்மையாகவே வரப் போகின்ற ஒரு கொடுந்துன்ப காலத்தை விவரிக்கின்றன. அது மிகச் சரியாக கிறிஸ்து தமது ஆயிரமாண்டு அரசாட்சிக்காக பூமிக்கு வருவதற்கு முன்பு இடம்பெறும் என்று இவர்கள் நம்புகின்றனர் (தானியேல் 12:1; மாற்கு 13:24-27; லூக்கா 21:10-11, 25-27). இவர்கள் தானியேல் கூறும் "எழுபது வாரங்கள்'' வரலாற்றில் உண்மையாகவே 490 ஆண்டுகளைக் குறிக்கும் என்று நம்புகின்றனர் (தானியேல் 9:24- 27).

முதல் அறுபத்தொன்பது "வாரங்கள்" (அல்லது 483 வருடங்கள்), எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல் ஆரம்பிக்கின்றன. அது கி.மு. 445 இல் நடைபெற்றது (நெகேமியா 2:1-9), அது பிரபுவாகிய மேசியா' வரும் வரை தொடரும். மேசியா சங்கரிக்கப் படுவார் (இயேசுவின் சிலுவை மரணத்தில் நிறைவேறியது), எருசலேமும் அதன் ஆலயமும் அழிக்கப் படும் (ரோமப் படையினரால் கி.பி. 70 இல் நிறைவேறியது). இக்கிறிஸ்தவர்கள், தானியேலின் கடைசி வாரம், அதாவது எழுபதாவது வாரமான கடைசி

*ஏழு ஆண்டுகள் கி.பி. முதலாம் நூற்றாண்டில் நிறைவேறவில்லை, அது கிறிஸ்து இப்பூமியில் தமது இராஜ்யத்தை நிலை நாட்டத் திரும்பி வருவதற்கு முன்னான அந்தக் கடைசி ஏழாண்டுகள் எனும் கால கட்டத்திலேயே நிறைவேறும் என்று நம்புகின்றனர்.*

*இந்த மூன்றாவது கண்ணோட்டம் தானியேல் கூறும் ராஜா அல்லது வரப்போகிற பிரபு என்பவனும் (தானியேல் 7:24,25; 9:26,27; 11:36), பவுல் கூறும் கேட்டின் மகன் அல்லது அக்கிரமக்காரன் என்பவனும் (2 தெசலோனிக்கேயர் 2:1-10) ஒருவனே, வெளிப்படுத்தல் 13-19 அதிகாரங்கள் கூறும் மிருகம் அல்லது கள்ளத் தீர்க்கதரிசி என்பதும் இவனையே குறிக்கும் என்று கருதுகின்றது. இந்த அதிபதி கொடுந்துன்ப காலத்தின் ஏழாண்டுகளின் மத்தியில் இஸ்ரேலுடனான தனது உடன்படிக்கையை முறித்து தனது சிலைக்கு ஆராதனை செய்யுமாறு அதை யூதர்களின் புதிய பரிசுத்த ஆலயத்தில் வைப்பான் (தானியேல் 9:27; 12:11; மாற்கு 13:14; 2 தெசலோனிக்கேயர் 2:4; வெளிப்படுத்தல் 13:14-15; எசேக்கியேல் 40-47 அதிகாரங்கள்). உபத்திரவ காலத்தில் கணக்கற்ற யூதர்களும், பிற நாடுகளைச் சேர்ந்த எண்ணற்ற புறஜாதி மக்களும் இயேசுவில் விசுவாசம் வைப்பர் (ரோமர் 11:25-31; வெளிப்படுத்தல் 7:4, 9, 14). ஆனால் மிருகத்தின் சிலையை வணங்க மறுத்ததற்காக சித்திரவதைக்கும் மரணத்துக்கும் ஆளாக்கப் படுவர் (வெளிப்படுத்தல் 6:9- 11; 14:3; 15:2-4; 20:4).*

*கொடுந்துன்ப காலத்தின் முடிவில் மிருகத்தின் சேனைகள், வெற்றி வேந்தராம் இயேசு கிறிஸ்துவின் வருகையால் அர்மகெதோன் என்ற இடத்தில் முறியடிக்கப் படும் (சகரியா 14:1-9; வெளிப்படுத்தல் 19:11-21). இந்தக் கிறிஸ்தவர்கள், மத்தேயு 25:31-46 ஆயிர வருட அரசாட்சி ஆரம்பிப்பதற்கு முன், அச்சமயம் பூமியில் வாழ்ந்து*

கொண்டிருப்போரின் நியாயத் தீர்ப்பைப் பற்றி விவரிக்கிறது என்றும், வெளிப்படுத்தல் 20:1-12 இல் குறிக்கப் படும் இரண்டு உயிர்த்தெழுதல்களுமே சரீர உயிர்த்தெழுதலே என்றும், அவற்றுள் முதலாவது, ஆயிரமாண்டு அரசாட்சிக்கு முன் மரித்திருந்த விசுவாசிகளின் உயிர்த்தெழுதல், இரண்டாவது அந்த அரசாட்சிக்குப் பின் நடைபெறும் இறுதி நியாயத் தீர்ப்புக்காக எழுப்பப் படும் அவிசுவாசிகளின் உயிர்த்தெழுதல் என்றும் நம்புகின்றனர். அப்பொழுது பழைய வானமும் பூமியும் அக்கினியினால் அழிக்கப் படும், புதிய வானமும் புதிய பூமியும் தோன்றும் (2 பேதுரு 3:10-13; வெளிப்படுத்தல் 21:1).

இந்த மூன்றாவது கண்ணோட்டம் உடையவர்கள், ஆண்டவரை நடுவானில் சந்திக்கும் படியாக விசுவாசிகள் எப்பொழுது உயிரடைவர் (அல்லது அவர்களது சரீரங்கள் மாறும்) என்ற விஷயத்தில் கருத்து உடன்படுவதில்லை. இவர்களில் அநேகர் தமது இரண்டாம் வருகையில், இயேசு இருமுறை பூமிக்கு வருவார் என நம்புகின்றனர். முதல் முறை வருவது, சடுதியான, வந்த வேகத்தில் திரும்புகின்ற வருகை - இதில் கொடுந்துன்ப நாட்கள் ஆரம்பிப்பதற்குச் சற்றுமுன், அதுவரை இயேசுவில் விசுவாசம் வைத்த அனைவரையும் உயிரோடு எழுப்பிக் கொண்டு செல்லும் படியாக மேகங்கள் மீதில் வருவார் (1 தெசலோனிக்கேயர் 4:17), வந்த வேகத்தில் பரலோகம் திரும்பி, அங்கே ஆட்டுக் குட்டியானவரின் கலியாண விருந்து நடைபெறும் (மத்தேயு 25:1-13; வெளிப்படுத்தல் 19:9). இந்த முதல் வருகை இரவிலே திருடன் வருகிற விதமாய், எதிர்பாராத வேளையில் நடைபெறும் (மத்தேயு 24:42-51; 1 தெசலோனிக்கேயர் 5:1-4; வெளிப்படுத்தல் 3:3). இரண்டாம் முறை வருவது, இயேசு உயிர்த்தெழுந்த தமது விசுவாசிகளுடன் பூமிக்குத் திரும்பி, மிருகத்தைத் தோற்கடித்து, தமது அரசாட்சியை நிலை நாட்டுவதாகும்.

யோவான் 14:2-3 இல் இயேசு நம்மைத் தம்மோடு கூட்டிச் செல்வதற்காக மீண்டும் வருவேன் என வாக்களித்துச் சென்றார். எடுத்துக் கொள்ளப் பட்டவர்கள் மற்றும் கைவிடப் பட்டவர்கள் எனத் திடீரென ஒரு பாகுபாடு ஏற்படுவதை இவ்விசுவாசிகள் சுட்டிக் காட்டுகின்றனர் (மத்தேயு 24:40-41). தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்கவில்லை என்று பவுல் எழுதுகிறார் (1 தெசலோனிக்கேயர் 5:9). ஆகையால் இனி சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நாம் தப்பும் படியாக எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டுமென்று இயேசு சொன்னார் (லூக்கா 21:36). இந்தக் கிறிஸ்தவர்கள், வெளிப்படுத்தல் 20:4-6 மிருகத்தை வணங்க மறுத்ததால் சிரச்சேதம் செய்யப் பட்டவர்களின் உயிர்த்தெழுதல் பற்றியே பேசுகிறது என்று கருதுகின்றனர். உண்மையான விசுவாசிகள் அனைவரும் உயிருடன் எழுப்பப்பட்டு உபத்திரவ காலம் தொடங்கு முன்னதாகவே பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவர் என்றும், வெளிப்படுத்தல் 20:4- உயிர்த்தெழுதல், ஏழாண்டு கால கொடுந்துன்ப நாட்களில் விசுவாசிகளாகி, மரித்தவர்கள் 6 கூறும் மீண்டும் உயிரோடு எழுவது பற்றியது என்றும் இவர்கள் நம்புகின்றனர். மரித்த அவிசுவாசிகளோ கடைசி நியாயத் தீர்ப்பு வேளையில் தான் எழுப்பப் படுவர்.

எனினும், மூன்றாவது கண்ணோட்டம் கொண்ட மற்றவர்கள் (அதாவது, ஆயிர வருட ஆளுகைக்கு முன் இயேசு திரும்பி வருவார் என்போர்), ஏழாண்டு உபத்திரவ காலத்தில் திருச்சபையானது பூமியில் கொடிய பாடுகளை அனுபவிக்கும் என நம்புகின்றனர். இரண்டாம் வருகையின் போது உயிரோடிருக்கும் விசுவாசிகள், மரித்து உயிரோடு எழுந்த விசுவாசிகளுடன் வரும் கிறிஸ்துவை நடுவானில் கண்டு சந்திப்பர் என்பதை இவர்கள் ஒத்துக் கொள்கின்றனர்; ஆனால் இது ஏழாண்டு உபத்திரவ காலத்தின் முடிவில் தான்

*நடைபெறும் என்று இவர்கள் நம்புவதால், இயேசு அப்படியே பூமிக்கு வந்து அர்மகெதோனில் மிருகத்தை முறியடித்து தமது இராஜ்யத்தை நிறுவுவார் என்கின்றனர். மத்தேயு 24:15-31 இல் சடுதியாய் தொனிக்கும் எக்காள சத்தமும், மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்ட விசுவாசிகள் ஒன்று சேர்க்கப்படுவதும், கொடுந்துன்பங்கள் நிறைந்த ஒரு கால கட்டத்தின் முடிவில் கிறிஸ்து எல்லாரும் காணும் விதமாக மகிமையோடும் வல்லமையோடும் திரும்ப வருவதோடு இணைத்தே கூறப் படுவதை இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். லூக்கா 17:26-37இல் ஒருவன் ஏற்றுக் கொள்ளப் படுவதும் அடுத்தவன் கைவிடப் படுவதும் கூடத் திடீரென வரும் அழிவையே காட்டுகிறது என்கின்றனர்.*

*இயேசு உண்மையில் தாம் இருமுறை வரப் போவதாக ஒருபோதும் கூறவில்லை. எனவே கிறிஸ்துவின் வருகை, முதலாம், இரண்டாம் கண்ணோட்டங்கள் கூறுவது போல ஒரே சம்பவம் என்பதை இவர்களும் நம்புகின்றனர்; ஆனால் அவர்களைப் போலன்றி இவர்கள், இரண்டாம் வருகையானது கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன்னரே நடைபெற்று விடும் என்கின்றனர். இக்கிறிஸ்தவர்கள் இரண்டே உயிர்த்தெழுதல்கள் தாம் உண்டு என நம்புகின்றனர் : முதலாவது, உபத்திரவ காலத்திற்குப் பின்பு ஆனால் ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன்பு நடைபெறும் கிறிஸ்துவின் வருகையின் போது அனைத்து விசுவாசிகளும் உயிர்த்தெழுவது; இரண்டாவது, இறுதி நியாயத் தீர்ப்புக்கு முன் மரித்துப் போன அவிசுவாசிகள் உயிர்த்தெழுவது.*

**சுருக்கம்**

*நமது கண்ணோட்டம் எதுவாயினும் இவ்விஷயத்தைக் குறித்து வாக்குவாதம் செய்யவோ, சண்டை போடவோ*

கூடாது. இயேசு கிறிஸ்து அவரோடு நித்தியமாய் நாம் வாழும் படியாக நம்மை உயிரோடு எழுப்பத் திரும்பி வருவார் என்பதை நாம் எல்லாருமே விசுவாசிக்கிறோம். இரண்டாம் வருகையானது நமது தனிப்பட்ட வாழ்விலும், பொது ஊழியத்திலும் நம்மை ஊக்குவிக்க வேண்டும். நமது விசுவாசம் மற்றும் சாட்சியின் விளக்குகள் அணைந்து விடாதபடி காத்துக் கொண்டு அவரைச் சந்திக்க ஆயத்தமாய் இருக்கும் படி எச்சரிக்கப் படுகிறோம் (மத்தேயு 25:1-13). நாம் பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் தூங்காமல் விழித்துக் கொண்டு தெளிந்த புத்தி உள்ளவர்களாய், நமது இருதயங்கள் .... லவுகீக கவலைகளினால் பாரம் அடையாத படிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமென கட்டளை பெறுகிறோம் (லூக்கா 21:34-36; 1 தெசலோனிக்கேயர் 5:4-11; 2 பேதுரு 3:11-14).

நாம் தூங்குகிறவர்களாகவோ, மற்றவர்களைக் கொடூரமாய் நடப்பிக்கிறவர்களாகவோ காணப் படாமல், நமது எஜமான் நமக்குக் கொடுத்த வேலையை உண்மையாய்ச் செய்கிறவர்களாகக் காணப்படும்படிக்கு, உறுதியாய் நிற்கவும் விழித்திருக்கவும் வேண்டியவர்கள் (மத்தேயு 24:45-51; 25:14-30; மாற்கு 13:35-37; 1 கொரிந்தியர் 3:11-15; 15:58; 2 கொரிந்தியர் 5:10). அது சுவிசேஷ ஊழியமாகவோ (மத்தேயு 24:14; மாற்கு 13:10) உதவி செய்யும் ஊழியமாகவோ (மத்தேயு 25:31-46) இருக்கலாம். நமது தனிப்பட்ட மனந்திரும்புதல், தனிப்பட்ட நடத்தை, தனிப்பட்ட சாட்சி இவை உண்மையில் அவரது வருகையைத் துரிதப் படுத்தக் கூடும் (மாற்கு 13:10; அப்போஸ்தலர் 3:19-21; 2 பேதுரு 3:11-12). ஏனெனில்.. தேவ கிருபையானது பிரசன்னமாகி, நாம் .... தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம்

*நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் படி நமக்குப் போதிக்கிறது* ***(தீத்து 2:11-13).*** *ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்* ***(வெளிப்படுத்தல் 22:20).***

# 17. திருச்சபையின் நோக்கம்

*இயேசு தாம் பரமேறுவதற்கு முன்பு கடைசியாகத் தம் சீஷர்களை நோக்கி இப்படிச் சொன்னார்: "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (அப்போஸ்தலர் 1:8).* கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் இருக்க வேண்டியவர்கள். திருச்சபையின் நோக்கம் உலகத்தில் இயேசு கிறிஸ்துவின் சாட்சியாய் இருப்பதே. இதுவே சபையின் முதன்மையான நோக்கம்; சபையின் மற்ற செயல்பாடுகள் எல்லாம் இரண்டாம் பட்சமே.

இயேசு கிறிஸ்துவின் சாட்சியாய் இருப்பது என்றால் என்ன? அது மக்களை இயேசுவின் பக்கமாய் ஈர்க்கும் படிக்கு நமது சொல்லாலும் செயலாலும் உலகைத் தொடுவது எனலாம். அது உலகுக்கு வெளிச்சமாய் இருப்பதுமாகும். இயேசு சொன்னார் : *மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும் படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது "(மத்தேயு 5:16).* உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக் கடவது. அதாவது, நாம் உலகத்தில் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக, தூதுவர்களாக இருக்க வேண்டியவர்கள். பவுல் *"நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாய் இருந்து . . . வேண்டிக் கொள்கிறோம்" என்று எழுதுகிறார் (2 கொரிந்தியர் 5:20).* ஸ்தானாதிபதிகளாக, அதாவது தூதுவர்களாக நமது பணி மக்களை தேவனோடு ஒப்புரவாகச் செய்வதே.

**தாமஸ் ஹேல்**

இறுதியாக, இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சியாய் இருப்பது என்றால், உலகமெங்கும் போய், மனிதர்களைச் சீஷர்களாக்குவது ஆகும். இயேசு தமது சீஷர்களிடம் “ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும், அவர்கள் கைக்கொள்ளும் படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்றார் (மத்தேயு 28:19-20).

நாம் சாட்சிகளாய் இருப்பதற்குக் காரணம் என்ன? அன்பு. இரண்டாவது பெரிய கற்பனை சொல்கிறது: உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக (மாற்கு 12:31). விசுவாசிகளாகிய நாம் ஜீவ அப்பத்தைக் கண்டடைந்திருக்கிறோம்; நமது பிறனை நேசிப்போம் என்றால் அதை எங்கே கண்டடைவது என்று அவனுக்கும் சொல்ல விரும்புவோம்.

இயேசு நம்மைத் தம்மிடம் அழைத்து நம்மைத் தமது சபையாக மாற்றக் காரணம் நாம் போய்க் கனி கொடுப்பதற்காகவே. "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்; .... நீங்கள் போய்க் கனி கொடுக்கும் படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும் படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன் ” என்று இயேசு கூறினார் (யோவான் 15:16). இந்த இடத்தில் கனி என்பது புதிய சீஷர்களைக் குறிக்கும். இயேசு “பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன் "என்றார் (யோவான் 20:21). இயேசு எதற்காக அனுப்பப்பட்டார்? அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவர் அனுப்பப்பட்டார் (யோவான்

*3:16). எண்ணிப் பாருங்கள்! தேவன் இயேசுவை எதற்காக அனுப்பினாரோ அதே விதமாக அதே நோக்கத்திற்காக நாமும் உலகிற்குள் அனுப்பப் படுகிறோம்! இன்றைக்கு, திருச்சபையாகிய நாம், இயேசுவின் பணியை இப்பூவுலகில் தொடரும் படியாக, மோட்சத்துக்கும் நித்திய ஜீவனுக்கும் போகும் பாதையை மக்களுக்குக் காட்டுகின்ற வெளிச்சமாக இருக்கும் படியாக நியமிக்கப் பட்டுள்ளோம்.*

*ஆக, திருச்சபையின் மேலான நோக்கம் வெளிச்சமானது இருளுக்குள் "எட்டித் தொடுவது போல, வெளி உலகை எட்டித் தொடுவதே எனக் காண்கிறோம். ஆனால் துக்கம் என்னவென்றால் ஒருமுறை நிறுவப் பட்டதும் பெரும்பாலான சபைகள் தங்கள் உள்ளான காரியங்களிலேயே மூழ்கி விடுகின்றன. அவை "கிளப்" போலவோ, ஒரு தனி சமுதாயமாகவோ இயங்க ஆரம்பித்து விடுகின்றன. சபையிலிருந்து தங்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களைப் பற்றியே சபை மக்கள் கருத்தாய் இருக்கின்றனரே தவிர, சபை மூலம் பிறருக்குத் தாங்கள் கொடுக்க வேண்டிய ஆசீர்வாதங்களைப் பற்றிச் சற்றும் எண்ணிப் பார்ப்பதில்லை. சபையானது கிறிஸ்தவர்கள் வந்து ஒதுங்கக் கூடிய ஒரு பத்திரமான துறைமுகமாக இருப்பதற்காக ஏற்படுத்தப் படவில்லை. சபையானது சாட்சிகளை - அதாவது, தூதுவர்களையும், கனி கொடுப்போரையும், சீஷர்களாக்குவோரையும், மிஷனெரிகளையும் ஆயத்தப் படுத்தவும் அனுப்பி வைக்கவுமே ஏற்படுத்தப் பட்டது.*

*இயேசு கிறிஸ்துவின் திருச்சபை சாட்சியுள்ள சபை, மிஷனெரி ஊழியம் நிறைவேற்றும் சபை. ஐரோப்பாவிலே சபை எப்படி உருவானது? பவுல் என்ற பெயர் கொண்ட ஒருவர் கிரேக்க நாட்டிலுள்ள மக்கெதோனியா பகுதியில் பிலிப்பி என்ற நகருக்குச் சென்று அங்கே ஒரு சபையை*

நாட்டியதால் அது உருவானது (அப்போஸ்தலர் 16:9-15, 40). இந்தியாவிலே சபை எப்படி வந்தது? கிறிஸ்தவர்கள் சுவிசேஷம் சொல்வதற்காக இந்தியா வரை பயணம் செய்ததால் வந்தது. இந்தியாவுக்குச் சென்ற முதல் மிஷனெரி அப்போஸ்தலனாகிய தோமா என்று அநேகர் சொல்கின்றனர். சீனாவிலே சபை எப்படி ஆரம்பித்தது? கொரியாவிலே? ஆப்பிரிக்காவிலே? காரணம் அதே தான் : சாட்சிகள் எழும்பி அந்நாடுகளுக்குச் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர்.

உண்மை தான், திருச்சபையில் உள்ள ஒவ்வொருவரும் தூரமான இடங்களுக்குச் சென்று பிரசங்கிக்கும் படி அழைக்கப் பட வில்லை; ஒரு சிலர் மட்டுமே இவ்வித அழைப்பைப் பெறுகின்றனர். ஆனால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவளும் தாங்கள் வாழ்கின்ற, பணி செய்கின்ற இடங்களிலே சாட்சிகளாக இருக்கும் படி அழைக்கப் பட்டவர்களே (அப்போஸ்தலர் 1:8). திருச்சபையின் முக்கிய நோக்கம் உள்ளூரில் மட்டுமல்ல, உலகத்தின் கடைசி வரையிலும் சாட்சியாகத் திகழ வேண்டியதே என்பதை சபை மக்கள் ஒவ்வொருவரும் மனதில் கொள்ள வேண்டும்.

சபையானது ஒரு சரீரத்தைப் போன்றது (1 கொரிந்தியர் 12:27). இதயத்தின் முக்கியப் பணி இரத்தத்தை ஓடச் செய்வதே; நுரையீரலின் பிரதான வேலை சுவாசிப்பதே; செவியின் முக்கிய வேலை கேட்பதே; கால்களின் தலையாய பணி நடப்பதே. ஆனால் ஒவ்வொரு உறுப்புக்கும் ஒட்டு மொத்த நோக்கம் சரீரம் உயிர் வாழவும் இயங்கவும் உதவுவதே. சபையின் ஒவ்வொரு உறுப்பினரின் வேலையும் அதுவே.

எந்தச் சபையாவது சாட்சியாக இருக்கவில்லை எனில், சமுதாயத்தை எட்டித் தொடவில்லை எனில், அது செத்துக் கொண்டிருக்கும் சபை. எந்தவொரு சபையின் ஆவிக்குரிய ஆரோக்கியத்தையும் அளப்பது, அது எத்தனை கிறிஸ்தவர்களை ஈர்க்கிறது என்பதல்ல, எத்தனை மிஷனெரிகளை அனுப்புகிறது என்பதே.

அருட்பணி அல்லது மிஷனெரி ஊழியம் என்பது திருச்சபையின் பற்பல முக்கியமான பணிகளுள் ஒன்று மட்டுமே என்கின்றனர் சிலர். இவர்கள் திருச்சபையை ஆராதனை, ஐக்கியம், போதனை மற்றும் மிஷனெரி ஊழியம் என்னும் நான்கு கால்களைக் கொண்ட ஒரு "ஸ்டூல்" (சாய்மானமற்ற நாற்காலி அல்லது பீடம்) என்று வருணிக்கின்றனர். ஆனால் இந்த உருவகம் கிறிஸ்துவின் சபையைச் சித்தரிக்கப் போதுமானதல்ல. மிஷனெரிப் பணியானது அந்த ‘‘ஸ்டூலின்' மீது வைக்கப் பட வேண்டிய விளக்கு எனலாம்! ஒரு ஸ்டூலுக்கு மூன்று கால்களே போதும். அதாவது ஆராதனை, ஐக்கியம் மற்றும் போதனை. இந்த மூன்றும் இறுதி இலக்குகள் அல்ல; இறுதி இலக்கை அடைய உதவும் வழி வகைகள் மட்டுமே. அவை அந்த ஸ்டூலை, சபையின் மிஷனெரிப் பணியைத் தாங்கிப் பிடிக்க உதவும் ஆதாரங்கள் மட்டுமே.

ஆகவே, கிறிஸ்துவின் திருச்சபையின் முதன்மையான நோக்கம் மிஷனெரி ஊழியமே (சாட்சியாயிருப்பது, சுவிசேஷப் பணி செய்வது) என்பதை நாம் மீண்டும் கூறியாக வேண்டும். வேறு விதமாகச் சொல்வதானால், மிஷனெரிப் பணி என்பது திருச்சபையின் பற்பல செயல் திட்டங்களில் ஒன்று மட்டுமல்ல; அதுவே சபையின் முழுமுதல் செயல் திட்டமாகும்.

**தாமஸ் ஹேல்**

இந்தச் சத்தியத்தை நாம் மனதில் கொள்ளும் வரை, திருச்சபை மற்றும் தனிப்பட்ட விசுவாசியின் ஊழியம் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கும். கிறிஸ்தவர்களாகிய நாம் பல சமயங்களில் இரண்டாம் பட்சமான காரியங்களிலேயே முழு மூச்சாய் இறங்கி நமது நோக்கத்தையும் நாம் செல்ல வேண்டிய திசையையும் மறந்தே போய் விடுகிறோம். இந்த இரண்டாம் பட்சமான காரியங்கள் (சமூக நீதி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, நல வாழ்வு, நல்ல கல்வி, பொருளாதார முன்னேற்றம் போன்றவை) எல்லாம் நல்லவை தான், முக்கியமானவை தான், கிறிஸ்தவர்கள் அவற்றில் ஈடுபாடு காட்ட வேண்டியது அவசியமும் கூடத்தான். ஆனால் இந்தக் காரியங்கள் எல்லாமே மக்களை இரட்சிப்புக்கென்று கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்துதல் என்ற தலையாய நோக்கத்தோடு ஒப்பிடுகையில் இரண்டாம் தரமானவையே. ஒரு நபருக்கு இப்பூமியில் சில ஆண்டுகள் மேம்பட்ட வாழ்க்கையைக் கொடுப்பது என்பது, பரலோகில் நித்தியமான வாழ்க்கைக்கு நேராக அவனை நடத்துவதோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் மிக அற்பமானதே.

நமது கண்கள் எப்பொழுதும் சகல ஊழியங்களுக்கும் முற்று முடிவான இலக்கின் மேலேயே பதிந்திருக்க வேண்டும் : அதுதான் தேவனோடு மக்களை ஒப்புரவாக்கி அவர்களை அவரது இராஜ்யத்திற்குள் சேர்ப்பது என்பதாகும் (2 கொரிந்தியர் 5:18-20 மற்றும் குறிப்புரைகள் பார்க்க).

இயேசு இலக்கின் மேலேயே தமது கண்களைப் பதித்திருந்தார். அவர் பிரசங்கித்தார், உபதேசித்தார், குணமாக்கினார், அற்புதங்கள் செய்தார். ஆனால் இவை அனைத்தையும் அவர் செய்யக் காரணம் ஒன்றே ஒன்றுதான்: தேவனோடு மனிதர்களை ஒப்புரவாக்க. அவருடைய குணமாக்குதல்களும் அற்புதங்களும் அதோடு முடிந்து

போகும் காரியங்களல்ல; அவை அவர் தேவனுடைய குமாரன் என்றும் ஆகவே மக்கள் அவருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்க வேண்டும் என்றும் எடுத்துக் காட்டும் அடையாளங்களாகும். அவர் ஓர் அற்புதம் செய்பவராக அறியப் பட விரும்பவில்லை; ஏறக்குறைய தாம் சுகமாக்கிய அனைவரிடமுமே அதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றுதான் கூறினார். மக்களின் ஆவிக்குரிய தேவைகளை விட்டு அவர்களது கண்கள் வேறெங்கும் திரும்பி விடக் கூடாது என்று யோசித்தார். அவர் தங்கள் கிராமத்திலேயே தங்கி, தொடர்ந்து தங்களுக்கே சுகமளித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பிய மக்களைப் பார்த்து அவர், “நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்க வேண்டும்; இதற்காகவே அனுப்பப் பட்டேன் " என்றார் (லூக்கா 4:43). இயேசுவின் பிரதான பணி மனிதர்களை தேவ இராஜ்யத்திற்குள் கொண்டு வருவதே; அது அவருடைய பிரதான பணி என்றால், நமக்கும் - தனி நபர்களாகவும் சரி, திருச்சபையாகவும் சரி - அதுவே பிரதான பணியாக இருக்க வேண்டும். திருச்சபையின் நோக்கம் பற்றிக் கூற வேண்டிய இறுதியான காரியம் ஒன்றும் உண்டு: அந்தப் பணி அல்லது நோக்கம் நிறைவு பெறும் பெறும் போது இயேசு திரும்ப வருவார், உலகம் முடிவடையும். இயேசு சொன்னார்: "இராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகம் எங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப் படும், அப்போது முடிவு வரும் "மத்தேயு (24:14).

ஒவ்வொரு மக்கள் இனத்திற்கும், மக்கள் கூட்டத்திற்கும் நாம் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டுமென இயேசு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார். உலகில் இவ்வாறான பல்லாயிரம் மக்கள் இனங்கள் உண்டு. மத்தேயு 24:14 மற்றும் 28:19 இல் இவை ஜாதிகள்' என அழைக்கப்

*படுகின்றன. தங்கள் சொந்த இனத்திற்குள்ளேயே நிரந்தமான சாட்சி ஏதுமில்லாத இவ்வித இனங்கள் சுமாராக 10,000* இருக்கலாம் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. இப்படிப் பட்ட சந்திக்கப் படாத மக்கள் கூட்டங்களுக்குக் கிறிஸ்துவின் சுவிசேஷம் எடுத்துச் செல்லப் பட உதவுவதும், ஒவ்வொரு மக்கள் கூட்டத்தின் மத்தியிலும் சாட்சியுள்ள, பல மடங்காய்ப் பெருகக் கூடிய சபைகளை நிறுவ உதவுவதுமே ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உள்ள உன்னத பணியாகும். இது நிறைவேறும் வரை திருச்சபையின் நோக்கம் நிறைவேறாது, கிறிஸ்துவும் திரும்ப வர மாட்டார்.*

*இந்தப் பணி எவ்வளவு பெரியது? உலக மக்கள் தொகை மிகுதியும் பெருகி விட்டதால், வரலாற்றில் முன்பு எப்போதும் இருந்ததைக் காட்டிலும் இன்று கிறிஸ்தவர் அல்லாதோர் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. மறுபுறத்தில், இந்தப் பணியை நிறைவேற்ற முன் எப்போதும் இருந்ததைக் காட்டிலும் அதிக அளவிலான கிறிஸ்தவர்களும் இருக்கவே செய்கின்றனர். இந்தப் பணியை நிறைவேற்ற முடியும். கி.பி. 100ஆம் ஆண்டில் ஒவ்வொரு 360 கிறிஸ்தவர் அல்லாதோருக்கும் 1 சாட்சியுள்ள கிறிஸ்தவன் என்ற வீதத்தில் இருந்தனர். 1950 இல் ஒவ்வொரு 20 கிறிஸ்தவர் அல்லாதோருக்கும் 1 சாட்சியுள்ள கிறிஸ்தவன் என்ற வீதத்தில் இருந்தனர். 1996 இல் ஒவ்வொரு 7 கிறிஸ்தவர் அல்லாதோருக்கும் ஒரு கிறிஸ்தவன் என்ற அளவிலும் 2000வது ஆண்டில் 4 கிறிஸ்தவர் அல்லாதோருக்கு 1 கிறிஸ்தவர் என்ற அளவிலும் இருந்தனர். பணியை நிச்சயமாக நிறைவேற்ற முடியும்!*

*சுவிசேஷத்தைத் தக்க முறையில் கேட்க வாய்ப்பே பெறாத 200 கோடி மக்கள் உலகில் உண்டு. கிறிஸ்துவின் திருச்சபையின் நோக்கம் இவர்களைச் சந்திப்பதே. சில கிறிஸ்தவர்கள் மிஷனெரிகளை அனுப்புபவர்களாக -*

அதாவது, அவர்களுக்காக ஜெபித்து, அவர்களைப் பொருளால் தாங்கி ஆதரித்து, உற்சாகப் படுத்துபவர்களாக இருக்க அழைக்கப் படுகின்றனர். மற்றவர்களோ தாங்களே மிஷனெரிகளாகச் செல்ல அழைக்கப்படுகின்றனர். தேவனுக்கு அனுப்புபவர்களும் வேண்டும், செல்பவர்களும் வேண்டும். ஒருவன் மிஷனெரியாக அயல்நாடு செல்கிறானா, அல்லது சொந்த நாட்டில் அல்லது வீட்டில் இருக்கிறானா என்பது கேள்வியல்ல, அவன் எங்கிருந்தாலும் சாட்சியாக இருக்க வேண்டியவன். நாம் எங்கே ஊழியம் செய்யும் படி அழைக்கப் பட்டிருந்தாலும் சரி, ஒவ்வொருவரிடம் இருந்தும் அதேயளவு அர்ப்பணத்தையும் ஒப்படைத்தலையும் இயேசு எதிர்பார்க்கிறார்.

# 18. எழுப்புதல்

பெரும்பாலான மக்கள் முதன் முதலாக கிறிஸ்துவண்டை வரும்போது மிகுந்த சந்தோஷத்தையும் விடுதலையையும் அன்பையும் கண்டடைகின்றனர். இயேசுவுக்கு அதிக நெருக்கமாக உணர்கின்றனர். ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையால் அவர்களது உள்ளங்கள் பற்றியெரிகின்றன. ஆனால் காலம் செல்லச் செல்ல அவர்களது உற்சாகம் குன்றுகிறது, தீவிரம் மங்கி ஏறக்குறைய மறைந்தே போய் விடுகிறது. ஏன்? என்ன ஆயிற்று? அந்த முதல் அனுபவத்தை மீண்டும் கொணருவது எப்படி?

தீவிரக் குறைவு அல்லது இயேசுவின் பேரிலுள்ள அன்புத் தாழ்ச்சி போல நமது கிறிஸ்தவ வாழ்வில் வேறு பிரச்சனைகளே இல்லை எனலாம். எபேசு பட்டணத்தின் பண்டைய திருச்சபைக்கு இயேசு எழுதிய பயங்கரமான வார்த்தைகளைப் பாருங்கள் : ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாய் என்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன் (வெளிப்படுத்தல் 2:4-5).

யாராவது ஒருவர் தனது இருளின் இராஜ்யத்தை விட்டு, கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதன் மூலம் தேவனின் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் போதெல்லாம் சாத்தான் சீறுகிறான். எனவே ஒரு நபர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட

வேளை முதல் சாத்தான் தன்னிடமுள்ள எல்லா வகை ஆயுதங்களையும் கொண்டு அப்புதிய விசுவாசியைத் தாக்க முற்படுகிறான். அவனது முக்கிய குறிக்கோள் விசுவாசி இயேசுவின் பேரில் வைத்திருக்கும் அன்பைத் தணித்துப் போடுவதே. உண்மையான ஒரு விசுவாசியை இயேசுவின் கரத்திலிருந்து தான் பறிக்கவே முடியாது என்பதை சாத்தான் நன்கறிவான் (யோவான் 10:28). ஆனால் அவன் அவ்விசுவாசியை வலிமையிழக்கச் செய்ய முடியும்; அவனை அன்பற்றவனாக, ஜீவனற்றவனாக ஆக்க முடியும், பெரும்பாலும் அதில் அவன் வெற்றியும் காண்கிறான்.

ஆக, நமது கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் அடிக்கடி ஆவியில் புதுப்பிக்கப் பட, உயிர் மீட்சி அடைய வேண்டியதாகிறது. தனிநபர்கள் மட்டுமல்ல, முழுத் திருச்சபைகளும் எழுப்புதல் அடைய வேண்டும். நாம் இடையறாமல் நம்மைச் சோதித்தறிய வேண்டும். நாம் உலகிலுள்ள வேறெதையும் விட அதிகமாக இயேசுவை நேசிக்கிறோமா? (மாற்கு 12:30). நாம் எல்லாவற்றுக்கும் மேலாக தேவனுடைய இராஜ்யத்தையே தேடுகிறோமா? (மத்தேயு 6:33). நாமறிந்த ஒவ்வொரு கிறிஸ்தவ சகோதரனுடனும் சகோதரியுடனும் முழுமையான அன்பில், ஐக்கியத்தில் நிலைத்திருக்கிறோமா? (1 யோவான் 1:7; 4:20). நமது அனுதின வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் கனியை அனுபவித்து வருகிறோமா? (கலாத்தியர் 5:22-23). நமது வாழ்வில் ஆவிக்குரிய வல்லமை உண்டா? நமது சபையில் உண்டா? (லூக்கா 24:49; அப்போஸ்தலர் 1:8). இக்கேள்விகளில் எதற்காவது "இல்லை" என்ற பதில் வந்தால் நாம் உயிர் மீட்சி அடைய வேண்டியது அவசியம்.

நாம் தேவ வசனத்தைப் படிப்பதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று புதுப்பித்தலும் எழுப்புதலும் அடைவதே. இந்த விளக்கவுரை எழுதப் பட்டதற்கான

முக்கியக் காரணங்களுள் ஒன்றும் இதுவே. நீங்கள் இந்த விளக்கவுரையைத் தியானிக்கையில், தேவனுடைய வார்த்தைகள் ஜீவன் பெற்று எழுந்து உங்கள் உள்ளங்களில் ஒரு புதுக் கருத்தையும் ஒரு புது வல்லமையையும் உருவாக்க வேண்டுமென்பதே உங்கள் ஜெபமாக இருக்கட்டும். நீங்கள் இந்த விளக்கவுரையைப் பயன்படுத்துகையில் உங்கள் உள்ளத்திலும், சபையிலும் ஓர் எழுப்புதல் உருவாக வேண்டுமென்று ஜெபியுங்கள்.

இப்பொழுது எழுப்புதல் அல்லது உயிர் மீட்சி என்ற விஷயத்திற்கு வருவோம். முதலாவதாக, எழுப்புதல் என்றால் என்ன? எழுப்புதல் என்றால் கிறிஸ்துவின் பேரிலான நமது ஆதி அன்பின் நிலைக்கு மறுபடியும் வருவது. எழுப்புதல் என்பது இயேசுவோடு ஒளியில் நடந்து, அவர் தமது ஜீவனால் நம்மில் வாழ விடுவது. எழுப்புதல் என்பது குன்றிப் போன ஆவிக்குரிய ஆரோக்கியம் மீண்டும் சீரடைவது. எழுப்புதல் என்பது நமது பாவங்களை ஒப்புக்கொண்டு, மன்னிப்புக்காகவும் சுத்திகரிப்புக்காகவும் இயேசுவை நோக்கிக் கதறுவது. எழுப்புதல் என்பது நமது வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் இயேசுவின் ஆளுகைக்குக் கையளிப்பது. எழுப்புதல் என்பது நமது வாழ்வில் ஓர் ஆழமான தொடுதலின் நேரம். ஆனால், எழுப்புதல் என்பது நாமாகவே நம்மை ஓர் உணர்ச்சி மயமான நிலைக்கு உந்தித் தள்ளுவது அல்ல. அது ஜெபத்தின், தியானத்தின், தெளிந்த புத்தியுடன் கூடிய சுய மதிப்பீட்டின் நேரம்; அது இயேசுவண்டை கிட்டிச் சேரும் நேரம். எழுப்புதல் அல்லது எழுப்புதல் என்பது நமது மாய்மாலங்களும் வஞ்சகங்களும் அம்பலமாகும் நேரம். எழுப்புதல் என்பது சபையிலுள்ள சச்சரவுகள், குறைகூறுதல்கள், கசப்பு இவை வெளியாக்கப் பட்டு, மனந்திரும்பும் நேரம். எழுப்புதல் என்பது மற்றவர்கள் தொடப்பட்டு கிறிஸ்துவண்டை ஈர்க்கப் படுமளவிற்கு நமது வாழ்க்கைகள் அடியோடு மாறுகின்ற

நேரம். எல்லாவற்றுக்கும் மேலாக, எழுப்புதல் என்பது பரிசுத்த ஆவியானவர் நமது தனி வாழ்விலும், சபை வாழ்விலும் வல்லமையோடு நம்மீது வந்திறங்கும் நேரம்.

எழுப்புதல் எப்படி ஆரம்பிக்கிறது? பொதுவாக, நமது சொந்தப் பாவங்களைப் பற்றிய உணர்வு, மற்றும் பாவ அறிக்கையிலே எழுப்புதல் ஆரம்பிக்கும். நமக்கு எழுப்புதல் தேவைப்பட்ட முதல் காரணமே பாவம் தான். பிசாசின் தாக்குதல் முறை நம்மைப் பாவம் செய்யும் படியாகச் சோதிப்பதே. நாம் பாவம் செய்கையில் தேவனை விட்டுப் பிரிக்கப் படுகிறோம். நமக்குள்ளே வாழும் தேவனின் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப் படுத்தி விடுகிறோம். இயேசுவோடு நமக்குள்ள ஐக்கியத்தை இழந்து போகிறோம்; நமது சந்தோஷத்தை, நமது சமாதானத்தை, நமது வல்லமையை இழந்து விடுகிறோம். நமக்குள்ளே பாவம் இருக்கவில்லை என்றால், நமக்கு எழுப்புதலும் தேவைப் படாது. ஆக, எழுப்புதல் என்பது நமது சொந்தப் பாவங்களை ஒப்புக்கொண்டு, அறிக்கையிடுவதிலேயே தொடங்குகிறது.

நாம் நம்மைப் பாவிகளாக எண்ணிப் பார்க்க விரும்புவதில்லை. நமது பாவங்களைக் குறைத்தே மதிப்பிடுகிறோம். பல சமயங்களில் அவற்றை நாம் உணர்வது கூட இல்லை. தன் சிறு வயது முதல் எல்லாக் கற்பனைகளையும் கைக்கொண்டு வந்ததாக இயேசுவிடம் கூறிய அந்த ஐசுவரியவானான வாலிபனைப் போலவே நாம் காணப் படுகிறோம் (மாற்கு 10:17-21). தன்னிடம் பாவமே இல்லை என்று அவன் நினைத்தான்!

நாம் நமது பாவங்களைப் பாராவிட்டாலும், தேவன் அவற்றைப் பார்க்கவே செய்கிறார். பாவம் என்பது ஏதோ ஒரு கற்பனையை மீறுவது மட்டுமல்ல, வேதத்தில்

வெளிப்படுத்தப் பட்டுள்ள தேவ சித்தத்திற்கு ஏற்காத எதுவும் நமது வாழ்வில் இருப்பதே பாவம் ஆகும். தவறான மனப்பான்மைகளும் பாவமே: சுயநலம், பெருமை, பொறாமை, பொருளாசை, எரிச்சல், கவலை, உண்மையின்மை. தவறானதைச் செய்வது மட்டுமல்ல, சரியானதைச் செய்யாமல் விடுவதும் பாவமே (யாக்கோபு 4:17). அது நமது முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் தேவனில் அன்பு கூரத் தவறுவது (மாற்கு 12:30). அது நம்மில் அன்பு கூருவது போல நமது பிறனிலும் அன்பு கூரத் தவறுவது (12:31). அது முடிவுபரியந்தம் விசுவாசத்தில் நிலைத்திருக்கத் தவறுவது (மாற்கு 13:13). அது தருணம் கிடைக்கும் போது சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளத் தவறுவது (1 பேதுரு 3:15). அது தேவையில் உள்ள நமது சகோதரனுக்கு உதவத் தவறுவது (மத்தேயு 25:41-45). நமக்குப்

பாவமில்லை என்று நம்மில் யார் சொல்லக் கூடும்? (1யோவான் 1:8). அப்படியானால், உயிர் மீட்சிக்கு முதல் படி நமது பாவங்களை அறிக்கையிடுவதே. நமது பாவங்களிலிருந்து நம்மைச் சுத்திகரிப்பதற்காக இயேசு செலுத்தின கிரயத்தை மறந்து விடாதிருப்போம். நமது மறைவான பாவங்களை நமக்கு வெளிப்படுத்தும் படி பரிசுத்த ஆவியானவரைக் கேட்போம். இயேசுவின் ஆளுகைக்கு முழுமையாக ஒப்புக் கொடுக்கப் படாத பகுதிகள் ஏதேனும் நமது வாழ்வில் உண்டா என்று கண்டறியும் பொருட்டு, நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய சில கேள்விகள் இதோ :

தேவனை விட எதையாவது அதிகமாக நேசிக்கிறேனா? என் குடும்பம், என் வேலை, என்

*சிற்றின்பங்கள் அல்லது என்னையே? (மத்தேயு 6:33 மாற்கு 12:30).*

*என் வாழ்வின் எந்தச் சூழ்நிலையைக் குறித்தாவது தேவனுக்கு எதிராக முறுமுறுக்கிறேனா? (1கொரிந்தியர் 10:10; பிலிப்பியர் 2:14; 1 தெசலோனிக்கேயர் 5:18). மற்றவர்களின் பாராட்டுக்கு ஆசைப் படுகிறேனா? நான் செய்யும் நன்மையைப் பிறர் மெச்ச வேண்டும் என்று விரும்புகிறேனா? எல்லாரும் என்னையே கவனிக்க வேண்டும் என்று நினைக்கிறேனா? (மத்தேயு 6:1-5; யோவான்12:43). மற்றவர்களிடம் பொறுமையின்றி நடந்து கொள்கிறேனா? மற்றவர்களைக் குறை சொல்கிறேனா? மற்றவர்கள் என்னைக் குறை சொன்னால் கோபம் பொத்துக் கொண்டு வருகிறதா, அல்லது தொட்டாற்சிணுங்கி போலாகி விடுகிறேனா? யார் பேரிலாவது எரிச்சல் உண்டா? யாரிடமாவது மனக் கசப்பு கொண்டிருக்கிறேனா? (எபிரெயர் 12:15).*

*விட்டுக் கொடுக்காத, பிடிவாத குணம் என்னிடம் உண்டா? தலைக் கனம் கொண்டு எதற்கெடுத்தாலும் வாக்குவாதம் செய்கிறேனா? எப்பொழுதுமே நான் சொல்வது தான் சரி என்கிறேனா? கடினமான வார்த்தைகளையோ, கிண்டல், கேலியோ, பேசுகிறேனா? (பிலிப்பியர் 2:3; எபேசியர் 5:21).*

*மனிதர்கள் என்ன சொல்லி விடுவார்களோ என்று அஞ்சுகிறேனா? கடமையிலிருந்து தப்பிக் கொள்ள வகை பார்க்கிறேனா? தேவன் எனக்களித்த தாலந்துகளைப் புதைத்து வைக்கிறேனா? (மத்தேயு 25:24-28).*

*யார் பேரிலாவது பொறாமை கொண்டிருக்கிறேனா? வேறு யாராவது தோல்வி அடைகையில் மனதுக்குள்*

சந்தோஷப் படுகிறேனா? வேறு யாராவது வெற்றி பெறுகையில் மனதுக்குள் வேதனை அடைகிறேனா? (1 கொரிந்தியர் 13:4-6).

எதையாகிலும் குறித்து முழுக்க முழுக்க உண்மையாய் இல்லாமல் இருந்திருக்கிறேனா?

எந்த உண்மையையயாகிலும் மறைத்து வைத்திருக்கிறேனா? என் குற்றங் குறைகளை மூடி மறைக்கப் இருப்பதை விடஅதிக நல்லவனாக என்னைக் காட்டிக் கொள்ள முயற்சி செய்கிறேனா? எதையும் மிகைப் படுத்திப் பேசுகிறேனா? (மத்தேயு 23:27-28; யாக்கோபு 5:16). நான் மனச் சோர்வு அடைந்திருக்கிறேனா? தேவனை முழுக்க முழுக்க நம்புவதை விட்டு விட்டேனா? என் விசுவாசம் குன்றிப் போனதா? (ரோமர் 1:17; 14:23; எபிரெயர் 11:6). எனது ஆவிக்குரிய வாழ்க்கை வறண்டு, ஏதோ கடன்முறை கழிப்பதற்காக நடைபெறுகிறதா? கிறிஸ்துவை அறியாதோர் பேரில் கொண்டிருந்த கரிசனையை இழந்து போனேனா? ஆவிக்குரிய வாழ்வில் பெலனிழந்து விட்டேனா? வெதுவெதுப்பாக இருக்கிறேனா? சீஷத்துவ வாழ்வில் பார்க்கிறேனா?

உண்மையில் நான் பின்வாங்கிப் போனேனா? (மாற்கு 8:34; வெளிப்படுத்தல் 2:4-5; 3:15-16). உலகத்துக்கு ஒத்து நடக்கிறேனா? அவிசுவாசிகள் யோசிப்பது போல யோசிக்கிறேனா? உலகத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் நேசிக்கத் தொடங்கி விட்டேனா? (ரோமர் 12:2; 1 யோவான் 2:15-17).

இந்தக் கேள்விகளில் எதற்காவது விடை “ஆம்” என்று இருக்குமானால், அந்தப் பாவத்தை ஒத்துக் கொண்டு, தேவனிடம் அறிக்கையிட வேண்டும். அப்படிச் செய்தால்,

தேவன் நம்மை உயிர்ப்பிப்பதற்கு வழி திறப்போம். அப்படிச் செய்யாத பட்சத்தில் விசுவாச வாழ்வில் இன்னும் தளர்ந்து போய், தேவனிடமிருந்து தூரமாகிப் போவோம்.

எழுப்புதலுக்கு அடுத்த படி, பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப் படுத்திக் காட்டிய அந்த எல்லாப் பாவங்களையும் குறித்து மனஸ்தாபப் படுவது. மனந்திரும்புவது என்றால் நமது பாவங்களுக்காக ஆழமாகத் துக்கப் பட்டு, அவற்றை விட்டு முற்றிலுமாகத் திரும்புவது ஆகும்.நாம் இதைச் செய்கையில் தேவன் நம்மை மன்னித்துச் சுத்திகரிப்பார் (1யோவான் 1:9). நாம் இந்த மன்னிப்பையோ சுத்திகரிப்பையோ முழுமையாக அனுபவிக்க முடியவில்லை எனில் அதற்கு ஒரேயொரு காரணம் தான் உண்டு: நாம் நமது பாவங்களை விட்டு முழுமையாகத் திரும்பவில்லை.

எழுப்புதலுக்கு மூன்றாவது படி, பிறருக்கு நாம் ஏதாவது தீமை செய்திருப்பின் அதைச் சரி செய்வதாகும் (மத்தேயு 5:23-24; லூக்கா 19:8). நாம் யாரிடமாவது மன்னிப்பு கேட்க வேண்டியதிருக்கலாம். நாம் எடுத்த பிறருடைய பொருட்களை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டியதிருக்கலாம். நாம் வதந்திகளால் கெடுத்துப் போட்ட யாருடைய நற்பெயரையாவது சீர் செய்ய வேண்டியதிருக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக நாம் யாரையாவது மன்னிக்க வேண்டியதிருக்கலாம். ஏனெனில், யார் மேலாவது ஆத்திரமோ, கசப்போ கொண்டிருப்பது ஒரு பெரிய பாவமாகும் (மத்தேயு 6:12, 14-15).

எழுப்புதலுக்கு நான்காவது படி, நமது வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு மீண்டும் தத்தம் செய்வதாகும். நமது வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் அவருக்கு ஒப்புக் கொடுக்க

வேண்டும்; எதையும் நமக்கென்று வைத்துக் கொள்ளக் கூடாது. அவர் நம்மைச் செய்யச் சொல்கின்ற ஒவ்வொன்றையும் செய்வதற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும் (யோவான் 14:15). நாம் நமக்குச் சொந்தமல்ல; அவருக்கே சொந்தம் (1 கொரிந்தியர் 6:19-20).

எழுப்புதலுக்கு ஐந்தாவது படி, தேவன் தம்மிடம் நருங்குண்ட நொறுங்குண்ட உள்ளத்தோடு திரும்புபவர்களுக்கு வாக்களித்திருக்கும் அனைத்தையும் உரிமையோடு கேட்டுப் பெற்றுக் கொள்வதாகும். தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் நிரப்புதலுக்கு நமது உள்ளங்களைத் திறந்து கொடுக்க வேண்டும். நாம் ஆவியானவரால் நிறைந்திருக்க வேண்டுமென தேவன் சொல்லியிருக்கிறார் (எபேசியா 5:18). ஆகவே, இந்த நிறைவை நாம் வாஞ்சிக்க வேண்டும். இப்படி நிரப்பப் படும்படி நம்மை அவருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோமர் 12:1). நம்மை நிரப்புமாறு அவரைக் கேட்க வேண்டும் (மத்தேயு 7:7-8,11; லூக்கா 11:13).

எழுப்புதலுக்கு ஆறாவதும் இறுதியானதுமானபடி, பரிசுத்த ஆவியானவருக்குக் கீழடங்கி வாழ்வது. ஆவியானவரால் ஆளப்படாத யாரும் ஆவியானவரால் நிரப்பப் பட முடியாது.பவுல், பின்னும் நான் சொல்லுகிறது என்னவென்றால் ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் என்று எழுதுகிறார் (கலாத்தியர் 5:16). கிறிஸ்துவைப் போல வாழ்வதன் இரகசியமும் இதுவே. வெற்றி வாழ்க்கை வாழ்வது என்பது கிறிஸ்து நம்மிலும் நம் மூலமாகவும் வாழ்கிறார் எனப் பொருள்படும் (கலாத்தியர் 2:20). அப்படியானால் நமது இலக்கு இதுவே: கிறிஸ்துவுக்கு ஒப்பாக மாறுவது (ரோமர் 8:29). இதைவிட மேலான இலக்கு ஒன்று இல்லவே இல்லை.

ஆக, எழுப்புதலுக்கு ஆயத்தமாக நாம் எடுத்து வைக்க வேண்டிய அடிகள் இவைகளே. ஆனால் ஒன்றை மறந்து விடாதீர்கள் - அந்த உயிர்ப்பிக்கும் கிரியையை நடப்பிப்பவர் முழுக்க முழுக்கப் பரிசுத்த ஆவியானவரே, அதுவும் தமது வழியில், தமது வேளையில் தான் அதை நடப்பிப்பார். நம்மால் இயன்றதை எல்லாம் செய்து முடித்த பிறகு, அவரையே நோக்கிக் காத்திருக்க வேண்டும். என் நாமம் தரிக்கப் பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்தில் இருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன் (2 நாளாகமம் 7:14).

தேவனே, எங்களை உயிர்ப்பியும்!

# 19. பழைய ஏற்பாட்டின் சுருக்கம்

புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்கள் தங்கள் வாசகர்களுக்குக் கொஞ்சமாவது பழைய ஏற்பாட்டு அறிவு இருக்குமென எதிர்பார்த்து எழுதினர். அடிக்கடி பழைய ஏற்பாட்டின் வேத வாக்கியங்களையும், பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள யூத மக்களின் வரலாற்றையும் குறிப்பிட்டுப் பேசினர் (அப்போஸ்தலர் 7; எபிரெயர் 11 அதிகாரங்களைப் பார்க்க). இக்கட்டுரை பழைய ஏற்பாட்டின் சுருக்கத்தைத் தொகுத்தளிப்பதுடன், புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப் படும் சம்பவங்களையும், நபர்களையும் சற்று வலியுறுத்தியும் காட்டுகிறது. அந்தச் சம்பவம் அல்லது நபர் பற்றிய முக்கியமான புதிய ஏற்பாட்டு வசனக் குறிப்புரைகளையும் தருகிறது. பழைய ஏற்பாட்டு நூல்களின் பெயர்கள் தடித்த எழுத்துக்களில் கொடுக்கப் பட்டுள்ளன.

ஆதியாகமம் ஆதியிலிருந்து ஆரம்பிக்கிறது. தேவன் வானங்களையும் பூமியையும் உண்டாக்கினார் (ஆதியாகமம் 1:1-25; யோவான் 1:1-3). தேவன் உலகத்தை ஆறு நாட்களில் படைத்து முடித்தார், ஆறாம் நாளிலே அவர் முதல் மனுஷனும் மனுஷியுமாகிய ஆதாம் ஏவாளை சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:26-31). ஏழாம் நாளிலே தேவன் தம் கிரியைகளை எல்லாம் முடித்து ஓய்ந்திருந்தார். தேவன் மனுக்குலத்துக்குக் கட்டளையிட்ட ஓய்வுநாளின் ஆரம்பம் இதுவே (ஆதியாகமம் 2:1-3; எபிரெயர் 4:1-11).

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் வைக்கப் பட்டனர். ஒரேயொரு கட்டளை மட்டுமே அவர்களுக்கு கொடுக்கப் பட்டது; நன்மை தீமை அறிகிற விருட்சத்தின் கனியை அவர்கள் புசிக்கக் ஆனால் சாத்தான் பாம்பின் வடிவில் வந்து ஏவாளை வஞ்சித்து, விலக்கப் பட்ட

*மரத்தின் கூடாது. கனியை அவள் புசிக்கும்படியாக அவளைச் சோதித்தான். அவள் அதைப் புசித்தாள், பிறகு ஆதாமும் அதைப் புசித்தான். இப்படியாக பாவமும் மரணமும் முதல் முறையாக உலகிற்குள் பிரவேசித்தன (ஆதியாகமம் 3:1-19; ரோமர் 5:12-19). இதுவே "மனிதனின் வீழ்ச்சி" என்று அழைக்கப் படுகிறது. பின்னர் ஆதாமின் மூத்த மகனான காயீன் தனது தம்பியாகிய ஆபேலைப் பொறாமையின் காரணமாகக் கொலை செய்தான். முதன் முறையாக மானிட இரத்தம் பூமியில் சிந்தப் பட்டது (ஆதியாகமம் 4:1-12; எபிரெயர் 11:4; 1 யோவான் 3:12). அதன்பிறகு ஆதாமுக்கும் ஏவாளுக்கும் சேத் என்று இன்னொரு மகன் பிறந்தான் (ஆதியாகமம் 5:3).*

*சேத்தின் வம்ச வழி வந்தவர்களில் ஒருவன் ஏனோக்கு, இவன் மரணம் அடையாமல் நேராகப் பரலோகத்துக்கு ஏறெடுத்துக் கொள்ளப் பட்டவன் (ஆதியாகமம் 5:21-24; எபிரெயர் 11:5). ஏனோக்கின் காலத்துக்குப் பிற்பாடு, மனிதர்கள் தேவனுக்கு முன்பாக மிகவும் சீர்கெட்டுப் போனார்கள், எனவே அவர் உலகத்தை ஜலப் பிரளயத்தால் அழிக்கத் தீர்மானித்தார். நீதிமானான நோவாவிடம் அவனது குடும்பத்தையும் எல்லா வித மிருக ஜீவன்கள், பறவைகளிலும் குறைந்தது ஒவ்வொரு ஜோடியையும உள்ளடக்கும் வசதி படைத்த ஒரு பெரிய பேழையைச் செய்யச் சொன்னார்; பேழைக்குள் சென்றவர்கள் ஜலப் பிரளயத்துக்குத் தப்பிக் கொண்டனர்; மற்ற உயிர்வாழ் இனங்கள் அனைத்தும் அழிந்து போயின (ஆதியாகமம் 6:1-22; 7:21-24; 1 பேதுரு 3:18-20).*

*ஆபிரகாம், நோவாவின் குமாரனான சேமின் வழி வந்தவன். இன்றைய ஈராக்கில் உள்ள ஊர் என்ற நகரில் பிறந்தவன். ஊர் என்ற இடத்திலிருந்து கானான் என்ற நாட்டிற்கு (இன்றைய இஸ்ரேல்) போகும் படி தேவன்*

*ஆபிரகாமை அழைத்தார், அந்த நாட்டை ஆபிரகாமின் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று வாக்களித்தார். ஆபிரகாமின் சந்ததியை பெரிய ஜாதியாக்கவும், உலகிலுள்ள அத்தனை வம்சங்களையும் அவன் மூலமாய் ஆசீர்வதிக்கவும் கூட வாக்குத்தத்தம் செய்தார் (ஆதியாகமம் 12:1-7). ஆபிரகாமின் வம்சவழி வந்த இயேசு கிறிஸ்துவின் வருகையால் இந்த ஆசீர்வாதம் நிறைவேறியது (மத்தேயு 1:1; ரோமர் 4:16-18 கலாத்தியர் 3:6-9, 14, 29).*

*ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து தன் சொந்த தேசத்தை விட்டுப் புறப்பட்டான். ஒரு முறை ஒரு போருக்குப் பின், தனது வருமானத்தில் பத்திலொரு பங்கை தேவனுடைய ஆசாரியனான மெல்கிசெதேக்கு என்பவனுக்குக் கொடுத்தான் (ஆதியாகமம் 14:17-20; எபிரெயர் 5:6,10). தசமபாகம் இங்கே தான் முதல் முறையாகக் குறிப்பிடப் படுகிறது. அதாவது, வருமானம் அல்லது விளைச்சலின் பத்தில் ஒரு பங்கு.*

*தேவன் ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் ஒரு மகனைக் கொடுப்பேன் என்று வாக்களித்திருந்தார்; ஆனால் அந்த வாக்கு நிறைவேறத் தாமதித்த போது சாராள் தனது வேலைக்காரியான ஆகாரைத் தன் கணவன் ஆபிரகாமுக்கு மனைவியாகக் கொடுத்தாள். அவள் அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள், அவனுக்கு இஸ்மவேல் என்று பெயரிடப் பட்டது (ஆதியாகமம் 16:1-4, 15). ஆனால் தேவனோ ஆபிரகாமுக்கு அவன் மனைவியாகிய சாராளின் மூலமாகச் சட்டப்பூர்வமான ஒரு மகனைக் கொடுக்க வாக்குப் பண்ணியிருந்தார், ஆபிரகாம் தனது நம்பிக்கையை தேவன் பேரில் வைத்திருந்தான். இறுதியாக, சாராள் தனக்குத் தொண்ணூறு வயதான போது, ஆபிரகாமின் நூறாவது வயதில் அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்! அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டனர். அவனே யூத*

இனத்தைத் தோற்றுவித்தான். இஸ்மவேல் அரபிய இனத்தைத் தோற்றுவித்தான் என்று பரவலாக நம்பப் படுகிறது. இன்று வரை அரபியர்கள் யூதர்களுக்கு எதிரிகளாகவே உள்ளனர் (ஆதியாகமம் 17:15-22; 21:1-15; கலாத்தியர் 4:21-31).

தேவன் ஆபிரகாமுடன் ஓர் உடன்படிக்கை செய்தார், அதற்கு அடையாளமாக விருத்தசேதனத்தை ஏற்படுத்தினார், இது ஆண் குறியின் நுனித் தோலை வெட்டி அகற்றுவதாகும். அதுமுதற் கொண்டு ஆபிரகாமின் வழி வந்த (ஈசாக்கின் மூலம்) ஆண் மக்கள் அனைவரும், பிறந்த எட்டாம் நாளிலே விருத்தசேதனம் செய்யப் படுகின்றனர், இது அவர்கள் தேவனுடைய ஜனங்கள் என்பதற்கு அடையாளமாய் அமைகிறது (ஆதியாகமம் 17:1-14). விருத்தசேதனமானது யூதர்களுக்குக் கட்டாயம், மற்றவர்கள் அதைச் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லையென பவுல் எழுதுகிறார் (ரோமர் 2:25-29; 4:9-12; கலாத்தியர் 5:2-6; கொலோசெயர் 2:11-12).

ஆபிரகாமின் சகோதரன் மகனாகிய லோத்து பாவம் பெருகிக் காணப்பட்ட சோதோம், கொமோரா நகரங்களில் வாழ்ந்தான். அந்த நகரங்கள் மேல் வரவிருந்த நியாயத் தீர்ப்பையும் அழிவையும் குறித்து எச்சரிக்கும் படியாக தேவன் ஆபிரகாமிடம் மூன்று தேவதூதர்களை அனுப்பினார் (ஆதியாகமம் 18:1-2, 20-21). தேவதூதர்களின் உதவியால் லோத்து உயிர்தப்பினான் (ஆதியாகமம் 19:15-29; மத்தேயு 10:15; லூக்கா 17:28-30).

ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு, தேவன் ஆபிரகாமைச் சோதித்தார், எப்படியென்றால், அவனது ஒரே மகனான ஈசாக்கைத் தமக்குப் பலியிடுமாறு கேட்டார், ஆபிரகாம் அதற்குக் கீழ்ப்படிந்தான். அவன் சரியாக

ஈசாக்கைக் கொல்லப் போன அந்த நொடியிலே, தேவன் அவனைத் தடுத்து நிறுத்தி, அவன் கண்களில் ஓர் ஆட்டுக் கடாவைக் காட்டி, அதைப் பலி செலுத்தச் சொன்னார் (ஆதியாகமம் 22:1-18; எபிரெயர் 11:17-19). அதே விதமாகவே, நமக்குப் பதிலாக நம்முடைய இடத்தில் மரிக்க தேவன் இயேசு கிறிஸ்துவை அனுப்பினார் (எபிரெயர் 10:10).

ஈசாக்கு ரெபேக்காளை மணமுடித்தான், அவள் ஏசா, யாக்கோபு என்ற இரட்டைக் குழந்தைகளை ஈன்றெடுத்தாள். ஏசா தான் மூத்தவன், இருந்தபோதிலும் யாக்கோபு அவனுடைய சேஷ்டபுத்திர பாகத்தையும், ஆசீர்வாதத்தையும் திருடிக் கொண்டான் (ஆதியாகமம் 25:19-34; 27:1- 40). யாக்கோபு ஏசாவின் கோபத்துக்குத் தப்பியோடுகையில், வழியில் ஒரு கனவில் கர்த்தரைச் சந்தித்தான். தேவன் தாம் ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணியதை யாக்கோபுக்கும் வாக்குப் பண்ணினார் : அதாவது, அவனுடைய சந்ததி மூலமாக அகில உலகத்தின் மக்களும் ஆசீர்வதிக்கப் படுவர் (ஆதியாகமம் 28:10-17). நாம் ஏற்கனவே கண்டபடி, இந்த வாக்குத்தத்தமானது இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியது.

யாக்கோபு லேயாள், ராகேல் என்ற இரு சகோதரிகளை மணந்து கொண்டான். அவர்களும் அவர்களது வேலைக்காரிகளுமாக யாக்கோபுக்கு பன்னிரண்டு குமாரர்களைப் பெற்றெடுத்தனர். இவர்களே இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் தோற்றுவித்தவர்கள் (அப்போஸ்தலர் 7:8): ரூபன், சிமியோன், லேவி (இவனது கோத்திரம் ஆசாரிய வம்சமாயிற்று), யூதா (இவனது வழித்தோன்றல் தான் இயேசு), இசக்கார்,செபுலோன், தாண், நப்தலி, காத், ஆசேர், யோசேப்பு மற்றும் பென்யமீன் (ஆதியாகமம் 35:23-26;

*வெளிப்படுத்தல் 7:3-8). யாக்கோபின் குடும்பம் கானானுக்குத் திரும்பி வந்தது, வருகின்ற வழியில் தேவன் யாக்கோபுக்கு இஸ்ரவேல் என்ற ஒரு புதிய நாமத்தைக் கொடுத்தார். இவ்விதமாகத் தான் யூத மக்கள் இஸ்ரவேலர் என்று பெயர் பெற்றனர் (ஆதியாகமம் 32:22-32).*

*யோசேப்பு, யாக்கோபுக்கு மிகப் பிரியமான செல்ல மகன். தங்கள் பொறாமையின் காரணமாக யோசேப்பின் சகோதரர்கள் அவனைச் சில வியாபாரிகளிடம் ஓர் அடிமையாக விற்றுப் போட்டனர், அவர்கள் அவனை எகிப்துக்குக் கொண்டு சென்றனர் (ஆதியாகமம் 37:12-36). எனினும் தேவனோ யோசேப்புடன் இருந்தார், எல்லாவற்றையும் நன்மையாக மாற்றிப் போட்டு, அவனை எகிப்தில் அரசாங்க உயர் அதிகாரியாக்கினார் (ஆதியாகமம் 39:1-5; 41:41-57).*

*ஒரு பஞ்சம் ஏற்பட்ட போது யோசேப்பின் குடும்பத்தார் தானியம் வாங்குவதற்காக அவனிடம் வந்தனர், ஆனால் அவனாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் வரை அவனை அடையாளம் கண்டு கொள்ளவில்லை (ஆதியாகமம் 42:1-8; 45:1-11). பின்னர் குடும்பம் முழுவதும் எகிப்தில் குடியேறியது. யாக்கோபு (இஸ்ரவேல்), யோசேப்பின் இரண்டு குமாரர்களான எப்பிராயீமையும் மனாசேயையும் தனது சொந்தக் குமாரர்களாகத் தத்தெடுத்துக் கொண்டான் (ஆதியாகமம் 48:1-5; அப்போஸ்தலர் 7:9-16).*

*யோபு புத்தகம் ஏறக்குறைய ஆபிரகாமின் நாட்களில் தான் எழுதப் பட்டிருக்க வேண்டும். அது யோபு என்ற மனிதன் பட்ட பாடுகளையும், அவ்வளவு துன்பங்களின் மத்தியிலும் அவன் தனது விசுவாசத்தில் உறுதியாய் நின்றதையும் பற்றிப் பேசுகிறது.*

*இஸ்ரவேலர்கள் எகிப்தில் சுமார் நானூறு ஆண்டு காலம் வாழ்ந்து, மிகவும் பலுகிப் பெருகினர். எகிப்தியர்கள் அவர்களைக் கண்டு பயந்ததால் அவர்களைத் தங்களுக்கு அடிமைகளாக்கிக் கொண்டனர். எகிப்தில் இஸ்ரவேலர் வெகுவாகக் கொடுமைப் படுத்தப் பட்டனர். இறுதியில் தேவன் மோசே என்றவொரு இரட்சகனை அவர்களுக்காக எழும்பப் பண்ணினார். யாத்திராகமம் இஸ்ரவேலர் விடுவிக்கப் பட்டு, சீனாய் மலை நோக்கிப் பயணம் சென்ற வரலாற்றை விவரிக்கிறது. இது சுமார் கி.மு. 1400ஆம் ஆண்டில் நடைபெற்றது.*

*மோசேயும் அவனது மூத்த சகோதரன் ஆரோனும் மீண்டும் மீண்டும் பார்வோனைச் சந்தித்து இஸ்ரவேலரை விடுவிக்கச் சொல்லிக் கேட்டனர். ஒவ்வொரு முறையும் பார்வோன் மறுத்து விடுவான், தேவனும் எகிப்தியர் மேல் ஒரு வாதையை அனுப்புவார். கடைசி வாதை எகிப்தின் தலையீற்றுகள் அனைத்தையும் சங்கரிப்பது. இவ்வாதையிலிருந்து இஸ்ரவேலரைப் பாதுகாக்க "பஸ்கா " ஏற்படுத்தப் பட்டது. பழுதொன்றும் இல்லாத ஓர் ஆட்டுக் குட்டி பலியிடப் பட்டு அதன் இறைச்சி இஸ்ரவேல் குடும்பத்தாரால் புசிக்கப் பட்டது. அதன் இரத்தம், சங்காரத் தூதன் இஸ்ரவேலரின் வீடுகளைத் தொடக் கூடாது என்பதற்கு அடையாளமாக அவ்வீடுகளின் நிலைக் கால்களில் தெளிக்கப் பட்டது (யாத்திராகமம் 12:1-23). இயேசு நமது "பஸ்கா ஆட்டுக் குட்டி" என அழைக்கப் படுகிறார். ஏனெனில் அவருடைய இரத்தத்தினாலேயே நாம் மரணத்திற்கு விலக்கி இரட்சிக்கப் படுகிறோம் (1கொரிந்தியர் 5:7; 1 பேதுரு 1:19; வெளிப்படுத்தல் 5:6-10). மாவு புளிப்பதற்குக் கூட நேரம் இல்லாமையால், புளிப்பில்லா அப்பம் புசிக்கப் பட்டது. பார்வோன் தனது தலைமகன் மரித்துப் போனதைக் கண்ட போது,*

உடனடியாக இஸ்ரவேலர்கள் தன் நாட்டை விட்டு வெளியேறக் கட்டளை கொடுத்தான் (யாத்திராகமம் 12:29-39). ஆனால் இஸ்ரவேலர் கொஞ்சதூரம் தான் போயிருப்பார்கள், அதற்குள் பார்வோன் தன் மனதை மாற்றிக் கொண்டு அவர்களைப் பின் தொடரும் படி தனது சேனையை அனுப்பினான் (யாத்திராகமம் 14:5-14). கர்த்தருடைய மேகம் விலகி இஸ்ரவேலருக்கும் எகிப்திய சேனைக்கும் நடுவாகச் சென்றது. தேவன் செங்கடலைப் பிளக்க, இஸ்ரவேலர் வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள் (யாத்திராகமம் 14:15- 22; 1 கொரிந்தியர் 10:1-2). ஆனால் எகிப்தியர்கள் அவர்களைப் பின் தொடர்ந்து கடலுக்குள் செல்ல முற்பட்டபோதோ தண்ணீர் திரும்பி வந்து அவர்களை மூடிக் கொண்டது, அவர்கள் மூழ்கிப் போயினர் (யாத்திராகமம் 14:23-41).

இஸ்ரவேலர் பிரயாணம் பண்ணி சீனாய் மலையை அடைந்தார்கள். ஆசரிப்புக் கூடாரத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கான கட்டளைகளை தேவன் அங்கே வைத்துத் தான் மோசேயிடம் கொடுத்தார் (எபிரெயர் 9:1-10). நியாயப் பிரமாணத்தையும் தேவன் அங்குதான் வழங்கினார். பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களும் ஆகமங்கள் (நியாயப் பிரமாண நூல்கள்) என்று அழைக்கப் படுகின்றன. யூத நாட்டினருக்கான அனைத்துச் சட்ட திட்டங்களும் இந்த நூல்களில், குறிப்பாக லேவியராகமத்தில் காணப் படுகின்றன. யூத மக்கள் தேவனோடு சரியான உறவில் இருக்க வேண்டும் என்றால், தேவனால் ஆசீர்வதிக்கப் பட வேண்டும் என்றால், இந்தப் பிரமாணங்கள் அனைத்தையும் கைக்கொண்டாக வேண்டும். இந்தப் பிரமாணங்களை பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கலாம்: 1) காணிக்கைகள் மற்றும் பலிகள், 2) ஆசாரியர்களுக்கும் ஆலயத்துக்குமான விதிமுறைகள், 3)

தூய்மை மற்றும் சுத்திகரிப்பு, 4) பண்டிகைகள் மற்றும் 5) சமுதாய உறவுகள்.

நாம் யூத நியாயப் பிரமாணத்தைக்' கைக் கொள்ள வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் அது இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியாயிற்று (மத்தேயு 5:17). தேவன் மிருகங்களைப் பலியாகச் செலுத்தச் சொன்னார், காரணம் இரத்தம் சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது (எபிரெயர் 9:22). எனினும் பழைய ஏற்பாட்டின் பலிகள் மக்களை உண்மையாகவே சுத்திகரிக்கவோ அல்லது அவர்கள் உள்ளங்களை மாற்றவோ இல்லை (எபிரெயர் 9:9-10). கிறிஸ்துவே நம்மை முற்றிலும் சுத்திகரித்து, தேவனுக்கு முன்பாக நம்மைப் பூரணர்களாய் நிறுத்தக் கூடிய முற்று முடிவான, பழுதற்ற பலியானார் (எபிரெயர் 9:14; 10:10). ஆகவே கிறிஸ்து பலிகளையும் சுத்திகரிப்பையும் குறித்த பிரமாணங்களை நிறைவேற்றி விட்டார். பூலோக ஆலயம் அழிக்கப்பட்டது. இயேசு மெய்யான பரலோக ஆலயத்தில் பணி விடை செய்யும் நமது மகா பிரதான ஆசாரியராக விளங்குகிறார் (எபிரெயர் 8:1-2).

பழைய ஏற்பாட்டின் பண்டிகைகளும் (லேவியராகமம் - அதிகாரம் 23) கிறிஸ்துவின் முதல் வருகையில் நிறைவேறின, அல்லது இரண்டாம் வருகையில் நிறைவேறும்.

புளிப்பில்லா அப்பப் பண்டிகை அல்லது பஸ்கா பண்டிகையானது (லேவியராகமம் 23:4-8) நம்மை மரணத்தினின்று மீட்டெடுப்பதற்காக பஸ்கா பண்டிகை நாட்களில் நமக்காக பஸ்கா ஆட்டுக் குட்டியாக இயேசு மரித்த போது நிறைவேறியது. (இயேசு தமது சீஷர்களுடன் அருந்திய கடைசி விருந்து, அதாவது முதலாவது கர்த்தருடைய பந்தி ஒரு பஸ்கா விருந்தாகும்.)

முதற்பலன்களின் பண்டிகை (லேவியராகமம் 23:9- 14) அந்தக் குறிப்பிட்ட பண்டிகை நாளில் இயேசு மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பலனானவர் ஆனபோது நிறைவேறியது; அவரே 'முதற் பலனானார்." அவரில் விசுவாசம் வைத்தவர்கள் பின்னொரு நாளில் உயிரோடுஎழுவர் (1 கொரிந்தியர் 15:22-23). பெந்தெகொஸ்தே பண்டிகை வாரங்களின் பண்டிகை என்றும் பெயர் பெறும் (லேவியராகமம் 23:15-21), அது பரிசுத்த ஆவியானவர் சபையைப் பெலனால் தரிப்பிக்க பெந்தெகொஸ்தே நாளன்று வந்திறங்கிய போது நிறைவேறியது (அப்போஸ்தலர் 2:1-4). பாவ நிவிர்த்தியின் நாள் (லேவியராகமம் 16:1-34; 23:26-32) கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் நிறைவேற்றப் பட்டதுடன், அவர் பரலோகம் சென்று நமது சுத்திகரிப்பிற்காக பரலோக ஆலயத்தில் தமது சிந்தப் பட்ட இரத்தத்தைப் பலியாக ஏறெடுத்த போது முழுமை பெற்றது (எபிரெயர் 9:11-14, 24- 28). மற்ற இரண்டு பண்டிகைகளான எக்காளங்களின் பண்டிகையும், கூடாரப் பண்டிகையும் (லேவியராகமம் 23:23-25, 33-36) இயேசுவின் இரண்டாம் வருகையின் போது நிறைவேறும்.

சமுதாய உறவுகள் பற்றிய பிரமாணங்களான பத்துக் கட்டளைகள் போன்றவை (யாத்திராகமம் 20:1-17), தேவனால் கொடுக்கப் பட்டிருந்தன; ஆனால் நியாயப் பிரமாணத்தைக் கைக் கொள்வதனால் யாரும் நீதிமானாக முடியாது, ஏனெனில் யாரும் எல்லா நேரங்களிலும் எல்லாக் கற்பனைகளுக்கும் கீழ்ப்படிவது என்பது முடியாத காரியம் (கலாத்தியர் 2:15-16; யாக்கோபு 2:10). நியாயப் பிரமாணம் நம்மை கிறிஸ்துவிடம் விசுவாசம் கொள்ளச் செய்வதற்கு வழி நடத்தும் உபாத்தியாய் இருந்தது (கலாத்தியர் 3:24). இயேசு கிறிஸ்துவில் விசுவாசிகளாக நாம் இனி நியாயப் பிரமாணத்திற்குக் "கீழ்ப்பட்டவர்கள்" அல்லர் (ரோமர் 7:6;

கலாத்தியர் 3:13,25), ஆனால் அந்தச் சுயாதீனத்தை நாம் பாவ வாழ்க்கை செய்வதற்காகத் தவறாகப் பயன் படுத்தக் கூடாது (கலாத்தியர் 5:13). புதிய ஏற்பாட்டின் முக்கியப் போதனை, நாம் ஒருவரில் ஒருவர் அன்பு கூருவோமானால் எல்லாக் கற்பனைகளையும் கைக்கொண்டவர்களாவோம் (மத்தேயு 22:36-40; ரோமர் 13:8-10; கலாத்தியர் 5:14), உண்மையாகவே இயேசுவில் அன்பு கூருகிறவர்கள் அவரது கற்பனைகளைக் கைக்கொள்வார்கள் என்பதே (யோவான் 14:15; 1 யோவான் 2:4-5).

எண்ணாகமத்தில், இஸ்ரவேலர் சீனாய் வனாந்தரத்தில் தொடர்ந்து செய்த பிரயாணங்களைப் பற்றி வாசிக்கிறோம். அவர்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாக அடிக்கடி முறுமுறுத்தனர், கலகம் செய்தனர். கோராகு என்ற ஒருவன் இப்படிப்பட்ட ஒரு கலகத்தைத் தலைமையேற்று நடத்தினான், தேவன் அவனையும் அவன் கூட்டத்தாரையும் கொன்று போட்டார் (எண்ணாகமம் 16:1-40). வனாந்தரப் பயணத்தின் முடிவில், வாக்களிக்கப் பட்ட தேசமான கானான் தேசம் (இஸ்ரேல் நாடு) எப்படி இருக்கிறதென்று பார்த்து வர பன்னிரண்டு ஒற்றர்கள் அனுப்பப் பட்டனர். இந்தக் கானான் தேசத்தை தேவன் ஆபிரகாமின் சந்ததியாரான இஸ்ரவேலருக்குச் சொந்தமாகக் கொடுப்பதாக வாக்குப் பண்ணியிருந்தார்.

அந்தப் பன்னிரண்டு வேவுகாரர்களில் பத்துப் பேர் அங்கே இராட்சதர் இருப்பதாகவும், தாங்கள் அந்நாட்டை வெற்றி கொள்ளவே முடியாது என்றும் அறிக்கை கொடுத்தனர் (எண்ணாகமம் 13:17-33; 1 கொரிந்தியர் 10:1-11). வேவுகாரர்களின் இந்த அறிக்கையைக் கேட்ட மக்கள் திகிலடைந்தனர். மக்களின் அவிசுவாசத்திற்காக தேவன் அவர்களைத் தண்டித்தார், 40 ஆண்டுக் காலம் அந்த வனாந்தரத்திலேயே திரிந்தலையப் பண்ணினார்

*(எண்ணாகமம் 14:1-38). அந்த நாற்பதாண்டு காலமும் தினமும் வானத்திலிருந்து பெய்யப் பட்ட “மன்னா ” வினால் போஷிக்கப் பட்டனர் (யாத்திராகமம் 16:14-31; யோவான் 6:30-35). இருமுறை தண்ணீர் கேட்டு முறையிட்டனர், தேவன் கற்பாறையிலிருந்து தண்ணீர் சுரக்கச் செய்தார் (யாத்திராகமம் 17:1-7; எண்ணாகமம் 20:1- 11; 1 கொரிந்தியர் 10: 3-5). ஒருமுறை மக்கள் இப்படி முறுமுறுத்துக் கொண்டேயிருந்ததால் அவர்களைத் தண்டிக்கும் விதமாக அவர்கள் நடுவே பாம்புகளை அனுப்பினார்.*

*அவை மக்களைத் தீண்டின. அவர்கள் பேரில் இரக்கம் கொண்ட தேவன் அவர்களுக்கு எப்படி, உதவி செய்வது என்று மோசேக்குச் சொன்னார். மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தைச் செய்து அதை ஒரு கம்பத்தின் மேல் ஏற்றி வைத்தான். பாம்புகள் கடித்த போது, மக்கள் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தால் உயிர் பிழைப்பார்கள் (எண்ணாகமம் 21:4-9). அப்படியே சிலுவையின் மேல் உயர்த்தப் பட்டிருக்கிற இயேசுவை விசுவாசத்தினால் நோக்கிப் பார்ப்பதன் மூலம் நாம் பாவத்துக்கும் மரணத்துக்கும் விலக்கி இரட்சிக்கப் படுவோம் (யோவான் 3:14-15):*

*வனாந்தரத்தில் அலைந்து திரிந்த நாற்பதாண்டுகளின் முடிவில் இஸ்ரவேலர் மோவாப் தேசத்துக்குள் நுழைந்தனர். மோவாபிய ராஜாவான பாலாக் இதைக் கேள்விப் பட்டதும் ஆத்திரமும் அச்சமும் கொண்டான். ஆகவே இஸ்ரவேலரைச் சபிப்பதற்கென்று பிலேயாம் என்ற உள்ளூர்த் தீர்க்கதரிசி ஒருவனைக் கூலிக்கு அமர்த்தினான். பிலேயாம் போவதற்கு தேவனிடம் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டு அனுமதி பெற்றான்; ஆனால் தேவன் அவன் மேல் கடுங்கோபம் கொண்டார். போகும் வழியில் பிலேயாமின் கழுதை பயங்கரமான*

தோற்றத்துடன் நின்ற தேவ தூதனைக் கண்டு, பிலேயாமை எச்சரிக்க வாய் திறந்து பேசியது. எனவே பிலேயாம் இஸ்ரவேலரைச் சபிப்பதற்குப் பதிலாக ஆசீர்வதித்தான்.

எனினும் பாலாக் தருவதாகச் சொன்ன பணத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பிய பிலேயாம், இஸ்ரவேலரைப் பெலவீனப் படுத்துவதற்கு ஒரு தந்திரமான ஆலோசனை சொன்னான், பாகால் என்ற தெய்வத்தை வணங்கும் படி இஸ்ரவேல் மக்களை நயப்படுத்த அவர்களை வேசித்தனத்துக்குத் தூண்டி விட்டான் (எண்ணாகமம் 22:21-35; 25:1-3; 2 பேதுரு 2:15-16; வெளிப்படுத்தல் 2:14).

இஸ்ரவேலர் வாக்களிக்கப்பட்ட தேசமாகிய கானானுக்குள் பிரவேசிப்பதற்கு முன் கடைசியாக ஒருமுறை மோசே அவர்களுடன் பேசினான். இந்த உரை தான் உபாகமம் நூலில் இடம் பெறுகிறது. மோசே இஸ்ரவேலரின் வரலாற்றையும், நீதி நியாயங்களையும் திரும்பிப் பார்த்தான். அவர்கள் சட்ட திட்டங்களைக் கைக் கொண்டால் வரக்கூடிய ஆசீர்வதங்களையும், அவற்றைக் கைக் கொள்ளத் தவறினால் வரக்கூடிய சாபங்களையும் எடுத்துரைத்தான் (உபாகமம் 11:26-28). அதன்பிறகு மோசே மரித்தான், தேவனே அவனை அடக்கம் பண்ணினார்.

யோசுவா நூலில், மோசேக்குப் பின் யோசுவா எப்படி தலைமையேற்று நடத்தினான் என்பதைப் படிக்கிறோம். இஸ்ரவேலர் தேவ திட்டத்தின் படியும், தேவ வல்லமையினாலும் எரிகோ நகரை ஜெயித்தனர், இதுவே அவர்களது முதலாவது வெற்றி. தேவன் சொன்னபடியே பட்டணத்தைச் சுற்றி வந்த பின்னர், எக்காளங்களை முழக்கி ஆர்ப்பரித்தனர். நகரத்தின் கோட்டைகள் தகர்ந்து விழுந்தன, இஸ்ரவேலர் உள்ளே நுழைந்தனர் (யோசுவா 6:1-21). இதற்கு முன், ராகாப் என்ற வேசி, இஸ்ரவேலின்

ஒற்றர்களைத் தன் வீட்டில் பாதுகாப்பாக ஒளித்து வைத்த காரணத்தினால் அவளுடைய குடும்பம் மட்டும் உயிர் தப்பிப் பிழைத்தது (யோசுவா 2:1-21; 6:22-25; எபிரெயர் 11:30-31). அவள் இயேசு கிறிஸ்துவின் மூதாதையர்கள் வரிசையில் இடம் பிடித்தாள் (மத்தேயு 1:5). யோசுவா, கானான் தேசத்தின் மீதிப் பகுதிகளையும் கைப்பற்றி, இஸ்ரவேலரின் பன்னிரு கோத்திரங்களுக்கும் அதைச் சுதந்தரமாகப் பங்கிட்டான்.

நியாயாதிபதிகள் நூல், யோசுவா மரித்தபின் இஸ்ரவேலரை ஆண்ட நியாயாதிபதிகள் பற்றிக் கூறுவது. தேவனே அவர்கள் இராஜாவாய் இருந்தார். எனினும், மக்களோ தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழவில்லை. மீண்டும் மீண்டும் தங்கள் அயலகத்தாரின் தெய்வங்களையும் விக்கிரகங்களையும் நாடி தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தனர். எனவே தேவன் அவர்களை ஒடுக்கக் கூடிய அந்நிய ஜாதிகளிடத்தில் அவர்களை விற்றுப் போட்டார். ஒவ்வொரு முறையும் தங்கள் பகைவர்களிடமிருந்து இரட்சிக்க வேண்டுமென அவர்கள் தேவனை நோக்கிக் கதறிய போது தேவன் அவர்களை விடுவிக்க ஓர் இரட்சகனை எழும்பப் பண்ணுவார் (நியாயாதிபதிகள் 2:10-19). அப்படிப் பட்ட புகழ் பெற்ற இரட்சகர்கள் அல்லது நியாயாதிபதிகள் கிதியோன், பாராக் மற்றும் சிம்சோன் வர் (எபிரெயர் 11:32).

ரூத்தின் புத்தகம் தாவீதின் கொள்ளுப் பாட்டி பற்றியது, அவள் ஓர் இஸ்ரவேல் பெண்ணல்ல, ஆனால் மெய்யான தேவனில் விசுவாசம் வைத்திருந்த ஒரு மோவாபியப் பெண், அவள் ஓர் இஸ்ரவேலனை மணம் புரிந்து கொண்டு, இயேசுவின் மூதாதையர்கள் வரிசையில் இடம் பிடித்தாள் (மத்தேயு 1:5).

1 சாமுவேல் கடைசி நியாயாதிபதியின் கதையாகும். சாமுவேலின் தாய் தனது மகனைத் தேவனுக்கென்று அர்ப்பணித்து அவன் குழந்தையாய் இருந்த போதே தேவாலயத்தில் பணிவிடை செய்வதற்கு அவனைக் கொண்டு போய் விட்டு விட்டாள். அங்கே தேவன் சாமுவேலுடன் பேசினார், அவன் ஒரு தீர்க்கதரிசியாக மட்டுமல்ல, ஒரு நியாயாதிபதியாகவும் மாறினான். அவனுக்கு வயதான போதோ, ஜனங்கள் தங்களைச் சூழ இருந்த புற ஜாதிகள் போலவே தங்களுக்கும் ஓர் இராஜா வேண்டுமென்றனர். இராஜாக்களால் வரக் கூடிய பிரச்சனைகள் பற்றி சாமுவேல் எச்சரித்தான், ஆனால் மக்களோ பிடிவாதம் செய்தனர், ஆகவே தேவன் அவர்களுக்கு ஓர் இராஜாவைக் கொடுக்க உடன் பட்டார் (1 சாமுவேல் 8:6-22). சவுல் என்ற பெயர் கொண்ட ஒருவனை தேவன் தெரிந்தெடுத்தார், அவன் முதலில் நன்றாகத் தான் ஆட்சி புரிந்தான். ஆனால் எத்தனையோ முறைகள் பாவம் செய்வான், அதற்காக மனந்திரும்பவே மாட்டான், இறுதியில் தேவன் அவனைப் புறக்கணித்தார்.

இளம் ஆட்டிடையனான தாவீது என்ற வாலிபனை இஸ்ரவேலின் அடுத்த இராஜாவாக அபிஷேகம் பண்ணும் படி தேவன் சாமுவேலுக்குக் கட்டளையிட்டார். அன்று முதல் கர்த்தருடைய ஆவியானவர் வந்து அவன் மேல் இறங்கியிருந்தார். ஒருமுறை, இஸ்ரவேலரின் பகைவனான கோலியாத் என்ற இராட்சதன் இஸ்ரவேலரைப் பார்த்துச் சவால் விட்டான், இஸ்ரவேலரில் யாரும் அவனுடன் சண்டையிடத் துணியவில்லை. இறுதியாக தாவீது முன் வந்தான், தனது கவணிலுள்ள ஒரு கல்லைக் கொண்டு அந்த இராட்சதனை முகங்குப்புற விழச் செய்தான் (1 சாமுவேல் 17:32-51). பின்னர் தாவீது ஒரு மாபெரும் வீரனானான், அது சவுலுக்குப் பொறாமையானது. சவுல் பல சமயங்களில் தாவிதைக் கொல்ல முயன்றான், தாவீது ஒவ்வொரு

முறையும் தப்பிக் கொண்டான். இருமுறை சவுலைக் கொல்லக் கூடிய சந்தர்ப்பம் கிட்டிய போதும், தாவீது தேவன் அபிஷேகம் பண்ணிய மனிதனை - ஒருவேளை பிற்காலத்தில் தேவனே அவனைப் புறக்கணித்து விட்டிருந்தாலும் - தான் கொல்ல மாட்டேன் என்று மறுத்து விட்டான்.

2 சாமுவேல் மற்றும் 1 நாளாகமம், சவுல் போர்க்களத்தில் மரித்த பின்னர் தாவீது எப்படி அரசனானான் என்பது பற்றிப் பேசுகின்றன. தாவீது கி.மு.1010 முதல் கி.மு. 970 வரை ஆட்சி செய்தான். தான் அரசனானவுடன் முதல் வேலையாக, பகைவர்களான பெலிஸ்தியர்களால் பிடிபட்டிருந்த தேவனுடைய பெட்டியை மீட்டு, யூதர்களின் புதிய தலைநகரான எருசலேமுக்கு மிகுந்த களிப்புடனும் ஆடல் பாடலுடனும் கொண்டு வந்தான் (2 சாமுவேல் 6:12-15). தாவீது கர்த்தருக்கென்று ஓர் ஆலயம் கட்ட வாஞ்சித்தான். ஆனால் தேவனோ அவனது குமாரனே அதைக் கட்டுவான் என்று சொல்லி விட்டார். தாவீது பெரும் வெற்றிகளைப் பெற்றான், தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டான். அவனுடைய சிங்காசனம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்று தேவன் அவனுக்கு வாக்குக் கொடுத்தார். இந்த வாக்கு இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியது, அவருடைய இராஜ்யம் முடிவில்லாதது.

இயேசு தாவீதின் வம்சத்தில் தோன்றினார் (மத்தேயு 1:1), "தாவீதின் வேர்'' என்றும்" யூதாவின் சிங்கம்'' என்றும் அழைக்கப்பட்டார் (வெளிப்படுத்தல் 5:5). தாவீது, பின்னர் வந்த தீர்க்கதரிசிகளால் ஓர் இலட்சிய மன்னனாகக் கருதப் பட்டான். எனினும் அவனும் சில வேளைகளில் பாவம் செய்தான். ஆனால் ஒரு விஷயத்தில் சவுலை விட்டு வேறுபட்டான். தன் பாவத்துக்காக எப்பொழுதும் மனம்

வருந்தினான், தேவனோடு உறவைப் புதுப்பித்துக் கொண்டான். அவன் ஓர் இசைக் கலைஞனும் பாடகனும் கூட. ஏராளமான சங்கீதங்களை எழுதினான். சில சங்கீதங்கள் இயேசு கிறிஸ்து மற்றும் அவரது மரணம் பற்றிய தீர்க்கதரிசனங்களாக அமைந்தன (சங்கீதம் 22,69).

1 மற்றும் 2 இராஜாக்கள், மற்றும் 2 நாளாகமம் ஆகியவை தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் ஆட்சிக் காலம் தொடங்கி இஸ்ரவேல் இராஜ்யம் பற்றிக் கூறுகின்றன. தேவன் சாலொமோனிடம் அவன் விரும்புவதைத் தம்மிடம் கேட்கச் சொன்னார், அதைத் தாம் தருவதாகவும் வாக்களித்தார். வேறு யாராக இருந்திருந்தாலும் ஐசுவரியத்தையும் கனத்தையுமே கேட்டிருப்பார்கள், ஆனால் சாலொமோனோ ஞானமுள்ள இருதயம் வேண்டுமெனக் கேட்டான் (1 இராஜாக்கள் 3:5-9). தேவன் அவன் கேட்ட ஞானத்தை அவனுக்குக் கொடுத்ததும் அன்றி அவன் கேட்காத ஐசுவரியத்தையும் கனத்தையும் சேர்த்துக் கொடுத்தார் (மத்தேயு 12:42; லூக்கா 12:27). சாலொமோன் வேதத்திலுள்ள மூன்று ஞான நூல்களை எழுதினான். அவை : நீதி மொழிகள், பிரசங்கி மற்றும் உன்னதப் பாட்டு. அவன் செய்த சிறந்த பணி எருசலேமில் கர்த்தருக்கென்று நிரந்தரமான ஒரு தேவாலயத்தைக் கட்டுவித்ததே.

சாலொமோனின் மரணத்துக்குப் பின், இஸ்ரவேல் சாம்ராஜ்யம் இரண்டாகப் பிரிந்தது. வடக்கேயிருந்த பத்து கோத்திரங்கள் தனியே பிரிந்து சென்றன, அந்தப் புதிய இராஜ்யம் இஸ்ரவேல் இராஜ்யம் என்று அழைக்கப் பட்டது. மீதியான இரண்டு கோத்திரங்களும் தென்புறத்தில் யூத ராஜ்யம் செய்யப் பட்டது, இதன் முதல் ஆண்டன. யூதா தாவீதின் வம்சத்தினரால் ஆளுகை என்ற பெயரில் அரசன் சாலொமோனின் மகனான ரெகொபெயாம். இந்தப்

பிளவுபட்ட இராஜ்யங்கள் மொத்தம் 344 ஆண்டுகள் நீடித்தன. யூதாவின் இராஜாக்களில் சிலர் தேவனுக்குக் கீழ்ப்படிந்தனர், அந்நிய விக்கிரகங்களை வணங்கி வந்த மக்களை மெய் தேவனுக்கு நேராகத் திருப்பிக் கொண்டு வந்தனர். வேறு சிலரோ தேவனுடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, மக்களை விக்கிரக வணக்கத்துக்குத் தூண்டி விட்டனர்.

வடபுற இராஜ்யமான இஸ்ரவேல் தேசத்து இராஜாக்களில் ஒருவர் கூட தேவனை வணங்கவில்லை. அவர்களது முதல் இராஜா பெத்தெலில் ஒன்றும் தாணில் ஒன்றுமாக இரண்டு பொற்கன்றுக் குட்டிகளை ஏற்படுத்தி வைத்தான். (பிற்காலத்தில் சமாரியர் என்று அழைக்கப் பட்ட) இம் மக்கள், எருசலேமில் உள்ள தேவாலயத்தில் போய் மெய் தேவனைத் தொழுது கொள்வதற்குப் பதிலாக இந்தப் பொன்னாலான கன்றுக் குட்டிகளையே தொழுது வந்தனர்.

இயேசுவின் நாட்களில் யூதர்கள் சமாரியர்களை அருவருக்க ஒரு காரணம் இதுவே (யோவான் 4:9,19-24). இஸ்ரவேலரின் பொல்லாத இராஜாக்களில் ஒருவன் ஆகாப், இவன் யேசபேல் என்ற ஒரு புறஜாதிப் பெண்ணை மணமுடித்திருந்தான். இவர்கள் இருவருமாக அந்நாட்களில் பலத்த தீர்க்கதரிசியாக விளங்கிய எலியாவை அடியோடு வெறுத்தனர் (1 இராஜாக்கள் - 17,18 அதிகாரங்கள்). எலியாவும், அவனைத் தொடர்ந்த வந்த எலிசாவும் (2 இராஜாக்கள் - 2-8 அதிகாரங்கள்) ஏராளமான அற்புதங்களை நிகழ்த்தி தேவனே உண்மையான தெய்வம் என்பதை நிரூபித்தனர் (லூக்கா 4:24-27). எலியா மரணமே அடையாமல், நேரடியாகப் பரலோகத்திற்கு ஏறெடுத்துக் கொள்ளப் பட்டான் ( 2 இராஜாக்கள் 2:11; 9:9-4-5).

அந்தக் கால கட்டங்களில் இன்னும் பல தீர்க்கதரிசிகளும் இஸ்ரவேல், யூதா மக்களுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தனர். மக்கள் தொடர்ந்து பாவத்திலும் கலகத்திலும் வாழும் பட்சத்தில் அவர்கள் மேல் வரக்கூடிய நியாயத் தீர்ப்பைக் குறித்து எச்சரிக்கவும் செய்தனர். இரு இராஜ்யத்தின் மக்களும் மனந்திரும்பாவிடில் அந்நிய தேசங்களில் சிதறடிக்கப் பட்டுப் போவார்கள் என்று முன்னுரைத்தனர். சில நேரங்களில் மக்கள் இவ்வித எச்சரிப்புகளைக் கேட்டு மனந்திரும்பினர், ஆனால் பல வேளைகளில் மனந்திரும்பாமலே போயினர். இறுதியில் தீர்க்கதரிசிகள் உரைத்தது உண்மையானது. தேவன் அவர்களை அந்நிய தேசங்களுக்குச் சிறைப்பட்டுப் போகச் செய்தார்.

இஸ்ரவேல் மக்கள் கி.மு. 722 இல் அசீரியாவுக்கும் (இன்றைய சிரியா), யூத மக்கள் கி.மு. 586 இல் பாபிலோனுக்கும் (இன்றைய ஈராக்) சிறையாகக் கொண்டு போகப் பட்டனர். இராஜ்யம் பிளவு பட்ட பின்னர் தீர்க்கதரிசனம் உரைத்த தீர்க்கதரிசிகள் (காலக் கிரமப்படி) : யோவேல் (அப்போஸ்தலர் 2:16-21), யோனா (மத்தேயு 12:38- 41), ஆமோஸ், ஓசியா, ஏசாயா (புதிய ஏற்பாட்டில் மிக அதிகமாக மேற்கோள் காட்டப் படும் தீர்க்கதரிசி இவரே), மீகா, நாகூம், செப்பனியா, ஆபகூக், மற்றும் எரேமியா - இவன் புலம்பல் புத்தகத்தையும் எழுதினான். இவர்களில் பலர் இயேசு கிறிஸ்துவைக் குறித்தும், அவரது பிறப்பு, மரணம் மற்றும் இரண்டாம் வருகை குறித்தும் தீர்க்கதரிசனங்கள் உரைத்தனர்.

யூதர்களும் இஸ்ரவேலரும் சிறைப் பட்டுப் போன கால கட்டத்தில் வரலாற்றுப் பூர்வமான நூல்கள் எதுவும் எழுதப்படவில்லை. எனினும் எசேக்கியேல் மற்றும் தானியேல் தீர்க்கதரிசிகள் இக்கால கட்டத்தில் தான்

எழுதினர். ஒரு வேளை ஒபதியாவும் இதே கால கட்டத்தவராக இருந்திருக்கலாம். சிறையிருப்பின் முடிவில் பெர்சியப் பேரரசு (இன்றைய ஈரான்), பாபிலோனியப் பேரரசை வெற்றி கொண்டது.

கி.மு. 538 இல், பெர்சியப் பேரரசனான கோரேஸ் இராஜா, எருசலேமுக்குத் திரும்பிச் செல்ல மனமுள்ள யாரும் திரும்பிச் செல்லலாம், தேவனுடைய ஆலயத்தைப் புதுப்பிக்கலாம் என்று பிரகடனம் செய்தான். இதைக் குறித்து வரலாற்று நூலான எஸ்றா புத்தகத்தில் வாசிக்கிறோம். முதல் கூட்டம் செருபாபேலின் தலைமையின் கீழ் எருசலேமுக்கு திரும்பி தேவாலயத்தைச் செப்பனிடத் தொடங்கியது. எதிர்ப்பு கிளம்பவே, வேலை கொஞ்சக் காலத்திற்குத் தடைப் பட்டது. ஆகாய், சகரியா தீர்க்கதரிசிகள் தரிசனம் கூறி மக்களை உற்சாகப் படுத்தினர், தேவாலயப் பணி நிறைவு பெற்றது (எஸ்றா 6:14-16).

கி.மு 458 இல் எஸ்றா இரண்டாவது கூட்டத்தை எருசலேமுக்குக் கூட்டிச் சென்றான். ஆசாரியனாகிய எஸ்றா நியாயப் பிரமாணத்தை மீண்டும் உபதேசித்தான். யூதர்கள் அந்நிய ஜாதிப் பெண்களை மணந்து கொண்டதால் அவர்கள் யூத கணவன்மாரை வழிவிலகச் செய்து தங்கள் குல தெய்வங்களை வணங்கச் செய்திருந்தனர். இவ்வகைக் கலப்புத் திருமணங்கள் என்ற பாவத்திற்கு எஸ்றா ஒரு முடிவு கட்டினான். இதே கால கட்டத்தில் தான் பெர்சியாவின் யூத இராஜஸ்திரீயாகிய எஸ்தரின் கதையும் நடைபெற்றது. யூதர்களை அழிப்பதற்கு நடந்த ஒரு சதியிலிருந்து அவர்களைக் காப்பாற்ற தேவன் அவளைப் பயன் படுத்தினார்.

ஆண்டுகள் பல கடந்த பின்னர், பெர்சிய ராஜாவின் பானபாத்திரக் காரனான நெகேமியா மூன்றாவதாக ஒரு

*கூட்டம் இஸ்ரவேலருடன் எருசலேம் திரும்பி எருசலேமின் அலங்கங்களைக் கட்ட முனைந்தான் (நெகேமியா **6:15-16**). இதே கால கட்டத்தில் மல்கியாவும் தீர்க்கதரிசனம் உரைத்தான். கி.மு. சுமார் **400** ஆம் ஆண்டுக்குப் பிறகு, இரட்சகரான இயேசு கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்த யோவான்ஸ்நானன் வரும் வரைக்கும் எந்தத் தீர்க்கதரிசிகளும் இஸ்ரவேல் மக்களிடம் பேசவில்லை.*

# 20. நமது வேதாகமம் வந்தது எப்படி?

## பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாடு சுமாராக கி.மு. 1400 முதல் 400 வரையிலான ஓராயிரம் ஆண்டுகள் கால கட்டத்தில் எழுதப் பட்டது. பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்கள் - இவை ஆகமங்கள் அல்லது மோசேயின் நியாயப் பிரமாண நூல்கள் என்றும் சில சமயங்களில் அழைக்கப்படுவதுண்டு - ஏறத்தாழ கி.மு. 1400 ஆம் ஆண்டின் மோசேயினால் எழுதப் பட்டவை. பழைய ஏற்பாட்டின் இறுதி நூலான மல்கியா சுமாராக கி.மு. 400 ஆம் ஆண்டில் மல்கியா தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டது.

பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் யூத வேதபாரகர்களால் மிகக் கவனமாக கையெழுத்துப் பிரதிகளாகத் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு தலைமுறையாகக் கடந்து வந்தன. வேதபாரகன் ஒருவன் ஒரு புதிய நகல் எடுத்து முடித்ததும் பழைய பிரதியை அழித்து விடுவான். இதன் காரணமாக பழைய ஏற்பாட்டின் தொன்று தொட்ட பிரதிகள் ஏதும் இப்பொழுது கிடையாது. இன்றைக்கு நமக்குக் கிட்டக் கூடிய மிகப் பழமையான முழு பழைய ஏற்பாடும் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் பட்ட பிரதியாகும். தயாரிக்கப்

எனினும் 1947இல் இஸ்ரேலில் ஓர் இடையர் குலச் சிறுவன் பண்டைக் காலத் தோற் சுருள்களைக் கண்டுபிடித்தான். அவன் அவற்றை சவக்கடலின் அருகேயுள்ள எரிகோ நகரின் தென்புறமாக எட்டு மைல் கல் தொலைவிலுள்ள ஒரு குகையில் கண்டெடுத்தான். எனவே இவை சவக்கடல் தோற்சுருள்கள் என்று அழைக்கப் படுகின்றன. இந்தத் தோற் சுருளில் பழைய ஏற்பாட்டின்

ஒவ்வொரு நூலிலிருந்தும் சிற்சில பகுதிகள் அடங்கியுள்ளன. இவை கி.மு. முதலாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் எப்பொழுதோ பிரதியெடுக்கப் பட்டிருக்க வேண்டும். எழுத்திலும் நடையிலும் மிகச் சிறிய வேறுபாடுகளைத் தவிர மற்றபடி இவை, தற்போதுள்ள பத்தாம் நூற்றாண்டுப் பிரதிகளையே அச்சு அசலாகக் கொண்டுள்ளன. யூத வேத பாரகர்கள் மிகுந்த கவனத்துடனும், மிகத் துல்லியமாகவும் பிரதிகள் தயாரித்தனர் என்பதை இது நிரூபிக்கிறது. ஆகவே பழைய ஏற்பாட்டின் சமீப காலப் பிரதிகள் (நமது நவீன கால வேதாகமங்கள் இவற்றை ஆதாரமாகக் கொண்டவையே), பழைய ஏற்பாட்டின் மூல ஆக்கியோன்கள் எழுதிய மூலப் பிரதிகளின் மிகத் துல்லியமான பிரதிகளே என்று தைரியமாக நம்பலாம். இது மிக முக்கியம், காரணம், நாம் கீழே காண இருக்கிறபடி மூல ஆக்கியோன்கள், தேவன் எழுத விரும்பியதை எழுதத்தக்கதாக ஒரு சிறப்பான விதத்தில் நேரிடையாக அவரால் ஏவியருளப் பட்டவர்கள். எனவே அவர்கள் எழுதியவை நூற்றாண்டு நூற்றாண்டுக் காலமாக மிகுந்த கவனத்தோடும், எந்தப் பிழையும் இன்றியும் எழுதப் பட்டு நமக்குக் கிடைத்துள்ளன என நாம் நிச்சயமாக நம்பலாம்.

பழைய ஏற்பாட்டுப் பிரதிகள் பெரும்பாலும் எபிரெய மொழியில் எழுதப் பட்டவையே. இதுவே யூதர்களின் பண்டைய மொழி. இருப்பினும், கிறிஸ்துவின் காலத்தில் பாமரர்கள் எபிரேய மொழி பேசவில்லை; முக்கியமாக யூத ஆசாரியர்களும், மத அறிஞர்களுமே அதைப் பயன்படுத்தினர். கிறிஸ்துவின் நாட்களில் மத்திய கிழக்கில் பரவலாக வழக்கத்தில் இருந்த மொழி அரமேய மொழியாகும். கிறிஸ்துவும் அம்மொழியில் தான் பேசினார். நவீன இந்திய மொழிகள் எல்லாம் எப்படி சமஸ்கிருத மொழியோடு தொடர்புள்ளவையோ அப்படியே அரமேய மொழியும் எபிரேய மொழியுடன் தொடர்புடையது.

ஆயினும், கிறிஸ்துவின் காலத்தில் வேறொரு முக்கிய மொழியும் பயன்படுத்தப் பட்டது,

அது கிரேக்க மொழியாகும். மத்திய தரைக் கடல் பகுதி முழுவதிலும் கிரேக்க மொழி பேசப்பட்டதுடன், அது படித்தவர்கள் அனைவரும் அறிந்த மொழியாகவும் விளங்கியது. எபிரேய மொழியை அறிந்தவர்கள் வெகு சிலர் மட்டுமே என்ற காரணத்தால் பழைய ஏற்பாடானது சுமாராக கி.மு. 200ஆம் ஆண்டில் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப் பட்டது. புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்கள் பழைய ஏற்பாட்டு வேத வசனங்களை மேற்கோள் காட்டிய போது, பொதுவாக மூல மொழியாகிய எபிரேய மொழியை விட்டு விட்டு இந்தக் கிரேக்க மொழிபெயர்ப்பையே பயன்படுத்தினார்.

பழைய ஏற்பாடு பல்வேறு ஆக்கியோன்களால் எழுதப் பட்ட முப்பத்தொன்பது புத்தகங்களைக் கொண்டது. அவற்றில் அடங்கியுள்ளவை பற்றி அறிய பொதுவான தலைப்பு: பழைய ஏற்பாட்டின் சுருக்கம் - பார்க்க.

## புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப் பட்டது, இது கிறிஸ்துவின் மரணத்துக்கு இருபது ஆண்டுகள் கழித்துத் தொடங்கியது. கிறிஸ்து தமது சீஷர்களுக்கு இட்ட இறுதிக் கட்டளை அவர்கள் உலகம் எங்கும் தமக்குச் சாட்சிகளாய் இருக்க வேண்டும் என்பதே (அப்போஸ்தலர் 1:8). எனவே, பெந்தெகொஸ்தே நாள் முதல் சீஷர்கள் கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் போதனைகள் பற்றி மற்றவர்களிடம் சொல்ல ஆரம்பித்தனர். கிறிஸ்து மரித்தபின் முதல்

இருபதாண்டுகளுக்கு சீஷர்கள் அல்லது அப்போஸ்தலர்கள் வாய் வார்த்தைகளாலேயே போதித்து வந்தனர். ஆனால் அவர்களுக்கு வயதாக ஆக, அவர்களது போதனைகள் எவ்வித மாற்றமுமின்றி வருங்காலத் தலைமுறைகளுக்குத் துல்லியமாகக் கிடைப்பதை உறுதிப் படுத்துவதற்கு அது எழுத்துப் பூர்வமானதாக அமைய வேண்டும் என்று பட்டது. ஆகவே அப்போஸ்தலர்களில் சிலரும் அவர்களுக்கு நெருக்கமான உடன் ஊழியர்களும் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை எழுத முற்பட்டனர். அப்போஸ்தலனாகிய பேதுரு மாற்குவுடன் இணைந்து மாற்கு சுவிசேஷத்தை எழுதினான் (மாற்கு : முன்னுரை பார்க்க). அப்போஸ்தலனாகிய மத்தேயு மத்தேயு சுவிசேஷத்தையும், அப்போஸ்தலனாகிய யோவான் யோவான் சுவிசேஷத்தையும் எழுதினர். அப்போஸ்தலனாகிய பவுலின் உடன் ஊழியனாகிய லூக்கா லூக்கா சுவிசேஷத்தையும், ஆதித் திருச்சபையின் வரலாறாகிய அப்போஸ்தலரின் நடபடிகள் நூலையும் எழுதினான்.

கிறிஸ்துவின் வாழ்க்கை பற்றி எழுதியதோடு கூட கிறிஸ்து ஏன் பூமிக்கு வந்தார் என்பதற்கான முழுமையான விளக்கங்களை எழுதுவதும், புதிய சபைகளில் பரவத் தொடங்கியிருந்த தவறான, பொய்யான உபதேசங்களைக் கண்டித்துத் திருத்துவதும் அப்போஸ்தலர்களுக்கு அவசியமாயிற்று. ஆகவே தாங்கள் நிறுவிய புதிய சபைகளுக்குக் கடிதங்கள் எழுதத் தொடங்கினர். இதில் அப்போஸ்தலனாகிய பவுல் 13 கடிதங்களை எழுதினான். அவன் எழுதிய முதல் நிருபம் சுமாராக கி.பி. 50 இல் எழுதப் பட்ட கலாத்திய நிருபமாகும் (கலாத்தியர் : முன்னுரை பார்க்க). முதன் முதலாக எழுதப் பட்ட புதிய ஏற்பாட்டு நூல் இயேசுவின் சகோதரனான யாக்கோபு எழுதிய நிருபம் (யாக்கோபு: முன்னுரை பார்க்க) என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். கடைசியாக எழுதப் பட்ட

புதிய ஏற்பாட்டின் நூல், அப்போஸ்தலனாகிய யோவானால் ஏறத்தாழ கி.பி. 90-95 இல் எழுதப் பட்ட வெளிப்படுத்தின விசேஷம் ஆகும். இவ்வாறாக முழு புதிய ஏற்பாடும் சுமாராக கி.பி. 50-100 என்ற கால கட்டத்திற்குள் எழுதி முடிக்கப் பட்டது.

புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்களால் எழுதப்பட்ட மூலப் பிரதிகள் பெரும்பாலும் பேப்பிரஸ்' என்ற தாவரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு வகை காகிதத்தில் எழுதப் பட்டன. இந்த பேப்பிரஸ் காகிதம் இன்றைய நமது காகிதத்தைப் போல நீடித்து உழைக்கக் கூடியதல்ல. இதன் விளைவாக, புதிய ஏற்பாட்டு ஆக்கியோன்கள் எழுதிய பேப்பிரஸ் காகிதச் சுருள்கள் அனைத்தும் அழிந்து போய் விட்டன, பழைய ஏற்பாட்டைப் போலவே புதிய ஏற்பாடும் மூலப் பிரதிகளின் நகல்களாகவே உள்ளது.

கிறிஸ்துவுக்குப் பின் முதல் மூன்று நூற்றாண்டுகளில் புதிய ஏற்பாடு கவனமாகவும் பிழையின்றியும் பேப்பிரஸ் காகிதச் சுருள்களில் நகல் எடுக்கப் பட்டது. 1900ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இப்படிப் பட்ட பண்டைய பேப்பிரஸ் காகித புதிய ஏற்பாட்டுப் பிரதிகள் எகிப்தில் மணலில் புதையுண்டு கிடந்தது கண்டு பிடிக்கப் பட்டது. வேறு சில பிரதிகள் பாதுகாப்பான பெட்டகங்களில் காத்து வைக்கப் பட்டிருந்தன. இவற்றுள் மிக மிகப் பழைய பிரதி கி.பி. 135இல் தயாரிக்கப் பட்டது, யோவான் சுவிசேஷத்தின் ஒரு பகுதியைக் கொண்டது. அதற்கு அடுத்தாற் போல் எழுதப் பட்ட பிரதிகள் கி.பி.200 இல் தயாரிக்கப் பட்டவை, புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதிகள் இதில் காணப் படுகின்றன. இந்தப் பண்டையச் சுருள்கள் தற்போது அருங்காட்சியகங்களில் வைத்துப் பேணப் படுகின்றன.

வேதாகமக் காலங்களில் பயன்படுத்தப் பட்ட இன்னொரு வகை “காகிதம்” தோற்சுருள் ஆகும், இது வெள்ளாடு அல்லது செம்மறியாட்டின் தோல் விசேஷ முறையில் பதனிடப் பட்டதாகும். தோற்சுருள் பேப்பிரஸை விட விலையுயர்ந்தது. புதிய ஏற்பாட்டின் சில புத்தகங்களாவது முதலில் தோற்சுருளில் தான் எழுதப் பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி எழுதப் பட்டிருந்தாலும் அவை பாதுகாக்கப் படவில்லை. முழு புதிய ஏற்பாட்டின் மிகத் தொன்மையான பிரதி நான்காம் நூற்றாண்டில் தயாரிக்கப் பட்டதாகும், இது தோற்சுருளிலேயே எழுதப் பட்டுள்ளது. இந்தப் பழமை வாய்ந்த பிரதி 1800 ஆம் ஆண்டுகளின் மத்தியப் பகுதியில் எகிப்திலுள்ள சீனாய் மலையின் அருகே அமைந்திருக்கும் ஒரு மடத்தில் புதைத்து வைக்கப் பட்டிருந்தது தெரிய வந்தது.

இந்தப் பழமையான பிரதியுடன் சேர்த்து, 4ஆம் மற்றும் 9ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையே எழுதப் பட்ட கிரேக்க புதிய ஏற்பாட்டின் தோற்சுருள் பிரதிகள் மொத்தம் 270 நம்மிடையே உள்ளன.

9 முதல் 15ஆம் நூற்றாண்டு வரை ஏராளமான கிரேக்க புதிய ஏற்பாட்டுப் பிரதிகள் தயாரிக்கப் பட்டன. அவற்றுள் 2700க்கும் மேற்பட்டவை இன்றுவரை பாதுகாக்கப் பட்டு வருகின்றன. பின்னர் கி.பி. 1456 இல் ஜோஹன் கூட்டன்பர்க் என்ற ஜெர்மானியர் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். முதல் புத்தகம் - வேதாகமம் அச்சிடப் பட்டது. அதன்பிறகு புத்தகங்களைக் கையால் பிரதியெடுக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை; அச்சு இயந்திரங்களின் உதவியால் விரைவாகவும் பயன்படுத்தி எழுதினர். அவர்களது தனிப்பட்ட ஆளுமைகளும், குணநலன்களும் அவர்களது

*எழுத்துக்களில் புலப்படுகின்றன. இயேசு தேவனும் மனிதனும் ஒருங்கே உள்ளவராக இருந்தது போலவே வேதமும் தேவனுடைய வார்த்தையும் மனிதனுடைய வார்த்தையும் ஒருங்கே அமைந்ததாகும். அது ஒரு சிறப்பான விதத்தில் தேவனுடைய சிந்தையை அறிந்திருந்த மனிதர்களால் எழுதப் பட்டது. தேவன் தமது சிந்தையை அவர்களுக்கு வெளிப்படுத்தினார், தேவன் தங்களுக்கு வெளிப்படுத்திய படி அவர்கள் எழுதினர். வேறு பல கிறிஸ்தவ எழுத்தாளர்களும் பொதுவாக பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, தேவனுக்குப் பிரியமான நூல்களை எழுதியிருப்பது உண்மை தான்; ஆனால் வேதத்தை எழுதியவர்களுக்குக் கிட்டிய, தேவ சிந்தையைப் பற்றிய விசேஷித்த அறிவு இந்த எழுத்தாளர்களுக்கு இல்லை. ஆக, இதன் காரணமாக வேதம் மற்றப் புத்தகங்களிலிருந்து வித்தியாசப் படுகிறது : தேவனால் வெளிப்படுத்தப் பட்ட, அதிகாரபூர்வமான தேவ வார்த்தை வேதாகமம் மட்டுமே.*


*வேதம் தேவனுடைய வார்த்தை என்பதால், அது முழுக்க முழுக்க உண்மையானது. சிலர் வேதத்தில் தாங்கள் ஏதோ ஒரு தவறைக் கண்டு பிடித்து விட்டதாக எண்ணியதுண்டு, ஆனால் பின்னர் நன்றாக ஆராய்ந்த பின் தவறு வேதத்தில் இல்லை, தங்களிடமே இருக்கிறது என்று அறிய வந்துள்ளனர். வரலாற்றுக் கண்டுபிடிப்புகளும், புதை பொருள் ஆராய்ச்சிகளும் வேதாகமத்தில் எழுதப் பட்டவை சத்தியமே என்பதைத் திரும்பத் திரும்ப உறுதிப் படுத்தியுள்ளன. வேதாகமமானது எல்லா விதங்களிலும் சரித்திரப் பூர்வமாகவும், அறிவியல் பூர்வமாகவும் உண்மையானது.*


*இருப்பினும், வேத புத்தகத்தை ஒரு வரலாற்று நுலையோ அல்லது அறிவியல் நூலையோ படிப்பது போல்*


படிப்பது போதாது. நமது மூளைகளை மட்டும் கொண்டு வேதாகமத்தை வாசிக்கக் கூடாது. நமது ஆவிகளையும் கொண்டு வாசிக்க வேண்டும், இல்லாவிடில் வேதாகமத்தின் ஆழ்ந்த ஆவிக்குரிய சத்தியங்களைத் தவற விடுவோம். நாம் வேதத்தை வாசிக்கையில் நம்மைத் தாழ்த்தி, தேவ சத்தியத்தை ஏற்றுக் கொள்வதற்காக நமது மனங்களைத் திறந்து கொடுக்க வேண்டும். ஆவிக்குரிய ஞானத்துக்காக ஜெபிக்க வேண்டும். இதை விசுவாசத்தினாலே நாம் செய்கையில், வேதம் நமக்கு உயிருள்ளதாகும், நமது வாழ்க்கையை மாற்றும்.


வேதத்தை வாசிப்பவனின் உள்ளத்துக்கு வேதத்தை வல்லமை உள்ளதாக்குபவரும், அதற்கு "உயிரூட்டுபவரும்" பரிசுத்த ஆவியானவரே (2 கொரிந்தியர் 3:6). தங்களுக்குள்ளே பரிசுத்த ஆவியானவர் உள்வாசம் செய்யும் மக்கள், வேதாகமமே தேவனுடைய மெய்யான, ஜீவனுள்ள வார்த்தை என்பதைத் தங்கள் சொந்த அனுபவத்திலிருந்து அறிவர். வேதத்திலிருந்து தேவன் யார், கிறிஸ்து யார் என்பதையெல்லாம் நிச்சயமாய் அறிவார்கள். தேவன் என்ன செய்திருக்கிறார் என்பதையும் வேதத்தின் மூலம் அறிவார்கள். பழைய ஏற்பாடு தேவன் மனிதனைத் தேடுவது பற்றியும், மனிதனின் கீழ்ப்படியாமை மற்றும் பாவம் பற்றியும் கூறும் தொகுப்பு ஆகும். மனிதர்கள் ஓர் இரட்சகர் தேவைப் படுகின்ற பாவிகள் என்பதைப் பழைய ஏற்பாடு தெளிவாக இயம்புகிறது. புதிய ஏற்பாடு மனிதர்களைப் பாவத்திலிருந்து மீட்டெடுத்து அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும் பொருட்டு பாடுபட்டு மரிக்க, மனித உருவில் இயேசு கிறிஸ்துவாக உலகிற்கு வருமளவிற்கு மனிதர்களை அளவில்லாமல் நேசித்த ஒரு தேவனை வெளிப்படுத்திக் காட்டுகிறது.


இந்த விளக்கவுரையைப் படிக்கப் படிக்க, வேத வசனங்கள் மூலம் தேவன் உங்களோடு பேச அனுமதிப்பீர்கள் என்று நம்புகின்றோம். வேதத்தைப் புரிந்து கொள்வது மட்டும் போதாது; அதன்படி வாழவும் வேண்டும்.



சீதோன்
தமஸ்கு
எர்மோன்
சிரியா
தீரு
பெனிக்கியா
பிலிப்பு செசரியா
மேரோம் ஏரி
கலிலேயா
மத்திய தரைக்கடல்
பித்தொலோமாய்
கோராசீன்
கப்பர்நகூம்
பெத்சாயிதா
கானா
மக்தலா
கலிலேயாக் கடல்
திபேரியா
கர்மேல்
நாசரேத்து
தாபோர்
கதாரா
நாயீன்
யெஸ்ரயேல் பள்ளத்தாக்கு
தோர்
தெக்கப்போலி
செசரியா
பெல்லா
சாலிம்
சமாரியா
சமாரியா
ஏபால்
சீகார்
கெரிசீம்
யோர்தான் நதி
சாரோன்
பள்ளத்தாக்கு
பெரேயா
யோப்பா
லித்தா
பிலதெல்பியா
(ரப்பா)
எம்மாவு
எரிகோ
பெத்தாரோன்
எருசலேம்
பெத்பகே
பெத்தானியா
பெத்லகேம்
சவக்கடல்
அஸ்கலோன்
என்கேதி
யூதேயா
அர்னோன் ஆறு
எபிரோன்
காசா
மசாதா
இயேசுவின் காலத்தில்
பாலஸ்தீன நாடு
இதுமேயா
மைல்களில்
0
25
பெயர்செபா


பவுலின் முதலாவது மிஷனெறிப் பயணம்
மைல்களில்
0 100 200 300
கருங்கடல்
திரேசியா
மக்கெதோனியா
மோயேசியா
இல்லிரிக்கம்
இத்தாலியா
அகாயா
கிரேத்தா
லிபியா
எகிப்து
அரேபியா
சீப்புரு தீவு
சிலிசியா
கலாத்தியா
கப்பத்தோக்கியா
பொந்து
பித்தினியா


பவுலின் இரண்டாவது
மிஷனெரிப் பயணம்
மைல்களில்
0 100 200 300


பவுலின் மூன்றாவது
மிஷனெரிப் பயணம்
மைல்களில்
0
100
200
300
பொந்து
கப்பத்தோக்கியா
சிலிசியா
கலாத்தியா
பித்தினியா
ஆசியா
மீசியா
மக்கெதோனியா
தெசலோனிக்கே
பெரேயா
அம்பிபோலி
பிலிப்பி
நியாப்போலி
அப்பொலோனியா
ஏஜியன் கடல்
அகாயா
கொரிந்து
கெங்கிரேயா
அத்தேனே
துரோவா
அசோ
மித்திலேனே
பெர்கமு
தியத்தீரா
சர்தை
சிமிர்னா
பிலதெல்பியா
லவோதிக்கேயா
கொலோசே
எபேசு
சாமோ
மிலேத்து
பத்மு
கோஸ் தீவு
கினீது
பத்தாரா
லிசியா
மீரா
பம்பிலியா
பிசீதியா
அந்தியோகியா
இக்கோனியா
லீஸ்திரா
தெர்பை
தர்சு
செலூக்கியா
அந்தியோகியா
சீரியா
தமஸ்கு
சீப்புரு தீவு
சீதோன்
தீரு
தாலமி
செசரியா
யோப்பா
காசா
எருசலேம்
அரேபியா
கிரேத்தா
லசேயா
நல்ல துறைமுகம்
மத்திய தரைக்கடல்
(பெரிய கடல்)
லிபியா


பவுலின் ரோமாபுரிப் பயணம்
மைல்களில்
0 100 200 300
கருங்கடல்
பொந்து
கப்பத்தோக்கியா
கலாத்தியா
பித்தினியா
ஆசியா
சிலிசியா
பம்பிலியா
லிசியா
திரேசியா
மக்கெதோனியா
மோயேசியா
இல்லிரிக்கம்
இத்தாலியா
அகாயா
கிரேத்தா
சீப்புரு தீவு
சீரியா
எகிப்து
லிபியா
சிரேனே
அரேபியா
எருசலேம்
செசரியா
அலெக்சந்திரியா
அந்தியோகியா
தர்சு
எபேசு
கொரிந்து
அத்தேனே
தெசலோனிக்கே
பிலிப்பி
நெயாப்போலி
துரோவா
மிலேத்து
பத்மு
சீசிலி
மெலித்தா
ரேகியு
சீரகூசா
ரோமாபுரி
புத்தேயோலி
மூன்று சத்திரம்
அப்பியு சந்தை
ஏஜியன் கடல்
ஆதிரியாக் கடல்
மத்திய தரைக்கடல் (பெரிய கடல்)
நல்ல துறைமுகம்
லசேயா
பெனிக்கே
கோலெ தீவு
தமஸ்கு


புதிய ஏற்பாட்டுக் கால உலகம்
மைல்களில்
0
100
200
300
கருங்கடல்
பொந்து
கப்பத்தோக்கியா
கலாத்தியா
சிலிசியா
அந்தியோகியா
சீப்புரு தீவு
எருசலேம்
எகிப்து
பித்தினியா
ஆசியா
பம்பிலியா
துரோவா
எபேசு
கிரேத்தா
திரேசியா
மக்கெதோனியா
இல்லிரிக்கம்
பிலிப்பி
தெசலோனிக்கே
ஏஜியன் கடல்
அகாயா
அத்தேனே
கொரிந்து
ஆதிரியாக் கடல்
இத்தாலியா
ரோமாபுரி
சிசிலி
மெலித்தா
மத்திய தரைக்கடல்
(பெரிய கடல்)

**நடைமுறை வாழ்வு புதிய ஏற்பாட்டு விளக்கவுரை** - புதிய ஏற்பாட்டு வசனங்கள் மீதான, வாசிக்க எளிதான, கடைபிடிக்க சுலபமான விளக்கவுரையாகும். இதில் அடங்கியுள்ளவை:

- கிறிஸ்தவ மார்க்கத்தின் முக்கிய அம்சங்கள் பற்றிய பொதுவான கட்டுரைகள்
- புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு நூலுக்கும் ஒரு முன்னுரை
- சொல் வரையறைகள்
- வேத வசனத்தின் மீதான தெளிவான விளக்கங்கள்
- அன்றாட வாழ்வில் வேதத்தைக் கடைபிடிப்பதற்கான வழிமுறைகள்

"டாக்டர். டாம் ஹேல் நேபாள நாட்டில் பணிபுரியும், அனுபவம் மிக்க மருத்துவ மிஷனெரி ஆவார். இவருடைய விளக்கவுரை குறிப்பாக, ஒரு மிஷனெரியின் விளக்கவுரை எனலாம். இவர் வேதத்தை நன்கு ஆராய்ந்து படித்திருந்தாலும், இறையியல் ரீதியாக சிந்திக்கக்கூடியவராக இருந்தாலும், உயர்கல்வி என்னும் தந்தக் கோபுரத்தின் மேல் நின்று கொண்டு இதை எழுதவில்லை. இவருடைய கரிசனை எல்லாம் புதிதாக நாட்டப்பட்ட, அடிமட்டத்தைச் சேர்ந்த திருச்சபைகளே. அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும், அவர்கள் எழுப்பும் கேள்விகளையும் அறிந்தவர் இவர். கலாச்சாரம் கடந்த மிஷனெரிப்பணியின் அவசியத்தை உணர்ந்தவர் இவர். திருச்சபையின் ஒற்றுமையைக் கட்டிக்காக்கத் தம்மை அர்ப்பணித்திருக்கும் இவர், அவ்வளவு முக்கியமில்லாத விஷயங்களில், ஒருவேளை நாம் ஒத்துப்போகாவிட்டாலும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போகலாமே என்கிறார். இவருடைய நேரடியான, வாசிப்பதற்கு இலகுவான அணுகுமுறை, எளிய நடை கொண்டது. ஒரு மனிதனின் விளக்கவுரையானது எல்லாருக்கும் பிடித்ததாக அமைய முடியாது. என்றாலும், எந்தக் கலாச்சாரப் பின்னணியையும், திருச்சபைப் பிரிவையும் சேர்ந்த வேத பாட மாணவர்களும் இந்த விளக்கவுரையிலிருந்து அதிகம் கற்றுக்கொள்ளத் தக்கதாக, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின்றி எழுத முனைந்திருக்கிறார். உண்மையைச் சொன்னால், நடைமுறை வாழ்வு புதிய ஏற்பாட்டு விளக்கவுரை கிறிஸ்தவர்களிடையே பரஸ்பர புரிந்து கொள்ளுதலையும், சகிப்புத் தன்மையையும், மரியாதையையும் வளர்க்க உதவ வேண்டும்."

**ஜான் ஸ்டாட்**
ஆல் சோல்ஸ், லாங்ஹாம் பிளேஸ், இலண்டன்

"கிறிஸ்தவ மார்க்கத்தைப் பரப்புவதற்கு அர்ப்பணித்திருக்கும் நான், நடைமுறை வாழ்வு புதிய ஏற்பாட்டு விளக்கவுரையின் ஆழம், தெளிவு, எளிமை மற்றும் பொருத்தம் இவற்றைப் பெரிதும் பாராட்டுகிறேன். இது ஒன்றையும் விடாமல், அதே நேரத்தில் யாவரும் விளங்கிக் கொள்ளும் வண்ணமாக எழுதப்பட்டிருப்பது, பழைய, புதிய கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் இதை ஒரு விலையேறப் பெற்ற ஆதாரமாக்குகின்றது."

**ஜே. ஜான், சுவிசேஷகர்**

"இந்த நடைமுறை வாழ்வு புதிய ஏற்பாட்டு விளக்கவுரையின் சிறப்பு, வேத வசனங்களை அடியாழத்திலிருந்து, அதே சமயத்தில் எளிமையுடன் அலசி ஆராய்ந்திருப்பதே. குழு வேத பாடத் தலைவர்களுக்கு இது பெரும் மகிழ்ச்சி தரும்; பிரசங்கியார்கள் இதன் சிக்கலில்லாத, எளிய மொழி நடையிலான கருத்துக்களால் அதிகப் பயன் பெறுவார்கள்; ஏற்கனவே நல்ல பிரசங்கங்களைக் கேட்டுப் பாராட்டக் கூடிய தனிநபர்கள், இப்பொழுது தாங்களாகவே வேத வசனங்களை இன்னும் ஆழமாக ஆராய்ந்து பார்க்கலாம்."

**டெரிக் கோப்லி**
மூர்லாண்ட்ஸ் வேதாகமக் கல்லூரி

டாக்டர். டாம் ஹேல், இன்டர்சேர்வ் நிறுவனத்துடன் இணைந்து உழைக்கும் ஒரு மிஷனெரி ஆவார். இவர் அருமையான புத்தகங்கள் பலவும் எழுதியுள்ளார். **டோன்ட் லெட் த கோட்ஸ் ஈட் த லோகட் ட்ரீஸ், லிவ்விங் ஸ்டோன்ஸ் ஆப் த ஹிம்மாலயாஸ்** அவற்றுள் அடங்கும். டாக்டர். ஸ்டீபன் தார்ஸன் குழந்தைகள் நல, மிஷனெரி மருத்துவர், வீட்டன் கல்லூரியில் இறையியல் பட்டமும் பெற்றிருக்கிறார். இவர் நேபாள் இவாஞ்சலிக்கல் வேதாகமக் கல்லூரியில் இறையியல் கற்பிக்கின்றார்.

COOK INTERNATIONAL
a grassroots partner

The Applied New Testament Commentary *(Tamil)*